திண்டிமாநகர்த் தல புராணம்.



இராஜகோபுரம்

காளஹஸ்தீச்வரஸ்வாமி தேவஸ்தான
வெளியீடு.

ரு. 1—0—0.] 1962. [Copy Right.

GF
Q ௨3:38ரம
K௨

உ

ஸ்ரீமத் பத்மாசல புராணம்

என்னும்

திண்டிமாநகர்

மஹாத்மியம்

PUBLISHER

ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,

திண்டுக்கல்.

AUTHOR

" சேக்கிழார் அடிமை "

ராவ்சாகிப் P. K. ஷண்முகநாதன் B.A., B.L.,

வக்கீல், திண்டுக்கல்.

விலை ரூ. 1—0—0] 1962. [Copy Right.

முகவுரை.

இத்தல புராணத்தை வெளியிடும் முறையில் அடியேன் சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடியேனின் குடும்பம் இந்நகரின் மிகப்புராதீனமான குடும்பங்களில் ஒன்று. என் முன்னோர் செய்த தவப்பயனால் ஸ்ரீஅபிராமா சமேத பத்மகிரீசரின் கடாக்ஷவீக்ஷண்யத்துக்கு இலக்காகி அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்து 22-7-40ல் இவ்வாலய நிர்வாகக் குழுவின் தலைவனாக நியமிக்கப்பட்டேன். அன்று முதல் இது வரை இருபத்தி இரண்டு ஆண்டுகளாக இறைவன் பணியில் ஈடுபட்டு இயன்றளவு பல திருப்பணிகளைச் செய்யும் பெரு வாய்ப்பு அடியேனுக்கு கிட்டியது.

3-4-1942ம் ஆண்டில் ஆலயத்தின் த்வஜஸ்தம்பம் பழுது பார்க்கப்பட்டு செப்பு தகடு கவசம் அணிவித்து கும்பாபிஷேகம் நடை பெற்றது. 1952ல் ஸ்ரீ சமய குரவர்கள் நால்வர் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆண்டு தோறும் திரு நக்ஷத்திரங்களில் குரு பூஜை விழா நடந்தேறி வருகிறது. 1958ம் ஆண்டில் கோவிலுக்கு ராஜகோபுரம் அமைத்து மற்ற உள் கோபுரங்களையும் செப்பனிட்டு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சகல மூர்த்திகளுக்கும் அஷ்ட பந்தனம் சாத்தி யாகசாலை நிறுவி கும்பாபிஷேகமும் மிக விமரிசையாய் 26-3-58ல் நடந்தேறியது. அதே ஆண்டில் பெரிய வெள்ளி ரிஷப வாஹனமும் செய்யப்பட்டது.

இன்னும் கோயில் நிர்வாக விஷயத்திலும் வழிபாட்டு முறைகளிலும் பல சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆலயத்தைச் சேர்ந்த கடைகளை பழுது பார்க்கவும் மாற்றி அமைக்கவும் ஏற்பாடாகி வருகின்றது. இத்தகைய திருப்பணிகளில் இறைவன் என்னை ஈடுபடுத்தி பொது ஜனங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற அருளினார்.

1960ம் ஆண்டின் சென்னை வாசி உயர் திரு வள்ளல் க. சுந்தரம் பிள்ளை அவர்களால் ஸ்ரீஅருணகிரி நாதர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்னார் அருணகிரி நாதர் சுந்தர மூர்த்திசுவாமிகள் உத்சவ விக்ரஹங்கள் செய்வித்து அளித்துள்ளார்கள். 1961ம் ஆண்டில் அஷ்ட கிரஹ சேர்க்கை பீடா பரிகாரமாக ஸ்ரீஅபிராமாம்பாளுக்கு லக்ஷார்ச்சனையும் ஸ்ரீபத்மகிரீசருக்கு சங்காபிஷேகமும் நடை பெற்றது. இக்கோயிலில் தலவிருக்ஷம் இல்லாமல் இருந்தது. 25-8-62ல் ஸ்ரீபத்மகிரீசர் கர்ப்ப கிரஹத்துக்குப்பின்புரம் நெல்லிக்கண் யதோக்தமாய்

நடப்பட்டது. இத்தலத்திற்கு கிருத்திகா சோமவார பிரதோஷ தினங்கள் மிகப்புண்ய தினங்களாகப் புராணம் கூறுவதால் இவ்வாண்டு முதல் கார்த்திகை மாதம் வரும் சோம வாரங்களில் சங்காபிஷேகம் ஆண்டு தோறும் நடக்க ஏற்பாடாகி அதற்கென்று 108 சங்குகளும் வாங்கி சங்காபிஷேகம் அதி விமரிசையாய் நடந்து வருகின்றது.

எனினும் இத்தலத்துக்கு புராணம் ஒன்று வெளியிடாத குறை இருந்து வந்தது. வடமொழியில் இப்புராணம் இருப்பதாய் பலர் சொல்லக் கேட்டிருந்தேனே ஒழிய அதைப்பார்க்கும் பாக்யம் கிடைக்கவில்லை.

இத்தல புராணம் வெளி வரவேண்டும் என்று ஸ்ரீஅபிராம்பிகையை பல முறை பிரார்த்தித்திருக்கிறேன். ஆஸ்திகச் செல்வர்களின் முறையீட்டுக்கு இணங்கி அம்பாள் அருள் பாலித்து இத்தல புராணத்தை வெளியிடும் வாய்ப்பையும் அடியேனுக்கு அளித்துள்ளாள்.

இதனை மிகப்பிரயாசைப்பட்டு எழுதி உதவிய நம்நகர் வழக்கறிஞர் பெருஞ்சொற் கொண்டல் மும்மொழிப்புலவர், சேக்கிழார் அடிமை உயர்திரு P. K. ஷண்முகநாதன் B.A.,B.L., அவர்களுக்கு பொதுவாய் திண்டுக்கல் வாசிகளும் சிறப்பாய் தர்மகர்த்தாக் குழுவினரும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். அன்னார் யாதொருபிரதி பிரயோஜனமும் கருதாது சுமார் இரண்டாண்டு காலமாய் இந்நூலுக்கு வேண்டிய ஆதாரங்களை சேகரித்து இதனை எழுதி முடித்துள்ளார்கள். அவர்களுக்கு ஸ்ரீ அபிராமசமேத பத்மகிரீசரின் அருள் பூரணமாக இருக்கும்படி பிரார்த்திக்கிறேன். இப்புராணத்தை எழுதி தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பட வேண்டும் என்ற முயற்சியை ஆரம்பித்துவைத்த பெருமை முந்நாள் நிர்வாக அதிகாரியாயிருந்த உயர்திரு S. சிவசங்கு அவர்களைச்சாரும். மேலும் அடியேனின் நிர்வாகத்திலும் திருப்பணிகளிலும் என்னுடன் ஒத்துழைத்து ஆதரவுதந்த தர்மகர்த்தாக்குழு ஏனைய இரண்டு அங்கத்தினர்களுக்கும் என் நிர்வாகத்தில் வேலைபார்த்த நிர்வாக அதிகாரிகளுக்கும் குறிப்பாக தற்சமயம் நிர்வாகஅதிகாரியாக இருக்கும் திரு S. காளியப்பன் B. A. அவர்கட்கும் தேவஸ்தான சிப்பந்திகளுக்கும் என் நன்றி உரித்தாகுக.

என் நிர்வாக காலத்தில் எனக்கு உறுதுணையாயிருந்து உதவி புரிந்த ஆஸ்திக அன்பர்கள் பலர் அவர்களில், சிறப்பாக சிலரைமட்டும் ஈண்டு குறிப்பிட நான் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் 1. ப்ரம்மஸ்ரீ S. V. U. குப்புசாமி அய்யர் அவர்கள் (கோட்டைமாரியம்மன் கோயில் டிரஸ்டி) 2. நாகல்நகர்

மாஜி வைஸ் சேர்மன் திரு A. V. செல்லையா ஆச்சாரியார் அவர்கள், 3. தாடிக்கொம்பு சௌந்தரராஜப் பெருமாள்தேவஸ் தானம் மாஜி மானேஜிங் டிரஸ்ட்டியும் கௌரவ மாஜிஸ் டிரேட்டுமான திரு M. S. D. பிச்சைமுத்து செட்டியார் அவர்கள் 4. ஷேியாரின் சகோதரரும் மாஜி வைஸ் சேர்மனும் இவ்வாலய தர்மகர்த்தாக் குழுவில் ஓர் அங்கத்தின ராய் இருந்து பணியாற்றியவருமான திரு M. S. D. பால சுப்பிரமண்யம் செட்டியார் அவர்கள், 5. நம்நகர்வண்டிகாளி யம்மன் கோயில் டிரஸ்டியும் தாடிக்கொம்பு சௌந்தரராஜப் பெருமாள் தேவஸ்தானம், அகரம் முத்தாலம்மன் தேவஸ் தானம்இவற்றின் டிரஸ்டியாயிருந்தவருமான திரு கு. ஆறுமுகம் பிள்ளையவர்கள், 6. ரிடையர்டு ஸ்கூல்டீச்சர் திரு S. ராஜ கோபாலய்யர் அவர்கள். இவர்களுக்கும் ஏனைய ஆஸ்திக அன்பர்களுக்கும் என்நன்றி உரித்தாகுக.

ஆஸ்திகச் செல்வர்கள் இத்தலபுராணத்தைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

(Sd.) D. M M. துரைராஜ் செட்டியார்,
மானேஜிங் டிரஸ்டி.

என்னுரை

" தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே "

ஸ்ரீபத்மாசல புராணம் என்னும் நூலை வெளியிடும் வாய்ப்பு இறைவனருளால் அடியேனுக்குக் கிடைத்ததைக் குறித்து மிகவும் பெருமையடைகிறேன். இத்திருத் தலத்தைப்பற்றிய புராணம் வெளிவரவில்லை என்ற பெருங்குறையை நிவர்த்தித்து ஆஸ்திக அன்பர்களுக்குப் பல தத்துவங்களை சிறந்த மேற்கோள்களுடன் யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் ஆலய வழிபாட்டுக்கு ஓர் நல்ல வழிகாட்டியாக அமைத்து, இதனை ஓர் அன்புப் பணியாக ஏற்று அரும்பாடுபட்டு எழுதிமுடித்த ஆசிரியர் உயர்திரு. பெ. கா. ஷண்முகநாதன் B. A., B. L., அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. இதுவரை வெளிவராத பத்மகிரீசர், அபிராம அஷ்டோத்ர நாமாவளிகள் கொடுத்திருப்பது இந்நூலுக்கே ஒரு சிறப்பியலாகும்.

இந்நூலை வெளியிடும் முயற்சியில் உறுதுணையாயிருந்து ஊக்குவித்த தர்மகர்த்தாக் குழுத்தலைவர் உயர்திரு D. M. M. துரைராஜ் செட்டியார், தர்மகர்த்தா P. S. சங்கரலிங்கம் பிள்ளை, தர்மகர்த்தா T. A. பங்காருசாமி நாயுடு ஆகியவர்களுக்கும், இதனை அச்சிட்டு வெளியிட ஆதரவு கொடுத்த இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் உயர்திரு M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., துணை-ஆணையாளர் உயர்திரு A. சக்கரை சேர்வை B. A., B. L., உதவி ஆணையாளர் உயர்திரு A. வெங்கிடாஜலம் B Sc., B.L., ஆகியவர்களுக்கும், மிகக் குறுகிய காலத்தில் செவ்வனே அச்சிட்டு உதவிய நடேசர் அச்சகத்தாருக்கும் என் மனமுவந்த நன்றி என்றென்றும் உரித்தாகுக.

திண்டுக்கல்
29—11—62.

S. காளியப்பன்,
நிர்வாக அதிகாரி.

ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

திண்டுக்கல்.

நிர்வாகக்குழு.

(1) **D. M. M. துரைராஜ் செட்டியார்,**
தர்மகர்த்தா, குழுத்தலைவர்.

(2) **P. S. சங்கரலிங்கம் பிள்ளை,**
தர்மகர்த்தா.

(3) **T. A. பங்காருசாமி நாயுடு,**
தர்மகர்த்தா.

(4) **S. காளியப்பன், B. A.,**
நிர்வாக அதிகாரி.

திருச்சிற்றம்பலம்.

1. விநாயகர்.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை வழங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

2. முருகன்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குஹனே.

3. பரமசிவன்.

உலகெலா முணர்ந்தோ தற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

4. ஸ்ரீபத்மகிரீசர்.

ஸ்ரீமத் பத்மநகாதீசம் காயத்ரீலிங்க ரூபிணம்
அபிராமா பதிம்தேவம் ஸர்வா பீஷ்டப்ரதாயகம்
த்யாயாயாமீஸ்சிதாநந்தம் சிவம் சாந்தம் ஸநாதனம்.

5. ஸ்ரீஅபிராமாம்பிகை.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்குமதோயமென்
விதிக்கின்றமேனி அபிராமி என்றன் விழித்துணையே.

அணிந்துரை 1.

கடவுள் நம்பிக்கையையும், தெய்வபக்தியையும், சமய ஞானத்தையும் மக்களிடையே பரப்புவதற்கு நமது ஆன்றோர் பல வழிகளைக் கையாண்டனர். அவைகளில் ஒன்று புராணங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், முதலிய நூல்கள் வாயிலாக இறைவன் புகழையும், திருவருட் செயல்களையும், சமய தத்துவங்களையும் எடுத்து இயம்புவது. சாத்திரங்கள், கடவுள் உண்மையை நிறுவி, சமயதத்துவக்கூறுகளை அறிவாராய்ச்சி மூலமாக எடுத்துக்காட்ட எழுந்தவை. தோத்திரங்கள் ஆண்டவனை அன்பினால் வழிபடுவோருக்குப் பயன்படுமாறு அமைக்கப் பெற்றவை. புராணங்கள் கதை வடிவிலே கடவுளின் அருளிப்பாடுகளை எடுத்துக்கூறுபவை. புராணங்களை நன்றாகப்படித்துணர்ந்து, அவற்றால் மக்களுக்கு ஏற்படும் பலன்களை அறியாதவர்களே புராணங்களைப் பொய்யெனக்கூறுவர். கடவுள் கொள்கையையும், சமய உண்மைகளையும், உயர்ந்த தத்துவக் கொள்கைகளையும் எளிய இனிய முறையில் பண்டிதர் முதல் பாமரர்வரை எல்லா நிலைகளிலும் உள்ள மக்களுக்குப் புகட்டும்வகையில் அமைந்தவையே நம்முடைய புராணங்கள். திருவிளையாடற்புராணம் சிவபெருமான் மக்கள் உய்யும் வண்ணம் நிகழ்த்திய லீலைகளையும், கந்தபுராணம் முருகப்பெருமானின் திருவிளையாடல்களையும், பெரிய புராணம் அடியார்களின் அற்புதச்செயல்களையும் விளங்கவைக்க எழுந்தவை. அந்த மூன்று நூல்களையும் சைவமுக்கண் என்று போற்றி மகிழ்கிறோம். "கந்த புராணத்தில் எந்தப் பொருளையும் காணலாம்" என்ற பழமொழியைப் பிற்காலத்தே "கந்தபுராணத்தில் எந்தப்புளுகையும் காணலாம்" என்று வழங்கப்பட்டது. அந்நூலின் பெருமையை அறியாத மக்களின் மனப்பான்மையையே எடுத்துக்காட்டுகிறது.

புராணங்களில் பலவகையுண்டு. அவற்றில் ஒருவகை தலபுராணங்கள் ஆகும். அவை வடமொழி, தமிழ்மொழி, இவைகளால் ஆக்கப்பெற்றவை. தமிழில் எழுந்த புராணங்கள் முதலில் செய்யுள் வடிவிலே இயற்றப்பெற்றன. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பலபதிகளுக்குப் புராணங்கள் இயற்றியிருக்கின்றார்கள். அவற்றுள் சில இலக்கியக் கருவூலங்கள் என்றே கூறவேண்டும். பிற்காலத்தே தலபுராணங்களை உரைநடையிலும் எழுதும்முறை ஏற்பட்டது. திருவாளர் பி. கே. சண்முகநாதன், பி. ஏ., பி. எல்., அவர்கள் பத்மாசலபுராணம் அல்லது திண்டிமாநகர் மான்மியம் என்ற உரைநடை நூலை எழுதித் தமிழ்ச்சைவ உலகிற்கு அளித்துள்ளார்கள். வடமொழியிலுள்ள நூலையும், தமிழ்மொழிபெயர்ப்

யையும் அரிதின்முயன்றுதேடி, மற்ற நூல்களின் ஆதரவையும் கொண்டு அரும்பாடு பட்டு இந்நூலை இயற்றியிருக்கிறுர்கள் என்பது அவர்களின் முன்னுரையினின்றும் நன்கு புலப்படும். மூலநூலின் அடியொற்றியே ஆங்காங்கு வேண்டிய அளவு குறிப்புக்களுடன் எழுதியுள்ளார்கள். திண்டுக்கல் என்பது திண்டு போன்ற கல்லையுடையது என்பது அந்த ஊர் நடுவில் இருக்கும் குன்றைக்குறிக்கும் என்று சாதாரண பொருளில் கொள்ளலாம். திண்டீச்சரம் என்ற வைப்புத்தலமே திண்டுக் கல் என்பதை நூலாசிரியர் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி யிருக்கிறுர்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்ப் பயின்றவர்க் கோர் வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமான அடிகளாரின் அருள்த்திருவாக்கிற் கிணங்க அந்த முறையிலே இப்புராணமும் அமைக்கப்பெற்றிருக்கிறது. எளிய இனிய தமிழ்நடையில் ஆக்கப்பட்டிருப்பது யாவரும் படித்து இன்புறும்வகையில் இருக்கிறது. நூலில் புராணப்பகுதி சரித்திரப்பகுதி, தற்காலப்பகுதி என்ற மூன்று பகுதிகள் உள்ளன.

மூலநூலில் 22 அத்தியாயங்கள் இருந்ததை இவ்வசன நூலாசிரியர் 21 அத்தியாயங்களில் அடக்கியிருக்கின்றுர். அம்பி கையின் திருநாமங்கள் அபிராமாம்பிகை, அபிராமாசுந்தரி, அபிராமாவல்லி என்றும், திருக்கடவூர் அபிராமி அம்பிகைத் திருப்பெயரின்று வேறுனது என்றும் தக்க ஆதாரங்களுடன் எடுத் துக்காட்டியிருக்கிறுர். ஆங்காங்கே அடிக்குறிப்புக்கள் கொடுத் திருப்பது மிகவும் பயன்பெறத்தக்கவை. எடுத்துக்காட்டாக, கல்பங்கள், இலிங்கம், தாளவனம், அபிராமா அம்பிகை, பஞ்ச மகாயக்ஞம், அஷ்டஐசுவரியம், அஷ்டலட்சுமி, ஏகாதச ருத்தி ரர் முதலியவை விளக்கமாகக்கூறப்பட்டுள்ளன. தத்துவங்க ளும், அறிவுரைகளும், நீதிகளும் இடம்பெற்றுள்ளன.. தேவார முதலிய திருமுறைச்சொற்ருெடர்களைப்பெய்து நூலை அழகு செய்திருப்பது படிப்பவர் மனதைக்கவரும் வகையில் அமைந் திருக்கிறது. தலத்தைப்பற்றி அதிகமாக அறியவிரும்புவோர்க்கு மூலநூலில் விரிவாகக்காணவேண்டியவற்றையும், வேறு நூல் களில் படிக்கவேண்டியவற்றையும் சுட்டிக்காட்டப்பெற்றிருக் கிறது. கருத்துக்கள் நிறைந்த 15,19-ஆம் அத்தியாயங்கள் அவசியம் படிக்கத்தக்கவை. கூர்ந்து படிப்பவர்கள் புராணங் களின் பயன்களை நன்கு உணர்வார்கள். 18-ஆம் அத்தியாயம் தீபாலங்கார மகிமையை எடுத்து கூறுகிறது. அதில் தீபவகை கள், நெய், திரிநூல், அலங்காரம், எந்தெந்த மாதங்களில் விளக்கு ஏற்றினுல் என்னென்ன பலன்கள் சித்திக்கும் என்ப தெல்லாம் விதந்தோதப்பெற்றிருக்கின்றன.

சரித்திரப்பகுதியில், கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னி ருந்து பாண்டிய நாட்டின் வரலாற்றை முறையாகக்கூறி, அதில் திண்டுக்கல் எவ்வகைச்சம்பந்த முடையதாக இருந்ததென்ப தைக்கோவை செய்து கொடுக்கப்பெற்றிருக்கிறது. தற்காலப் பகுதியில், நகராட்சி, கோயில்கள், திருவிழாக்கள், மடங்கள்; சத்திரங்கள் முதலிய வசதிகள், அரசாங்க அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், முதலியவற்றைப்பற்றிக்கூறியிருப்பது திண்டுக் கல்லைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறியவிரும்பு வோர்க்கு மிகவும் பயன்படுவன.

பொதுவாக இந்நூல் பண்டிதர் முதல் பாமரர் வரை யுள்ள எல்லா மக்களுக்கும் பெருவிருந்தளிக்கும் என்பதில் ஐய மில்லை. இதனை அரிதின் முயன்று எழுதி உதவிய திரு. பீ. கே சண்முகநாதன் அவர்களுக்குப்பக்த உலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. இதை நல்ல முறையில் அச்சிட்டு வெளி யிட முன்வந்தகாளத்தீசுவரர் தேவஸ்தானத்தார் பாராட்டிற் குரியவர். ஆஸ்திகப்பெருமக்கள் அனைவரும் இந்நூலைப்படித்து இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

அபிராமாம்பிகை உடன்கூடிய பத்மகிரீசர் பதமலர் வாழ்க!

மா. சே. சாரங்கபாணி,
ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை. 11—1—62.

அணிந்துரை 2.

இன்று (1—1—61) அதிகாலையில் என் அன்புக்கும், ஆதர விற்கும் உரிமையான நண்பர் திரு. P. K. ஷண்முகநாதன், மார்கழித் திங்கள் காலை வழிபாட்டில் ஸ்ரீ ஞானம்பிகா ஸமேத ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர, ஸ்ரீ அபிராமாம்பிகா ஸமேத ஸ்ரீ பத்ம கிரீச சந்நதிகளில் ஈடுபட்டுவிட்டு, ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர தேவஸ் தானத்தாரின் கோரிக்கைக்கிணங்க ஸ்ரீபத்மாசல புராணத்தை தயாரித்து, அதன் கையெழுத்துப் பிரதியை என்னிடம் கொடுத்து, அதைப்படித்துப் பார்த்து, என் கருத்தைச் சொல்லுமாறு கேட்டார்,

அதைப் பூராவாக படிக்கக்கேட்டேன் எள்ளளவும் சலிப் புத்தட்டாமல் பூரணமாக படிக்கக்கேட்டு அகமகிழ்ந்தேன். இந் தப் புராணம் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது என்பது சற்றும் புலனுகாவண்ணம் அழகான இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது..

130 ஆண்டுகளுக்கு முன் முதல் என் முன்னேர்கள் இவ் வூரில் குடியேறி வசித்து வந்துள்ளோம். சென்ற 85 ஆண்டு களாக நானும் இங்கேயே வாழ்க்கை நடத்தி வந்துள்ளேன். இந்த ஸ்தலபுராண சம்பந்தமாய் என் நண்பர் ஸ்ரீ ஷண்முகநா தன், சரித்திரப் பகுதியை தயாரித்திருப்பதாயும், ஆனுல் ஸ்தல புராணம் வடமொழியில் ஓலைச்சுவடியாக இருப்பதாயும் அதைத் தான் பெற முயற்சி செய்து பலிக்காமல், என் உதவியை நாடி ஞர். என் பிரயத்தினமும் பலிக்கவில்லை. நண்பர் மனந் தளர்ந்தார். பராசக்தி ஸ்ரீ அபிராமாம்பாளின் கருணையால் அவர் முகவுரையில் சொல்லியுள்ளபடி புராணத்தின் தமிழாக் கம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை ஆதாரமாகக்கொண்டு உற்சா கத்துடன் இப்புராணத்தை வெகு நேர்த்தியான நடையில் நண்பர் எழுதி முடித்துள்ளார். ஆகம மந்திர சாஸ்திரங்களிலும் உபநிடதங்களிலும் நல்ல தேர்ச்சிபெற்றுள்ள நண்பர் ஸ்ரீஷண்முகநாதனுல் தான் இந்த நல்ல காரியம் நிறைவேறி யிருக்கிறது.

இப்புராணத்தின் கர்த்தா யாரென்பதாவது எக்காலத் தில் இருந்தாரென்பதாவது தெரிவதற்கு வழியில்லாமலிருக் கிறது. ஆனுல் புராணத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பொன்மான்துறை, தாடிக்கொம்பு, போன்ற குறிப்புகளைக் கொண்டு அவர் மிகவும் பழையகாலத் தவரென்று நினைக்க இடமில்லை. கர்த்தா யாராயிருந்தாலும் அவர் சாஸ்திர விற் பன்னராகவும், வடமொழியில் நல்ல தேர்ச்சிபெற்றவராகவும் சகல லக்ஷணங்களும் பொருந்திய புராண கிரந்தத்தை இயற்றக் கூடியவராகவும் இருந்திருக்கிறார் என்பது நிதர்சனமாயிருக் கிறது. அப்பேர்பட்ட மகான் சமீபகாலத்தில் திண்டுக்கல்லில் இருந்திருக்கிறார் என்று நினைப்பதற்கே வியப்பாயிருக்கிறது.

வடமொழியிலிருக்கும் புராணத்தை எப்படியாவது பெற்று அதை நண்பர் ஸ்ரீ ஷண்முகநாதனே பிரசுரிக்கும்படி பராசக்தி அருள்புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

புத்தாண்டின் ஆரம்பதினமான இன்று இந்த சிறந்த சந் தர்ப்பத்தை எனக்களித்த நண்பர் ஸ்ரீ ஷண்முக நாதனுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

திண்டுக்கல்,
1—1—61.

(Sd.) K. குப்புசாமி அய்யர்.

முன்னுரை.

ஸ்ரீஅபிராமா ஸமேத ஸ்ரீபத்மகிரீசரும், ஸ்ரீஞானம்பிகா ஸமேத காளஹஸ்தீச்வரரும் ஒருங்கே கோயில் கொண்டருளி நித்யவாசம் செய்யும் இந்த பத்மாசல க்ஷேத்ர வரலாற்றை எழுதுமாறு மேற்படி தேவஸ்தான நிர்வாக அதிகாரி உயர் திரு. S. சிவசங்கு அவர்கள் என்னைப்பணித்த போழ்து அது இறைவன் கட்டளை யென்றே சிறமேற்றுங்கி இதனை எழுத லுற்றேன். ஆனால் இந்நூலுக்கு வேண்டிய புராணசரித்திர ஆதாரங்களைத்தேடுவதில் பல, மாதங்கள் கழிந்தன. குறிப்பாய் "பத்மாசல புராணம்" என்ற இத்தலத்தின் புராணவரலாறு ஒன்று இருப்பதாய் அறிந்து அதைத்தேடுவதில் ஈடுபட்டேன். யாரும் அத்தகைய புராணத்தைக் கண்ணால் கூடக்கண்டதில்லை யென்றே பதில் கூறினர். கடைசியில் அது ஏட்டுச்சுவடி உருவமாய் வடமொழியில் ஒருவரிடம் இருப்பதாய்க் கேள்விப்பட்டு அவரிடம் நேரிலும் பல அன்பர்கள் மூலமும் கேட்டும் பயன் அளிக்கவில்லை.

பின்பு புனிதமரிஅன்னை உயர்தரப்பள்ளியில் ஓர் தமிழ்ப் பிரதி இருப்பதாக அறிந்து அதனைத்தேடலுற்றேன். அப்பள்ளி யில் பணியாற்றிவரும் சௌராஷ்ட்ர அந்தணர் உயர் திரு. V. சீதாராமன் அவர்களும் நானுமாக மூலைமுடுக்கெல்லாம் தேடி இறுதியில் என் அன்னை அபிராமாம்பாள் திருவருளால் அதைக்கண்டுபிடித்தோம். அப்பள்ளியின் தலைமை ஆசிரியர், ரெவரண்டு ஃபாதர் துரைசாமி. S. J. அவர்கள் அக்கையெ ழுத்துப் பிரதியை மனமுவந்து கொடுத்தருளினார்கள். வட மொழியிலிருந்த புராணத்தை இரு மொழியும் தெரிந்தவல்லு னரால் மொழி பெயர்க்கச்செய்து அதனைக் கைப்பிரதியாக எழுதி வைத்திருந்தவர், அப்பள்ளியில் தமிழ் ஆசிரியராக இருந்த காலஞ்சென்ற உயர் திரு M. அப்துல்காதர் என்பவ ராவர். என்னே! இறைவனின் திருவருள்! ஓர் முஸ்லீம்சகோ தரர் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஸ்ரீபத்மாசல புராணம், ஓர் கிருஸ்தவப்பாதிரியார் கொடுத்துதவியதையும் ஓர் ஹிந்து என்று தம்மைக்கூறிக்கொள்ளும் ஒருவர் அதனைக்கண்ணால் காட்டக்கூட மறுத்ததையும் ஒப்புநோக்காமல் இருக்கக்கூட வில்லை. இத்தகைய திருவிளையாடலைச்செய்த அன்னை அபிரா மாம்பிகையின் சந்நிதியில் என்கையில் கிட்டிய தமிழ்பிரதியை வைத்து அவளின் அருளை நினைந்து பெருமிதம் அடைந்தேன்.

தமிழ்பிரதியை அப்படியே ஈண்டு எழுதவில்லை. தற்காலத் தில் வெறும் புராணம் மட்டும்எழுதி அச்சடிப்பதில் யாதொரு

பயனும் இல்லை என்பதை நான் நன்கு அறிவேன். இதற்கு முன் நான் எழுதிய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தல மஹான்மியமும் என் கருத்துக்கு ஒப்ப வெறும் புராணமாக மட்டுமில்லாமல் ஓர் தத்துவவிளக்கமாயும், சரித்திரச் சான்றாயும் இருப்பதை அதனைப்படித்த அன்பர்கள் அறிவார்கள். ஆகையால் பண்டைய வரலாற்றைப் புதுப்பாணியில் அமைத்து இதனை நேயர்களுக்குப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். ஆங்கிலத்தில் "பழைய பழரஸத்தைப் புதுசாடியில் வைப்பது" என்ற பழமொழி ஒன்று உண்டு. அதுபோல் நான் என் சிற்றறிவுக் கெட்டியவரை இதனைச்செய்துள்ளேன். ஆனால் புராணவரலாற்றிலோ, சரித்திரப்பகுதியிலோ ஒரு சிறிதளவு கூட மாறுதல் செய்யவில்லை என்பதையும் என் நேயர்களுக்கு அறிவிக்கின்றேன்.

மூலகிரந்தமான "ஸ்ரீபத்மாசஸ்தல புராணம்" மிகச் சிறந்த நூல். நான் பார்த்த பல தலபுராணங்களை விட அநேக அம்ஸங்களில் இது சிறந்து விளங்குகின்றது. அதன் சிறப்புகளில் சிலவற்றை ஈண்டு கூறுகிறேன். பதினான்கும் அத்தியாயத்தில் இப்பத்மாசல க்ஷேத்ரத்தின் தத்துவம் வெகு சீரிய முறையில் சைவசித்தாந்தக் கருத்துகளுடன் விளக்கப்படுகின்றது. இருபதாம் அத்தியாயத்தில் பிரம்மாவால் அகஸ்தியருக்கு உபதேசிக்கப்பட்ட அபிராமா பஞ்சதசாக்ஷரீமந்த்ரம், பஞ்சாவரண யந்த்ரம், அபிராமா மாலா மந்த்ரம், அபிராமா கவசம், அபிராமா பத்மகிரீசர்களின் அஷ்டோத்தர சத நாமாக்கள், அவர்களின் பூஜாவிதானம் முதலியன கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தஸ்தல புராணம் ஓர் கருவூலம். இதனை ஆதியில் இயற்றியவர் ஓர் மஹரிஷியாகவேயிருக்கவேண்டும்.

இந் நூலை எழுதுவதற்கு ஆதாரமாக இருந்தவைகள் இத்தல புராணமும், **Keys & Turnbull** செய்த **Archaeological Survey of South India** என்ற ஆங்கிலப்புத்தகமும், **Nelson** எழுதியுள்ள **District Manual** என்ற நூலும், ஃப்ரான்ஸிஸ் என்பார் எழுதியுள்ள **Madura District Gazetteer** என்ற புத்தகமும், எனது நண்பர் காலஞ்சென்ற ராவ்சாகிப் ராஜையா லாசரஸ் எழுதியுள்ள **A Historical sketch of Dindigul Town** என்ற ஆங்கில வெளியீடும், பலபட்டைச் சொக்கநாதப்புலவர் எழுதிய "பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது" என்ற கலி வெண்பாவும் பிறவுமாகும்.

அடியேனையும் ஒரு பொருட்டாகக் கருதி இப்பணியில் ஈடுபடுத்தி விக்னமின்றி முற்றுப்பெறச் செய்த திருவருளுக்கு என் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்கின்றேன். இந்நூலின் புராணப்பகுதி எழுதுவதற்கு அருந்துணையாய்

இருந்த நம் நகர் அர்ச்சகர் ப்ரம்மஸ்ரீ சுப்ரமண்யக் குருக்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இதனை நான் எழுதுங்கால் கூடவேயிருந்து திருத்தங்கள் செய்து கொடுத்த என் நண்பர் வக்கீல், திரு. S. சுந்தரமய்யர் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. இந்நூலை எழுதும்படி பணித்து செவ்வனே அச்சிட்டு உதவிய கோயில் நிர்வாக அதிகாரி உயர் திரு. S. காளியப்பன் B. A. அவர்களுக்கும், இவ்வாலய நிர்வாகக் குழு அங்கத்தினராகிய உயர் திரு. D. M. M. துரைராஜ் செட்டியார் அவர்களுக்கும், திரு. சங்கரலிங்கம் பிள்ளையவர்கட்கும், திரு. R.K. சின்னகுருசாமி நாயுடு அவர்கட்கும் என் நன்றி என்றும் உரித்தாகுக. குற்றம் நீக்கிக் குணம் கோடல் ஆன்றோர்கடன்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய H. R. & C. E. ஆணையர் உயர்திரு. சாரங்கபாணி முதலியார் அவர்கட்கும் ப்ரம்மஸ்ரீ. K. குப்புசாமி அய்யர் அவர்கட்கும் என் நன்றி.

இதனை குறுகிய கால அளவில் செவ்வனே அச்சிட்டுதவிய திண்டுக்கல் நடேசர் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

இங்ஙனம்,

திண்டுக்கல்
29—11—62

P. K. ஷண்முகநாதன்.

அபிராமா சமேத பத்ம கிரீசர்

நூன்முகம்

முதற்பாகம். புராணப்பகுதி.

முதல் அத்தியாயம் :

புராணம் தோன்றிய வரலாறு.

திரைகடல் சூழ்ந்த வையகத்தில் மிகச்சிறப்புற்றோங்கிய "ப்ரஹ்தாரண்ய" வாசிகளான காத்யாயனர், கௌதமர், முதலிய வேதவிற்பனர்கள் "கோச்சத்ரம்" என்னும் மஹா யாகத்தைச் செய்ய கோகர்ண க்ஷேத்ரத்தை யடைந்தனர். குறித்த யாகத்தை செவ்வனே முடித்துவிட்டு அத்தலத்தில் கோயில் கொண்டருளும் கோகர்ணேச்வரமூர்த்தியை கிருத்திகா ஸோமவார ப்ரதோஷ காலத்தில் தரிசித்து, முறைப்படி ஆராதனைகள் நடத்தி, மந்த்ரம், கிரியை, பாவனை என்ற மூவகையாலும் அர்ச்சித்து, மிகுந்த பக்தி சிரத்தையுடன் தொழுது வழிபட்டு, தாம் தரிசித்த பல தல விசேஷங்களையும் ஒருவர்க்கொருவர் எடுத்துரைத்து மகிழ்ந்திருந்தனர். அது சமயம் நைமிசாரண்ய வாசியும், வியாஸ பகவானின் சீடருமான சூதபௌராணிகர் அவண் எய்தினர். அவரைக்கண்ட மற்ற இருடிகள் முகில்கண்ட மஞ்ஞையெனக் களிப்பெய்தி, அவரைவரவேற்று அர்க்கிய, பாத்ய, ஆசமனாதி உபசாரங்களை முறைப்படிசெய்து கூறலுற்றனர்.

"கேளும்! சூத பௌராணிகரே! தாங்கள் மூலம் பதினெண் புராணங்களையும், அநேக உப புராணங்களையும் தாங்கள் வியாஸரிடம் கேட்டபடி சொல்ல நாங்களும் அவற்றைச் செவிமடுத்து கிருதார்த்தர்களானோம். அவற்றோடு, ஹாலாஸ்யம், வாரணாசி, காஞ்சிபுரம், மத்யார்ச்சுனம், பஞ்சநதம், கோகர்ணம், சுவேதாரண்யம் முதலிய பல திவ்யக்ஷேத்ரங்களின் ஸ்தல புராணங்களையும் கேட்டோம். இன்று கிருத்திகா ஸோமவார பிரதோஷ தினமாகையாலே தங்களிடம் பத்மாசலக்ஷேத்ர மகிமையைக் கேட்க ஆவல் கொண்டுள்ளோம். எங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்தருளுவீராக" என்று வேண்டிக் கொண்டனர். சூதபுராணிகரும் இசைந்து சொல்லத் தொடங்கினர்.

"கேளும்! தபோதனர்களே! இராஜபுத்ரன், குருபுத்ரன், தன்புத்ரன், போதிப்பனவற்றை கிரஹிக்க வல்லவன், தமக்குத்தொண்டு செய்பவன், பிறருக்கு எடுத்தோதும் திறமை உள்ளவன் ஆகிய இவ்வறுவருக்கும் நூல்களை உணர்த்த

வேண்டுமென்பது சாஸ்த்ர சம்மதம். ஆயினும் நீங்கள் கோரிக் கேட்ட பத்மாசல புராணத்தை ஆயிரம் நாப்படைத்த ஆதி சேஷனாலும் கூறமுடியாது. ஒரு நாப்படைத்த என்னால் அதை எப்படி எடுத்தோத முடியும்? ஆயினும் தாங்கள் விரும்பிக் கேட்டபடியாலும், இன்று நீங்கள் சொன்னபடி நல்ல சுபதினமாய் அமைந்திருப்பதாலும், எனக்குத் தெரிந்தமட்டில் கூறுகிறேன். பூர்வம் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் அகஸ்திய முனிவருக்கு பிரம்மதேவனால் இப்புராணம் சொல்லப்பட்டது. அது வியாஸபகவானால் "ஸ்காந்தபுராணத்தில்" உப புராணமாகச் சேர்க்கப்பட்டது. இந்த பத்மாசல மஹாத்மியத்தைக் கேட்பதும், பத்மதீர்த்தத்தை உட்கொள்ளுவதும், பத்மாசலேசர் சந்நிதியில் பஞ்சாக்ஷர ஜபம் செய்வதும், கிருத்திகை, ஸோமவாரம், ப்ரதோஷ தினங்களில் பத்மகிரீசரைத் தரிசிப்பதும், பல ஜன்மங்களின் செய்த புண்ணியத்தால் கிட்டுமேயன்றி யாவர்க்கும் எளிதில் கிட்டுவதரிது. நீங்களும் நான் கூறப்புகும் பத்மாசல புராணத்தை ஐம்புலன் ஒருமித்து மிக்க பக்தி சிரத்தையுடன் கேட்கக்கடவீர்" என்றார்.

2-ம் அத்தியாயம்:

பத்மாசலம் உண்டான வரலாறு.

இதனைக்கேட்ட இருடிகள் "ஸ்வாமீ! ஆதியில் பிரம்மதேவன் அகஸ்தியருக்கு இந்த புராணத்தை உபதேசிக்க என்ன ப்ரமேயம் ஏற்பட்டது என்று வினவினார்கள். சூத பௌராணிகரும், அபிராமா சமேத பத்மகிரீசரை மனதில் தியானம் செய்தவராய்க் கூறலுற்றார்.

முன்பு முழுமுதற்கடவுளும், திருநீல கண்டனுமாகிய சாக்ஷாத் பரமேஸ்வரன் பார்வதீதேவியாரை திருக்கைலையில் மணம்புரிந்தஞான்று, அம்மஹோத்சவத்தைக் காண முப்பத்து முக்கோடி தேவர்களும், திருமாலும், நான்முகனும், யக்ஷகின்னர கிம்புருடாதி பதினெண்கணங்களும் மற்றும் யாவரும் திருக்கைலையை அடைந்தனர், அதனால்ஜம்புத்வீபத்தின் வடகோடி தாழ்ந்து தென்கோடி உயர்ந்தது, அதனை சமப்படுத்த பரமேஸ்வரன் கும்பமுனியைத்தெற்கே பொதியமலை செல்லுமாறு கட்டளையிட்டார், அவ்வாறே அகஸ்திய முனிவரும் புறப்பட்டுவரும்வழியில் விந்தயபர்வதத்தின் கர்வத்தை யடக்கி, வில்வலன், வாதாபி என்ற இரண்டு அரக்கர்களைக் கொன்று, தன்கமண்டுலுவிள்ள கங்காதீர்த்தத்தை ஓர் காகம்

கவிழ்த்ததன் காரணமாக காவேரி என்ற திவ்ய நதியையும் உண்டாக்கிவிட்டு தெற்கே வந்துகொண்டிருந்த சமயம் லிங்காகாரமாய் நின்ற ஓர் குன்றைப் பார்த்தார், அதன்தோற்றமும். தேஜஸ்ஸும் அவர்மனதைக் கவர்ந்தன. முக்கண் முதல்வனே இவ்வாறு ஸ்வயம்புலிங்கமாக பர்வதாகாரமாய் ஆவிர்பவித்து இருப்பதை தனது ஞான திருஷ்டியால் உணர்ந்தார். உடனே அம்மலையை வலமாகவந்து தோத்தரித்தார்.

"ஹே! மங்கள சொரூபியே! பக்தர்களின் பாபங்களைத் தீர்த்து சிவசாயுஜ்யம் அளிக்கும் பரமகருணாநிதியே, சுந்தரா! மலையுருக்கொண்டு அம்மலையிலுறையும் ஜங்கம சொரூபமே! அஞ்ஞான இருளை அகற்றி எங்கும் ஸ்வயம் ஜோதியாய்ப் பிரகாசிக்கும் பராபரமே, வேதத்தின் உச்சியில் மலர்ந்த கேவல சைதன்யமே! கோடி சூரியர்களுக் கொப்பாய்! என் மனதின் அஞ்ஞானத்தைப்போக்கும் ஆனந்த சொருபமே! அமிர்த வருஷம்போன்ற சீதளமே. அளவிடற்கரிய மகிமை பொருந்திய மலர்ந்த தாமரை போன்று மலை உருக்கொண் டெழுந்தருளிய மஹானுபாவா, இந்தநெல்லிவன நடுவில் சகல புண்ணியதீர்த்தங்களையும் தம்முடியில்வைத்து உலகோர்உய்ய அவதாரம்செய்த அபிராமாபதியே,உன் திருவிளையாடலையாரே பகரவல்லார்" என்று பலவாறு துதித்துப்போற்றிப்பரவி மீண்டும் மீண்டும் பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து, அஞ்சலிஹஸ்தராய் மலையின் சிகரத்தைப் பார்த்தார்.

அங்கு தேவகணங்கள் புடை சூழத்தவம் செய்து கொண்டிருந்த ஸத்யலோகாதிபதியான பிரம்மாவைத் தரிசித்தார், அவரைவலம்வந்து வணங்கி, அடிபணிந்து "கருணாநிதியே! வேதங்களின் பிதாவே! லிங்காகாரமான இப்பர்வதத்தில்வந்து நீரே தவம் செய்வதானால் இம்மலையின் பெருமைக்கு ஓர் எல்லைதானுண்டோ? இல்லை யென்றே கருதுகிறேன். அதன்பெருமையை அடியேனுக்கு உபதேசித்து அருளல் வேண்டும்" என்று பலவாறு வேண்டிக்கொண்டார். சதுர்முகனும் புன்னகைபூத்துச்சொல்லலுற்றார்.

"கேளும்! கும்பமுனியே. தென்கங்கையென்று உலகப் பிரசித்திபெற்ற காவேரிநதிக்கும், வைகைஎன்றமஹாநதிக்கும் இடையில் விளங்கும் பிரதேசத்தில் சந்தானவர்த்தினி என்றும் கும்பநதியென்றும் ஈருறுகளின் நடுவில், பலஜாதிபழவிருக்ஷங்களும், பலஜாதி புஷ்பச்செடிகொடிகளும் நிறைந்து வளம் பொருந்திய இந்தநெல்லிவனத்தின் சிறப்புசொல்லத்தரமல்ல. தேவர்களும், யக்ஷகின்னரர்களும், சித்தசாரணர்களும், வைகாநஸவாலகில்யர்முதலியரிஷிகளும். எப்பொழுதும் இங்குவந்து இந்தலிங்காகாரமான ஸ்வாயம்புமூர்த்தியைத்தரிசனம் செய்து

பலநன்மைகளையடைகின்றனர். இந்தநெல்லி வனத்தின் விஸ்திரணம் ஒருகாதஅகலம், ஒருகாத நீளமாகும். இந்ததிவ்ய பிரதேசத்தில் வசிப்பவர்கள் முக்திதரும்க்ஷேத்ரங்கள் என்று கூறப்படும் ஏனையக்ஷேத்ரங்களில் வசிப்பவரைவிட பத்து மடங்கு அதிகமான நன்மைகளையடைகின்றனர். மக்களுக்கு இகபரசுகங்களை நல்கி ரக்ஷிப்பதால் இந்தநெல்லிவனம் "தாத்ரீ வனம்" 1 எனச்சிறப்புப் பெயரும் பெற்றது, இந்த இடத்தில் நெல்லிமரத்தடியில் செய்யும்சமஸ்தகர்ம்மாக்களும் பதின் மடங்கு பலனை அளிப்பன. மேலும் பசு, தங்கம், வஸ்த்ரம், வெள்ளி, இவைகளைவேதம்அறிந்த, ஆஹிதாக்னியிடம் 2 மிகச் சொல்பமாய்க் கொடுத்தாலும் மற்றஇடங்களில் சிறப்பாய்ச் செய்யப்படும் தானங்களை விடப்பதின்மடங்கு அதிகப்பலனைத் தருவதாகும். அவ்வாறே இவ்விடம் செய்யப்படும் யாகமும் பதின்மடங்கு பலனுள்ளதாகும். பத்மதீர்த்தத்தில்நீராடுவதும், பத்மகிரியை தரிசத்தலும், பத்மகிரியைவலம்வருதலும், அதை அடுத்துள்ள அச்வத்தவிருக்ஷ (அரசமரம்) சேவையும் பத்மாசலேசனின்தியானமும், பஞ்சாக்ஷரஜபமும், அநேகஜன்மாக்களில்செய்த பாபங்களை உடனே நசிக்கச் செய்வனவாகும். சுக்கிலதுவாதசியிலும், ஸோமவாரத்திலும், ப்ரதோஷங்களிலும், பத்மதீர்த்தத்தில் நீராடி, விபூதிருத்திராக்ஷம் அணிந்து பத்மகிரீசரை சேவிக்கின்றவர்களும், ஆமலகபத்ரத்தினுல் (நெல்லிஇலை) ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்கின்றவர்களும், பத்மதீர்த்தத்தால் பத்மகிரீசருக்கு அபிஷேகம் செய்கின்றவர்களும், இம்மையில் சகலபோக பாக்கியங்களையும் அனுபவித்து, மறுமையில்முக்திஎய்துவர். இதற்குச்சந்தேகம் இல்லை என்றுஆணையிடுகின்றேன். மேலும் இந்த தாத்ரீவனத்தில் மூன்றுநாள் வசித்தால் மலட்டுஸ்திரீகளும், பண்புமிக்க புத்ரர்களைஅடைவர். கிருத்திகைப் பெண்கள் அறுவரும் இத்தலத்தில்வசித்து, பத்மதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பத்மகிரீசரை வழிபட்டதால் தேவர்களால் பூஜிக்கப்படும் ஷண்முகப் பெருமானையே புத்ரர்களாய் அடைந்து பாலூட்டிச் சிறப் பெய்தினர். அப்படியாயின் இத்தலத்தின் விசேஷத்தைப் பற்றி வேறுஎன்ன அதிகம் கூறமுடியும்?" என்முர்.

இதைச்செவியுற்ற அகத்தியனுர், நான்முகனை நோக்கி ஜகத்பிதாவே, கிருத்திகைப்பெண்கள் எதற்காக இங்குவந்து

---

1 தாத்ரீ என்றசொல்லுக்கு "தாயார்", "பூமாதேவி", "நெல்லிமரம்", என்றபொருள்கள் உண்டு. 'தாங்குகிறவள்', 'காப்பாற்றுகிறவள்' என்பது "தாது"ப்பொருள்.

2 ஆஹிதாக்னி என்முல் தினம் காலம் தவருது அக்னி வளர்ப்பவன் என்று பொருள்,

வசித்தனர் என்ற விவரத்தை அடியேனுக்குக் கூறவேண்டும் என்றுகேட்க, பிரம்மாசொன்னார், "தக்கனுடைய புத்திரிகள் இருபத்திஏழுபெண்களை சந்திரன்மணந்தான். ஆனால்அவர்கள் யாருக்கும் புத்திரபாக்கியம் இல்லை. இதனால்வருந்திய கிருத்திகைப்பெண்கள் அறுவரும் தம் கணவனிடம் சென்று, புத்ரன் இல்லாத வீடு வீடாகுமா, 'புத்' என்னும் நரகத்தினின்றும் பிதுர்க்களை மீட்கப் புத்திரன் அவசியமல்லவா? நல்லபுத்ரர் களைப்பெற்று அவர்களைப்பாலூட்டிச் சீராட்டி வளர்க்காத ஸ்திரீஜன்மம் வீண்அன்றோ? யாழையும், குழலையும்பழிக்கும் அவர்களின் மழலைச் சொற்களைச்கேட்காத செவிகளால் என்ன பயன்? குழந்தைகளைப் பெற்றெடுத்து, வாரிஅணைத்து, உச்சி மோந்து, முத்தமிட்டு. தலைவாரி, பொட்டிட்டுப்பார்க்கும் வாய்ப்பு இல்லையானால் இம்மையில் நாம் என்ன இன்பத்தை யடையமுடியும்? வேறு எந்தவிதமானசெல்வம் இருந்தாலும், மக்கட்பேறு இல்லாதவர்கள் தரித்திரர்களேயன்றோ! குறுகுறு என்றுபார்க்கும் விசாலமான கண்களில் மை தீட்டி, கைகளில் தங்கவளையல்கள் அணிவித்து இடுப்பில் அரைஞாணோடு தமது சிறுகைகளை தரையில் ஊன்றித் தவழ்ந்து வருவதையும். தளர் நடைபழகுவதையும், சிறுதேர் உருட்டுவதையும். சிற்றில் சிதைப்பதையும் காண வாய்ப்பில்லாத கண்களால் என்ன பயன்? ஆதலால் நாதா, நாங்கள் புத்திரர்களைப் பெறுதற்கான உபாயம் நீரேசொல்லவேண்டும்" என்று அங்கலாய்த்தார்கள். அதைக்கேட்ட சந்திரன், "பெண்களே, நான்என்ன செய்வேன் முன்பு குருபத்தினியைத்தீண்டியதால் ஏற்பட்ட குருவின் சாபத்தால் எனக்குப்புத்திரபாக்கியம் இல்லாமற்போனது. ஆதியந்தமில்லாத முக்கண் முதல்வனேசகல பாபங்களையும்போக்க வல்லவன். அவனைக்குறித்து,அவனுக்குகந்தக்ஷேத்திரத்தில்தவம் செய்வீர்களானால் அவன் உங்களுடைய மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வான் என்று கூறி அவர்களுக்குப் போகவிடை கொடுத்தான். 'அவர்களும் ஒவ்வொரு சிவஸ்தலமாகச் சென்று ஆங்காங்குள்ள பலபுண்ணியதீர்த்தங்களில் நீராடி, பரம சிவனைபக்தி சிரத்தையோடு வழிபட்டு அநேகயுகங்கள் தவம் செய்தனர். ஆனால் பலன்இல்லை. கடைசியாக என்னைக் (நான் முகன்) கண்டு தமது வருத்தத்தைத்தெரிவித்து, சிவபெருமானை எந்தக்ஷேத்ரத்தில் வழிபட்டால் மக்கட்பேறுஅடையலாம் என்று வினவினர். நான் அவர்களுக்கு இந்த தாத்ரிவனச் சிறப்பையும். பத்மதீர்த்தத்தின் மகிமையும், பத்மகிரியின் பெருமையையும் எடுத்துக்கூறினேன். அவ்வாறே அவ்வறுவரும் இவணடைந்து, பத்மதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பூர்வத்தில் அந்தபத்மதீர்த்தத்தில் மலர்ந்த தாமரையே மலையாகமாறி லிங்காகாரமாக இருக்கும் பத்மகிரீசரை தரிசித்து அம்மலையை வலம்வந்து பத்மதீர்த்தத்தின் வடகரையில்

நிற்கும் அரசமரங்களைப் பிரதக்ஷிணம் செய்து ஒருமண்டலம் வதிந்தனர்.

இஃதிவ்வாருக சூரபத்மனுல் துன்புறுத்தப்பட்ட தேவர் களின் முறையீட்டைச் செவிமடுத்த சிவபெருமான் சூரர் குலத்தை அழிக்கவல்ல ஓர் புத்திரனைத் தருவோம். அக் குழவிக்குப் பால் கொடுக்கத் தகுதியுடையவர்கள் கிருத்திகைப் பெண்களேயாவர். அவர்களும் எம்மைக்குறித்து நெல்லி வனத்தில் தவம் செய்கின்றனர். அவர்களை அழைத்து வந்து சரவணத்தில் இருக்கச் செய்யுங்கள் என்று திருவாய் மலர்ந் தருளினுர். திருமாலும், நான்முகனும் ஏனையதேவர் குழாமும், தமக்குவர இருக்கும் நல்லகாலத்தை எதிர்நோக்கியவர்களாய் இந்த, "தாத்ரீவனம்" வந்து அங்கு தவமியற்றும் கிருத்திகைப் பெண்கள் அறுவரையும் விளித்துப் "பெண்களே! உங்களுக்குக் கிடைக்க இருக்கும் பாக்யம் பரமனின் பாதியான பராசக்திகுக் கூடக் கிட்டாது. பரமன் அருளும் குழந்தைகளுக்குப் பாலூட்டும் வாய்ப்பை இந்த நெல்லிவனத்தில் தவம் செய்ததால் பெற்றீர். உங்களைத்தேடி வந்ததின் காரணமாக இவணெய்தி, லிங்காரகாரமான ஸ்வயம்பு மூர்த்தியைத் தரி சித்தோம். அந்தப் புண்ணியத்தின் பலனையும் உங்களுக்கே தந்தோம். ஈசன் ஆணைப்படி விரைவில் நீர் சென்று சரவணத் தில் தங்குங்கள்" என்று கூப்பிட்டார்கள். கிருத்திகா ஸ்திரீ கள் அறுவரும் மிக மகிழ்ச்சியடைந்து ஏனைய தலங்களில் அநேகயுகங்கள் தவம் செய்தும் பெருத இப்பெரிய வாய்ப்பை இத்தலத்தில் நாற்பது நாட்களில் பெற்ருேமே எனவியந்து பத்மாசலேசனைச் சேவித்து, தமது ஆனந்தக் கண்ணீரால் அவரது பாதமலர்களைக் கழுவி, மீண்டும் மீண்டும் தரையில் வீழ்ந்து அடிபணிந்து அஞ்சலி ஹஸ்தராய்ப் பத்மகிரீசரை பலநாமாக்களால் வாயாரப் போற்றிப் புகழ்ந்து, தேவர்கள் புடைசூழ சரவணத்தையடைந்தனர். [சரவணம் என்ருல் தருப்பைக்காடு என்று பொருள். தாத்ரீவனம் என்ருல் நெல்லி வனம் என்று பொருள். நெல்லிவனத்தில் செய்த வழிபாட் டால் தருப்பை வனத்தையடைந்து ஷண்முகப் பெருமா னுக்குப் பாலூட்டினர் என்பதில் இத்தலத்தில் வழிபடுபவர் களுக்கு முருகன் அருள் எளிதில்கிட்டும் என்ற புதைபொருள், நேயர்கள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.]

இறைவனின் ஐந்து முகத்தோடு அதோமுகமும் சேர்ந்து அவ்வாறு முகங்களின் நெற்றிக்கண்களினின்றும் எழுந்த ஆறு பொறிகளையும் வாயுவும், அக்னியும் கொண்டேகிக் கங்கையிலிட அன்னவளும் அவற்றைச்சரவணத்தில்சேர்க்க அங்கு அப்பொறி கள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. அவற்றைக் கிருத்திகைப்

பெண்கள் அறுவரும் ஆளுக்கொன்ருக எடுத்தவுடன் தமது மார்பில் பால் சுரக்கக்கண்டனர். திருவருளை வியந்து அக் குழவிகள் ஆறுக்கும் பாலூட்டினர். இவ்வாறு சந்திரனுக்கு ஏற்பட்ட சாபமும் பிசகாமல், கிருத்திகை மாதரின் கற்புக் கும் பங்கம் வராமல் பத்மகிரீசன் அருளால் தாய்மை நிலை அடைந்தனர்" என்று பிரம்மா அகத்தியமுனிவருக்குச் சொன் ஞர்.

3-ம் அத்தியாயம் :

இறைவன் பத்மகிரியான வரலாறு.

இவ்வரலாற்றைக் கேட்ட அகஸ்தியர் "பிதாமகரே முழுமுதற்கடவுளாகிய கயிலாயபதி இவ்வாறு இங்கு பர்வா தாகாரமாய் எழுந்தருளியது எக்காரணத்தால்?" என்று வினவினர். பிரம்மா சொல்லத்தொடங்கினர்.

" குடமுனியேகேளும்! இவ்வுலக சிருஷ்டியின் ஆதியில் சத்தியலோகாதிபதியான "சாக்ஷுஸம்" 3 என்ற பிரம்மா ஒரு சமயம் சத்தியலோகத்தினின்றும் புறப்பட்டு கயிலையை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். போகும் வழியில் பகல்

---

3 பிரம்மா என்ற சிருஷ்டிக்கர்த்தா ஒவ்வொரு கல் பத்தின் இறுதியிலும் ஊழியில் அழிந்து அடுத்த கல்பத்தில் திரும்பவும் தோன்றி சிருஷ்டி செய்வார் என்பது புராண வர லாறு. இவர் முதல் கல்பத்தில் மானஸர் என்றும். இரண்டா வது கல்பத்தில் சாக்ஷுஸர் என்றும், மூன்ருவது கல்பத்தில் வாசிகர் என்றும், நான்காவது கல்பத்தில் சுரோத்ரஜர் என்றும், ஐந்தாவது கல்பத்தில் நத்யர் என்றும், ஆருவது கல்பத்தில் அண்டஜர் என்றும், ஏழாவது கல்பத்தில் பத்மஜர் என்றும் அழைக்கப்படுவார்கள். இப்பொழுது நடைபெறுவது சுவேதவராஹகல்பம், என்ற ஏழாவது கல்பம். பத்மஜர் அதாவது தாமரையில் உதித்தவர் என்பவரே இந்த கல்பத் தில் பிரம்ம பதவியில் இருக்கிருர். இவரே அகத்தியருக்கு இந்த புராணத்தைக் கூறுகிருர். எனக்குக்கிடைத்த தமிழ் கை எழுத்துப்பிரதியில் ஓர் இடத்தில்"சாகுஸ" பிரம்மா என்றும் மற்ருேர் இடத்தில்"சஸ்ய பிரம்மா" என்றும் பிறிதோரிடத்தில் "காச்யபபிரம்மா" என்றும் பலவாறுகண்டிருக்கின்றது. சிருஷ்டி ஆரம்பம் எனப்படுவதால் இந்தச்சொற்கள் இரண்டாவது கல்பத்தின் பிரம்மாவான சாக்ஷுஸரையே குறிக்கும் என்று துணிந்து எழுதியுள்ளேன்.

உச்சிப்பொழுது வந்துவிட்டது. உடனே தாம் அந்நேரத்தில் செய்யவேண்டிய "மாத்யான்ஹிகம்" என்ற கிரியைச்செய்யத் தீர்த்தம் எவ்விடம் இருக்கின்றது என்று தேடினார். அப்பொழுது மலர்ந்த செந்தாமரைகள் நிரம்பியதாயும், தெள்ளிய நீரையுடையதாயும், துள்ளிவிளையாடும் மீன் இனங்களையுடையதாயும், அழகாக நீந்தும் ராஜ ஹம்ஸங்களையுடையதாயுமான ஓர் தடாகத்தைக் கண்டார். மிகமகிழ்ச்சி கொண்டவராய்த் தடாகத்தில் இறங்கி ஸ்நானம்செய்து மாத்யான்ஹிகக்கிரிகையைமுடித்துக்கொண்டார். கதிரவனின் உஷ்ணம் தாங்காமல் சற்று இளைப்பாறினார். அந்த இடம் மிகக்குளிர்ந்ததாயும், இளம் காற்று அடிப்பதாயும், தடாகத்தில் முளைத்தெழுந்த தாமரை மலர்களின் வாசனையால் நிரப்பப்பட்டதாயும் மனோரம்யமாய் இருந்ததைக்கண்டு இந்த இடம் எதுவாயிருக்கலாம் என்று தனது ஞானதிருஷ்டியால் ஆராயப்புகுந்தார். இவ்வாறு புறக்கண்ணால் நோக்காது அகக்கண்ணால் பார்த்தபோது இது ஒரு மஹா மகிமை வாய்ந்த ஓர் புண்ணிய தீர்த்தம் என்றும், தம்மில் ஒரு முறையேனும் மூழ்கினவருக்கும் இகபர சௌக்யங்களை நல்க வல்லது என்றும் உணர்ந்தார். இறைவனின் திருவருளே நம்மை இங்கு கொண்டு வந்து சேர்த்தது என்று நினைத்தவராய் கயிலைநாதனை இங்கேயே தரிசிப்போம் என்று தீர்மானித்து அவ்விடத்திலேயே தவம் செய்யத் தொடங்கினார்.

அவர் செய்த தவத்தில் மகிழ்ந்தவராய் முழுமுதற் கடவுளான சிவபெருமான் அந்த தடாகத்தின் மத்தியில் மலர்ந்திருந்த ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலரில் அதன் நடுவே இருந்த தாமரைக்காயினின்றும் திவ்யதேஜோமயமான லிங்கமூர்த்தியாகத் தோன்றினார் அதினின்றும் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து முகங்களோடும் ஒவ்வொரு முகத்திலும் ஸோம சூர்யாக்னிகளான மூன்று திருக்கண்களும், திங்களும் கங்கையும் தங்கும் ஜடாபாரமும் உடையவராய் ஆவிர்பவித்து தம்மை நோக்கிக்கடுந்தவம் செய்யும் பிரம்மாவுக்குக் காட்சியளித்தார். இந்த திவ்ய மங்கள மூர்த்தியைக் கண்ட பிரம்மா தமது கண்களில் ஆனந்தவாரி சொரிய மிக்க பரவசராகி இறைவனைத் தோத்திரம் செய்யவாரம்பித்தார்.

"ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை மலரின் நடுவே தோன்றி ரத்ன ஸிம்ஹாசனத்தில் கோடி சூர்யப்பிரகாசமாய் லக்ஷ்மீபதி முதலிட்ட தேவர்கள் யாவரும் புடை சூழ்ந்து போற்றும் பரப்ரம்ஹமே! தொண்டருளம் கோயில் கொண்ட கருணாகர மூர்த்தியே! உம்மை வழி படுவோரின் அஞ்ஞான

இருளை அகற்றும் மங்கள மூர்த்தியே! உலகம் உய்ய இங்கு லிங்காகாரமாய் 4 எழுந்தருளிய முழுமுதலே! பற்றற்று நிற்கும் நிர்மல சொருபியே! பக்தர்களுக்கு இஷ்டார்த்தசித்தி களைக் கொடுக்கும் கருணைமாமுகிலே! பராபரவஸ்துவே! நீக்க மறஎங்கும் நிறைந்த செம்பொருளே! உலகத்தை ஆக்கி, அளித்துத்துடைக்கும் மூவர்க்கும் முதல்காரணமே! உலகத்தையே தன் திருமேனியாகக் கொண்டு ஒன்றாயும், உடனாயும், வேறாயும் இருந்து இயக்கும் தனிமுதலே! அவரவர் வினைக்கீடாகத் தநு கரண புவன போகங்களை நல்கி, அவர்களின் பக்குவ நிலையறிந்து அவர்களை அனாதிகாலமாய்ப் பற்றியிருக்கும் பாசங்களைப்போக்க வன்றோ இன்று இங்கு இந்த பத்மதளகர்ணிகையில் லிங்க மூர்த்தியாய் ஆவிர்ப்பவித்தாய்! ஹே! புண்ணிய புருஷா! பொங்கும் நின்கருணைக்கடலின் அலைகளாகிற நாடக சாலையில் கூத்தாடும் அடியேனுடைய சித்தவிருத்திகள் யாவும் ஒடுங்கும் முடிவுக்கு முடிவே! உனது இன்னருளால் மாயாவசப்பட்ட மக்களைஈடேற்ற இப்பத்மதீர்த்தத்தில் தோன்றியருளிய திகம்பர மூர்த்தியே! பத்மவனத்தரசே! நெல்லிவனநாயகமே! உலகின் ஆதிகாரணனே! திங்களும் கங்கையும் தங்கும் பின்ஞ்ஞகா! சுந்தரா! சர்ப்பாபரணனே! சங்கரா! வேதஸ்வரூபனே! மெய்யனே! உபநிடதங்களின் உச்சியில் விரிந்த போதமே! ஆலகால முண்டு அமரர் உயிர்காத்த உத்தமா! தேவர் தொழும் பாதா! ஜோதியே! சுடரே! நித்தியனே! பூரணனே! பத்மாசலேசா! அபிராமாபதே! சரணம்! சரணம்!" என்று சாக்ஷுஸ பிரம்மாவானவர் மும்முறை வலம்வந்து, மும்முறை நமஸ்கரித்து இன்னும் பலவாறு போற்றிப்பரவி அதி விநயஸம்பன்னராய் ஓர் விண்ணப்பம் செய்து கொண்டார்.

"ஸ்வாமி! தேவரீர் அடியேன்மீது கொண்ட பரமகருணையால் இன்றுபத்ம கர்ணிகையில் லிங்கமூர்த்தியாய்க் காட்சியளித்தீர். உமது இந்ததேஜோமய சொரூபத்தை யாவரும் தரிசித்தமாத்திரத்தில் வினை நீங்கப்பெற்றவராய்த்திகழ ஏதுவாக, இந்த நெல்லிவனக்ஷேத்திரத்தில் இப்பொழுது பத்மகர்ணிகையில் தோன்றிய உருவைப்பெரியதாக வளரச்செய்துகொள்ளல்

---

4 லிங்கம் என்ற சொல்லின் விளக்கம்

"லிங்கம் பூதானி லயமஸ்மின் கச்சந்தீதி லிங்கம்" என்றும்
"லயம் கச்சந்தி பூதானி ஸம்ஹாரே நிகிலம் யத:
ஸ்ருஷ்டிகாலே புனர்ஸ்ருஷ்டிம் தஸ்மாத் லிங்கமுதாஹ்ருதம்."
என்று ஸுப்ரபேதாகமம் கூறுகின்றது. அதாவது எதில் சகலமும் முடிவில் லயமடைகின்றதோ, பின்பு மறுபடியும் எதினின்றும் அவையாவும் தோன்றுகின்றனவோ அதுவேலிங்கமாகும்.

"அந்தம் ஆதி என்மனார் புலவர்" சிவஞானபோதம்.

வேண்டும் என்று பிரார்த்தித்தார். அதனைத் திருச் செவிமடுத்த பெம்மான் பிரம்மனின் பிரார்த்தனை உலக க்ஷேமத்திற்காக ஆகும்என்று திருவுளத்தில் கொண்டு அவ்வாறே வடக்கே கயிலாயம் எப்படியோ அப்படியே இத்தென் பிரதேசத்தில் தான் நித்யவாசம் பண்ணும் பர்வதமாக ஓங்கி வளர்ந்து நின்றார். தேவர்கள்புஷ்பமாரி பெய்தனர். திருமாலும் இந்திராதிதேவர்களும் அவணெய்தி இறைவனை அடிவணங்கித் துதித்தனர். "சம்புவே! சங்கரா! கௌரிமனோஹரா! கங்காதரா! பத்மாசலேசா! காமனைஎரித்தவா! காலனை உதைத்தவா! கருணாகரா! பரஞ்சோதி! பரமபுருஷா! உலககாரணா! உரகாபரணா!" என்று பலவாறு வாயாரப்பாடி, மனதாரச் சிந்தித்து அடி வீழ்ந்து வணங்கினர்.

மேலும் கும்பமுனியே! கயிலாயவாசியாகிய பரமசிவனே, இந்நெல்லி வனத்தில், மஹாலிங்க மூர்த்தியாக எழுந்தருளிய பத்மகிரீசரை யாவர் தரிசித்து பக்திவிநயத்துடன் ஐம்புலனடக்கி ஆராதிக்கிறார்களோ, அவர்கள் தர்மார்த்த காமமோக்ஷம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்து இன்புறுகிறார்கள். இதில்சந்தேகமில்லை. விசேஷமாகஸோமவாரத்திலும், பிரதோஷ தினங்களிலும், சதுர்தசியிலும், கிருத்திகை நக்ஷத்திரத்திலும், திருவாதிரை நக்ஷத்திரத்திலும், கிரஹண புண்ய காலங்களிலும், ஜன்ம நக்ஷத்திர தினங்களிலும் முறைப்படி வைகறையில் எழுந்து பத்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பத்மகிரியை வலம்வந்து, பத்மகிரீசரை சேவித்து வில்வம், துளசி, நெல்லி இலை இவைகளால் அர்ச்சனை செய்து வழிபட்டால் வேண்டியவர் வேண்டியவற்றை வேண்டியபடி அடைவர்.

இன்னும் ஸ்ரீயःபதியான மஹாவிஷ்ணுவும் நரசிம்ஹாவதாரம் செய்து ஹிரண்யகசிபுவை சம்ஹாரம் செய்ததால் உண்டான பிரம்மஹத்தி தோஷத்தை, இத்தலத்தில் வந்து பத்மகிரியினடியில் வதிந்து, பத்ம தீர்த்த ஸ்நானம் செய்து பத்மகிரிநாதரை வேதோக்தமாய்ப் பூஜை செய்து போக்கிக் கொண்டார். அவரும் இந்த க்ஷேத்ரத்தை வைகுண்டம் போலும், பாற்கடல் போலும் பாவித்து பத்மகிரியின் அடிவாரத்தில் அமர்ந்திருக்கிறார்." என்று நான்முகன் அகத்தியருக்குக் கூறினார்.

4-ம் அத்தியாயம் :
ஸூக்ஷ்மலிங்கத் தோற்றமும், திண்டீச்சுர நிர்மாணமும்.

முனிவரில் சிரேஷ்டரான அகஸ்திய முனிவர் பிரம்மனை நோக்கி "ஸ்ருஷ்டி கர்த்தாவே! இந்தபத்மகிரியின் சிகரத்தில்

இன்னொரு லிங்காகாரமான உருவம் இருக்கின்றதே அதன் விவரம் என்ன" வென்று கேட்டார்.

கமலஜர் கும்பஜருக்குக் கூறுகின்றார். கேளும் லோபா முத்ரையின் கணவரே! இந்தபத்மகிரியே முழுமுதற்கடவுளின் சொரூபம். இது என் சிருஷ்டியில் அடங்கினதல்ல. இறைவனே தன்னிச்சையால் உயிர்கள் உய்யும் பொருட்டு இம்மலை வடிவான ஸ்வயம்பு மூர்த்தியாய் நிற்கின்றார். முன்பொரு சமயம் தேவாசுரயுத்தம் நடந்தது. தேவர்கள் படுதோல்வியடைந்தனர். தேவஸ்திரீகளை அரக்கர்கள் சிறைப்பிடித்துச் சென்றனர். இந்திரலோகத்தினின்றும் தேவர்கள் விரட்டப் பட்டனர். சொர்க்கலோகம் அசுர ஆட்சிக்குட் பட்டது. தேவர்கள் நாலாபக்கமும் சிதறியோடி ஆங்காங்கு ஒளிந்து கொண்டனர். அவர்களில் சிலர் இந்த பத்மகிரி பிரதேசத்தை யடைந்து, லிங்காகாரமாய் இருக்கும் இப்பர்வதத்தின் தாழ் வரையில் தங்கி நாள்தோறும் பத்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பத்மகிரி நாதரை வழிபட்டு வந்தனர். தொழுதவர் துன்பம் துடைக்கும் பத்மாசலேசர் அவர்கள் முன் தோன்றினார். அவர்கள் கோரிக்கை யாது என வினவினார். தேவர்கள் " ஐயனே! அன்று எங்களை ஆலகால விஷச் சுவாலையிலிருந்து காப்பாற்றி பக்தரக்ஷகன் என்பதற்கு அறிகுறியாக உமது கண்டம் கருத்தது. அதுபோலே இன்றும் எங்களை அசுரர்களின் உபாதியிலிருந்து நீக்கியருளும். மறுபடியும் நாங்கள் விண்ணுலகம் சென்று குடியேற அனுக்கிரகம் செய்தல் வேண்டும்" என்று இறைஞ்சினர். அதனைக்கேட்ட பத்மாசலேசன் அவர்களை நோக்கி புன்னகை பூத்து தேவராயினும் மூவராயினும் தாம் செய்யும் வினைப்பயனை அனுபவித்தே ஆகவேண்டும். யாம் ஒருவனே கர்மத்தால் பீடிக்கப்படாதவன். விரைவில் உங்கள் அபீஷ்டம் நிறைவேறும். நமது அம்ஸங்களில் ஒன்றாகிய மஹாவிஷ்ணு அசுரர்களை அழிப்பார் அதுவரை உமக்கு, சொர்க்க போகங்களை அனுபவிக்கும் நிலையில் இருப்பிடம் தருகின்றோம். கவலையுற வேண்டாம்" என்று திருவாய் மலர்ந்தருளி பத்மகிரியின் அகண்ட அடி பாகத்தை ஓர் பிலமாக (குகை) அமையும்படி செய்து, அதில் தேவர்கள் விண்ணுலகில் எவ்வாறு வாழ்ந்தார்களோ அதை விட மிக சௌகரியமாய் வாழ்வதற்கான சகல வசதிகளையும் சங்கல்ப மாத்திரத்திலேயே உண்டாக்கினார். தேவர்களை அந்த குகையில் வசிக்க அனுமதி கொடுத்து விட்டுத்தான் இந்த அகண்ட அடிபாகத்தின் உச்சியில் மற்றொரு லிங்கமாக வளர்ந்தார். இந்த லிங்காகாரமான சிகரம் இறைவனின் சூக்ஷ்மலிங்கமாகும். தேவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இந்த சூக்ஷ்மலிங்கத்தை நாடோறும் வழிபட்டுக்கொண்டு பத்மகிரி

யின் கர்ப்பம் போன்ற குகையில் சொர்க்காதி போகங்களை யும் நுகர்ந்து வசித்தனர்.

இஃதிவ்வாறாக திண்டி என்ற ஓர் அசுரன் பத்மகிரிச் சாரலில் வேட்டையாடத் தன் பரிவாரங்களோடு வந்தான். அவன் அகண்டவாயும், கோரைப்பற்களும் ரத்தம் போல் சிவந்த கண்களும், சுருண்ட மீசையும், பருத்து நீண்ட கை களும், குட்டையான கால்களும், அகன்ற மார்பும், செம் பட்டை மயிரும் மைமலைபோன்ற உருவமும், இடிபோல் குரலும் உடையவனாய்ப் பார்ப்பவர் கண்டஞ்சும்படியான தோற்றமுடையவன். அவனைச் சூழ்ந்துவரும் அசுரகுழாம் புலிக்கூட்டம் போன்று தோற்றமளித்தது. அக்கூட்டத்தின் நடுவில் திண்டிகாசூரன் புலிக்கூட்டத்தின் நடுவில் சிங்க மெனத்திகழ்ந்தான். அவனுடைய உடல் கட்டையும் வலிமை யையும் திண்ணென்று இருந்தமையாலோ என்னவோ அவனை, "திண்டி" என்றே பெயரிட்டனர் அவன் பெற்றோர். வேட்டை யாடவந்தவன் இந்த நெல்லிவனத்தின் வளப்பத்தையும் வனப்பையும் கண்டு சந்தோஷித்தவனாய் இவ்விடத்தில் ஓர் அழகிய நகரை நிர்மாணம் பண்ணி இங்கு வசிக்க வேண்டு மென அவாவினான். அவ்வாறே பத்மகிரியின் கீழ்பாகத்தில் உயர்ந்தோங்கிய சுற்று மதில்களும், வரிசை வரிசையாக வான ளாவும் உப்பரிகைகளும், மாடமாளிகை கூட கோபுரங்களும், தெள்ளிய நீரையுடைய நீர்த்தேக்கங்களும், நவரத்னங்களும் தனதான்யங்களும் நிரம்பிய கடை வீதிகளும் பல்வகைப்பழ மரங்களும், நறுமணம் கமழும் புஷ்பஜாதிகள் நிரம்பிய பற் பல செடி கொடி மரங்களையும், உத்யான வனங்களையும் உடையதாயும், ரத கஜ துரக பதாதி களான நால் வகைச் சைனியங்களும், புஜபல பராக்ரமம் பொருந்திய பல சேனைத் தலைவர்களும், மல்லர்களும், மந்திரி பிரதானிகளும் ஒருங்கே கொண்ட ஓர் அழகிய நகரை உருவாக்கினான். அந்நகரத்துக் குத் திண்டீச்சுரம் எனப்பெயர் கொடுத்தான். பத்மகிரீசனை நித்தியம் வழிபாடு செய்து வந்தான். அவன் ஆட்சியில் அசுர மக்கள் அனைவரும் சுகமாகக்காலம் கழித்தனர்.

சிவபக்தனானாலும் "குலத்தளவேயாகுமாங் குணம்" என்ற மூதுரைக்கேற்ப, தனது அசுரகுண மேலீட்டால் சான் றோர்களான இருடிகளையும், வேதம் தெரிந்த அந்தணர்களை யும், இறைவனின் அடியார்களையும் கொடுமைப் படுத்தியும், அடிமைப்படுத்தியும், வதைத்தும் தனது அசுர தர்மத்துக்கு ஒப்ப ராஜ்யபாரம் தாங்கினான்.

இவ்வாறு திண்டிமாசூரன், திண்டீச்சுரம் என்ற இந் நகரில் அரசு நடத்திவரும்போது, மஹாவிஷ்ணுவானவர்,

தேவர்களின் முறையீட்டுக்குச் செவிசாய்த்து, தேவலோகத்தை ஆக்ரமித்திருந்த அசுரக்கூட்டத்தோடு கடும் போர்புரிந்து அவர்களை அழித்து தேவலோகத்தில் மறுபடியும் தேவர்கள் குடியேறும்படியான நிலைமையை யுண்டாக்கினர். இதை அறிந்த பத்மகிரிநாதர், தம்மிடம் சரணம்புகுந்து பிலத்தில் வாசம் செய்துவந்ததேவர்களை அழைத்து "விஷ்ணுவால் அசுரர்குலம் அழிந்தது. நீங்கள் மறுபடியும் உங்கள் இருப்பிடம் சென்று அமைதியாய்வாழலாம்" என்றுவிடை கொடுத்தனுப்பினர். தேவர்களும் தாம்இதுவரை சொர்க்க போகங்களைவிடப்பதின்மடங்கு அதிகஇன்பம் அனுபவித்தவர்களாதலாலே பத்மகிரி பிலத்தையும் திருநெல்விவனத்தையும் விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் மிகவருந்தினர். பின்பு இறைவனுல் தேற்றப்பட்டு ஒருவாறு மனம்தேர்ந்தவர்களாய் பூலோக சொர்க்கமாக இருந்த குகையை விட்டுவெளியேறினர்.

அந்நிலையில் திண்டிமாசூரன் பிலத்துவாரத்தினின்றும் வெளிப்போந்த தேவர்களைக் கண்ணுற்றுன். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பரம்பரையாக ஒவ்வொருகல்பத்திலும் ஏற்பட்டுவந்த விரோதம் அவர்களின் பிறவிக்குணமாக இருந்தபடியால் திண்டிமாசூரன் தனது படைகளுடன் தேவர்களைத் தாக்கமுற்பட்டான். எதிர்பாராதவகையில் ஏற்பட்ட இந்த ஆபத்தினின்றும் தப்புவதற்கு தேவர்கள் மறுபடியும் வந்த வழியே பிலத்தில் நுழைந்து ஓடிபத்மகிரி சிகரமாகஇருக்கும் சூக்ஷ்மலிங்கத்தைவணங்கி "கருணைக்கடலே, யாதொருபயமின்றி துன்பமின்றி இதுகாறும் இந்தபிலத்தில் பலகாலம் சொர்க்க போகங்களை அனுபவித்தோம். எங்களைமறுபடியும் விண்ணுலகசேகச் சொன்னது இந்தத்திண்டிமாசூரன் கையில்சிக்குவதற்குத்தானு எங்களை இக்கணமே காப்பாற்ருவிடில் திண்டிமாசூரன்கையில் சிக்கி அல்லலுறுவோம் காப்பாற்றவேண்டும் என்று பன்முறை பத்மகிரீசன் தாள்பணிந்து இறைஞ்சினர்.

இவர்கள் முறையீட்டைக் கேட்ட பத்மாசலேசன், பவளமாமலையில் பனிபடர்ந்ததென்ன பால் வெண்ணீற்றை உத்தூளனமாகத்தன் திருமேனியில் பூசியவராய், நெருப்புக்கற்றைகள்போல் ஒளி வீசும் நீண்ட சடையும், இடையில் கட்டிய புலித்தோலாடையும், மேலே போர்த்திய யானை உரியும், காதுகளில் குழையும் சுருள்தோடும் கலந்து தோன்ற, மார்பில் கபால மாலையணிந்து, பிரளயகாளாக்னிக்கு ஒப்பான கோபத்தால் சிவந்த திருநேத்ரங்களுடன், கையில் சூலப்படை தாங்கி கால பைரவர் உருவில் பத்மகிரி சிகரத்தினின்றும் ஆவிர் பவித்தார், தேவர்களுக்கு அபயம்

கொடுத்து திண்டிமா சூரனோடு யுத்தம் செய்யப் புறப் பட்டார். அண்ட கடாகம் நடுங்கியது. பூமிஅதிர்ந்தது. அவருடைய க்கோபச் சிரிப்பின் பேரொலி அண்டமெல்லாம் முட்டி எதிரொலித்தது. அஷ்ட குலாசலங்களும், அஷ்டதிக் கஜங்களும் அஷ்டதிக்குப் பாலகர்களும் ஊழியே வந்து விட்டதோ என்று அஞ்சி அதிசயித்தனர்.

இக்கோலத்தில் தோன்றிய இறைவன் யுத்தசன்னத் தனாய் நிற்கும் திண்டிமா சூரன் முன்தோன்றி "ஏ துஷ்டா! இப்புண்ணிய இடமாகிய நெல்லி வனத்தில் பலகால் வசித்தும், என்னை வழிபட்டுங்கூட உன் அசுரத்தன்மை உன்னை விட்டு நீங்க வில்லையே! அஹங்காரத்தால் உன் அறிவு மழுங்கியதே! இந்த க்ஷேத்ரத்தில் மூன்று தினங்கள் தங்கினாலே மும்மலங்களும் மறையுமே! ஆனால் வினை யாரை விட்டது? சிஷ்டர்களை இம்சைசெய்வதே உன் விளையாட்டாகக் கொண்டனை. நிராயுத பாணிகளாய் எம்மைச் சரண் புகுந்த தேவர்களை எதிர்த்தாய். இதோ உன்னைக் கொன்று விடுகிறேன் என்று இடிபோல் கர்ஜித்துத்தமது சூலப்படையைச் செலுத்தினார். திண்டிமா சூரனும் தனது ஆணவ மூனைப்பினால் வந்தவர் பத்மகிரி நாதரே யென்றறியாமல் யுத்தம் செய்தான். பற்பல அஸ்திர சஸ்திரங்களை பிரயோகித்தான், தனது சேனா வீரரை ஏவினான் தனது முழுபலத்தையும் கொண்டு இடசாரி வலசாரியாகக் கடும் போர் புரிந்தான். ஆயினும் அவன் வெற்றியடைய முடிய வில்லை. சற்று நிதானித்தான் நம்முன் நின்று எதிர்க்கும் வல்லமை ஈசன் ஒருவருக்கேயுண்டு. இந்த வேட உருவை ச்ஸாமான்யமாகக் கருதினேனே. வந்திருப்பவர் பத்மாசல இறைவனன்றோ எனத்தீர்மானித்துப் பேசலுற்றான்.

"ஹே கைலாஸ பதே! பக்த ரக்ஷகா! நான் உன் நெல்லி வனத்தில் நகரம் நிர்மாணித்து, முப்போதும் உம்மை வழி பட்டு வந்த அடிமையல்லவா? தேவர்கள் போல் நானும் உம்மால் காப்பாற்றப்படத் தகுந்தவனே. நீர் ஏன் பார பக்ஷமாய் நடக்க வேண்டும்? தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இருக்கும் ஜன்மப் பகையை நீர் அறியீரா? அன்று பாற்கடல் கடைந்த போது, ஏனைய தேவர்கள் பெரும் பொருள்களை அடைய உமக்கு விஷத்தைக் கொடுத்தனரே? அவர்களைக் காப்பாற்றவா என்னைக் கொல்லக் கருதினீர் தேவர்கள் சூழ்ச்சியால் அமிர்தத்தில் எங்களுக்குப் பங்கு கொடாமல் ஏமாற்றினரே. அதிலிருந்தல்லவா இந்தப்பகை காலமெல்லாம் வளர்ந்து நீடித்திருக்கின்றது. தேவர்களைத் துன்புறுத்துவது என் குலதர்ம மல்லவா? என்னை ஏன் நீர் கொல்ல வேண்டும்?

இது உன் கருணைக்கு ஒத்த காரியமல்லவே. சிவபக்தனை சிவனே கொன்றான் என்ற பழி உம்மை விட்டகலுமா”? என்று முதலைக்கண்ணீர் வடித்தான்.

ஆனால் பரமனோ அவரவர் வினைக்கீடாக அவரவர் வாழ்க்கையை அமைப்பவரல்லவா? அந்த திண்டிமா சூரனின் பூர்வ ஜன்ம ரகசியத்தையும் அறிந்தவரல்லவா? ஆதலால் அவனைத்தன் மறக்கருணையால் கொன்றே அவனை ஆட்கொள்ள வேண்டும் என்று நினைத்தவராய் திண்டிமா சூரனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

“ஹே துராத்மா! நீ இப்புண்ணிய க்ஷேத்ரத்தில் வசித்தும், பத்மதீர்த்தத்தில்நீராடி எம்மைவழிபட்டும் உன் வினை இன்னும் தீர்ந்தபாடில்லை. நோயால் வருந்தும் மதலைக்குக் கசப்புமருந்தை அடித்தூட்டும் தாய்க்குக் கருணையில்லையென்று கூறமுடியுமா? துஷ்டமகனைச்சீர்திருத்தி நல்லவழியில் செலுத்த வளாரினால் அடித்தும்தீக்கோலால் சுட்டும் தண்டிக்கும் தகப்பனுக்குக் கருணையில்லையென்று சொல்லமுடியுமா! என்னை நீ வழிபட்டாலும், பிராமணர்களையும், சதாச்சாரமுடையவரையும், சான்றோரையும், தேவர்களையும் பலதுன்பங்களுக்குஆளாக்கினாய். எமக்குக்குற்றம் செய்வதை நாம் பொறுப்போம். ஆனால் எம்மை அண்டினவர்களுக்குத் தீங்கு செய்கின்றவர்களை எவ்வகையிலும் அழித்தே தீருவோம். சிவபக்தன் என்று சொல்லிக்கொண்டு சிஷ்டர்களுக்குத்தீங்கு செய்தபாணாசூரன், ஹிரண்யகசிபு, இராவணன் இவர்கள் கதைகளை நீ கேட்டதில்லையா? உன்னைக் கொல்வதும் எம் கடமையே. அதுவும் எம்கருணையின் பால்பட்டதுதான். சிவபக்தன் என்று கூறிக்கொண்டு திருமாலை நிந்திப்பதும், திருமாலின் அடியாரைத் துன்புறுத்துவதும் திருமால் தாசர்கள் என்றுகூறிக்கொண்டு சிவனடியார்களை இம்சிப்பதும் சிவநிந்தனை செய்வதும் பஞ்சமாபாதகங்கட்கும் பன்மடங்கு அதிகமான பாபச்செயலாகும். நீ சுத்த வீரனென்றால் யுத்தம் செய்துமடி” என்று கூறி மறுமுறை தமது சூலப்படையைச் செலுத்தினார். திண்டிமாசூரனும் தன்னாலியன்றவரை யுத்தம் செய்தான் அவன்சேனாவீரரும் சேனைகளும் அழிந்தன முடிவில் அவனும் இறைவனின் மூவிலைச்சூலத்தை மார்பில் ஏற்று யுத்தகளத்தில் குற்றுயிராய்ச் சாய்ந்தான். அவன் உயிர் பிரியும்சமயம் பத்மகிரிநாதர் விருஷபாரூடராய் அபிராமாம்பிகையுடன் தன்சுயஉருவில் காட்சி தந்தருளினார், “உனக்கு வேண்டும் வரம்யாது” எனவும் கேட்டார்.

“ ஹே, பத்மாசலத்தினிடம் சுயம்பு மூர்த்தியாய், பூர்வ ஆகாரமாய், - தூலசூக்குமத் திருமேனியாய் எழுந்தருளி

யிருக்கும் மஹேச்வரா, உலககாரணா, உன் கருணையை என்னென்றெடுத்தோதுவது, உம்மால் தண்டிக்கப்பட்ட வுடனே இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்தெய்தியதன் காரணமாக உன்னையும் என்னன்னை அபிராமாம்பிகையும் நேரில்காணும் வாய்ப்புப்பெற்றேன் இப்பேற்றை விடபெறு தற்குரியது வேறுயாதுளது? உன் மறக்கருணையால் என் வினைகளை நசிக்கச்செய்தாய், என் ஜன்மம் சாபல்யமடைந்தது நான்வேண்டுவது உன்திருப்பாதசேவையினின்று நீங்காத நிலையே. மேலும் என்னால் நிர்மாணிக்கப்பட்ட இந்நகரம் என் பெயரால் திண்டீச்சுரம் எனப்புகழொடு வழங்கட்டும். இப்பதியில் அபிராமாசமேதராய் நீர் எப்பொழுதும் நித்திய வாசம்பண்ணவேண்டும். இந்நகர்மாந்தர் யாவரும் இந்நகரில் வாழ்வதின் காரணமாகவே சிறந்த சிவனடியார்களாய்த் திகழ்ந்து உன் அருளுக்குப் பாத்திரமாகவேண்டும். என் போன்று ஆணவத்தால் அட்டூழியம் செய்தவரேயாயினும், உன் திவ்ய தரிசனத்தால் பாபக்ஷயம் அடைந்து உமது கருணைக்கு இலக்காக இருக்கவேண்டும். என்னுடைய விருத் தாந்தத்தை கேட்பவர் படிப்பவர், சொல்பவர் யாவரும் உமது அடியார்களாகக் கருதி அவர்களுக்கு நீர் இகபர சாத னங்களை அருளுவீராக" என்று பிரார்த்தித்தான். இறைவன் 'அப்படியேஆகுக' எனத்திருவாய் மலர்ந்தருளினார். திண்டிமா சூரனும் அபிராமாசமேத பத்மகிரீசரை சேவித்துக்கொண்டே இறைவன் திருவடி நிழலெய்தினன். தேவர்களும் தமக்கு வரஇருந்த ஆபத்து நீங்கினவர்களாக மகிழ்வெய்தினர். கேட்டீரா கும்பமுனியே, இவ்வாறு பத்மகிரியை யார் இறை வனாகவே கருதுகின்றார்களோ, அதன்சிகரத்தை யார் இறை வனின்சூக்கும உருவமாக வழிபடுகின்றார்களோ அவர்களுடைய இஷ்டகாமியார்த்தங்கள் நிறைவேறப்பெற்றவராய்இம்மையில் சகலபோகங்களையும் அனுபவித்து மறுமையில் சொர்க்கம் சேருகின்றனர்.

திண்டிமா சூரனும் அவனுடையகிளைகளும் அழிந்தபின், திண்டிமாபுரி அரசனற்றதாய் இருந்தது. தமக்கு அபயம் அளித்து இருக்கைதந்து திண்டிமாசூரனின் தாக்குதலினின்றும் காத்தருளிய பத்மகிரீசரது எல்லையற்ற கருணையை மனதில் கொண்டு பத்மகிரி நாதருக்கு விமரிசையாய்அபிஷேகாதி ஆரா தனைகள் நடத்திஅவரது திருவுளச்சம்மதமறிந்து, அக்காலத்தில் கேரளதேசத்தில் அரசு செலுத்தி வந்தவனும், சிவபக்தியில் சிறந்தவனும், மனுநீதி தவறாமல் அரசியல் நடத்துபவனும், நல்லதர்மிஷ்டனுமான தர்மபாலன் என்ற அரசனை அழைத்து வந்து பத்மகிரி தரிசனம் செய்வித்து, அதன் மகிமைகளைத் தாம் அறிந்தவாறு சொல்லி அவனுக்கு முடி சூட்டி ராஜ்ய

பாரத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டு தேவர்கள் விண்ணு லகம் சென்றனர். தர்மபாலமகிபனும் தனக்குக் கிடைத்த பேற்றை எண்ணித் திருவருளை வியந்து பத்மகிரியின் சிகரத்தில் அபிராமாம்பிகைக்கும் பத்மகிரீசருக்கும் ஆலயங்கட்டி ஆகம ரீதியாய்க் கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தான்,” என்று பிரம்மா சொன்னார்.

5-ம் அத்தியாயம் :
வார்த்துலாசுர சம்ஹாரமும்
பொன்மான் சாபம் தீர்ந்ததும்.

இவ்வரலாற்றைக் கேட்டஅகஸ்தியர் பிரம்மனைவிளித்து “ஹே கமலோத்பவா! பத்மகிரீசரின் சூக்ஷ்மலிங்கம் என்று தாங்கள் சொன்ன சிகரம், ஏனையலிங்கங்கள்போல் இல்லாமல் மேற்கு திசையை நோக்கி இருப்பதின் காரணம் என்ன ?” என்று கேட்டார்.

கேளும் கும்பஜ! திண்டீச்சுரத்தில் அரசாண்டு வந்த தர்மபால மகிபன் மிகச்சிறந்த சிவபக்தன். சிவனடியாரை சிவனாகவே மதிக்கும் மாண்புடையவன். மன்னுயிரைத் தன்னு யிராகவே கருதிச்செங்கோல் நடத்தி வந்தான். அவன் செங் கோலின் மகிமையால் வானம் பொய்க்காது மாதம் மும்மாரி பெய்தது. நாடும் நகரமும் செழித்தோங்கின. எந்தஇடத்தில் சிவபூஜையும், சிவத்தியானமும், சிவபக்தியும், சிறப்புற்று விளங்குகின்றனவோ அந்தஇடம் சுபீக்ஷமாக இருப்பதில் வியப் பொன்றுமில்லை. தர்மபாலன் பத்மாசலேசன் மீது அளவற்ற காதல் கொண்டவனாய் நாடோறும்பத்மதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தூய ஆடைஅணிந்து, திருநீறும் ருத்ராக்ஷமும்அணிந்து, பத்மகிரியை வலமாக வந்து, பத்மதீர்த்தத்தின் வடகரையில் இருக்கும் அச்வத்த விருக்ஷங்களை சேவித்து மலைமீது ஏறி பத்ம கிரீசருக்கு அபிஷேகமுதல் அர்ச்சனைவரை முறைப்படி செய்ய வேண்டிய ஆராதனைகளைச் செய்வித்து வழிபட்டு வந்தான். மேலும் அபிராமாம்பாளுக்கும், பத்மகிரீசருக்கும் உத்சவாதிகள் நடத்திவந்தான். இறைவன் இறைவியின் அலங்கார அர்ச்சனை களுக்காகவே நறுமணம் கமழும் பல ஜாதி புஷ்ப மரங்கள், செடிகள், கொடிகள், இவற்றை உண்டாக்கி வாழை, கமுகு, சந்தனம், மா, பலா, தென்னை முதலிய பல விருக்ஷஜாதிகளையும் வைத்து மிக அழகு பொருந்திய நந்தவனம் ஒன்றை பத்ம கிரியின் தாழ்வரையில் நிர்மாணம் செய்து அதில் உண்டாகும் புஷ்பங்கள், பழங்கள், யாவும் பத்மகிரியானுக்கே பயன் பட

வேண்டும் என்று திட்டம் செய்து அநேக காவல்காரரையும், தோட்டவேலை செய்பவரையும் நியமித்துப் பரிபாலித்து வந்தான்.

நிற்க, குபேரனுடைய தலைநகரமாகின்ற அளகாபுரியிலே புஷ்பதந்தன் என்னும் பெயருடைய கந்தர்வன் ஒருவன் தனது மனைவியுடன் ஆகாய மார்க்கமாக சஞ்சாரம் செய்து கொண்டிருந்தபோது, பத்மகிரியையும் அதன் அடிவாரத்தில் அமைந்த நந்த வனத்தையும் பார்த்தான். தன் மனைவியோடு கீழே இறங்கினான். நந்தவனத்தையும், வாபீகூபதடாகங்களையும் கண்ணுற்று நமது குபேரபுரியில்கூட இவ்வளவு அழகான நந்தவனம் இல்லையே என்று சிந்தித்தவனாய் வனப்பு மிகுந்த தன்மனைவி சுமதியோடு நந்த வனத்தில் உல்லாசமாகப் பொழுது போக்கினான். மாலை மயங்கும்வேளை. அன்றிலும் தென்றலும் அவ்விருவரின் காம இச்சையைத் தூண்டி விட்டன. தடாகத்தின் குளிர்ச்சியும், நறுமணம் வீசும் மலர்களும் அவர்கள் உடம்பில் சூடேற்றின. நந்தவனத்திலுள்ள பல ஜாதி மலர்களைப் பறித்தார்கள். அவற்றை மாலைகளாகவும் செண்டுகளாகவும் தொடுத்தார்கள் இருவரும் அணிந்து கொண்டனர். மலர்களையே படுக்கையாக ஓர் பளிங்கு மேடையில் பரப்பினர். இருவரும் ரதியும் மன்மதனும் போன்று கூடிமகிழ்ந்தனர். இந்த நந்தவனத்தை விட்டுச்செல்ல மனமிலராய் அங்கேயே தங்கி விட்டனர். கனிகளைப்பறித்து உண்டனர். இளநீரைப் பருகினர், தடாகங்களில் நீந்தி விளையாடினர். புஷ்பங்களைப்பறித்து செண்டுகள் கட்டி எறிந்து விளையாடினர், பக்ஷிகளின் இனியகுரலைக் கேட்டு மகிழ்ந்தனர். பாடினர். ஆடினர். இரவு வந்ததும் முன்போலவே மலர்ப்படுக்கை அமைத்து இன்பம் துய்த்தனர். கந்தர்வர்களாதலால் மானிடர் கண்ணுக்குப் புலப்படாமல் கரந்துறைந்தனர். இவ்வாறு அவர்கள் நெடுநாள் தங்கி விட்டனர். இவர்களது செயலால் பத்மகிரீசருக்கு அலங்கார அபிஷேக அர்ச்சனைகளுக்குரிய புஷ்பங்கள், பழவகைகள் குறைந்தன.

ஓர் இரவு பத்மகிரீசர் தர்மபாலனின் கனவில் தோன்றி "அரசனே! சிலநாட்களாக எமக்கும், இறைவிக்கும் சமர்ப்பிக்கப்படும் பழங்களும், புஷ்பங்களும் குறைந்து வருகின்றனவே. அதனை நீ கவனித்தாயா? நமது நந்தவனத்தைச் சரியாக பரிபாலனம் பண்ணத்தவறி விட்டாயா? திருடர்கள் வந்து பழங்களையும் புஷ்பங்களையும் களவாடிச் செல்கின்றனரா?" என்று கேட்டு விட்டு மறைந்தனர். அரசன் திடுக்கிட்டு எழுந்து மந்திரி பிரதானிகளை உடனே

அழைத்துத் தான் கண்ட கனவைக்கூறி இதன் காரணத்தை உடனடியாகக் கண்டு பிடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். மந்திரியும் நந்தவனக்காவல்காரரை விசாரித்தான் பல ஆயுதங்கள் தாங்கிய வீரர்கள் .அடங்கிய ஒரு சிறு படையையே நந்தவனத்தை இராப்பகலாய் காக்கவேண்டுமென்று நியமனம் செய்தான். ஆனால் பயனென்றும் காணமுடியவில்லை. காரணமும் அறியக்கூட வில்லை. அரசன் மனம் வருந்தினான். அவனே ஓர் இரவு முழுவதும் தன்சேனை வீரரோடு நந்தவனத்தின் உள்ளும் புறமும் சுற்றி வந்தான். ஒன்றும் பயனளிக்கவில்லை. தானே சிவஅபராதம் செய்து விட்டதாகக்கருதிக் கொண்டான். உடைவாளை எடுத்துக் கொண்டு பத்மகிரி நாதரின் சந்நிதியை அடைந்தான். "கருணைக்கடலே! இது என்ன திருவிளையாட்டு உம்மையே நம்பி, உம்மிடம் என் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்த எனக்கோ இந்த சோதனை! என்னால் இயன்ற வரை முயன்றும். பழவர்க்கங்களையும், புஷ்பங்களையும் திருடிச் செல்லும் கயவனைக்கண்டு பிடிக்க இயலவில்லையே! அவன் என்ன மாயாவியோ? மானிடர் கண்ணுக்குப் புலப்படாத வித்யாதரனோ? அல்லது அடியேனுக்கு நீர் காட்டும் சோதனையோ? நான் என்ன தவறு செய்தேன்? அபிராமாபதே! உன்னையல்லால் வேறுகதிதான் எனக்குண்டோ? எல்லாம் அறிந்த நீரே அக்கள்வனைப் பிடிக்க வேண்டுமேயன்றி என் போன்ற மானிடரால் முடியாது. தாமே அம்மாயத்திருடனைக் கண்டு பிடித்துத்தர வேண்டும். இல்லையேல் உமது திருவடியிலேயே என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்" என்று கண்களில் நீர்மல்க அஞ்சலி ஹஸ்தனாய் நின்று புலம்பி அழுதான்.

உடனே அரசனின் பக்திக்கு இரங்கி பத்மகிரீசன். கருத்த உடை தரித்து கச்சைமணியணிந்து. வாளேந்தி ஓர் காவலான் போல் அரசன் முன் தோன்றினான். தான் அக்கள்வனை அன்றிரவே பிடிப்பதாகக் கூறினான். நந்தவனத்தையடைந்தான். மானிடர் கண்ணுக்குத் தென்படாமல், இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நந்தவனத்தை தன் லீலைகளுக்குரிய உத்யான வனமாக்கிக் கொண்ட புஷ்பதந்தன் என்ற கந்தர்வனை கயிறு கொண்டு கட்டி இழுத்து வந்து "அடே துராத்மா, எமது அர்ச்சனைக்குரிய புஷ்பங்களைத் திருடி உன் கேளிக்கைகளுக்குப் பயன் படுத்திக் கொண்டாயல்லவா கந்தர்வனாகப் பிறந்தும் நீசன் போல் திருடினாய். நீ செய்தது சிவ அபராதம். அதையும் பன்முறை செய்தாய்" என்று அகட்டினார். புஷ்பதந்தனுக்கு சுய அறிவு வந்தது இதுவரை காமாந்த காரத்தில் மூழ்கி அடாது செய்ததை உணர்ந்தான்

தன்னைக்கட்டி இழுத்து வந்தவர் பத்மாசலேசர் என்பதை யும் அறிந்தான். அடிவீழ்ந்து தான் செய்த சிவ அபராதத்தை மன்னித்தருளும்படி இறைஞ்சினன். இறைவன் அவனை நோக்கி " அடே! அவரவர் செய்த வினையின் பயனை அனுப வித்தே ஆகவேண்டும் மென்பது நியதி. அந்த நியதியால் தான் உலகம் நடந்து கொண்டிருக்கின்றது. மானிடரிலும் உயர்ந்த பிறவியாகிய கந்தர்வனாகப் பிறந்தும் அரக்கன் போல் கரந்துறைந்து திருடி காமவெறி பிடித்து எம் நந்த வனத்தைப் பாழாக்கினாய். ஆகையால் நீ ராக்ஷஸனாக 5 வர்த்துலாகார உருக்கொண்டு கானகங்களில் அலைவாயாக என்று சாபமிட்டனர். இதனைக்கேட்ட கந்தர்வன் இடியோசை கேட்ட சர்ப்பம்போல் நடுங்கி மனம் கலங்கி பன்முறை பத்ம கிரி நாதரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித்தான் சாபநிவர்த் திக்கு ஹேது என்னவென்று விண்ணப்பித்தான். அப்பொழுது முக்கால முணர்ந்த முக்கண்ணன் பின்னால் நடக்க இருக்கும் விஷயங்களையறிந்து " ஹே புஷ்பதந்தா! உனக்கு இட்ட சாபம் பிற்காலத்தில் உலக க்ஷேமத்திற்காகவே பலனளிக்கக் கூடிய தாய் இருக்கிறது. உன்னுடைய பூர்வ ஜன்ம வினையே உன்னை இங்கு இழுத்து வந்து சேர்த்தது. ஆகையால் நீ ராக்ஷஸ உருக்கொண்டு வர்த்துல ராக்ஷஸன் எனப்பெயர் பூண்டு பத்ம கிரிக்கு மேற்குத் திசையில் இருக்கும் வராஹகிரி என்ற மலைப் பிரதேசத்தில் திரிந்து அநேக ஆண்டுகள் ஆனபின் ஓர் பொன்மானைத்துரத்திக் கொண்டு கிழக்கே ஓடிவருவாய். அம் மான் கும்ப நதிக்கரையில் எம்மைச் சரணடையும் அப்போது நாமே வந்து உன்னைக்கொன்று உன் சுய ரூபத்தைக் கொடுப் போம்" என்று கூறி மறைந்தார்.

கேட்டீரா கும்ப முனியே! இறைவனுக்காக அர்பணிக் கப்படும் எந்தப்பொருளையும், இறைவனுக்குப் பயன்படு முன் எவன் திருடி சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொள் கிறானோ அவனுக்கு இந்த கதியேநேரும். ஆலயங்களில் கடவுளுக்கென்று அடியார்களால் கொண்டு வரப்படும் தனம் தான்யம் எண்ணெய் புஷ்பம் இவற்றைத் திருடுவது மஹாக் கொடியபாபம் என்பதை உலகத்தார் புஷ்பதந்தன் வரலாற் றிலிருந்து அறிந்து கொள்ளவேண்டும் என்றே பரம கருணா கரமூர்த்தியான அபிராமா வல்லபன் இத்திருவிளையாட்டை நடத்தினார்.

அவ்வாறே புஷ்பதந்தன் உடனுக்குடனாக வர்த்துல உருக்கொண்ட ஓர் அரக்க உருவமடைந்தான். பார்ப்

5 உருண்டையான வடிவம்,

பதற்கே அருவருப்பான தோற்றமும் பருத்து உருண்டமேனியும், மைமலை போன்ற கருப்பு நிறமும் கொண்டவனாக அங்கிருந்து வராஹகிரி என்ற பன்றிமலைச் சாரலையடைந்தான். அக்காட்டில் வசித்த காட்டுப்பன்றி காட்டெருமை முதலியவற்றைக்கொன்று தின்றுகொண்டு திரிந்தான். மேலும் அப்பன்றிமலையில் அதற்குமுன் குடியேறியிருந்த வித்யுன்முகன் என்ற அரக்கனையும் கொன்று அவனுடைய ஸ்திரீகளை வலிய அணைந்துகூடிக்காலம் கழித்தான்.

இஃதிவ்வாறாக முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் வேதியர் குலத்தில் பிறந்து நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் பதினெண் புராணம், இதிஹாசம், நையாயிகம், மீமாம்ஸை முதலிய சகலமும் நன்கு கற்றவனான ஓர் அந்தணன் இருந்தான். அவன் பெயர் சுமேதன். வித்தைகளைக் கற்றானேயொழிய அவற்றின் பயனறிந்து நடக்கவில்லை. பேராசை என்னும் பேய் வாய்ப்பட்டுப் பொன் தேடுவதிலேயே தன் முழுக்கவனத்தையும் செலுத்தினான். தான் கற்ற வித்தைகளைப் பொன்னுக்கு விற்றும் தானம் வாங்கியும் பொன்னைச்சேர்த்தான். தான் கற்ற வித்தையை அருகதையுடைய சீடருக்கு வித்யாதானம் பண்ணாத பிராமணன் பிரம்ம ராக்ஷஸனாகப்பிறப்பான் என்ற நீதி சாஸ்த்ர விதியை மறந்தான். எவ்வழியில் பொன் தேடலாம் என்ற ஆலோசனையிலேயே தனது காலத்தைக் கழித்தான். ஒரு சமயம் விஸ்வாமித்ரர் யாகம் செய்கிறார் என்று கேள்வியுற்றுத்தானும் அங்கு சென்றான். "விஸ்வாமித்ரரை அணுகி "சுவாமீ! நானும் ஓர் வேள்வி செய்ய அவாக்கொண்டுள்ளேன், அதற்கு வேண்டிய பொருளை அடியேனுக்குக் கொடுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். விஸ்வாமித்ரர் மஹா ஞானியாதலால் இந்தப்பேராசை பிடித்த பிராம்மணனின் உள்ளக்கிடக்கையை நன்கறிந்து "அடே! அந்தணர் குலத்தில் பிறந்தும், பொன்னாசை யென்னும் பேயால் பீடிக்கப்பட்டு, தர்ம சாஸ்திர வாசகங்களை மறந்து, என்னிடமே வேள்வி செய்யப்போவதாய்ப் பொய் சொல்லிப் பொன் வேண்டினாயல்லவா! பொன்னுக்காகப் பொய்சொல்பவன் வேதியனாயினும் நீசனேயன்றோ! பிறப்பினாலும் படிப்பினாலும் பிராமணன் என்ற பெயர் சித்திக்காது. ஆசையற்றவனாய், ஐம்புல அடக்கமுள்ளவனாய் வித்யா கர்வம் சிறிதுமில்லாதவனாய், வித்வான்களைக் கண்டு பொறாமை கொள்ளாது அவர்களை மதிப்புடன் உபசரிக்கின்றவனாய், அகம்பாவமற்றவனாய், ஆசாரசீலனாய், பொன்னுக்காகக் கற்ற வித்தையை விற்காதவனாய், வருணாச்ரம தர்மம் வழுவாதவனாய் இருப்பவனையன்றோ அந்தணன் என்று சொல்லத்தகும்! ப்ரம்ஹ சாக்ஷாத் காரத்தையறிந்து சகல

வஸ்துக்களிலும் இறைவனைக் காண்பவனன்றோ பிராம்மணன்! வித்யா விநய சம்பன்னனானவன் பசுவினிடத்தும், யானையிடத்தும், நாயினிடத்தும் அந் நாயைத்தின்னும் புலையனிடத்தும் ஸம நோக்குடையனாக இருப்பான். இவனையன்றோ "ப்ரம்மவித்" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. செய்கைகளனைத்தும் பிரம்மத்திடம் சார்த்திவிட்டு அகப்பற்றுப் புறப்பற்றுகளை அகற்றி எவன் சத்கர்மாக்களைச் செய்கின்றானோ அவனே பிராம்மணன் என்ற பெயருக்குத் தகுதியுடையவன். அந்தணன் என்போன் அறவோன். அவன் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவன். அஃதன்றி உன்போன்று பிறப்பில் வேதியனாயும், சகல சாஸ்திரபண்டிதனாயும் இருந்தபோதிலும் தன் குலதர்மத்தை விட்டுப் பொன் தேடுவதில் ஈடுபட்டு அதற்காகப் பொய் சொல்லவும் துணிந்தவன் மனிதரில் கடையன். அவனுடைய கல்வித்திறனுக்கு மதிப்புக் கொடுக்கப் படமாட்டாது. அவனையாவரும் வெறுப்பர். அன்று மாயமானாய் வந்து இராமனை ஏமாற்றிய மாரீசன்போல் இன்று நீ பிராம்மண உருவில் வந்து பொய் சொல்லிப் பொருளீட்ட வந்தாய். நீ கேட்ட பொன்னுக்குப் பதிலாய் உன் உருவமே பொன்னுருவாகட்டும். துள்ளி ஓடும் மனதை அடக்கச் சக்தியற்றவனாய் இருப்பதால் பொன் மான் உருக்கொள்வாயாக" என்று அவனை சபித்தார். இச்சாபத்தைக் கேட்ட சுமேதன் வெட்கத்தால் தலைகுனிந்து பயத்தால் உடல் நடுங்கி, ஐயோ நாம் கற்ற கல்வியெல்லாம் வீணானதே என்று மனதில் சிந்தித்து விஸ்வாமித்ரரின் காலடியில் வீழ்ந்து இரு கால்களையும் கெட்டியாகப்பிடித்துக் கொண்டு, "தவ சிரேஷ்டரே! அடியேன் செய்த அபசாரத்தைப் பொருத்தருளும்" என்று கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவினான். திரிகால ஞானியாகிய விஸ்வாமித்ரர் தான் கொடுத்த சாபத்தின் தன்மையையும், முன்பு பத்மகிரி நாதரால் புஷ்பதந்தனுக்குக் கொடுத்த சாபத்தையும் தனது ஞானதிருஷ்டியால் உணர்ந்தார். இதுவும் கயிலாயபதியின் திருவிளையாட்டே யென்று கண்டார். இவ்விரு சாபங்களால் இவ்விருவருக்கும் நேரப் போகும் விமோசனங்களை அறிந்தார். அவ்வந்தணனைப் பார்த்துக் கூறுகின்றார். "ஹே! சுமேதா! நீ இவ்விடத்தை விட்டகன்று பொன்மான் உருக்கொண்டு தக்ஷிணபிரதேசம் செல்வாய். வழியில் பல சிவஸ்தலங்களை அடைவாய், முடிவில் கயிலாயபதியான உமாமஹேச்வரன் சுயம்புலிங்க மூர்த்தியாக பத்மகிரிநாதர் என்று திரு நாமம் ஏற்று பர்வதகாரமாய் நிற்கும் தாத்ரீ வனத்தை அடைந்து, பத்மகிரியின் மேற்கேயிருக்கும் பன்றிமலைப் பிரதேசத்தில் இருக்கும்போது ஒரு அரக்கன் உன்னைத்துரத்த அவன் அம்புக்குத்தப்பி ஓடி பத்மகிரியைத் தரிசித்தவுடன்

உன் பூர்வோத்திரம் நினைவுக்கு வரும். நீ பத்மாசலேசனைச் சரண்புகுவாய். அப்பொழுது உனக்கு சாப விமோசனமாகும்" என்று கூறினார்.

அவ்வாறு கூறி முடிக்குமுன் அந்தணனின் உடல் பொன் மான் உருவாயது. அங்கிருந்து புறப்பட்டு தெற்குநோக்கி வந்தது. வழியில் மத்யார்ச்சுனம், பஞ்சநதம், கயாரோகணம், ஜம்புகேச்வரம் முதலிய பலபுண்ணியக்ஷேத்ரங்களைத் தரிசித்து, பசும்புற்றரையில் மேய்ந்து பலபுண்ணிய தீர்த்தங்களைப் பருகியது. இவ்வாறு யாதொரு இடையூறுமின்றி தாத்ரீவனத்தின் கீழ்ப்பகுதியில் இருக்கும் கோவிலூர் என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து "தாளவனம்" 6 என்ற தலத்தில் வந்து சேர்ந்தது. அங்கிருந்து கும்பநதிக் (குடவனாறு) கரையோரமாகவே சென்று கும்பநதியின் உற்பத்திஸ்தானமான பன்றிமலைச் சாரலையடைந்தது. அதைவர்த்துல ராக்ஷஸன் பார்த்து விட்டான். இருவரின் சாப விமோசன காலம் நெருங்கி விட்டது. பொன்மானின் அழகைக்கண்டு மயங்கி அதனைக் கொல்லாமல் உயிரோடு பிடித்துத்தன் போகஸ்திரீகளிடம் கொடுத்து விளையாட வேண்டும் என்று எண்ணினவனாய் அம்மானைப் பிடிக்க முயன்றான். மான் அவன் கைக்குக் கிட்டவில்லை. அன்று மாரீசன் இராமரை இழுத்துச் சென்றது போல இப் பொன் மானும் வர்த்துலனை பன்றிமலைச்சாரலை விட்டு நெடுந்தூரம் கிழக்கே இழுத்து வந்தது. அதிக தூரம் ஓடி வந்ததாலும் மான்கைக்குக் கிட்டாத ஏமாற்றத்தாலும் வர்த்துலன் சீற்றம் கொண்டான். அதனைக் கொல்ல நினைத்து வில்லை நாணேற்றி அம்பு தொடுத்தான். அதற்குள் அம்மான் கும்பநதியைத் தாண்டிக் கிழக்குக் கரை ஏறியது. அங்கிருந்து நிமிர்ந்து பார்த்தபோது சற்று தூரத்தில் பத்மகிரியின் சிகரம் அதன் கண்களில் பட்டது. அதேசமயம் வர்த்துலன் தொடுத்த அம்பும் அதன் உடம்பில் பாய்ந்தது. முன்பு விஸ்வாமித்திரர் கூறிய வண்ணம் தன் சுய உணர்வு வந்து "ஹே! பத்மகிரி வாஸா! தாத்ரீவனேச! அபிராமநேசா! அபயம்! அபயம்!" என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தது.

---

6 'தாளவனம்' என்றால் பனங்காடு என்று பொருள். அது விஜயநகர ஆட்சி காலத்தில் தெலுங்கில் 'தாடிகும்பு' என்று வழங்கியது. தாடிகும்பு என்றாலும் பனமரக் கூட்டம் என்று தான் பொருள். இதுவே இப்பொழுது தாடிக்கொம்பு என்றழைக்கப்படுகின்றது. தாடிகும்பு என்ற பெயரே தாடிக் கொம்பு எனமருவியது. ஆங்கில ஆட்சி இந்த பிரதேசத்தில் துவங்கியபோது இதுவே தாடிக்கொம்பு தாலூகாவின் தலைநகராக இருந்தது.

இந்த அபயக்குரல் பத்மாசலேசன் திருச் செவிகளில் புக, கிரியின் சிகரமான சூக்ஷ்மலிங்கம் அத்தொனி வந்த திக்கை நோக்கித் திரும்பியது. அந்தலிங்கத் திருமேனியினின் றும் ஓர் வேட உருவமாய் பத்மகிரிநாதர் தோன்றி ஒரு நொடியில் மான் விழுந்த இடம் சேர்ந்தார். அம்மானைப் பிடிக்க ஓடி வந்த வர்த்துலன் மீது பாணப்பிரயோகம் செய்தார். அது அவன் மார்பில் தைத்து ஊடுருவிச்சென்றது. அதோடு அவன் உயிரையும் வாங்கியது. வர்த்துலன் மடிந்ததும் அவன் சரீரத்தினின்றும் மிக அழகு வாய்ந்த நீங்கா யௌவன முள்ள புஷ்பதந்தன் வெளிப்பட்டான். பத்மகிரி நாதரை வணங்கினான். தன்சாபவிமோசன மடைந்ததற்கு மகிழ்ந்தான். ஆடிப் பாடி இறைவனைப் பல நாமாக்களால் தோத்தரித்தான் ''ஐயனே! மெய்யனே! என்னை ஆட்கொண்ட முக்கண்ணப்பனே! மூன்று உலகங்களுக்கும் ஆதியும் அந்தமுமான பரம்பொருளே! அபிராமாம்பிகையின் கண்களான வண்டுகள் எப்பொழுதும் பார்த்துக்களிக்கும் பத்மம்போன்ற முகமுடையவரே! அந்த பத்மத்தில் ஊறும் கருணையாகிற தேனையுண்டு களிக்கும் அடி யாரின் உள்ளத்தைக் கோயிலாக்க் கொண்டவரே! பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் முதலே! ஆதியந் தமில்லா பரஞ்சோதியே! பரம் புருஷா! பத்மத்தில் ஆவிர் பவித்தவரே! லிங்கா காரமான பர்வதரூபமாய் யாவரும் தரி சிக்க எளிதாய் மேருவுக்குச்சமமாய் நிற்பவரே! ஆயிரம் நாப் படைத்த ஆதிசேஷனாலும் பகரவொண்ணு திவ்ய தேஜோமய ஸௌந்தர்யத்தை அடியேன் எப்படி வர்ணிக்க முடியும்? ஈசா! நினது திருவருளால் என் சாபவிமோசனமாகிப் பழைய உருக் கொண்டு நிற்கின்றேன். இனி என்றும் உன்தியானம் என் மனதை விட்டகலாமல் இருக்க வரம் தாரும். சிவ அபராதம் செய்கிறவர்கள் சிவன் சொத்தைத் திருடுகிறவர்கள் என் வரலாற்றைக் கேட்டுத்திருந்தி உன் அருளுக்குப் பாத்திரமா கட்டும்'' என்று வேண்டினான்.

அதேசமயம் வேடஉருவிலிருந்த பத்மகிரீசர் அம்புபட்டுத் துடிக்கும் பொன்மானின் மேனியைத்தடவி பாய்ந்திருந்த அம்பைவாங்கினார். உடனே அம்மான்உருவம் மாறி சுமேதன் என்ற அந்தணனாகி நின்றான். பத்மகிரிநாதன் சரணாரவிந்தங் களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து பலவாறு துதித்தான். முடிவில் ''இறைவா! வேதம் ஓதியும், சகலகலை களைக்கற்றும், பிராமணகுலத்தில் பிறந்தும், பொன்னாசை யென்றும்பேயால் அலைக்கப்பட்டுப் பலஇழி தொழில்கள் புரிந்தேன். விஸ்வாமித்திரரால் பொன்மானாக சபிக்கப்பட்டு இன்று உம்தரிசனத்தாலும், ஸ்பரிசத்தாலும் சாபநீக்க மடைந்து உம்மை நேரில்தரிசிக்கும் பாக்கியமும் பெற்றேன்

நானே தன்யன், என்னைப்பிடித்திருந்த பேராசையும் என்னை விட்டோடியது. இனிஎக்காலத்திலும் உன்திருநாமத்தை உச்சரிப்பதிலும், உன்புகழைப்பிறர் கேட்கச் சொல்லுவதிலும், உன்சந்நிதியில் வேதபாராயணம் செய்வதிலும், விரும்பிக் கேட்பவர்களுக்கு வேத அத்தியாயனம் செய்துவைப்பதிலும் என்காலத்தைக் கடத்தவும் முடிவில் நான் உன்திருவடியில் சேர்ந்து உன்னைவிட்டு நீங்காத ஸாயுஜ்யபதவியைத்தந்தருள வேண்டும். மேலும் எந்தகும்பநதிக்கரையில் என்னை ஆட்கொண்டீரோ அந்த இடம் இந்தநிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாகப் "பொன்மான்துறை" என்று பிரசித்தி அடையட்டும். எவனொருவன் இத்துறையில் நீராடுகிறானோ அவனுடையசகல பாபங்களும் நசித்துவிடவும் அவனுக்கு உன்அருள் என்றும் இருக்கும்படியும் வரம்தரல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். "அவ்வாறே ஆகுக' எனஇறைவன் திருவாய்மலர்ந்தருளினார். புஷ்பதந்தன் பத்மகிரிநாதரை வணங்கி "சுவாமீ, பொன்மானின் அபயக்குரல் கேட்டு மேற்கு முகமாகத் திரும்பிப்பார்த்தீர்கள் அல்லவா, அதுவன்றோ என்சாபவிமோசனத்துக்குக்காரணமாக இருந்தது. ஆகவே பத்மகிரிச் சிகரமான உம்முடைய சூக்ஷுமலிங்கம் இன்றிருந்து மேற்கே திரும்பியதாகவே அமர்ந்துதம்மை வழிபடும் அடியவர்களுக்கு வேண்டிய நலன்களை அளித்தருளவேண்டும்" என்றுவேண்டிக் கொண்டான். இறைவனும், "அவ்வாறே ஆகுக" எனக்கூறி, தனது வேடருபத்தைக்கரந்து சூக்ஷுமலிங்கத்தில் மறைந்தார். கேட்டீரா கும்பசம்பவா, அன்னாள் முதல் பத்மகிரியின் சிகரம் மேற்கு நோக்கியே இருக்கின்றது, என்று நான்முகன் அகத்தியருக்குச் சொன்னார்.

6-ம் அத்தியாயம் :

அனலாக்ஷன் திண்டீச்சுரத்தின் மீது படை எடுத்த வரலாறு.

அகஸ்திய முனிவர் சதுர் முகனை நோக்கி" பிதாமகரே! இதுவரை என் ஐயன் பத்மகிரீசரைப்பற்றிக் கூறியனவகளைக் கேட்டு கிருதார்த்தனானேன், இன்னும் பத்மாசலேசரின் தேவியாகிய அபிராமாம்பிகையைப் பற்றிக்கேட்க ஆவலுள்ளவனாக இருக்கின்றேன். சக்தியின்றேல் சிவமில்லை சிவமின்றேல் சக்தியில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன, மேலும் உலகத்

தில் நான் அறிந்தவரையில் பதினெட்டு 7 சக்திபீடங்கள் இருக்கின்றன. இவையிருக்க இந்த பத்மாசலக்ஷேத்ரத்தில் அபிராமாபீடம் என்று எவ்விதம் வந்தது. அதன் விவரத்தை அடியேனுக்கு உபதேசித்தருளல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பிரம்மாவும் அகஸ்தியரை நோக்கிப் புன்னகை பூத்து" ஹே! கும்பஜ! நீர் கேட்ட கேள்வி உலக க்ஷேமத்தின் பொருட்டாகும். ஆனால் அதில் அடங்கிய தத்துவம் பரம ரஹஸ்யமானது அதையும் சொல்லுகிறேன் ஏகாக்ரமாய்க் கேட்பீராக:

பத்மகிரி ரூபமாய் அமர்ந்திருக்கும் இம்மஹாலிங்கமே நீர் சொன்ன பதினெண் சக்திகட்கும் (யோனி) பிறப்பிட மாகும். பத்மதீர்த்தத்தின் நடுவில் பத்ம கர்ணிகையில் பத்ம கிரிநாதர் தோன்றிய காலத்திலேயே அவனுடைய பாகம்பிரி யாளாகிய பராசக்தி அவனுடனேயே ஒன்றியிருந்தாள். பர்வதா காரமாக இறைவன் வளர்ந்தபோதும் அவள் அவனுள் ஒடுங்கியிருந்தாள். அவள் ஆவிர்பவித்த வரலாற்றைக் கூறு கிறேன் கேளும்.

மேலாழி நாப்பண் குசத்வீபத்தில் ஜ்யோதிஷ்மதி என்ற நகர் உண்டு. அதனருகில் சித்திரிகாவனம் என்ற ஓர் நந்தவனம் இருந்தது. அந்த நகரத்தின் அழகுக்கு குபேரபட்டணத்தையும், இந்திரபுரியையும் கூட ஈடு காட்ட முடியாது. இந்நகரில் ரக்தபீஜன்' என்ற அரக்கனின் பேரனும், 'வித்யதக்ஷன், என்பவனின் புத்ரனுமான அனலாக்ஷன் என்ற ஓர் அசுரஅரசன்

---

7 இப்பதினெட்டு சக்தி பீடங்களின் விவரம்:
1. சாங்கரீபீடம் இலங்கையிலும். **2.** சிம்ஹிகாபீடம் சிங்களத் தீவிலும். **3.** மாணிகாபீடம் தக்ஷவாடியிலும். **4.** சூகலாபீடம் பேடாபுரியிலும். **5.** பிரமதாபீடம் ஸ்ரீசைலத்திலும். **6.** விஜயாபீடம் விஜயபுரியிலும். **7.** மஹாலக்ஷ்மீபீடம் கொல்லா புரியிலும். **8.** காமாக்ஷீபீடம் காஞ்சியிலும் **9.** சுகுசாநந்தா பீடம் சாளக்ராமத்திலும் **10.** விகசயனபீடம் ஒட்டாணத் திலும். **11.** பத்ரேச்வரீபீடம் இமயகிரியிலும். **12.** புனர்னலா பீடம் மங்களபுரியிலும். **13.** மஹாகாளிபீடம் உஜ்ஜினியிலும், **14.** விந்தியவாஸினீபீடம் விந்தியமலையிலும் **15.** மஹாயோகினீ பீடம் அஹிச்சித்ரம் என்றவிடத்திலும் **16.** கன்னிகாபீடம் கன்னியாகுமரியிலும். **17.** விசாலாக்ஷீபீடம் காசியிலும். **18.** சரஸ்வதீபீடம் காஷ்மீரத்திலும்இருப்பதாக இப்புராணம் கூறு கின்றது.இவற்றில் சில இடங்கள்விளங்கவில்லை. சக்திபீடம் **108** என்று தேவீபாகவதம் கூறுகின்றது.

ராஜ்யபரிபாலனம் பண்ணி வந்தான். அவன் அதிபராக்ரம சாலி. அவன் சிவபெருமானைக்குறித்துத் தவம் செய்தான். அதன் பலனாக தேவர்களாலும் மூவர்களாலும் கூட வெல்லப் படாத மகத்தான வரத்தைப்பெற்றான். மேலும் தனக்கு நூறு தலைகளும், இரு நூறு கைகளும் உண்டாக வேண்டும்மென்றும் வரம் பெற்றான். இதனால் செருக்கு ஓங்கியவனாக தேவர்களை இம்சை செய்யத்தொடங்கினான். தேவர்களை ஏவல் கொண்டான். தேவஸ்திரீகளை தனது போகஸ்திரீகளாக்கிக்கொண்டான். அஷ்டதிக்பாலகர்களும் ஏனைய தேவர்களும் அவனிட்ட வேலைகளைச்செய்து வந்தனர். இவனது அட்டஹாசத்துக்கு ஓர் எல்லையேயில்லை என்னும்படி ஆணவம் கொண்டு சஞ்சரித்தான்.

ஒரு நாள் நாரதர் அவன் இருக்கை சென்றார். அனலாக்ஷன் அவரைக்கண்டு வணங்காமல் மதோன்மத்தனாய் அமர்ந்து கொண்டு' ஓய் நாரதரே! என்ன விசேஷம்? எங்கெல்லாம் சென்றீர்? எதையெல்லாம் பார்த்தீர்? என் ஆக்ஞாசக்கிரம் எங்கும் ஓங்கியிருக்கின்றதா? என் புகழ் எங்கும் பரவியிருக்கின்றதா? தெரிவியும்!" என்று கேட்டான். நாரதரும் இவனை ஒழிக்க உபாயம் தேடினவராய் அதிக விநயமாகச் சொல்லலுற்றார். "அரக்கர்திலகமே! விசேஷமில்லாமல் நான் உன்னை நாடி வருவேனா? திரிலோகங்களிலும் நடக்கும் விஷயங்களை நேரில் அறிந்து உன்னிடம் வந்து சொல்வதற்காகத் தானே என்னை மட்டும் சுதந்தரமாகத்திரிய விட்டிருக்கிறாய். நான் பார்த்த ஒரு விசேஷத்தைச் சொல்லவே ஓடோடி வந்தேன். ஜம்புத்வீபத்திலே, தக்ஷிண பார்சுவத்திலே காவிரி என்ற புண்ணிய நதிக்கும், வேகவதி என்ற மஹா நதிக்கும் இடையே தாத்ரீ வனம் என்று ஓர் பிரதேசம் இருக்கின்றது. அந்த நெல்லிவன நடுவில் பத்ம புஷ்கரணி என்றொரு தாமரைத் தடாகம் இருக்கின்றது. அதன் நடுவில் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர் ஒன்று தோன்றி அதன் காய் வளர்ந்து நிமிர்ந்து ஓர் பர்வதமாய் நிற்கின்றது. அந்தப்பர்வதத்தின் அடிபாகத்தின் உள்புறத்தில் ஓர் அழகான பிலம் இருக்கின்றது அதன் அழகையும் சிறப்பையும் நான் என்னவென்று கூறுவது. உள்ளே நந்தவனங்களும், தடாகங்களும், மாளிகைகளும் இருக்கின்றன. நவரத்னங்களும் எங்கு பார்த்தாலும் சிதறிக்கிடக்கின்றன. உனது சித்ரிகாவனத்தை விட பதின் மடங்கு சோபையுடன் திகழ்கின்றது. அங்கு உன் ஜன்ம விரோதிகளான தேவர்களும் இருடிகளும் உன் கைக்குக்கிட்டாமல் தப்பி ஓடி பயமின்றி சகல சுக போகங்களையும் அனுபவித்துக்கொண்டு நிம்மதியாக வாழ்கின்றனர். அந்த குகையைப்பார்த்த என் மனதில் ஓர் எண்ணம் உதயமானது. அதாவது அந்த தேஜோமய மான குகையில் வசிக்கத்தகுந்தவனும், அந்த சொர்க்காதி போகங்

களை அனுபவிக்கத் தகுதியுடையவனும் உன்னையன்றி இம் மூவுலகில் யாருளர் என்று நினைத்தேன். உடனே உன்னைக் காண இங்கு வந்தேன்", என்ருர்.

இவ்வாறு கூறியதைக்கேட்ட அனலாக்ஷன் சீறி எழுந்தான். தன் நூறு வாய்களின் பற்களை நெற நெற வெனக் கடித்தான். அந்த ஓசை இடி போல் முழங்கியது. தனது இரு நூறு கண்களும் சிவக்கக்கோபக்கனல் பொங்கி எழுந்தது. நூறு முகங்களில் உள்ள மீசைகள் துடித்தன. இரு நூறு புஜங்களும் மலைகள் போல் உயர்ந்தன. பிரளய காலாக்னி போல் துள்ளி எழுந்தான். தன் சேனுபதிகளான, கோமுகன், கரிமுகன், யாளிமுகன், தசமுகன், சண்டன், பிரசண்டன், முண்டன், முதலியவர்களை அழைத்தான். உடனே அசுரஸைன்யம் தயாராகட்டும் என்று கட்டளையிட்டான். அவ்வாறே ஒரு நொடிப்பொழுதில் பதினுயிரம் வெள்ளம் சைன்யம் யுத்த சன்னத்தமாக வந்து நின்றது. அனலாக்ஷனும் இரதத்தில் ஏறினுன். இதற்கு முன்பே அனலாக்ஷனின் ஒற்றர்கள் சிலர் பத்மகிரி குகையில் வசிக்கும் தேவர்களைக்கண்டு எமது "அரசன் அனலாக்ஷன் யுத்த சன்னத்தனுக வருகின்ருன். அவன் வருமுன்னரே இந்த குகையை விட்டு வேறெங்கேயாவது சென்று விடுங்கள். இல்லையேல் நீங்கள் அழிவது திண்ணம்" என்று கூறினர். இக்கூற்றைக்கேட்ட தேவர்கள் பயத்தால் நடுங்கினவராய்த்தமக்கு அபயம் கொடுத்த பத்மகிரி நாதனை தோத்திரம் செய்து தமக்கு அபயம் அளிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர். அதற்கு "பத்மகிரீசர் தேவர்களே! திரிமூர்த்திகளாலும் அழிக்க முடியாதபடி அவன் நம்மிடம் வரம் பெற்றுள்ளான். வரம் கொடுத்த நாமே அவனை அழிப்பது முறையன்று. என்னுல் ஒன்றும் செய்ய முடியாது. ஆயினும் உங்களுக்கு ஓர் யோசனை சொல்லுகின்றேன். அதாவது என் பாகம் பிரியாளான பராசக்தியை நோக்கித்தவம் செய்யுங்கள். அவள் ஒருவளே உங்களை இந்த ஆபத்தின்றும் காக்கக்கூடியவள்" என்று கூறினுர்.

தேவர்களும் அவ்வாறே ஜகன் மாதாவாகிய அம்பிகையை தியானித்தார்கள். பல மந்தரங்களால் துதித்தார்கள் அவர்களின் முறையீட்டுக்கு இணங்கி பத்மகிரிச்சிகரமான சூக்ஷ்மலிங்கத்தினின்றும் இதுகாறும் இறைவனை விட்டு நீங்காமல் மறைந்திருந்த பராசக்தி ஆவிர்பவமானுள். அவளை தரிசித்து தேவர்கள் தோத்திரம் செய்தார்கள். "தாயே! மாஹேச்வரீ! ஜகதம்பிகே! உன் கடாக்ஷத்தாலன்றே மூவுலகும் தோன்றுகின்றன, வாழ்கின்றன. உன் அதிஷ்டானத்தாலன்றே சிவமும் தொழிற்பட்டு பஞ்சப்ரம்மாக்களாப்பிரிந்து சிருஷ்டி

ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்ரஹம் என்ற பஞ்சக் ருத்யங்களையும் செய்கின்றூர். ஆலால விஷமும் உன் கைபட்ட மாத்திரத்தில் அமிர்தமாக மாறவில்லையா? உன்னுடை திருக் கரங்களில் இருக்கும் பத்து விரல்களினின்றும் தோன்றிய விஷ்ணுவின் பத்து அவதாரங்களும் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரி பாலனம் பண்ண வில்லையா? இச்சமயம் எங்களைக்காப்பாற்று வது உன் பொறுப்பு. நீ இறைவனின் அருட் சக்தியன்றே? என்று பலவாறு தோத்தரித்து வேண்டிக்கொண்டனர். க்ஷிப் ரப்ரஸாதினீயான பராசக்தி அவர்களுக்கு அபயம் கொடுத்து தனது யோகினீ கணங்களில் டாகினீ, ராகினீ, லாகினீ, காகினீ, ஸாகினீ, ஹாகினீ, யாகினீ, ஆகிய எழுவரை அழைத்து "நீர் சென்று ஜ்யோதிஷ்மதியை நெருப்பிட்டுக்கொளுத்தி சாம்ப லாக்குங்கள். நமது பராக்ரமத்தைக்கண்டு ஒரு சமயம் அன லாக்ஷன் ஈண்டு வாராதொழிவன்" என்று ஏவினுள். அவர் களும் அவ்வாறே சென்று அனலாசுரனின் வாசஸ்தலமான ஜ்யோதிஷ்மதியைச் சுட்டுச்சாம்பலாக்கினர். எஞ்சியவர்கள் அனலாக்ஷனிடம் சென்று முறையிட்டனர். இந்தச்செய்தியைக் கேட்ட அனலாக்ஷன் கோபமடைந்து தனது சைன்யத்தை திண்டிமா புரியை நோக்கிச்செலுத்தினுன். ஸப்த சமுத்திரங் களும் திரண்டு வந்தது போல் அசுர சைன்னியம் அணி அணி யாக வந்து கொண்டிருந்தது.

7-ம் அத்தியாயம் :
அனலாசுர சம்ஹாரம்.

ஒற்றர்களால் அசுர சைன்ய வருகையை அறிந்த தேவி, "நாம் சூடு காட்டியும் திருந்தினுனில்லை. வரட்டும், அவனையும் அவன் சைன்யத்தையும் அழிப்போம்" என்று கூறித்தனது பரி வார தேவதைகளான 8 ப்ராம்ஹி, மாஹேச்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்த்ரீ, சாமுண்டி என்ற ஸப்த

---

8 பராசக்தியின் பரிவாரதேவதைகளைப்பற்றியும், சேனைத் தலைவிகளைப்பற்றியும், டாகினீ முதலிய யோகினீ கணங்களைப் பற்றியும் விவரம் தெரிய விரும்புவோர் லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம், பரசுராம கல்பசூத்ரம், தந்த்ர ராஜ தந்த்ரம் போன்ற சாக்தாகம நூல்களைப்பார்த்துத் தெரிந்து கொள்ள லாம். அம்பாளுக்கு அறுபத்திநான்குகோடி யோகினீகணங்கள் இருப்பதாய் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் 237வது நாமா குறிக் கின்றது. டாகினீ முதலிய ஏழு யோகினிகளைப் பற்றியும் ஸஹஸ்ரநாமாவில் கூறப்பட்டிருக்கின்றது.

மாதர்களையும் தனது சேனைத்தலைவிகளான பாலை, மந்த்ரிணி, வாராஹி, சம்பத்கரி, அச்வாரூடா, தண்டினீ முதலியவர்களையும் முன் சொன்ன ஏழு யோகினிகளையும், அவர்களோடு அறுபத்து நான்கு கோடி யோகினிகள் அடங்கிய சைன்யத்தையும் கிரிசக்ரம், சக்ரராஜம் முதலிய அநேக இரதங்களையும் திரட்டி யுத்த சன்னத்தையாய் எழுந்தருளினாள்.

அப்போது அம்பாள் எடுத்துக்கொண்ட விச்வரூபம் யாராலும் வர்ணிக்க முடியாது. ஆயிரம் சிரங்களில் ஆயிரம் சூரியர்கள் போல் கிரீடங்கள் மின்ன, இரண்டாயிரம் கைகளிலும் நானாவித அஸ்த்ர சஸ்த்ராதி ஆயுதங்களைத்தாங்கி, விரித்த கூந்தலும், கோரைப்பற்களும், சிவந்த ஆடையும், ஸர்வாபரண பூஷிதையாய் பத்ரகாளியாக உருக்கொண்டு சுயம் பிரகாசமாய் விளங்கினாள். சிம்ஹவாஹினியாய் வலது மூன் கையில் விளங்கும் திரிசூலப்படையுடன் அம்பாள் தோன்றிய காட்சி மனதினாலும் சிந்திக்க முடியாது. வாயினாலும் பகர வொண்ணாது. அவளுடையசைன்யம் அப்படியே ஆகாய வீதியிலே மேலே கிளம்பி சூர்ய சந்த்ர நக்ஷத்திர லோகங்களை மறைத்தது. ஆகாயத்தில் கிளம்பிய சைன்யம் அனலாசூரனின் அசுரப்படைகளின் மீது திடீரென்று இறங்கித்தாக்கியது. அசுரப்படை சின்னா பின்னப்பட்டு உயிர் துறந்தவர்களும், கையிழந்தவர்களும், கால் இழந்தவரும், கண் இழந்தவரும், இவ்வாறு பலவிதமாக பாதிக்கப்பட்டு சிதறி ஓடியது. அனலாசூரன் சிதறிஓடி உயிர்தப்பிய எஞ்சிநின்ற அசுரர்களைத்திரட்டி மறுபடியும் யுத்தத்துக்குஆயத்தமாகி யோகினீ கணங்களைத் தாக்கினான். கடும்போர் நடந்தது. அனலாக்ஷன் சேனைத்தலைவர்களை பராசக்தியின் யோகினிகள் தனித்தனியாய் எதிர்த்து யுத்தம்செய்தனர். எப்படி யெனில், சர்ப்பசோமன் என்பவனை ப்ராம்ஹீசக்தியும். வ்யாக்ரலோமனை ஈச்வரியும். ஸிம்ஹலோமனை கௌமாரியும், தூம்ரலோமனை வாராஹியும், விருச்சிகலோமனை மாஹேந்த்ரியும், தூம்ரலோசனை வைஷ்ணவியும், தூம்ராக்ஷனை சாமுண்டியும், வால்மீகலோமனை துர்க்கையும், வித்யுத்ஜிஹ்வனை நாரசிம்ஹியும், வக்ரமாஸனை கராளியும், தூம்ரகர்ணனை கங்காளியும், கரிமுகனை காளராத்ரியும், செந்நாய்முகத்தனை வஜ்ரேச்வரியும், இவ்வாறு பல அசுர வீரர்களுடன் யோகினீ கணங்கள் தனித்தனியாய் எதிர்த்துப் போர் புரிந்தனர். ஒவ்வொரு அசுர வீரரும் யுத்தத்தில் தோல்வியுற்றனர். யோகினிகள் அரக்கரின் இரத்தத்தால் நனைந்த ஆடைகளுடன், அசுரர்களின் குடல்களை மாலைகளாகப் போட்டுக் கொண்டும், தமது ஆயுதங்களில் அரக்கர்களின் தலைகளைக் கோர்த்து த்வஜம்போல் தூக்கிக்கொண்டும் ஆரவாரம் செய்தனர்,

தன் சேனை இவ்வாறு சின்னு பின்னப்படுவதைக்கண்ட அனலாக்ஷன், தன் இருநூறு கரங்களாலும் "சதக்னி" என்ற அஸ்த்ரங்களை யோகினிகள் மீது பிரயோகம் செய்தான். அவற்ருல் அடிபட்ட யோகினிகள் மூர்ச்சித்து வீழ்ந்தனர். பார்த்தாள் பராசக்தி! அதிக கோபம் கொண்டாள். நெய் வார்த்த அக்னி ஜ்வாலை போல் துள்ளி எழுந்தாள். தன்னுடைய ஞானஸ்திரத்தால் மூர்ச்சித்திருந்த யோகினிகளை எழுப்பினுள். தானே அனலாக்ஷன் முன் தோன்றினுள். "அடே. துராத்மா! என் ஆத்ம நாதனுகிய பத்மகிரீசன் கொடுத்த வரங்களால் சகல சம்பத்துகளும், பெருமைகளும் பெற்று வாழ்ந்தாய். அவரால் கொடுக்கப்பட்ட வரங்களை யடைந்தவன் என்பதற்காக இது வரை உன்னைக்கொல்லாது இருந்தேன். உனக்கு எச்சரிக்கை கொடுக்க உன் ஜ்யோதிஷ் மதி நகரை தீ யிட்டழிக்கச்செய்தேன். உன் சேனு வீரரை என் யோகினிகள் கொன்று குவித்தனர். உன் சேனையும் அழிந்தது. இன்னுமா உனக்கு புத்தி வரவில்லை? இப்பொழுதாவது உன் தீய எண்ணத்தை விட்டு உன் இருப்பிடம் செல்வாயாஞல் உயிர் தப்பி வாழலாம். துஷ்டர்களை அழித்து சிஷ்டர்களைக்காப்பதே என் கடமை. பத்மகிரியின் குகையில் வாசம் செய்ப நினைத்தாயடா! அது என்ன வென்று நினைத்தாய்? எம்பிரானின் உருவமான பத்மகிரியில் அவர் ஜீவராசிகளை வைத்துக்காக்கும் வயிறு போன்றது. அடியார் உள்ளத்தில் அவர் இருப்பார் அவர் உள்ளத்தில் அடியார் இருப்பார் என்ற மகத்தான தத்துவத்தை விளக்கவே தாமே பத்மகிரியாய் ஆவிர் பவித்து, தேவர்களுக்கு அபயம் கொடுத்துத்தன் குக்ஷியில் வைத்துக்காப்பாற்றவே அந்த பிலத்தை சங்கல்ப மாத்திரத்தில் நிர்மாணித்தார். அவர் மணி வயிற்றில் உன்போன்ற பாபிகளுக்கு இடமுண்டோ? ஆராய்ந்தறியாமல் மமதையால் உனக்கே கேடு விளைவித்துக்கொண்டாய். இப்பவும் சொல்லுகின்றேன். இந்ததத்வரஹஸியத்தையறிந்தாவது திரும்பிப்போ" என்று கருணையோடு கூறினுள்.

திரிமூர்த்திகளாலும் வெல்லமுடியாது என்று வரம் வாங்கின அனலாக்ஷன், அகம்பாவத்தால் பராசக்தியைக் கேவலம் ஓர் பெண்பால் இவளால் என்ன முடியும் என்று மதித்தவனுய்க்கோபச்சிரிப்புச்சிரித்து, "பத்ரகாளீ! உன் ஆயிரம் தலைகளும், இரண்டாயிரம் கைகளும், கோரைப்பற்களும், இரக்த வர்ணமான உன் மேனியும் கண்டுங்கூட அந்த பத்மகிரீசன் எப்படித்தான் உன்னை மனைவியாக ஏற்றுக்கொண்டானே! மும்மூர்த்திகளுக்கும் அஞ்சாத நான் பெண்பாலாகிய உனக்கா புறமுதுகு காட்ட வேண்டும்? எனக்கு வரங்களைக் கொடுத்து விட்டு மலைக்குள் ஒளிந்து கொண்டு ஒரு பெண்ணைப்போருக்கு

அனுப்பினானே, அந்தத்தந்தை தாயற்ற தப்பிலி. 9 அவன் மண்டை ஓடுகளைக்கோர்த்து மாலையாக அணிந்து, பிரம்ம கபாலத்தில் இரந்துண்பவனல்லவா! சுடு காட்டில் பேயோ டாடும் பித்தன்! அவனே வந்தாலும் நான் முன் வைத்த காலைப்பின் வைக்க மாட்டேன்." என்று ஆரவாரித்தான். லோகமாதாவாகிய பராசக்தி தன் தாய்மைக்குணத்தால் எதையும் பொறுப்பாள். ஆனால் சிவநிந்தனையை மட்டும் பொறுக்கமாட்டாள். கோபம் பொங்கி எழுந்தது. இதோ உன்னைக்கொன்றே தீருவேன் என்று கிளம்பினாள். அனலாசுர னின் ரதத்தை தகர்த்தாள், சாரதியையும் குதிரைகளையும் கொன்றாள். அவனுடைய இருநூறு கைகளில் இருந்த ஆயுதங் கள் ஒவ்வொன்றாகக்கீழே விழும்படி குறி பார்த்து பாணங் களைப்பிரயோகம் செய்தாள். பராசக்தியின், சாகஸத்தைக் கண்டு அனலன் ஆச்சரியம் அடைந்தான். என்னே' இவளை சாமான்யப்பெண் என்றல்லவா நினைத்தேன். இனிமேல் இவ ளோடு நேர் நின்று போர் புரிவதில் பலனில்லை.' என்று நினை த்து தனது ராக்ஷஸ மாயையால் காட்டெருமை, காட்டுப் பன்றி, சிம்ஹம், புலி, முதலிய பல உருவங்களை எடுத்துப் போர் புரிந்தான். அம்பிகையும் அவை ஒவ்வொன்றையும் வதைத்தாள். பின்பு அனலன் மேகத்தில் மறைந்து கொண்டு வருணாஸ்த்ரப்பிரயோகம் செய்தான். மாயைக்கே பிறப்பிட மான பராசக்தியிடம் இந்த ராக்ஷஸ மாயை என்ன செய்ய முடியும்? அம்பிகை வாயுவாஸ்த்ரத்தால் மேகத்தைப்பிளந்து அனலாக்ஷனை வெளிப்படுத்தினாள். அவன் ஓர் பர்வதமாக நின் றான். தேவி வஜ்ராயுதத்தால் அம்மலையைத்தூளாக்கினாள். இவ்வாறு இன்னும் பற்பல விதமாய் அனலாசுரன் கடும் போர் செய்தான். இறுதியில் அவன் ஆகாய மார்க்கமாகக் கிளம்பும் சமயம் பார்த்து அவன் கால்களைப்பற்றி கர கர வெனச்சுழற்றி அதிவேகமாய் மேலே எறிந்தாள். அவன் நக்ஷ த்திர மண்டலம் வரை சென்று மூர்ச்சித்துக்கீழே விழுந்தான். தேவி தனது திரிசூலப்படையை அவன் மார்பில் பாய்ச்சி நெஞ் சைப்பிளந்து கொன்றாள். அவன் உடல் மூன்று பாகங்களாகப் பிளக்கப்பட்டு அவைஒவ்வொன்றும் பத்மகிரிச்சாரலில் ஒவ் வோர் இடத்தில்வீழ்ந்தன. அவனது தலை பத்மகிரி பர்வதத்தின் தென்கிழக்கிலும், கால் கிழக்கிலும், முண்டம் தெற்கிலும் விழுந்தன. அவை கற்பாறைகளாக மாறி இன்றும் பத்மகிரி யின் மூன்று பக்கங்களிலும் சிறு குன்றுகளாக இருப்பதைக் காணலாம். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். ப்ரம்ஹீமுத லிய யோகினீ கணங்களும் யுத்தம் வெற்றிகரமாய் முடிந்த

---

9 தப்பிலி:- தப்பு இல்லாதவன்

தும் அம்பிகையின் அம்ஸத்திலிருந்து உண்டானவர்களாத லாலே தேவியின் சரீரத்திலேயே ஐக்கியம் அடைந்தனர். " என நான்முகன் அகஸ்தியருக்கு அனலாக்ஷ வதத்தை எடுத்துரைத்தார். 10

8-ம் அத்தியாயம்

அபிராமாம்பிகை ஆவிர்பவம்.

பிரம்மன் தொடர்ந்து சொல்லுகிறார். ஏ! கும்பஜா, இவ்வாறு அனலாக்ஷனையும் அவன் சைன்யங்களையும் சம்ஹரித்த பின்பும் தேவியின் உக்ரம் தணியவில்லை. சுழல்கின்ற கண்களோடும் ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் திருக்கரங்களுமாக விச்வரூப மெடுத்த தேவியின் கோபக்கனல் திக்குகளெல்லாம் வியாபித்தது. அவளுடைய நேத்திரங்களினின்றும் வெளிப்பட்ட பொறிகள் அண்டங்களெல்லாம் பறந்து யாவரையும் துன்புறுத்தின. சிருஷ்டிக்கப்பட்ட சகல புவனங்களும் பராசக்தியின் கோபாக்னியால் வெந்து சாம்பலாகி விடுமோ எனத் தேவர்கள் அஞ்சினர்கள். அவர்கள் யாவரும் சேர்ந்து மஹா பயங்கர ரூபமாய்க்காட்சியளித்த பத்ரகாளியை பிரார்த்தித்தனர். " ஹே! மஹாதேவீ! மஹாமாயே! ஸர்வலோகவசங்கரீ! ஜகஜ்ஜனனி! உமது இந்த அதிபயங்கரமான சொரூபத்தைக் கண்டு அஞ்சுகின்றோம். உமதிடமாக உண்டாகும் சுவாலையால் நாங்கள் தகிக்கப்படுவோம் போல் காண்கின்றது. ஆகையால் தாயே! உமது இந்த விசவரூபத்தைக்கரந்து சாந்த சொரூபியாய் மக்களும் தேவரும் கண்டு மகிழ்ந்து போற்றிப்பணியும் படி சௌந்தர்ய தேவதையாய்க் காட்சி யளிக்க வேண்டும் என வேண்டிக்கொண்டனர். பிரம்மா, விஷ்ணு, இந்திராதி திக்பாலகர்களும், ஏனைய தேவர்களும், மஹரிஷிகளும் ஒன்று கூடியும் தனித்தனியாயும் பல விதமாய் தேவியை வேண்டிக்

---

10 அனலாக்ஷ சம்ஹாரம் மூலத்தில் 7, 8. என இரண்டு அத்தியாயங்களாகக் கூறப்பட்டிருக்கின்றது. அனலாக்ஷனுக்கும் பராசத்திக்கும் நடந்த போரை மிகவிரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அந்த இரண்டு அத்தியாயங்களைச்சுருக்கி ஒரே அத்தியாயமாக இங்கு கொடுத்துள்ளேன். அடுத்த 8ம் அத்தியாயம் என்று இங்கு வருவது மூல கிரந்தத்தில் 9ம் அத்தியாயமாகும்.

கொண்டனர். 11அவர்களில் விஷ்ணுதேவியைவணங்கி "ஓ ஜகத் காரண சக்தியே! இச்சராசரங்களை ஆக்கி அழிக்க வல்லமையுடைய உமது சரணாரவிந்த தூளியை சிறிது சேகரித்து வைத்துக் கொண்டு பிரம்மா புவனங்களைப் படைக்கிறார். இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட புவனத்ரயங்களும் முடிவில் எந்த உன் மாயையில் லயமடைகின்றதோ அத்தகைய ஸர்வாங்க ஸௌந்தர்ய திவ்யமங்கள சொரூபியாய் எங்கள்முன்தோன்றுவாயாக" என்று பிரார்த்தித்தார். இவ்வாறு பிரம்மா, இந்திரன், யமன், வருணன், குபேரன், வாயு, அக்னி யாவரும் பிரார்த்தித்தனர். அவர்கள் செய்த தோத்திரங்களாலும் பத்ரகாளியின் உக்ரத்தை சமனம் பண்ண முடியவில்லை. என்ன செய்வதென்று ஒன்று கூடி ஆலோசித்தனர். "அனலாக்ஷன் சைன்யமான தீய சக்திகளை அழிப்பதற்கு நமது வேண்டுகோளின்படி பத்மகிரி நாதன் பராசக்தியை அனுப்பினார், அழிக்கும் வல்லமை பொருந்திய ஓர் பெரிய சக்தியை அதன் பூரண ஆற்றல் தெரியாது நாமே அனலாக்ஷன் மீது ஏவினோம். அந்த சக்தியின் அழிக்கும் ஆற்றல் அனலாக்ஷனையும் அவனது பதினாயிரம் வெள்ளம் சைன்யத்தை அழித்த பின்பும் கொஞ்சம் எஞ்சியிருக்கின்றது. எந்த இறைவனால் இந்த சக்தி அனுப்பப்பட்டதோ அவனே அதை அடக்க வல்லவன்" என்று முடிவுக்கு வந்து யாவரும் பத்மாசலேசரை சரணடைந்து வேண்டிக்கொண்டனர். அது வரை சக்தியைப்பிரிந்து சிவம் தொழிலற்றுக்கண் மூடி மௌனியாகி பர்வத சிகரத்தில் அமர்ந்திருந்தார். தேவர்கள் முறையிடுவதைக்கேட்டு கண்களைத்திறந்து தேவர்களுக்கு அபயம் அளித்தார். தேவியை அழைத்தார். "கௌரீ! அப்போது அலர்ந்த பங்கஜங்களுக்கொப்பான நயனங்களும், புன்சிரிப்பு இழைந்தோடும் வாயும், மாந்தளிரைப்பழிக்கும் திருமேனியும் கொண்டு எந்த ஸௌந்தர்ய ரூபத்தில் உன்னை தேவர்கள் பூஜித்து சொர்க்காதி போகங்களையும் அடைந்தார்களோ, எந்த மனோகரமான வடிவ தியானத்தால் உபாஸகர்கள் இம்மையில் சகல ஸௌபாக்யங்களையும் அடைந்து மறுமையில் உன் திருவடித்தாமரையில் லயம் ஆகின்றனரோ, எந்த ரூப லாவண்ய சொரூபத்தை நானும் ஆராதித்து விஷ பக்ஷணம் செய்தும் அழியாமல் இருக்கின்றேனோ அந்த மஹா மகிமை

---

11 மூலத்தில் இந்த இடத்தில் தேவர்கள் ஒவ்வொருவரும் தேவியைக்குறித்துக்கூறிய அழகான தோத்திரங்கள் தனித்தனியாய் இருக்கின்றன. அதில் விஷ்ணுவின் தோத்திரம் மட்டும் அதில் அடங்கிய அரும் பெரும் தத்துவத்துக்காக சுருக்கமாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

பொருந்திய "அபிராமா" 12 ரூபத்தில் வரவேண்டும்" என்றார். அதனைக்கேட்ட மஹாகாளி தன் விச்வரூபத்தைக் கரந்து அபிராமாம்பிகையாகக் காட்சியளித்தாள் (பிரம்மா அந்த ஸௌந்தர்ய தேவதையை கீழ்க்கண்டவாறு வர்ணிக்கின்றார்) தாமரைபோன்று சிவந்து ஆமை முதுகு போன்ற திருவடிகளும், மன்மதனின் அம்புராத் தூணிபோன்ற முழங்கால்களும், வாழைமரத்தைப்பழித்து வெள்ளையானையின் துதிக்கையில் சிந்தூரம் பூசியது போன்ற துடைகளும். தங்கக்கொடி போன்று ஒருபிடியில் அடங்கும் சிற்றிடையும், மாரனும் ரதியும் ஜலக்ரீடை செய்யும் மடுவோ வென்ன நாபியும், அழகு பொருந்த அமைந்த வயிற்றில் சித்தஜன் ஏறும் படிக்கட்டோ என மூன்று மடிப்புகளும். தாமரைத் தண்டுக் கொப்பான மிருதுவான இரண்டு தோள்களும், வலம்புரிச் சங்கு போன்ற கழுத்தும், வீணையைப் பழிக்கும் வாக்கும், வதன ஸௌந்தர்ய வாரிதியில் விளையாடும் மீன்கள் போன்ற நயனங்களும், அஷ்டமீ சந்த்ரன் போன்ற நுதலும், அதில் சந்த்ரனின் களங்கமோ என கஸ்தூரி திலகமும், எள்ளின் பூவைப்பழிக்கும் நாசியும், அதில் சகலாகமங்களும் நிறைந்த சம்புடமோ என்ன விலைமதிக்க முடியாத முத்தையுடைய நாசாபரணமும், பலவித சுகந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட கேசபாரமும், தாரகைகளோ என்ன பிரகாசமுடைய ரத்னங்களாலாகிய ஆபர

---

12 இப்புராணத்தைப் படிக்கும் ஆஸ்திகச் செல்வர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு. நம் நகரில் எழுந்தருளியிருக்கும் தேவியை நாம் "அபிராமி" என்றே அழைத்துப்பழகி விட்டோம். உண்மையில் அவளை "அபிராமா" "அபிராமாம்பிகை" என்று "ராமா" என்ற சப்தத்தோடுதான் அழைக்க வேண்டும். அபிராமி வேறு அபிராமா வேறு. அபிராமி என்ற அம்பிகை திருக்கடவூர் என்ற க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தம். அங்கு அந்த அன்னைக்கு நான்கு கைகள் இரண்டு அபய வரதமாயும் மற்ற இரண்டு கைகளில் அக்ஷமாலையும் தாமரையும் தாங்கி விளங்குகின்றாள். நமது அபிராமாவுக்கு இரண்டு திருக்கரங்கள் ஒன்றில் தாமரையும், மற்றொன்று லம்ப ஹஸ்தமாயும் (அதாவது தொங்கும் கை) இருப்பதைப் பார்க்கிறோம். மேலும் இப்புராணத்தின் மந்த்ர விளக்கப் பகுதியில் „ அபிராமா" என்ற பெயரே மந்த்ராக்ஷரங்கள் அடங்கியதாகக் கூறப்படுகின்றது. ஆகவே "அபிராமா" என்று அழைப்பதுவே ஓர் மந்த்ர பிரயோகம் ஆகின்றது. ஆதலால் இதனை நன்குணர்ந்து நமதன்னையை அபிராமி என்றழைக்காமல் அபிராமா வென்றே அழைப்பது சாலச்சிறந்தது என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன் (ஆசிரியர்)

ணங்களை அணிந்த திருச்செவிகளும். பவளமும் கோவ்வைக் கனியும் வெட்கும் அதரங்களும், மாதுள விரையோ, முத்துவரிசையோ என்ன தந்தவரிசையும், கருணையினால் மலர்ந்து காதளவு நீண்ட கண்களும், நவரத்னகசிதமான கிரீடமும் உடையவளாய் 13 ஒரு கையில் தாமரையைத்தாங்கி மற்றொரு கையை லம்ப ஹஸ்தமாய், தரிசிப்பவரை ரமிக்கச் செய்யும் அதிருபலாவண்ய ஸௌந்தர்யசோபையுடன் பத்மகிரீசர் முன் தோன்றிப்புன்னகை பூத்தாள். தேவர்கள் கண்டு பிரமிப்புடன் கூடிய மகிழ்ச்சியை யடைந்தனர்.

தேவி பத்மகிரீசரைத்தம் கடைக்கண்ணால் பார்த்துப் புன்னகை புரிந்ததின் குறிப்பை அறிந்த இறைவன், தானும் அவளுடைய அழகுக்குத்தகுந்த உருவத்தை எடுக்க சங்கல்பித்தார். தன் கண்களால் அவளுடைய அழகைப்பருகினார். தேவியினுடைய ஒவ்வொரு அங்க சோபையும் அவரை பிரமிக்கச் செய்தது. திருக்கயிலையில் உமையாகவும், பின்பு தாக்ஷாயணியாகவும், அதன் பின்பு பார்வதியாகவும் தோன்றிய காலத்திலெல்லாம் அவளுடைய அழகைக்கண்டு களித்தவரானாலும், இன்று அபிராமாவாகத்தோன்றிய திருவுருவத்தை இதற்கு முன் தாம் கண்டதில்லையே என்று விஸ்மயம் கொண்டார். உடனே தானும் தனக்கே உரித்தானதும், ஆகமங்களில் விதந்தோதப்பட்டதும், நிறை மொழிமாந்தரால் தத்துவ விளக்கம்

---

13 அபிராமா மூர்த்தம் அபயவரத முத்திரைகள் இல்லாமலிருப்பதின் தத்துவம் சங்கரர் எழுதிய ஸௌந்தர்லஹரியில் நான்காவது சுலோகத்தில் விளக்கப்படுகின்றது. மற்ற தேவதைகள் எல்லாம் அபயம் கொடுப்பதையும் வரம் கொடுப்பதையும் தங்களுடைய கைகளால் அபய வரத முத்திரை காட்டி வெளியிட்டுக்கொள்கிறார்கள். அம்பாள் ஒருவள் தான் அவ்வாறு அபிநயத்தின் மூலம் வெளியிடுவதில்லை. ஏனெனில் மற்ற தேவதைகள் தங்கள் கையால் செய்யக்கூடியதை அம்பாளுடைய பாதங்களே செய்யும் வல்லமையுடையன. தந்த்ரராஜம், பாவனோபநிஷத், லலிதாஸஹஸ்ரநாமம், லலிதாஸ்தவம் போன்ற நூல்களில் அம்பாளின் தியான சுலோகங்கள் இருப்பவற்றில் எதிலும் அம்பாளுக்கு அபயவரதம் இருப்பதாகச்சொல்லப்படவில்லை. சதுர்புஜம் இருந்த போதிலும் அவற்றில் புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாணங்கள் இருப்பதாகத்தான் கூறப்பட்டிருக்கின்றது. ஏனெனில் அபயவரத சக்தியானது அம்பாளுடைய சரணாரவிந்தங்களுக்கே இருப்பதால் முத்ராரூபமாக வெளியிடத்தேவையில்லை என்பது சாக்த சித்தாந்த உண்மை (ஆசிரியர்)

கொடுக்கப்பட்டதுமான, ஜடாபாரம், நாகாபரணம், புலித் தோல், யானை உரி, மண்டை ஓட்டு மாலை, சாம்பல்பூச்சு இவை களை மறைத்தருளி அதியெளவன விட புருஷனாக, கோடி மன் மதர்களும் உவமிக்க ஒண்ணுப்பேரழகும், ஆயிரம் இளஞ்சூரியர் கள் ஒருங்கே உதயமானாற்போல் ஸ்வயம் ஜோதி சொருபராய் முல்லையரும்புகள் போன்ற பல் வரிசையும், அருகு போன்ற இளம் மீசையும், கஸ்தூரிக்குழம்பு பூசியதொப்ப விளங்கும் திருநீலகண்டமும், விரிந்த மார்பும் அதில் மின்னல் போல் துலங்கும் யக்ஞோப வீதமும், முத்து நவரத்னமணி ஹாரங்க ளும், கைகளிலும் புஜங்களிலும் ஜம்பூநாதமென்ற தங்கத்தால் செய்து நவரத்னங்களும் வைத்து இழைத்த கங்கணங்களும், ஆதி சேஷன்போல் நீண்ட கைகளும், பர்வதம்போல் உயர்ந்த புஜங் களும், அவருடைய நாபி என்ற தாமரையில் உதித்த லக்ஷ்மியோ என்னத்திகழும் பத்மராகப்பதக்கமும், வெண்பட்டில் சரிகை வேலை செய்த சீரையுடுத்திய அரையும், அரை ஞாணும் சிவந்த பட்டாலாகிய உத்தரீயமும், காதுகளில் நவரத்னகசிதமான மகர குண்டலங்கள் சந்திரனைச் சுற்றியிருக்கும் விண்மீன்கள் போன்று வதனகாந்தியை அழகு படுத்தும் லாவண்யமும், பவ ளம் போன்ற உதடுகளில் புன்னகை தவழ அபிராமா தேவியின் முன்தோன்றினர். மஹாமாயை என்று லோகபிரசித்த மான அதிஸௌந்தர்யவதியாகிய அபிராமாம்பிகையே அந்தத் தோற்றத்தைக்கண்டு இவர் அழகுக்கு நாம் ஈடாவோமோ என்று பிரமித்தாள் என்ருல் என் ஐயன் பத்மகிரீசரின் பேரழகை யாரே வாயினல் கூறமுடியும். மனதினலேயே சிந்திக்கமுடியாத ஒன்றை வாயினல் பேசுவதெப்படி?

தேவர்கள் இந்த ஆதி தம்பதிகளைப்பார்த்தார்கள். அவர்கள் கண்கள் கூசின. இருவரையும் வாயாரப்புகழ்ந்து தோத்தரித்தனர். ''சகல ஜகத்காரண வஸ்துவான பரசிவமே! உமது இச்சையால் உம்மிடமிருந்து தோன்றிய பராசக்தியோடு கூடி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களால் சகல புவனங்களையும் இயக்குவித்து, ஜீவகோடிகளின் வினைக்கீடாகதனு,கரண, புவன, போகங்களை நல்கி, அநேக ஜன்மங்கள் எடுத்து, அவர்கள் வினையை சிறிது சிறிதாய் நாசம் செய்து, அவர்களுக்குப் பக்குவம் வந்தவுடன் உமது அருள்சக்தி அவர்களில் பதிய், உம்மை சரியை, கிரியை. யோகம், ஞானம் என்ற சோபானமுறையில் வழிபட்டு விகாஸ மடைந்து முடிவில் உன்னுடன் இரண்டறக்கலந்து நிற்கும் சாயுஜ்யம் என்ற நித்திய வாழ்க்கையை அளிக்கும் பெம்மானே! முன்பு சாக்ஷுஸ பிரம்மாவுக்காக. இங்கு பத்ம புஷ்கரணியில் முளைத்தெழுந்த பத்மத்தின் கர்ணிகையில் லிங்காகாரமாய்த் தோன்றி, பின்பு அவர் விருப்பப்படி பர்வதாகாரமான சுயம்

புலிங்கமாய் வளர்ந்த முழுமுதலே! உலகனைத்துக்கும் அம்மை அப்பராக விளங்கும் ஆதி தம்பதிகளே! உங்கள் இருவரின் திவ்ய, தேஜோமயானந்த, சர்வாலங்கார, சகல ஸௌந்தர்ய ரூபங்களைத்தரிசித்து தன்யர்களானோம். எங்கள் உள்ளத்தில் உங்கள் திருவருளால் உதித்தெழுந்த ஓர் ஆசையை நீவிர் இருவரும் பூர்த்தி பண்ணியருளல் வேண்டும். அஃதியாதெனில் முன்பு திருக்கயிலையில் உமாமஹேச்வராய் விளங்கினீர்கள். பின்பு தாக்ஷயணீ ரூபத்தில் தோன்றிய பராசக்தியை காந்தர்வ முறையில் மணந்தீர், அதன்பின் பர்வதராஜனுக்குப்புத்திரியாய் அயோனிஜையாகத் தாமரை மலரில் தோன்றிய பார்வதீ தேவியாரை வேதோக்த சம்பிரதாயமாக மணந்து கொண்டீர். இன்னும் பற்பல க்ஷேத்ரங்களில் பற்பல உருவமும் நாமமும் தாங்கி நீங்கள் இருவரும் நித்ய கல்யாண மூர்த்திகளாக விளங்கினீர்கள். இதெல்லாம் உங்கள் திருவிளையாட்டேயன்றி வேறல்ல.

நீவிர் இருவரும் எத்தனை முறை விவாகம் செய்து கொண்டபோதிலும் உம்மை பிரம்மச்சாரி என்றும் அன்னையைக் கன்னி யென்றுமே வேதாகமங்கள் கூறுகின்றன. உங்கள் விவாகதத்துவத்தை ஆகமங்கள் நிரூபிக்கின்றன. சிவசக்தி சம்மேளனமே புவனோற்பத்திகாரணம் என்று விளக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் நீவிர் இருவரும் நாங்கள் கண்ணாரக்கண்டு களிக்கும்படி உங்கள் இருவருக்கும் திருக்கல்யாண மஹோத்சவத்தை நடத்த அனுமதி தரல் வேண்டும் என்று திருமாலும் நான்முகனும், இந்திராதி தேவர்களும், மற்றைத்தேவரிஷிகணங்களும் ஏகோபித்து பிரார்த்தித்துக் கொண்டனர். பத்மகிரீசன் தன் முன் நிற்கும் அபிராமாம்பிகையைக் கடைக்கண் நோக்கிப்புன்னகை பூத்தார். அம்பிகையும் நாணத்தால் முகம் சிவக்கத்தலை குனிந்து மந்தஹாஸம் செய்து, தன்சம்மதத்தைக் கூறாமல் கூறினாள். பத்மகிரிநாதர் தேவர்களைப்பார்த்து உங்கள் மனோபீஷ்டம் நிறைவேறட்டும் என்று ஆசீர்வதித்தார்.

9-ம் அத்தியாயம்:
திருக்கல்யாண மஹோத்சவம்.

அகஸ்திய முனிவரே! அபிராமா பத்மகிரீசர் திருக்கல்யாண விமர்சையை என்னாலும் வர்ணிக்க இயலாது. தேவர்களின் ஏவலால் விச்வகர்மாவினால் நிர்யாணிக்கப்பட்ட நவரத்னகசிதமான மஹா மண்டபத்தில் சகல தேவர்களும், ரிஷிகளும், பதினெண் கணங்களும், மற்றும் திண்டிமாபுரியில் முன்

தவப்பயனால் வாழ வாய்ப்புப்பெற்றப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர்களில் மஹா உத்தமர்களும், சிவகணங்களும், சிவனடியார்களும் வந்து குழுமினார்கள். ஸப்த ரிஷிகளும் வேதகோஷம் செய்தார்கள். கின்னர கிம்புருடாதி கணங்கள் இன்னிசை மாரி பொழிந்தனர். கந்தர்வர் வீணை வாசித்தனர். ரம்பை மேனகை, திலோத்தமை, ஊர்வசி எனப்பட்ட தேவமாதர்கள் சாஸ்த்திர முறைப்படி நிர்த்தனம் செய்தனர். அடியார்களின் "ஹர! ஹர! சப்தம் கடலின் ஓசையைத் தோற்கடித்தது. சிவ கணங்கள். சங்கம், பேரிகை, சின்னம், டமருகம், எக்காளம், கொம்பு முதலியவாத்தியங்களை முழங்கினர். ஸ்ரீபவானும் மேனையும் தங்கள் திருக்குமாரத்தியின் விவாகமஹோத்சவத்தை இரண்டாம் முறையாகக்காண ஆவல்கொண்டு சகலவிதமான சீர் வரிசைகளோடு அவணெய்தினர். காமதேனு பிரசன்னமாகித்தனது "ஹுங்கார" சப்தத்தால் சகலருக்கும் ஆடை ஆபரணம், போஜனம், இவற்றை நல்கியது. ஸப்தத்வீபங்களிலிருந்தும் ஸப்த சமுத்ர தீர்த்தங்களைத் தங்கக் குடங்களில் நிறைத்து வேதவித்துக்களான அந்தணர் பலர் உகந்த மந்த்ரங்களால் அபிமந்திரித்து தலையில் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தனர். கங்கை, யமுனை, நர்மதை, காவிரி முதலிய நதிகளும் அங்கு பிரசன்னமாயின. அகில், சந்தனம், தேவதாரு முதலிய மரங்களின் சூர்ணங்களால் வாசனை தூபம் போடப்பட்டு நாலுதிக்குகளிலும் நறுமணம் பரவியது.

அதிரஹஸ்ய யோகினிகள் என்று கூறப்பட்ட வஜ்ரேச்வரி, காமேச்வரி, பகமாலினி இவர்கள் பராபர ரஹஸ்ய யோகினியாகின்ற அபிராமா தேவிக்கு புண்ணிய தீர்த்தங்களால் மங்கள ஸ்நானம் செய்து வைத்தனர். வசின்யாதி வாக் தேவதைகள் அம்பாளின்புகழை வாய்விட்டுப் பாடிக்கொண்டே ஆபரணங்கள் அணிவிப்பவர்களும். கஸ்தூரி திலகம் இடுகின்றவர்களும், புஷ்ப மாலைகளை அணிவிப்பவரும், வாசனை திரவ்யங்களை லேபனம் பண்ணுகிறவர்களும், விசிறி கொண்டு வீசுகின்றவர்களும், தேவேந்த்ரலோகத்தில் நெய்யப்பட்ட சரிகை வேலைப் பாடமைந்த பொன்னுடையை அம்பாளுக்குக் கட்டுகிறவர்களும், பாதங்களில் நவரத்ன நூபுரங்களை அணிவிப்பவரும், அம்பாளுக்கு சிசுரூஷை செய்வதில் அதிக சிரத்தை காட்டுகிறவர்களாய் மிக்கப் பரபரப்புடன் காணப்பட்டனர். பாதங்களில் செம்பஞ்சுக்குழம்பு தீட்டினர். இவ்வாறு அம்பாளின் பரிவார தேவதைகள் யாவரும் தமக்கு இந்த வாய்ப்புக் கிட்டியதே என்று பெருமிதம் கொண்டு ஒருவர்க்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு அழகுக்கு அழகு செய்தனர். பின்பு ஸப்தமாதரும் அம்பாள் பாதம் படும் இடங்களில் புஷ்பங்களைத்தூவினர், இவ்வாறு உபசரிக்கப்பட்ட தேவி, தண்டினீ

சக்தி கட்டியம் கூற, பாலாசக்தியும் மந்த்ரிணீசக்தியும் இருபக்கமும் கவரிவீச, காமேச்வரியும் வஜ்ரேச்வரியும் இரு பக்கம் கைலாகு கொடுக்க, பகமாலினீசக்தி பின்புற மிருந்து புஷ்பக் குடை பிடிக்க வலக்கையில் கிளியுடன் கூடிய புஷ்பச் செண்டு ஏந்தி, இடதுகையை தொங்க விட்டுக்கொண்டு, ஸர்வாபரண பூஷிதையாய் ரத்ன கசிதமானதும் பஞ்சாவரண சக்ராகாரமாய் அமைந்ததுமான விவாஹ மண்டபத்தில் பிரவேசித்தாள்.

எம்மிறைவன் பத்மகிரி நாதரும் தன்னைத்தன் கணங்கள் அலங்காரம் செய்ய மனமுவந்து சம்மதித்தருளி, அவர்களும் அவருக்கு ஆடை ஆபராணாதிகளை அணிவித்து கோடி சூர்யபிரகாசராய் ஆயிரங் கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி மேயினை எனினும் பத்மகிரீசரின் இரு சரணங்களின் தூய நல்லெழிலுக்கு ஆற்றாது என்னும் படியும், அண்ணலார் திருமேனியின் அடிமுதல் முடியின் காறும் எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கினாலும், கண்ணினால் அடங்காது கருத்தினால் அடங்காது என்னும் படியும் மனோவசாம கோசரமான பரம்பொருள் பத்மகிரிநாதனாகக் கல்யாண மண்டபத்துக்கு எழுந்தருளிய போது அவருடைய சீரும் சிறப்பும் இளமையும் எழிலும் பல்கால் பார்க்கினும் தெவிட்டாத காட்சியாக இருந்தது. அவரை திருமாலும் நான்முகனும் ஏனையோரும் வணங்கித்துதித்து போற்றிப்பரவி மிகுந்த பக்தி சிரத்தையுடன் அழைத்துச்சென்று, கல்யாண வேதிகையின் நடுவே அமைக்கப் பட்டிருந்த, இளஞ்சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற ரத்ன சிம்ஹாஸனத்தில் அமரச்செய்தார்கள். ஸர்வலக்ஷண ஸம்பன்னையாய், ஸர்வாபரண பூஷிதையாய் மந்தஹாஸ முகத்துடன், லஜ்ஜையினால் சிறிது வணங்கிய முகமண்டலத்தையுடைய அபிராமா தேவியை அலைமகளும், கலைமகளும் வல இடமாகக் கைலாகு கொடுத்து அழைத்து வந்து பத்மகிரீசரின் வலப்பக்கத்தில் அமரச்செய்தனர். பிரம்மாவே முக்கிய புரோகிதராய் அமர்ந்து விதிப்படி செய்ய வேண்டிய சகல கிரியைகளையும் மந்த்ர பூர்வமாய்ச்செய்தார். ஹிமவான் அம்பிகையின் வலக்கரத்தினை இறைவனின் வலக்கரத்தில் வைத்து ஐயனே! உம்மையே என்றும் வழிபட்டுவரும் அடியேனுக்கு இரண்டாம் முறையாக என் புத்திரியை தாரா தத்தம் செய்யும் வாய்ப்பை உம்மால் அருளப்பெற்றேன். உன்னை விட்டு சற்றும் அகலாத பராசக்தி லோக க்ஷேமத்தின் பொருட்டு உன்னினின்றும் வேறாகி அன்று மலைமகளாயும் இன்று அபிராமாம்பிகை யாகவும் காட்சியளிக்கும் என் புத்திரியை அக்னி சாக்ஷியாய், இம் மஹாசபையோர் முன்னிலையில் உமது பார்யையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்" என்று தாரை வார்த்தான். பின்பு

அம்மையும் அப்பனும் அக்னியை வலம் வந்து ஸப்தபதி என்ற கிரியைச் செய்து முறைப்படி திருமணம் நடந்தேறியது. தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். ஆகாயதுந்துபி முழங்கியது. வேதகோஷமும், வாத்யகோஷமும் வானளாவின. பின்பு அங்கு குழுமியிருந்த யாவர்க்கும் அவரவர் தகுதிக்குத் தக்கபடி மரியாதைகளை அதிகார நந்தி முன்னின்று செய்தார். பத்மகிரீசர் தனது பார்யையான அபிராமா தேவியின் அங்கலக்ஷணங்களைக்கண்டு ஆனந்தங்கொண்டு அவளை முன்போல் தன் இடப்பாகத்தணைத்து விருஷபாரூடராய் யாவர்க்கும் காட்சியளித்து அவரவர் தமதிருப்பிடம் செல்லுமாறு பணித்து பத்மகிரீச் சிகரமான சூக்குமலிங்கத்தில் இறைவியோடு மறைந்தருளினார். வந்திருந்த அனைவரும் இது வரை தாம் அடையாத பெற்றியை அடைந்ததாக இறும்பூதெய்தி அவரவர் தமதிருப்பிடம் சேர்ந்தனர். என்று இந்த பரமபாவனமான அபிராமா பத்மகிரீச விவாக மஹோத்சவத்தை பிரம்மா அகஸ்தியருக்கு எடுத்துச்சொன்னார். (இந்தத்திருக்கல்யாணம் சித்திரை மாதம் பௌர்ணமீ திதி ஹஸ்த நக்ஷத்திரம் கடக லக்னத்தில் நடந்ததாக இப்புராணம் கூறுகின்றது.)

10-வது அத்தியாயம்:
வாருண தீர்த்த மகிமை.

திருக்கல்யாண விமர்சையைக்கேட்ட அகஸ்தியர் உடல் புளகாங்கிதமடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிய பக்தி பரவசம் பெருக்கெடுத்தோட பிரம்மாவை நோக்கி சுவாமி! இது வரை இத்தல மகிமையும், மூர்த்தி மகிமையும் கூறியது போல அடியேனுக்கு இந்த க்ஷேத்ரத்தின் தீர்த்த மகிமையும் சொல்ல வேண்டும்" என்று கேட்டார். அதன்படியே பிரம்மனும் சொல்லலுற்றார்.

கேளும் குடமுனியே! பர்வதரூபமான இந்த மஹாலிங்கத்தின் மேல் தளத்தில் ஐந்து புண்ணிய தீர்த்தங்கள் உள. அவை 1. வாருண தீர்த்தம். 2. கதம்ப தீர்த்தம். 3. சிவகங்கா தீர்த்தம். 4. பாண்டவ தீர்த்தம். 5. திரௌபதி தீர்த்தம் என்பனவாகும்.

அவைகளில் முதலாகச் சொல்லப்பட்ட வாருண தீர்த்தம் என்பது வருணனால் நிர்மாணிக்கப் பட்டது. அந்தப் புண்ணிய தீர்த்தத்தை ஒரு முறை தரிசனம் செய்தாலே ஒருவன் சமஸ்த பாபங்களிலிருந்து விடுதலை அடைகின்றான், இருத

யுகத்தில் ஒரு சமயம் இந்திரலோகத்தில் தேவசபை கூடிற்று. அப்பொழுது இந்திரன் தன் பதவியில் கர்வம் கொண்டவனாய்த் தன்னைவிட உயர்ந்தோர் இல்லையெனபெருமைகொண்டு மற்ற தேவர்கள் மனங்கோணப் பேசினான். அதைக் கேட்ட வருணன், ''தேவராஜனே! உலகம் ஜீவிப்பது மழையால். அதைப் பெறவே ரிஷிகளும் மக்களும் யாகாதிகளைச் செய்கின்றனர். அவ்வாறு செய்யப்படும் யாகங்களில் அக்னியில் இடப்படும் ஹவிஸ்ஸே தேவர்களுக்கு உணவாகின்றது. நானில்லையேல் உலகில் யாதொன்றும் நடைபெறாது. ஆகவே நானே பெரியவன் என்று மார்பு தட்டினான். இருவருக்கும் வாய்ச் சண்டை முற்றி யுத்தத்தில் முடிந்தது. வருணன்படு தோல்வி அடைந்தான். தன்னுடைய சகல சம்பத்துக்களையும் இழந்தவனாய், மிக்க வறியவனாய், பிரம்ம தேவரிடம் சென்று தன்னுடைய நிலைமையைக் கூறினான். தனக்கு விமோசனம் ஏற்பட ஏதாவது வழியுண்டா என்று வினவினான். அதைக் கேட்ட பிரம்மா வருணன் மீது இரக்கங்கொண்டு நீ தக்ஷிண பூமி சென்று அங்குள்ள தாத்ரீ வனத்தையடைந்தால் அங்கே சிவபெருமானே மலைவடிவாய், லிங்காகாரமாய் ''பத்மாசலம்'' என்று பெயருடன் திகழ்கின்றார். இறைவனுக்கு கயிலாயமும் மேருவும் எப்படியோ அவற்றை விட இந்த பத்மாசலம் மேலானது. ஏனெனில் கயிலையும் மேருவும் அவன் வாசஸ்தலங்களேயாகும். ஆனால் பத்மாசலமோ அவனே யாகும். ஆகையால் நீ அங்கு சென்று அப்பர்வதத்தின் தாழ்வரையில் இருக்கும் பத்மதீர்த்தத்தில் நீராடி, பத்மாசலத்தை வலம் வந்து, பத்ம தீர்த்தத்தின் வட கரையிலுள்ள இரண்டு அச்வத்த விருக்ஷங்களை சேவித்து, அம்மலையின் சிகரமாய் இருக்கும் சூக்ஷ்மலிங்கத்தில் சான்னித்யமாய் இருக்கும் பத்மகிரீசனையும், அவனை விட்டு நீங்காத அருட் சக்தியான அபிராமாம்பிகையையும் ஆராதித்து வருவாயாகில் நீ இழந்த பதவியை திரும்ப அடைவது மட்டுமின்றி உன் பகைவனான இந்திரனே அங்கு வந்து உன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பான், என்று உபதேசித்தார். அவ்வாறே வருணன் இந்நெல்லிவனம் வந்து அபிராமா சமேதா பத்மகிரீசனை பிரம்மா உபதேசித்த முறைப்படி ஆராதித்து வரலாயினன். அவன் பத்மகிரீசரை இவ்வாறு தோத்தரித்தான்: - ''ஏ! பத்மாசலத்திலுறையும் பரசிவமே! திங்களும் கங்கையும் தங்கும் பிஞ்ஞகா! முக்கண்ணப்பா! மூலமூர்த்தி! பத்மாசலேசா! பராபரனே! பக்தர்களின் இடுக்கண் களைய இங்கு பர்வதமாய் தோற்றமளிக்கும் தயாநிதே! தேவர்களுக்கு அபயம் கொடுத்து அவர்களை உனது கர்ப்பத்தில் வைத்துக்காத்த கருணைக் கடலே! வேதாகமங்களாலன்றி வேறு பிரமாணங்களால் அறியப்படாத உன்னுடைய ஸ்வரூபத்தை, பாமரர்களும் எளிதில்

அறிய வேண்டி, உமது அருள் பெற்ற நிறை மொழிமாந்தர் நிர்குண வஸ்துவான உமக்கு ஸகுணரூபத்தைக் கல்பித்து, கங்காதரன், சோமாஸ்கந்தன், நடராஜன், தக்ஷிணாமூர்த்தி, சந்திரசேகரன், கல்யாணசுந்தரன் என்று பல பெயரிட்டு மந்த்ரம் கிரியை பாவனைகளால் உமது தடஸ்தலக்ஷணத்தை உபாஸித்து அதன் மூலம் உமது ஸ்வரூப லக்ஷணத்தையும் அறிந்து உம்முடன் இரண்டறக்கலந்து நித்தியானந்தப் பெரு வாழ்வு அடைகின்றார்களே! அபிராமாபதே! இங்கு உன் இச்சையால் பத்மகிரீசன் எனப் பெயர் பூண்டு தடஸ்தலக்ஷணமாய் பர்வதமாய் லிங்காகாரமாய் எழுந்தருளி உம்மை உண்மையன்போடு வழிபடுகின்றவர்கட்கு இம்மையில் சகல ஸௌபாக்யங்களும் அருளி மறுமையில் பிறவாவரம் அளிக்கின்றீரே! கருணை மாமுகிலே! என்னைக் காப்பாற்றும்!" என்று வேண்டினான். இவ்வாறு வருணன் ஒரு மண்டலம் வழிபட்டு வந்தான். அப்பொழுது தேவேந்திரன் தன் மனைவியோடும் மற்ற தேவர்களோடும் பத்மாசலக்ஷேத்ரத்தை யடைந்து வருணனை வணங்கி "ஏ வருண தேவனே! என்னை மன்னியும். உம் பெருமையை அறியாது அவமதித்து விட்டேன். நீர் தேவலோகம் விட்டு விலகியதும் மழையில்லாது மக்கள் தவிக்கின்றனர், நீர் நிலைகள் எல்லாம் வற்றி விட்டன. மக்களுடைய சுபிக்ஷத்திலன்றோ தேவர்களின் வாழ்வு பிணைக்கப்பட்டிருக்கின்றது. நான் செய்த அபசாரத்தைப் பொறுத்து மீண்டும் தேவலோகம் வந்து உன் பழைய பதவியில் இருந்து கொண்டு மக்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்க வேண்டும். மேலும் நீயோ சிவபக்தன் சிவனடியார்களைப் பகைப்பவரும் நிந்திப்பவரும் எள்ளி நகையாடுபவரும் தீராத பிணியால் பீடிக்கப் பட்டு இறந்தபின் மகா கோரமான நரகத்தில் தள்ளப் படுகிறார்கள். ஆகையால் என்னை மன்னிக்க வேண்டும்" என்று மீண்டும் மீண்டும் வருணனின் கால்களில் வணங்கினான். அதேசமயம் பத்மகிரிநாதர் அபிராமாசமேதராய் விருஷப வாஹனத்தில் காட்சியளித்து வருணனையும் இந்திரனையும் ஆசீர்வதித்தார். வருணனும் இந்திரனும் அவர்களுடைய திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்தனர். அப்போது வருணன் பத்மாசலேசரிடம் ஓர்வரம்வேண்டினான்."சுவாமி அடியேன் எந்த தீர்த்தத்தினால். தங்களுக்கு அபிஷேகம் செய்தேனோ அது ஓர் புண்ணியதீர்த்தமாக இருக்கவேண்டும். அதில் ஸ்நானம் செய்கிறவர்களும், அதன்நீரைப்பருகுகிறவர்களும் இழந்தசம்பத்தைத்திரும்ப அடைந்து பகைவர்களும் ஒன்று சேர்ந்து சகல பாவங்களினின்றும் விடுதலைபெறவேண்டும். "என்று பிரார்த்தித்தான் இறைவனும்"அவ்வாறே ஆகட்டும்"என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார். வருணனும் இந்திரனும் முன்போல் நேசமாகி தமதிருப்பிடம் சென்றனர். அந்நாளிருந்து அந்த நீர் நிலை வாருண தீர்த்தம் என்ற பெயர் தாங்கி தம்மில் மூழ்குபவர்களின்

பாபங்களை அறவே போக்குகின்றது. அதில் மூழ்குவோர் இழந்த பதவியைத் திரும்பப்பெறுகிறார்கள். விரோதிகளும் நேசமாகின்றார்கள். வருணனும் ஆண்டுதோறும் மழைரூபமாக வந்து பத்மகிரி பார்வதத்தை அபிஷேகம் செய்து ஆராதித்து வருகிறான்,

---

11-வது அத்தியாயம் :

கதம்ப தீர்த்த மகிமை.

இனி இரண்டாவதாகக் கூறப்பட்ட கதம்பதீர்த்ததின் மகிமையைபிரம்மாகூறினார். முன்னொரு காலத்தில் சததன்வா என்றொரு அரசன் மனு நீதி தவறாமல் அரசாண்டு வந்தான். அவனுடைய ராஜ்யத்தில் வேதசாஸ்த்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவனும், ஆசாரசிலனும், சிவபெருமான்மீது இடையறா பக்தியுடையவனும், பஞ்சமஹாயக்ஞங்கள் (14) என்று கூறப்பட்டவற்றைத்தவராது செய்பவனுயு இருந்த 'த்ருடவிருதன்' என்றுபெயருடைய ஓர் பிராம்மணோத்தமன் இருந்தான். அவன் மனைவி தர்மக்ஞை என்பாள் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக விளங்கினாள். அவர்களுக்கு வெகு நாள் மக்கட்பேறில்லாமல் இருந்து பின்பு மூன்றுபுத்ரர்களை ஒரே கர்ப்பத்தில் பெற்றெடுத்தார்கள். அவர்கள் பெயர் தண்டி, முண்டி, ஹரன் என்பன. அவர்களை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாய் மிகச் செல்வமாக வளர்த்தார்கள். அப்புத்திரர்களுக்கு அவ்வக்காலத்தில் செய்யப்படவேண்டிய ஸ்மிருதி ஸம்ஸ்காரங்களை முறைப்படி செய்து உபநயனச்சடங்கு செய்வித்து வேதாத்யயனம் செய்யஏற்பாடு செய்தார்கள். அவர்களும் வேதங்களை நன்கு கற்றுணர்ந்தார்கள். அவர்களில் முண்டி என்பவன் யௌவனதசையடைந்தவனாய், பூர்வஜன்ம வினையினால் காமுகனாய், ஆசாரஹீனனாய், வர்ணாச்ரமதர்மங்களை மீறியவனாய், குருநிந்தனை, பெற்றோர் நிந்தனை, சிவநிந்தனை, அடியார் நிந்தனை

---

(14) பஞ்சமஹாயக்ஞங்களாவன. ப்ரம்மயக்ஞம் அதாவது வேதம் ஓதுதல் ஓது வித்தல் 2- தேவயக்ஞம் அதாவது வேட்டல், வேட்பித்தல் 3- பூதயக்ஞம், அதாவது அருவமான பூதங்களுக்கு வாயஸபலி போன்ற பலிதானம் செய்வது 4- பிதுர்யக்ஞம் அதாவது சிராத்தாதிகளை பிதுர்களுக்காச் செய்வது 5- மனுஷ்யயக்ஞம் அதாவது அதிதிகளுக்கு அன்னமிடல், மனுஸ்மிருதி III 69.

களைச்செய்பவனும், ஸ்திரீலோலனுய்த்திரிந்தான். அன்னுனின் துராச்சாரத்தைப் பொறுக்காத த்ருடவ்ரதன் அவனை வீட்டை விட்டுத்துரத்தி விட்டான். அவனுடையஅட்டூழியம் மிதமிஞ்சிப் போக அரசனும் அவனை தேசபிரஷ்டம் செய்தான். பல ஊர் கள் சென்று தன் தீய நடத்தையால் பலரால் வெறுக்கப்பட்ட வனும் விரட்டப்பட்டவனும் பல நாள் அங்குமிங்கும் திரிந்து கடைசியாய் இந்ததிண்டிமாபுரியை அடைந்தான். அங்கு பத் மகிரீசர் சன்னிதியில் ஊழியம் செய்யும் தாசிகளில் மதன மோஹனு (15) என்பவள் மீது மோகம் கொண்டான். ஒரு நாள் இத்தாசிகள் மலைமீது இறைவன் வழி பாட்டுக்குச் சென்ற போது முண்டியும் அவர்களைப் பின் பற்றிப் போனுன். அவர் கள் அங்குள்ள தீர்த்தங்களில் நீராடினுர்கள். முண்டியும் மதன மோஹனுவும் மற்றவர்களை விட்டுத் தனியே சென்று கதம்ப தீர்த்தக் கரையில் அமர்ந்து உல்லாஸமாகப் பேசிக் கொண்டி ருந்தனர். அது சமயம் ஓர் காகம் தண்ணீர் குடிப்பதற்காக அந்த தீர்த்தத்தில் இறங்கி தாக விடாய் தீர்த்துக் கொண்டு தன் சிறகுகளாலும் அலகினுலும் கதம்ப தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தது. ஈரம் உலர்வதற்காக தனது சிறகுகளை பட பட வென்று உதறியது. அப்போது சில நீர்த்திவலைகள் முண்டி என்பான் மீது பட்டது. பின்பு காகம் மேலெழுந்து பறந்து திடீரெனக் கீழே விழுந்து மாண்டது. அதன் உடல் ஓர் அழ கான கந்தர்வனுக மாறி எழுந்தது. அவ்வாறு எழுந்த கந்தர் வனும் பத்மகிரி சிகரத்தில் கோயில் கொண்டருளும் பத்மகிரீ சரைத் தரிசிக்க சிகரத்தின் மீது ஏறினுன். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த முண்டன், இதன் விவரத்தை அறிய ஆசை கொண்டவனுய் கந்தர்வனைப் பின் தொடர்ந்து சென்று பத்மகிரீசரின் சன்னிதியடைந்தான். அங்கு கந்தர்வன்தான் சாபவிமோசன மடைந்து பழைய உருவானதற்கு பத்மகிரி நாதருக்கு நன்றி செலுத்தும் முறையில் இறைவனை வாயாரத் தோத்தரித்துக் கொண்டு இருப்பதை முண்டன் பார்த்தான். கந்தர்வனை யணுகி விவரம் கேட்டான்.

கந்தர்வன் சொன்னுன் ''ஓய் பிராம்மணு நான் சித்திர கேது என்னும் கந்தர்வன் ஒரு சமயம் நைமி சாரண்யத்தில் கர்கர் என்பவர் ''த்வாதசாஹம்'' என்ற யாகத்தைச் செய்து

---

(15) நம் நகர் அபிராமாம்பிகை ஆலயத்தில் முண்டிக்கும் தேவதாசிக்கும் செப்பு விக்ரகங்கள் கருவூலத்தில் இருக்கின் றன. அவைகள் இப்பொழுது உபயோகத்தில் இல்லை. இவை கள் முறையே 9 அங்குலம் 7½ அங்குல உயரத்தில் இருக்கின் றன. சிறந்த பண்டைய வேலைப் பாடமைந்தவை.)

கொண்டிருந்தார். அவர் அவிர் பாகத்துக்கு வேண்டிய புரோடசத்தையும், (16) நல்ல பசுவின் நெய்யில் பக்குவமாய்ப் பொரித்த பசுமாம்சத்தையும் யாக சாலையில் வைத்திருந்தார். அச்சமயம் என் விதி வசத்தால் ஆகாய மார்க்கமாய்ப் போய்க் கொண்டிருந்தேன். யாக சாலையில் ஹவிஸ்ஸுக்காக வைக்கப் பட்டிருந்த திரவியங்களின் நறுமணம் என்னை வசீகரித்தது. அவற்றைத் திருடி உண்ண ஆசைப் பட்டவனாய் ஓர் காக்கை உருக் கொண்டு யாக சாலையில் பிரவேசித்தேன். கர்க்கர் மஹரா தபஸ்வியாதலாலே என்னை இன்னாரெனக் கண்டு கொண்டு காக்கை உருவாகவே திரியும் படி சபித்து விட்டார். நான் அவரை சாப விமோசனம் வேண்ட அவரும் "நீ காக்கை உருவிலேயே அநேக ஆண்டுகள் திரிந்து கடைசியாக தாத்ரீ வனம் செல்வாய். அங்கே பத்மாசலத்தில் இருக்கும் கதம்ப தீர்த்தத்தில் கோடையின் வெப்பம் தாளாமல் நீர் அருந்த இறங்கி ஸ்நானம் செய்வாய். அப்போது உன் சாப நிவர்த்தி ஏற்படும்" என்று சொன்னார். அதன் படியே நடந்தது ,, என்று கந்தர்வன் சொல்லி விட்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்று விட்டான். காக்கை சிறகடித்துக் கொண்ட போது கதம்பவன தீர்த்தத்தின் நீர் திவலைகள் சிறிது அவன் மீது பட்டதாலும் ஏற்கனவே வேதா அத்யாயனம் செய்தவனாதலாலும், முண்டன் தான் இது வரை செய்த துராச்சாரங்கள் யாவற்றையும் உணர்ந்தான். தான் செய்த பாபகிருத்தியங்களுக்கு வருந்தினான். பத்மகிரீசனைச் சரண் புகுந்தான். தனது தீய பழக்க வழக்கங்களை அடியோடு மறந்தவனாய் நித்தியம் கதம்ப தீர்த்தத்தில் நீராடி பத்மாசலேசரை ஆராதித்து வந்தான். அவனைப்பற்றிய வினைகள் நாசமடைந்தன. பத்மகிரி நாதரும் அவனுக்குக் காட்சியளித்து ஆசீர்வதித்தார். முண்டன் சகலசாஸ்திர ஸம்பன்னனாய் "தூர்த்தஸ்வாமி" என்ற திருநாமம் கொண்டு இறைவன் மீது பல ஸ்தோத்திரங்களை கத்ய பத்யமாகச் செய்தும் இறைவன் சரித்திரங்களை பிரவசனம் செய்து கொண்டும் முடிவில் சிவகதியடைந்தான். கேட்டீரா கும்ப முனியே இத்தீர்த்தத்தின் மகிமையை. வர்ணாச்ரம தர்மத்தை நழுவ விட்டு சண்டாளனாய்த் திரிந்தாலும் தான் செய்த குற்றத்துக்கு வருந்தி இந்த கதம்ப தீர்த்தத்தில் நீராடினால் அவன் பாபங்கள் நசித்து சிவகதிக்குத் தகுதியுள்ளவனாகின்றான்.

---

(16) புரோடசம் என்பது ஹோமத்தில் ஹவிஸ்ஸாகப் போடுவதற்கு மாவினால் உப்பில்லாமல் தட்டிச் சுடப்பட்ட அடை.

12-வது அத்தியாயம்;
பாண்டவ தீர்த்த மகிமை.

இனி மூன்றாவதாக பாண்டவ தீர்த்தமகிமையைச் சொல்லுகின்றார். பாண்டவர் வனவாசம் செய்தகாலத்தில் காடு மலை வனங்களெல்லாம் சுற்றித்திரிந்தார்கள். ஒரு நாள் தர்மபுத்திரன் தான் சூதாடி ராஜ்யத்தை யிழந்து அவதிப் படுவதையும் தன்சகோதரர்களும், மனைவியும் படும் கஷ்டங்களை மனதில் நினைந்து மனசாந்தி யில்லாமல் வியாகூலம் அடைந்திருந்தார். தங்களுக்குத் தோன்றாத் துணையாயிருக்கும் கிருஷ்ண பரமாத்மாவைத் தியானம் செய்தார். கிருஷ்ண பகவான் தர்மராஜன் முன்தோன்றி அவருடைய மன வியாகூலத்தை அறிந்து சொல்லுகின்றார் :- ஹே! யுதிஷ்டிரா! ஏன் கலங்குகிறாய்? நீ க்ஷத்திரியனல்லவா? சாதாரண மக்களைப் போல் மனம் கலங்குவது உன் அந்தஸ்துக்கும் அறிவுக்கும் பொருந்தாது. விதி யாரை விட்டது? அவரவர் செய்தவினையின் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்ற நியதியை நீ அறியாயா? உமது க்ஷேம காலம் சமீபித்து விட்டது. நீ இப்பொழுது வதியும் பிரதேசம் ஓர் புண்ணிய பூமி, இதற்கு தாத்ரீவனம் என்று பெயர். இங்கு கயிலாய பதியாகிய சிவ பெருமானே தன் இச்சையால் ஓர் பத்மகர்ணிகையில் தோன்றி பத்மாசலமாக வளர்ந்து பர்வதாகாரமாகக் காட்சி அளிக்கின்றார். அப்பர்வதத்தின் தரிசனமே சிவதரிசனமாகும். ஆகையால் நீயும் உன் சகோதரர்களும் உங்கள் தர்மபத்னி திரௌபதியுடன் அவண் சென்று பத்ம புஷ்கரிணியில் நீராடி பத்ம பர்வதத்தை வலம் வந்து, பத்மகிரியான் சிகரமான சூக்ஷ்ம லிங்கசேவை செய்து அதன் உச்சியில் கோயில் கொண்டருளும் அபிராமா சமேத பத்மகிரி நாதரை வாருணதீர்த்தத்தால் அபிஷேகம் செய்து முறைப்படி ஆராதித்து வருவாயேல் நீங்கள் இழந்த ராஜ்யத்தைத் திரும்பப் பெற்று சுகமடைவீர்கள். பத்மலிங்க பிரதக்ஷிணத்தால் சத்ருஜயமும் சாம்ராஜ்ய பட்டாபிஷேகமும் கிட்டும். பத்மதீர்த்தத்தை அருந்துவதும், பத்மலிங்க தரிசனமும், பஞ்சாக்ஷர ஜபமும் அநேக பிறவிகளில் செய்த புண்ணியத்தாலேயே கிடைக்கும். பத்மதீர்த்த ஸ்நானமானது கங்காஸ்நானத்தை விடமேலானது. எப்படியெனில் வருணன் பெற்றவரத்தால் அவன்மேகரூபம் கொண்டு ஆண்டுதோறும் பத்மகிரியின் சிகரத்தில் மழையாகப் பெய்து அபிஷேகம் செய்கின்றான் அந்த அபிஷேக ஜலம் பத்மகிரியின் மேல் தளத்திலுள்ள பஞ்சதீர்த்தங்களிலும் கலந்து அம்மலையின் கிழக்குப்பக்கத்தில் வழிந்தோடி பத்ம புஷ்கரணியை நிறப்பு

கிறது. இறைவனின் சிரசில் பட்ட ஜலமாகையால் அது சர்வபாபங்களையும் போக்கவல்லது. பத்மாசல க்ஷேத்ரத்தின் மகிமையை அறியாதவனும் கூட அங்கு ஓர் இரவு தங்குவானாகில் அவன் ஸமஸ்தபாபங்களின்றும் உடனே விடுதலையடைகின்றான். அத்தலத்தின் மகிமையை அறிந்து அங்கு மூன்று தினங்கள் வசிப்பவன் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகிறான். சேரமன்னனாகிய தர்மபாலன் இந்தக்ஷேத்ரத்தில் வசித்து அபிராமாம்பிகைக்கும் பத்மகிரீசருக்கும் ஆலயம் கட்டி அவர்களை பிரதிஷ்டை செய்ததன் பலனாய் சிவலோகத்தில் நித்யவாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் பத்மகிரி நாதரை வழிபட்டு வந்ததால் சாக்ஷாத் ஷண்முகப்பெருமானுக்கே பாலூட்டும் வாய்ப்பை அடைந்தனர். ஹிரண்யகசிபுவை சம்ஹாரம் செய்த நரஹரி இந்த க்ஷேத்ரத்தில் வந்தே தன் பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றார். மஹாவிஷ்ணு இங்கு நித்யவாசம் செய்ய வேண்டும் மென்று கருதியே பத்மகிரியின் தாழ்வரையில் கோயில் கொண்டிருக்கின்றார். வருணன் பத்மகிரிசரை வழிபட்டு இழந்த பதவியைத்திரும்பப் பெற்றான். இதுபோல் இந்ததாத்ரீ வனத்தில் வசித்து பத்மகிரீசரை வழிபட்டு மேன்மை யடைந்தோர் பலர். ஆகவே நீங்களும் அங்கு சென்று பத்மாசலேசனை வழிபடுங்கள். உங்கள் இன்னல்கள் விரைவில் கழிந்து இழந்த ராஜ்யத்தை யடைவீர்" என்றும் சொல்லி விட்டுத் தமது இருப்பிடம் சென்றார். அவ்வாறே பாண்டவர்கள் சென்று கிரிபிரதக்ஷிணம் செய்து வரும்போது மேற்குப் பக்கத்தில் ஓர் குகை துவாரத்தைக் கண்டார்கள். அக்குகையில் தங்கி இரவைக் கழித்து வைகறையில் எழுந்து பத்மபுஷ்கரிணியில் நீராடி, கிரிவலம் வந்து, பர்வதத்தின் மேலேறி அங்குள்ள வாருணகதம்பதீர்த்தங்களில் நீராடி, சூக்ஷ்மலிங்கதரிசனம் செய்து, ஆலயம் சென்று பத்மகிரிநாதரை முறைப்படி வழிபட்டு பஞ்சாக்ஷர ஜபம் செய்து வந்தார்கள். இவ்வாறு ஒரு மண்டலம் நியமமாய் பக்தி சிரத்தையோடு ஆராதித்து வரும் போது ஓர் இரவில் தர்மராஜனின் கனவில் பத்மகிரிநாதர் தோன்றி அபயம் அளித்து "நீங்கள் யுத்தத்தில் வெற்றியடைந்து இழந்த ராஜ்யத்தைத் திரும்ப அடைவது மட்டுமேயன்றி ஏனைய அரசர்களும் உங்களுக்குக் கப்பம் செலுத்தும்படி சாம்ராஜ்யாதிபதிகளாக வாழ்வீர், கிருஷ்ணபரமாத்மாவின் சகாயம் உங்களுக்கு எப்பவும் இருக்கும்" என்று சொல்லி மறைந்தார். காலையில் தருமர், இக்கனவைத்தன் சகோதரர்களிடம் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்ட திரௌபதி "ஆ! இதென்ன ஆச்சர்யம்! என்கனவில் ஸர்வாலங்கார பூஷிதையாய் ஓர் சுமங்கிலி தோன்றி உங்களுக்குச் சொன்னவாறே

சொல்லிப் போந்தாள்'' என்றாள். அவ்வாறுவரும் அபிராமாம்பிகை, பத்மகிரீசர் இருவரின் கருணையை வியந்து அன்றும் என்றும் போல் ஆராதனை நடத்தினர். அப்போது பத்மகிரி நாதர் அவர்கள் முன்தோன்றிக் கனவில் கூறியதையே மறுபடியும் சொல்லி அபயமளித்து அனுக்ரஹம் செய்தார். அப்போது பாண்டவர்கள் "சுவாமி! நாங்கள் தங்கியிருந்த குகையும், நாங்கள் நீராடியதீர்த்தமும் எங்கள் பெயரால் விளங்க வேண்டும். அதில் நீராடுபவர்கள் சகல இன்னல்களும் அகன்றவர்களாக, உன் கடாக்ஷ வீக்ஷண்யத்திற்கு இலக்காக வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். இறைவனும் "அவ்வாறே ஆகுக" என்று கூறி மறைந்தார்.

13-வது அத்தியாயம்:
திரௌபதீ தீர்த்த மகிமை.

கேளும் அகஸ்தியரே இவ்வாறு பத்மகிரீசனால் அனுக்ரஹம் செய்யப்பட்ட பாண்டவர்களும் திரௌபதியும், தாங்கள் தங்கியிருந்த குகையை விட்டு பத்மகிரியின் வடகிழக்கு பாரிசத்தில் ஓர் பர்ணசாலை அமைத்துக் கொண்டு சிலகாலம் இத்தலத்தில் தங்கினர். அப்பொழுது ஒரு நாள் தர்மபுத்திரர் திரௌபதியை நோக்கி "பிரியே! ஓர் கிரஹமானது மேன்மையடைவதும், தாழ்மையடைவதும் "க்ரஹிணீ" என்று சொல்லப்பட்ட இல்லாளின் தர்மாதர்மங்களைப் பொறுத்ததாக இருக்கின்றது. எந்த இல்லத்தில் பதிவிரதையாயும், பர்த்தாவின் மனங் கோணாமல் நடப்பவளாயும், ஆசாரசீலியாயும், தெய்வபக்தி யுடையவளாயும், நன் மக்களைப் பெற்றவளாயும் விளங்கும் இல்லக்கிழத்தி வசிக்கின்றாளோ அந்த இல்லத்தில் திருமகள் நித்யவாசம் செய்கின்றாள். அப்படியில்லாமல் ஆசாரஹீனையாய், தெய்வத்துக்கும் சத்தியத்துக்கும் அஞ்சாதவளாய், காமவிகாரம் பிடித்து, பர்த்தாவுக்கு அடங்காமல் வேசிபோல் திரியும் ஸ்திரீ இருக்கும் இல்லம் சகல நலன்களையும் இழந்து ஜ்யேஷ்டாதேவி குடியிருக்கும் இடமாவதுடன் அவள் வசிக்கும் நகரத்துக்கே கேடு சம்பவிக்கும். மேலும் புருஷன் ஆசாரஹீனனாயும், தீயஒழுக்கங்கள் நிறைந்தவனாயும், தெய்வபக்தி இல்லாவதனாயும் இருந்த போதிலும் அவனைத்திருத்தி நல்வழிப்படுத்தும் பொறுப்பு அவனுடைய இல்லக்கிழத்தியின் கையில்தான் இருக்கின்றது." என்று இன்னும் பலவிதமாய் ஸ்திரீ தர்மங்களை எடுத்தோதி, "நீ இத்தலத்தில் மஹா

வரபிரசாதையாய் எழுந்தருளியிருக்கும் பராசக்தியாகிய அபிராமா தேவியை உபாசித்து வருவாயாக" என்று கூறி அதற்கு வேண்டிய பூஜாவிதானத்தையும் உபதேசித்தார்.

அவ்வாறே திரௌபதியும் தன்பர்த்தாவின் ஆணைப்படி தினம் வைகறையில் எழுந்து பாண்டவ தீர்த்தத்தில் நீராடி, மடியுடுத்தி, நெற்றியில் குங்கும திலகம் இட்டுக்கொண்டு, பூஜைக்கு வேண்டிய புஷ்பம், சந்தனம், மஞ்சள், முதலிய சகல பதார்த்தங்களையும் சேகரித்துக் கொண்டு அபிராமாம் பிகையின் சந்நிதியில் சுகாஸனத்தில் அமர்ந்து, விநாயகரை தியானித்து நெற்றியில் ஐந்து முறை குட்டிக் கொண்டு கல்பம் மன்வந்தரம், யுகம்முதலியன அடங்கிய சங்கல்ப மந்த்ரத்தால் தனது இஷ்டார்த்த காம்யங்கள் நிறைவேற அருளும்படி சங்கல்பம் செய்து கொண்டு அம்பாளை பூஜை செய்ய ஆரம்பித்தாள். அம்பாளுக்கு ஆவாஹனம், (17) ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனம், அபிஷேகம், வஸ்திரம், யக்ஞோபவீதம், அலங்காரம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், கற்பூர நீராஞ்சனம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், முதலிய சகல உபசாரங்களையும் முறைப்படி அவ்வவற்றிற் குறியமந்த்ரங்களாலும் கிரியைகளாலும், பாவனையாலும் செய்து முடிவில்

> " அபிராமா சிர: பாது முகம்பாதுத்ரிபுர ஸுந்தரி
> பவானி நாஸிகாம்பாது கர்ணௌ பத்மஸ்ரீச்வரி."

என்று ஆரம்பிக்கும் அபிராமா கவசத்தையும் சொல்லி வழிபட்டுக் கொண்டு வந்தாள்.

ஒருநாள் திரௌபதி பூஜை முடிந்து, ஏகாக்ரமாய்த் தன் இருகண்களை. மூடி தியானம் செய்து கொண்டிருக்கும் போது "திரௌபதீ உன்னுடைய பூஜையை ஏற்றுக் கொண்டோம், அதனால் மிக்கதிருப்தியும் அடைந்தோம்" என்று எழுந்த வீணையைப்பழிக்கும் மதுரமான வாசகம் கேட்டு நிஷ்டை கலைந்து கண்விழித்துப் பார்த்தாள். தன்முன் திவ்யதேஜோமயமாய், ஸர்வாங்க ஸௌந்தர்ய ஸர்வாபரண பூஷிதையான ஸ்ரீஅபிராமாதேவி திருப்பதைப் பார்த்தாள். ஆச்சர்யத்தில் ஆழ்ந்தாள், மகிழ்ச்சியில் மலர்ந்தாள், கருணைக்கு வியந்தாள்.

---

(17) மூலத்தில் இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு உபசாரத்துக்கும் ஏற்ற மந்த்ர சுலோகங்கள் வட மொழியில் கூறப்பட்டிருக்கின்றன. இறுதியில் " அபிராமா கவச மந்த்ரமும்,, கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை இட வசதியைக் கருதி. ஈண்டு கொடுக்க வில்லை,

ஆடினுள், பாடினுள், கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக, மயிர்சிலிர்ப்ப, அடியற்ற மரம்போல் தரையில் வீழ்ந்து வணங்கி, எழுந்து போற்றிப் பரவித் துதித்தாள். கருணை மாமுகிலான அபிராமாம்பிகை, அவளைப்பார்த்து "ஹே! பாண்டவபத்னி! நீவேண்டுவதியாது?" எனக் கேட்டாள். அதற்கு திரௌபதி "தாயே! தயாபரீ! ஆதியே! பத்மகிரீசரின் பாதியே! பூர்வ ஜன்ம வினைப்பயனுய் நாங்கள் நாடிழந்து வனவாசம் செய்கின்றோம். நாங்கள் இழந்த சம்பத்தைத் திரும்பப் பெற அனுக்ரஹிக்க வேண்டும். மேலும் நாங்கள் தினந்தோறும் உனது திருமேனிக்கு அபிஷேகம் செய்து உன் பாதார விந்தங்களின் வழியாக வழிந்த மஞ்சள் நிறத் தீர்த்தத்தை நாங்கள் வசித்துவந்த குகையில் சேகரித்து வைத்திருக்கிறோம். அது என்றும் வற்றாமல், அதைத் தமது தலையில் புரோக்ஷணம் செய்து கொள்கிறவர்கள் கோரிய வரத்தை அவர்களுக்கு நீ அருளல் வேண்டும்: முக்கியமாய் ஸ்திரீகளுக்கு மாங்கல்ய விருத்தியைக் கொடுக்க வேண்டும். அந்தத்தீர்த்தம் என் பெயரால் வழங்கிவர வேண்டும்" என்று அடிபணிந்து பிரார்த்தித்தாள். அவ்வாறே அபிராமாதேவியும் அனுக்ரஹித்து மறைந்தாள் என்று பிரம்மன் அகத்தியருக்குக் கூறி மேலும் சொல்லுகிறார் "கேளும் கும்பஜ! இந்த திரௌபதீ தீர்த்தத்தின் மகிமைக்கு ஈரேழு பதினுன்கு உலகங்களில் இருக்கும் தீர்த்தங்களும் சமானமாகா. இந்த தீர்த்தத்தை ஒருமுறை தமது தலையில் தெளித்துக் கொண்டாலே ஸ்திரீகள் மலட்டுத் தன்மை நீங்கி சத்புத்ரப் பேறு அடைவர். அஷ்டைச்வர்யங்களையும் அடைவர். அதின் பெருவலியால் வைதவ்யம் உண்டாகக் கூடிய நிலையில் இருக்கும் ஸ்திரீகளும் மாங்கல்ய விருத்தி யடைகின்றனர். மேலும் நான் உமக்குச் சொன்ன இந்த அபிராமா கவசமந்த்ரம் மிகுந்த மகிமை வாய்ந்தது. அதிரஹஸ்யமானது. அதற்கு ரிஷிதக்ஷிணமூர்த்தி, அனுஷ்டுப் சந்தஸ், அபிராமா தேவதை என்பதையும் அறிந்துகொள். ஏனெனில் ரிஷி, சந்தஸ், தேவதை என்ற மூன்று வியாகிருதிகளைத்தெரியாமலும், அங்கந்யாஸம், கரந்யாஸம் செய்யாமலும் ஜபிக்கப்படும் மந்த்ரம் சாம்பலில் பெய்த நெய் போல் பலனையளிக்காது. அபிராமாம்பிகையே மஹா திரிபுரஸுந்தரீயாகையால் அவளை "ஸுதாஸிந்தோ"(18) என்ற சுலோகத்தால் தியானம் செய்யவேண்டும் என்று உபதேசித்தார்.

---

(18) இந்த தியான சுலோகம் ஆதிசங்கரபகவத் பாதாள் செய்த ஸௌந்தர்யலஹரீ என்ற க்ரந்தத்தின் 8 வது சுலோகம். அந்தக்ரந்தத்தின் முதல் 41 சுலோகங்களை பகவத் பாதாள் கைலாஸத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்தார் என்பது ஐதிஹ்யம்-ஆசிரியர்.

14-வது அத்தியாயம்:
சிவகங்கா தீர்த்த மகிமை.

பிரம்மா மேலும் தொடர்ந்து சொல்லுகின்றார். அபிராமம்பிகைக்கும் பத்மகிரி நாதருக்கும் விவாஹமஹோத்சவம் நடந்தேறியபின் அதைக்காணவந்த தேவர்கள் தத்தம் இருப்பிடம் சொன்றனர். பத்மகிரிநாதர் அபிராமா தேவியின் அங்கலக்ஷணங்களில் மனதைப் பறிகொடுத்தவராய் அவள் வரவை எதிர்நோக்கிப் பள்ளியறையில் விற்றிருந்தார். அம்பிகையோ நாணத்தால் அவர்பக்கம் எழுந்தருளத் தயங்கினாள். அம்பாளின் யோகினிகளில் சிலர் அவளைத்தேற்றுவித்தும் பயனில்லாமல் போகவே பர்வதராஜன் பத்தினியான மேனையிடம் சென்று கூறினார். மேனையும்தனது புத்திரியை அன்புடன் அணைத்து உச்சிமோந்து ஸ்திரீ தர்மங்களை எடுத்துச் சொல்லி யோகினிகளைக் கொண்டு அலங்காரம் செய்வித்து பத்மகிரிநாதரின் சயனக்ரஹத்துக்கு அழைத்துச்சென்றாள்.

இறைவனோ இவள்பால் ஒருதிருவிளையாட்டைச் செய்ய சங்கல்பித்து தனதுஜடாமகுடத்தில் இருக்கும் கங்கா தேவியைப் பெண்ணுருவாக்கித்தன் பக்கலில் அமரச்செய்து உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருந்தார். அபிராமாதேவி இதனைக்கண்டு வருத்தமும் கோபமும் கொண்டுசயனஅறையை விட்டுவெளியேறினாள். இதனைக்கண்ட கங்காதேவி ஓடோடி வந்து அபிராமாவின் திருக்கரங்களைப் பற்றி தன்னுடைய விருத்தாந்தத்தையும் தத்துவத்தையும் எடுத்துச் சொல்லி, "விவகாரதசையில் லோகோபாகாரமாக இறைவன் செய்த திருவிளையாட்டேஇது. நீ வருந்தவேண்டாம். வா" என்று திரும்பப்பள்ளியறைக்கு அழைத்துச்சென்றாள். ஆனால் அபிராமாதேவியின் ஊடல்தணியவில்லை. அதனைக்கண்ட இறைவன் கங்கையைப்பார்த்து "அபிராமா என்னுடன் ஏகாந்தமாயிருக்கப்பிரியப்படுகிறாள் நீசற்றுவெளியேஉலாவச்சென்றுவா" என்று கூற கங்கையும் இங்கிதம் அறிந்தும் இறைவனின் திருவுளத்தில் இந்நெல்லிவனத்தில் மற்றொரு புண்ணிய நீர் நிலையுண்டு பண்ண வேண்டும் என்ற உள்ளக்கிடக்யையும் அறிந்தும், அவ்வாறே சயனக்கிரஹத்தை விட்டுவெளிக்கிளம்பி, தன்னில் மூழ்குவோரின் சகலபாவங்களையும் போக்கவல்ல சொர்ணமயமான தீர்த்தசொரூபத்தோடு பிலத்தில் பாய்ந்து அந்தர்வாஹினியாய் எவர்கண்ணுக்கும் தெரியாதபடி பிரவஹித்து, பத்மகிரியின் தென்மேற்குபாகத்தில் ஓர்சிறுஊற்றாக வெளிக்கிளம்பி கொஞ்சதூரம் மேற்கே சென்று கும்பநதியில் சங்கமமானாள். மேலும் இவள் ஐந்துதடாகங்களில் தங்கிச்சென்றுளாகையாலே "பஞ்சங்கா" தீர்த்தம் என்றும், சிவாக்ஞையால் இந் நெல்லிவனக்ஷேத்திரத்தை பாவனமாக்கினாளாதலாலே "சிவகங்கை தீர்த்தம்" என்றும்பெயர் பெற்றது.

15-ம் அத்தியாயம்:

பத்மபுஷ்கரணீ தீர்த்த மகிமை. (19)

பிரம்மா சொல்லுகின்றார், " கேளும் கும்ப முனிவரே! பத்மபுஷ்கரணியின் மகிமையைச் சொல்வது அவ்வளவு எளிதல்ல. அது மஹாரஹஸ்யமானது. ஆயினும் உன்மீது கொண்ட அன்பாலும், உலகக்ஷேமத்தின் பொருட்டும் சுருக்க மாகச் சொல்லுகிறேன் கேளும்.

முன்பு மஹாப்பிரளயம் உண்டாவதற்கு முந்தி ஏகாதசருத்ரர்கள் இறைவன் ஆக்ஞையால் தோன்றி சிருஷ்டிக்கப்பட்ட சர்வத்தையும் சம்ஹரித்தார்கள். அவைகள் யாவும் பஞ்சபூதங்களாய் எஞ்சின. அவையும், பிரதிவி அப்புவிலும், அப்பு தேயுவிலும், தேயுவாயுவிலும், வாயு ஆகாசத்திலும் ஒடுங்கின.

ஆகாயதத்துவம் அஹங்காரதத்துவத்தில் ஒடுங்கியது, அஹங்காரதத்துவம் மஹத்தத்துவத்தில் ஒடுங்கியது. அம்மஹத்தத்துவம் அவ்யக்கத்தில் அந்தர்கதமானது. அவ்யக்தம் ப்ரம்மத்தில் லயமானது. ஆகவே பிரளயத்தில் எஞ்சி நின்றது எங்கும் வியாபகமாயும், சாஸ்வதமாயும் சுத்தநிற்குண சைதன்ய ப்ரம்மமே. அந்தப்ரம்மத்தில் அக்னியில் சூடு போல அபின்னமான சக்தி ஒடுங்கிக்கிடந்தது. பின்பு உயிர்களின் வினைக்கீடாக சிருஷ்டி தொடங்க வேண்டிய காலம் வந்த போது பிரம்மத்தினின்றும் சக்திஸ்புரித்தது. சக்திவேறாயும் பிரம்மம் வேறாயும் இரண்டு கூறுகளானபோது சக்தி "மாயா" என்ற பெயர் பெற்றது. மாயையினின்றும், பிரம்மத்தின் அதிஷ்டானத்தால் ஸத்வ, ரஜஸ், தமோகுணங்கள் உண்டாயின. ஆகவே நிருபாதிக ஸம்வித்ரூபமாய் இருந்த பிரம்மம் இப்பொழுது, குணம், காலம், நியதி, திசை முதலியனவற்றோடு கனமாகவிரிந்தது. கடைசியாக சப்ததன் மாத்திரையும் அதனின்று ஆகாசமும் தோன்றிற்று. ஆகாசத்

---

(19) மூல கிரந்தத்தில் இது 16-ம் அத்தியாயமாக இருக்கின்றது. இதில் இந்தத்தல புராணதத்துவம் நன்கு விளக்கப்படுகின்றது. அந்தத் தத்துவத்தை சுருக்கி இங்குதரப் படுகின்றது. வேதாகமரஹசியங்களை தெளிவாயும் விளக்கமாகவும் கொடுக்கப்பட்டிருப்பதால் இந்த அத்தியாயம் இந்தப் புராணத்துக்கே சிரோரத்னமாக விளங்குகின்றது. நேயர்கள் இந்த அத்தியாயத்தை அதிக கவனமாய்ப்படித்துச் சிந்திக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்—ஆசிரியர்,

தினின்று ஸ்பர்சதன் மாத்திரை தோன்றி வாயுவாகபரிண மித்தது. வாயுவினின்றும் ரூபதன்மாத்திரை தோன்றிதேயு வாகவிரிந்தது. தேயுவினின்றும் ரஸதன்மாத்ரை தோன்றி அப்புவாகமாறிற்று, அப்புவினின்றும் கந்ததன் மாத்திரை தோன்றி பிரதி வியாககனத்தை அடைந்தது. (20) பிரதிவியில் ஏனைய பூதங்களின் தன்மாத்திரைகளும் சேர்ந்திருக்கு மாதலாலே, ஆகாசத்தில் ஒன்றும், வாயுவில் இரண்டும், அக்னியில் மூன்றும், அப்புவில் நான்கும், ப்ருதிவியில் ஐந்தும் ஆகபதினைந்து. தன் மாத்திரை களின் சமஷ்டி பிரதிவியாகின்றது. இந்தத்தன் மாரைத்திரைகளின் பஞ்சீகரணமே பிரபஞ்சம் என்ற தோற்ற முடையதாய்க் காணப்படுகின்றது. எதினின்றும் எல்லாம் தோன்றி, எதில் லயமடை கின்றதோ அதுவே மாயா என்ற இரண்டு எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றது. இந்த மாயா சம்பந்தப்பட்ட பிருதிவியே "பத்மம்" என்று கூறப்பட்டது. மாயையே ஜகன் மாதாவாகி உலகத்தைப் படைத்து ரக்ஷிப்ப தால் அவனை "தாத்ரி" என்ற சொல்லால் அழைக்கின்றோம். அவளால் வியாபிக்கப்பட்ட பிரதேசத்தையே தாத்ரி வனம் என்று கூறுகிறோம். அவளால் உண்டாக்கப்பட்ட பூமியும் பத்மம்போல் இருப்பதால் இந்தபிரதேசத்துக்கு பத்மக்ஷேத்ரம் என்றும் பெயர் உண்டாயது. பிருதிவீதத்துவமானது அப்புதத்து வத்திலிருந்தே தோன்றுவதால்' அதனை பத்ம தீர்த்தத்தில் ஆவிர்பவித்ததாகச் சொல்லப்பட்டது. மாயை யின் அதிஷ்டானத்தால் படிப்படியாய் கனமாக விரிந்த இந்த பிரபஞ்சத்துக்கு சுத்தசைதன்யமான ப்ரம்ஹமமே உயிர். அவராலேயே பிரபஞ்சம் இயக்கப்படுவதால் அவனை இயவுள், அதாவது உள்ளிருந்து இயக்குபவன் என்ற பெயரால் பெரி யோர் அழைக்கின்றனர்.

ஆகவே பத்ம புஷ்கரணியில் தோன்றிய ஆயிரம் இதழ்த்தாமரையின் நடுவில் மகரந்த சிலும்புகளால் சூழப் பட்ட கர்ணிகையால் இறைவன் ஆவிர் பவித்தார் என்றும் அந்தக் காயானது ஓங்கி விரிந்து வளர்ந்தது என்றும், அதுவே பத்மகிரி யென்றும் கூறுவதின் ரஹஸ்யார்த்தம் இதுதான்.

---

(20) ரண்டு தைத்ரீய உபநிஷத் பிரம்மரண்ட வல்லி, முதலாவது அனுவாகத்தில் வரும்

"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச; ஸம்பூத: ! ஆகாசாத்வாயு: ! வாயோரக்னி: ! அக்னேரப: ! அத்ப்ய! ப்ருதுவி! ப்ரதிவ்யா ஒஷதய: ! என்ற சுருதிவாக்கு ஒப்பு நோக்கத்தகுந்தது.

இறைவனே ஆவிர்பவித்த நீர் நிலையாகையாலே, அந்த பத்ம புஷ்கரணியின் பெருமை எவ்வாறு இயம்புவது, பிர பஞ்சம் தோன்று முன் பஞ்சீகிருதாமாகிற (அதவாது பஞ்ச தன்மாத்திரைகளின் சமஷ்டியாகிற) பிருதிவியின் கர்ப்ப ஸ்தானம்போல், விளங்குவதால், அந்த பத்மதீர்த்தமே பிரபஞ்ச உற்பத்திக்குக்காரணம் என்று கூறுவதில் என்ன சந்தேகம்! அந்தபத்ம புஷ்கரிணியின் நடுவில் பிரதி விதத்துவமே பத்மமாகத்தோன்ற, அதன் கேந்திரஸ்தானத்தில் கௌரியாகிற மஹாமாயையும், சுத்தசைதன்யமான பிரம் ஹமும் ஆவிர்பவித்து சகல புவன சிருஷ்டிகாரண வஸ்து வாய் இருந்தனர். இந்த உண்மையைததான் சாக்ஷாஸ பிரம்மா அங்கு வந்ததாயும், அவருக்கு கௌரீ மனோஹரன் காட்சியாளித்ததாயும் புராணம் உருவகமாகக் கூறுகின்றது. முன்பே சொன்னபடி இது அதிரஹஸ்யமானது. சிறந்த ஞானிகளுக் கேயன்றி பிறருக்கு இது லகுவில் விளங்காது. இவ்வாறு பத்மாசலமாய்த் தோன்றிய ஆதிதம்பதிகள், சிருஷ்டிக் கிரமத்தில் பிரதிவினின்றும் ஓஷதி களான மரம் செடி கொடிகள் பரிணமிக்க வேண்டிய அவசரத்தில் அவர்கள் இருவரும் அந்த பத்மகிரிச் சாரலில், பத்ம புஷ்கரணியின் வடக்குக்கரையில் இரண்டு அச்வத்த விருக்ஷங்களாக (அரச மரங்களாக) த் தோன்றினர், அவ்விரண்டு விருக்ஷங்களில் பராசக்தியின் அம்ஸமான அரசமரத்தினடியில், மஹாகாளி என்று பிரசித்தமான பத்ம தீர்த்தத்தின் ஆதிஷ்டான தேவதை (21) இன்றும் சகலமக்களாலும் பூஜிக்கப்பட்டு மஹாசக்தி வாய்ந்து விளங்குகிறாள்.

இரண்டு மரங்களில் சிவாம்ஸமான மற்றொரு மரத்தின் பெருமையை அளவிடமுடியாது. பத்மதீர்த்தத்தில் நீராடி, இந்த அரசமரத்தை சேவித்தால் சர்வாபீஷ்டங்களும் நிறை வேறும். இந்தஅரசமரத்தின் அடிபாகம் பிரம்மா வென்றும், மத்யபாகம் விஷ்ணு வென்றும், மேல்பாகம் ருத்ரன் என்றும்,

---

(21) இந்த தேவதை இன்றும் பத்மகிரியின் வடக்கு திக்கில் செல்லாண்டியம்மன், என்ற பெயரில் துர்க்கா பரமேச் வரியாக எழுந்தருளியிருக்கின்றாள். இக்காலத்திலும் அபிராமா பத்மகிரீசரின் பெருவிழா சித்திரை மாதத்தில் ஆரம்பமாகும் முன், இந்தச் செல்லாண்டி அம்மன் ஆலயம் சென்று, காப்புக் கட்டி ஆராதனை நடத்திய பின்பே துவஜாரோகணம் ஆகின்றது என்பது கவனிக்கத்தக்கது. இந்ததுர்க்காலயம் காளஹஸ்தீச்வர ஸ்வாமி தேவஸ்தானத்தின் உட்கோயிலாக இருந்து வருகின் றது. இந்த ஆலயம் இருக்கும் பகுதிதான் செல்லாண்டியம்மன் கோயில் தெரு என்று அழைக்கப்படுகின்றது—ஆசிரியர்,

அதன் கிளைகள், இலைகள், புஷ்பங்கள், காய்கள், ருக், யஜூர், ஸாம, அதர்வண வேதங்கள் என்றும் வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதில் தேவர்களும், ரிஷிகளும், சித்தர்களும், எப்போதும் வாசம் செய்கின்றார்கள். பிரதிவீதத்துவமானது பின்பு ஓஷதிகள் என்று சொல்லப்பட்ட மரம், செடி கொடிகளில் முதன் முதலாகத் தோன்றியது அச்வத்த விருக்ஷமாகையாலே இதை ''ஆதிவிருக்ஷம்'' என்று புராணங்களில் கூறப்படுகின்றது. அதன் நிழல் பட்ட மாத்திரத்தில் ஒருவன் ஜீவன் முக்தனாகின்றான். அதனடியிலிருந்து காயத்ரீஜபமோ, பஞ்சாக்ஷர ஜபமோ செய்கிறவர்கள், அதிசீக்கிரத்தில் மந்த்ர சித்தியடைகின்றனர். அதனடியிலிருந்து தவம் செய்கிறவர்களை விட்டுக் காமக்குரோதாதிகள் உடனே அகல்கின்றன. அவர்களுடைய அஞ்ஞானஇருள் நீங்கி மெய்ஞ்ஞானம் உண்டாகின்றது. சாமான்ய ஜனங்களும் கூட அதன் நிழலில் தங்கினால் அவர்களைப்பற்றி யிருக்கும் உடல் பிணிகள் நீங்கி விடுகின்றன. அச்வத்தவிருக்ஷத்தின் காற்றுப் பட்டாலும் மலட்டுத்தன்மை நீங்கும். அம்மரத்தை பத்ம தீர்த்தத்தால் அபிஷேகம் செய்கிறவர்கள், இந்த லோகத்தில் சகல சம்பத்தையும் அடைகிறார்கள். இறந்தபின் சொர்க்காதி போகங்களை அனுபவிக்கின்றார்கள்.

இன்னமும் கேள்! கும்பமுனியே! இப்படி பத்மதீர்த்தத்தாலும் அச்வத்த விருக்ஷங்களாலும் பரிசுத்த மாக்கப்பட்ட ஸ்ரீப் புண்ணியத் தலத்தில் தேவசேனா பதியான கார்த்திகேயன், சக்தி ஆயுதத்தைக் கையில்தாங்கி, பத்மகிரியின் கர்ப்பத்தில் (குகையில்) வசிக்கும் தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், சித்தர்களுக்கும், பாதுகாப்பாக ஸ்ரீபத்மாசலேசனின் ஆணையால், கிழக்கு திக்கில் உள்ளபிலத்துவாரத்தில் நித்தியவாசம் செய்து கொண்டு சத்ருக்களுக்கு பயத்தை உண்டாக்கும்படி அதிஉக்ரமாய் விளங்குகிறார். அவ்விதமே, தக்ஷயாகத்தை யழிக்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட அகோர வீரபத்ரர் தமது கரங்களில் நானாவித ஆயுதங்களைத் தாங்கி பத்மகிரியின் தெற்கு மேற்குப்பக்கங்களிலும் அப்பர்வதத்தின் மேல்தளத்தில் உள்ளபிலத்துவா ரத்தையும் காவல் புரிந்து வருகின்றார்.

மேலும் பத்மாசலமானது இறைவனுடைய அருவுருவத்திருமேனியாக இருப்பதாலும், அதன் மகிமையைகானம் செய்கின்றவர்களைக் காப்பாற்றும் தன்மை பெற்றிருப்பதாலும் அதற்கு காயத்ரீகிரி என்றதிரு நாமமு முண்டு. நான்கு பக்கங்களும் முகம் இருப்பதாலும், சிகரத்தில்லிங்க சொரூபமாய் பரமேச்வரன் எழுந்தருளியிருப் பதாலும் இதற்கு ''பஞ்சப்ரம்ஹகிரி'' என்றும் பெயர்வழங்கி வருகின்றது. ஆகையால் இந்த

பத்மபுஷ்கரணியில் நீராடி காயத்ரீமந்த்ரம் ஜபித்தாலும், பஞ்சாக்ஷரஜபம் செய்தாலும் அதிசீக்கிரத்தில் மந்த்ர சித்தியை ஒருவன் அடைகிருன். மந்த்ரோபஸனையால் உபாஸகன் அந்த மந்த்ரத்தால் குறிக்கப்படும்தேவதா சொருபத்தையடைகிருன் என்பது சாஸ்த்திரப்பிரமாணமான படியாலே லிங்காகாரமாய் இருக்கும் பர்வதத்தையே சாக்ஷாத் சிவபெருமானுக பாவித்து பஞ்சாக்ஷர உபாஸனை செய்து வந்தால் அவன் சிவனே ஆகின்ருன்.

விசேஷமாய் கிருத்திகா ஸோமவாரங்களிலும் ஜன்ம நக்ஷத்திர தினங்களிலும், அமாவாசையுடன் சேர்ந்த சனி, ஞாயிற்றுக் கிழமை களிலும், கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியுடன் சேர்ந்த செவ்வாய்க் கிழமைகளிலும், யுகாதி புண்ணிய காலங்களிலும் (வருஷப்பிறப்பு) பத்மதீர்த்தஸ்நானம், பத்ம கிரி நாதர் தரிசனம், பத்மகிரிபிரதக்ஷிணம், அச்வத்த விருக்ஷ சேவை செய்கிறவர்களுக்கு நவகிரஹங்களால் ஏற்படும் தோஷங்கள் நிவர்த்தியாகின்றன.

கரந்தமலேக்கு மேற்கு, பன்றிமலேக்குக் கிழக்கு, சிறு மலேக்கு வடக்கு, காளிகா கோஷ்டத்துக்குத் தெற்கு, இந்த நான்கு எல்லேக்குள் இருக்கும் ஐந்துகுரோச விஸ்தீரணமுள்ள பிரதேசத்துக்குப் பத்மக்ஷேத்திரம் என்று பெயர் (ஒருகுரோசம் என்பது சுமார் இரண்டுமைல்).

அகஸ்திய முனியே! இந்த ஸ்தலம் மஹா புண்ணிய க்ஷேத்ர மாகும். பரப்பிரம்ஹமே இவ்விடம் மலேயுருக்கொண்டு நிற்பதாலும்,, "தாத்ரீ" என்ற பராசக்தியும் அவனுடன் அந்தர் கதமாய் இருப்பதாலும், இறைவனின் அஷ்டமூர்த்தங்கள் என்று கூறப்படுகின்ற, பிரதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், இயமானன் ஆகியவர்கள் இந்தப் பர்வதத்தின் எட்டு திக்குகளிலும் இருப்பதாலும், அந்த ஸ்தலத்தின் மகிமை அள விடற்கரியது. மேலும் சந்தானவர்த்தினி என்ற நதியும், கும்ப நதியும் கங்கை யமுனே போன்று இந்தத்தலத்தை அலங்கரிக் கின்றன.

எவனெருவன் இந்த அத்யாயத்தை மட்டும், அதிகாலேயில் எழுந்து, நித்யகார்மானுஷ்டானங்களே முடித்துக் கொண்டு பாராயணம் செய்து வருகிருனே அவனுக்கு அபிராமாசமேத பத்மாசலேசனின் திருவருளால் சகலாபீஷ்டங்களும் நிறைவேறப் பட்டவனுய், மானிடருள் சிறந்தவனுய் விளங்குவான். இதில் ஐயமில்லே, என்று பிரம்மா அகஸ்தியருக்குச் சொன்னுர்,

16-வது அத்தியாயம்:

கும்பநதி மகிமை. (22)

இவ்வாறு சொல்லக் கேட்ட கும்பஜர் பிரம்மாவை நோக்கி ''ஹே! பத்மஜ! கும்பநதி சந்தானவர்த்தினி என்ற நதிகளின் வரலாற்றையும் சொல்ல வேண்டும்'' என்று பிரார்த்திக்க பிரம்மா கூறத்தொடங்கினார். அகஸ்திய முனிவரே! நீரல்லவோ இருதார்த்தர்! இதுவரையாரும் இத்தனை லோகக்ஷேமமான பிரச்னையைச் செய்ததில்லை. நீர் ஸத்பாத்திரமாக இருப்பதால் இதனைக்கேட்டீர். நானும் சகல ஜீவராசிகளும் கடைத்தேறும் பொருட்டு கும்பநதியின் மகிமையைச் சொல்லுகிறேன். கும்பநதியின் பெருமையைக்கூறும் சுலோகங்களில் ஒன்றையேனும் அல்லது அதில்ஒரு பாதியையேனும் பாராயணம் செய்துவருகின்றவன் மகா பாக்யசாலியாக விளங்குகிறான். மானிடப்பிறவி எடுத்த எவனும் அந்நதியில் நீராடுவதாலேயேதேவனாகின்றான். அஞ்ஞானத்தால் ப்ரம்மஹத்தி செய்தவனும், சுராபானம் பண்ணுகின்றவனும், ஸ்திரீஹத்தி செய்தவனும், பரஸ்திரீகமனம் பண்ணினவனும் இந்நதியில் மூழ்குவதால் பாபவிமோசனம் அடைகின்றான். அந்நதியில் வைகறையில் நீராடுகிறவனுக்கு அன்றன்று செய்யும் பாபங்கள் நசித்துவிடுகின்றன. கும்பநதி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தனது சக்திக்குத்தக்கவாறு வேதா.த்யயனம் நன்கு செய்த பிராம்மண சிரேஷ்டனுக்கு அதன் கரையில்ஏதாவது தானம் செய்வானாயின் அவன் மஹத்தான பலன்களையடைகிறான். அதிலும், கிரஹணகாலங்களிலும், சங்கிராந்திகளிலும்,விஷு புண்ணியகாலங்களிலும்கும்பநதியில்நீராடி அதன்கரையில் ஒருகாசாவது தானம் செய்வானேயாகில் அவன் செய்த சகல பாபங்களும் அவனைவிட்டு விலகிவிடுகின்றன. அந்நதிக்கரையில்அந்நதியின்நீரால் சமைக்கப்பட்டஅன்னத்தை உத்தமமான பிராம்மணனுக்கு அளித்தானாயின், அவன். கயாக்ஷேத்ரத்தில் லட்சபிராம்மண போஜனம் செய்வித்தபலனையடைகின்றான். அந்நீரினால் பிதுர்க்களை உத்தேசித்து திலதர்ப்பணம்செய்தால் பிதுர்தேவதைகள் திருப்தியடைந்து அவனுக்கு ஆசிவழங்குகிறார்கள். கும்பநதிக்கரையில் பிராம்மண ஸமாராதனை நடத்தி வைக்கிறவன் இந்த லோகத்தில் அஷ்டஐச்வர்யங்

---

(22) மூலத்தில் கும்பநதிவரலாறு (18-ம் அத்தியாயம்) சந்தானவர்த்தினிநதியின் வரலாற்றுக்கு (17-ம் அத்தியாயம்) பின்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கு மாற்றி அமைத்திருக்கிறேன்,—ஆசிரியர்.

களையும் (23) அடைந்து குபேரன்போல் வாழ்ந்து, மரித்தபின் சொர்க்கலோகம் சென்று இந்திரன்போல் போகபாக்கியங்களை யடைகிருன். பிராம்மணர்களில் பத்துவிதமுண்டு. 1 ரிஷிப் பிராம்மணன், 2 பிரம்மணப்ராம்மணன், 3 க்ஷத்திரியப் பிராம்மணன், 4 வைசியப்பிராம்மணன், 5 சூத்திரப்பிராம்மணன், 6 சண்டாளப்பிராம்மணன், 7 பைசாசப் பிராம்மணன், 8 பைடாலபிராம்மணன் (ஜாதியிலிருந்து நீக்கப்பட்டவன், பிரஷ்டன்) 9. ராக்ஷஸப்பிராம்மணன், 10 யாவனப்பிராமணன் (மிலேச்சன்.) இவர்களில்தகுதியுள்ளவன், தகுதியில்லாதவன் என்று தாரதம்மியம் பார்க்க வேண்டியதில்லை. ஏனெனில் பசித்தவன் எவனுயினும் அவனுக்கு அன்னமளிக்க வேண்டு யல்லவா? இம்மாதிரி பிராம்மண போஜனம் செய்விப்பவன் முன்பு சொன்னது போல் இம்மை மறுமைப்பயன்களை யடைகிருன்.

இனி இந்த நதி உண்டான விருத்தாந்தத்தைக் கேளும். முன்பொருகாலத்தில் பிரம்மாவின் மானஸ புத்திரரான நாரதரின் சிஷ்யரான "சித்தயோகி" என்று ஒருவர் இருந்தார். அவர் வராக பர்வதத்தில் யோகநித்திரையில் ஆழ்ந்து பல காலம் பிரம்மாவை நோக்கித்தவம் இயற்றினுர். பிரம்மாவும் அவர் முன் தோன்றி "உனக்கு வேண்டும் வரம் யாது"? என வினவினுர். சித்தயோகி "ஸ்வாமீ! இப்பிறவிப் பெருங் கடலில் மீண்டும் வீழாது நித்யானந்த வாழ்வாகின்ற முக்தியையே நான் விரும்புகிறேன். அதை நல்கவேண்டும்" என்று கேட்க, பிரம்மாவானவர், "அப்பா! சித்தயோகீ, முக்தியளிக்க வல்லவன் அம்முக்கண்முதலேயன்றி எம்மஞுரால் முடியுமோ! ஆனுல் அனுதயடைய நான் ஒருசுலபமான வழியொன்று சொல்லுகிறேன் கேள்! இதோ என்கையில் இருக்கும் கமண்டலத்தில் விரஜா தீர்த்தம், மானஸதீர்த்தம், ஆகாயகங்கை போன்ற எல்லாப் புண்ணிய நதிகளும் எப்பொழுதும் சான்னித்யமாய் இருக்கின்றன. இந்த கமண்டலத்தை வராஹபர்வதத்தில் பிரதிஷ்டை செய்து அதில் அடங்கி யிருக்கின்ற தீர்த்தங்களின் அதிதேவதைகளை பிரார்த்திப்பீராகில் அக்கமண்டலத்தினின்று புண்யதீர்த்தங்கள் ஒன்று கூடி ஓர் திவ்ய நதியாக வெளிவரும். அது எனது கமண்டலத்தினின்றும் வெளி வருவதால் கும்பநதி என்று பெயரையடையும். அந்தநதியில் நீராடி ஒருமண்டலம் பத்மாசலேசனை முறைப்படி ஆவாஹனம் முதல் பிரதக்ஷிண

---

(23) ஐச்வர்யம்எட்டாவன: தனம், தான்யம், ரத்னம், மக்கள், சுற்றம், இராசாங்கம், வாகனம், அடிமை.

நமஸ்காரம் வரையில் சகல உபசாரங்களையும் செய்து வேதோக்த மாக வழிபட்டு வருவாயாகில் ஸர்வேச்வரரான கைலாஸபதி, பிரத்யக்ஷமாகி நீ கோரும் மோக்ஷசாம்ராஜ்யத்தை அருளுவார்" என்று பிரம்மன் சொல்ல, சித்தயோகியும் அக்கமண்டலத்தை பக்தி சிரத்தையுடன் தன்இருகைகளாலும் வாங்கி மிகவளப்ப மூள்ளதும், வாழை, மா, பலா, சந்தனம், அகில், தேவதாரு போன்ற பலவிருக்ஷக் கூட்டங்களை யுடையது மான அப்பன்றி மலையில் தனது பர்ணசாலைக்குச்சமீபமாய் நின்ற, ஓர் வில்வ மரத்தடியில் பிரதிஷ்டை செய்து, அதில் அடங்கியிருக்கும் தீர்த்த அதிதேவதைகளை ஒரே மனதாய்த் தியானம் செய்வாராயினர். அந்ததேவதைகளும் தீர்த்த ரூபமாகவே அந்தக்கும்பத்தில் நிறைந்து பொங்கி வழிந்து ஓர் பிரவாஹமாக ஓடின. அதுவே கும்பநதி என்று (இப்பொழுது குடவனாறு-ஆசிரியர்) அழைக்கப்பட்ட புண்ணிய நதியாகும். அந்தநதி பிரம்மாவின் ஆசீர்வாதத்தைப் பெற்று, பின் பன்றி மலையிலிருந்து குதித்துக் குதித்துக் கீழேஇறங்கி சமவெளியை யடைந்து, பத்மகிரியின் மேற்குப்பக்கம் வடக்கு முகமாக ஓடி, தாளவனம் சென்று அப்பால் தனது சகியான சந்தான வர்த்தனியால் எதிர் கொண்டழைக்கப்பட்டு அவளுடன் சேர்ந்து பின்னும் உத்தரவாஹினியாய்ச் செல்லுகின்ற வழியில் பத்மாசல க்ஷேத்ரத்தின் வடக்கு எல்லையில் குடிகொண்டிருக்கும் மஹாகாளியின் சந்நிதானத்தின் வழியாய் ஓடி அமராவதியுடன் கலந்து விடுகின்றது. இவ்வாறு கும்ப நதியும் சந்தானவர்த்தனியும் சங்கமமாகும் இடத்திலும், கும்பநதியும் அமராவதியும் சந்திக்கும் இடத்திலும், யாவர் ஸ்நானம் செய்கின்றார்களோ அவர்களுக்கு கங்கா, யமுனா சங்கமஸ்தானத்தில் நீராடிய பலன் சித்திக்கின்றது. மேலே சொன்ன மஹாகாளி இருக்கும் இடமே காளிகோஷ்டம் என்றும் பூதிகாபுரம் (பூதிப்புரம்) என்றும் யாவராலும் கொண்டாடப்படுகின்றது. அமராவதியுடன் கலந்த பின்பு மேலும் சென்று தென் கங்கை என்று புகழ் பெற்ற காவிரிநதி யோடு சங்கமமாகி முடிவில் சமுத்திரத்தையடைகின்றது. ஆகையால் கும்பமுனிவரே! இந்த கும்பநதியில், விண்ணுலகிலும் மண்ணுலகிலும் இருக்கின்ற சகல புண்ணிய தீர்த்தங்களும் அடங்கியிருக்கின்றன. அதில் நீராடுபவர்களுக்கு மற்றெல்லாப் புண்ணிய நதிகளிலும் தனித்தனியே நீராடிய பலன்கள்யாவும் கிடைக்கின்றன என்று பிரம்மாகூறினார்.

(ஆசிரியர் குறிப்பு: கும்பநதியைப்பற்றிக்கூறும் இந்த அத்தியாயத்தில் மிகஅழகான, இயற்கைவர்ணனைகள் அடங்கிய பல சுலோகங்கள் இருக்கின்றன);

17-வது அத்தியாயம்:

சந்தானவர்த்தினி நதியின் மகிமை.

பிரம்மா சந்தானவர்த்தனியின் பெருமைகளை அகஸ்தியருக்குக்கூற ஆரம்பித்தார். நிலவளம் நீர்வளம் நிறைந்ததும், வானளாவிய மாடமாளிகைகளையுடையதும், குபேரபட்டணம் போன்ற அழகுவாய்ந்ததும், நான்கு வருணத்தாரும் தத்தமக்குரிய ஆச்ரம தர்மங்களைக்கடைப்பிடித்து ஒழுகிவந்த நன்மக்களை தம்மிடத்தே கொண்டதுமான ஹஸ்திபுரி என்றோர் நகரம் இருந்தது. அங்கு நான்குவேதங்களையும், இருபத்தி எட்டு ஆகமங்களையும், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், இதிஹாசம், மீமாம்சை, நையாயிகம், சாங்கியம், முதலியசகல வித்தைகளையும் நன்கு ஓதியுணர்ந்த ஒரு பிரம்மணோத்தமன் இருந்தான். அவன்நித்திய பிரம்மச்சாரியாய், ஆசாரசீலனாய், சாந்தம், பொறை, தயை, சத்தியம், அஹிம்சை, திருப்தி என்ற அறுவகை குணங்கள் நிறைந்த குணசீலனாய், நாடோறும் நாலுவீடு சென்று பிக்ஷான்னம் இரந்து வாங்கி உண்டு கல்வி கற்பதிலேயே தன் முழுகவனம் செலுத்தினவனாய் ''அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்டு ஆறினிற் கழிப்பிய அறன் நவில் கொள்கையை'' உடையவனாய் நாற்பத்தி எட்டு ஆண்டு பிரம்மசாரியாகவே காலங் கழித்தான். அவன் பெயர் ''பிரம்மக்ஞன்'' இவனுடைய கல்வியையும் ஒழுக்கத்தையும் கண்டு சிதானந்தன், என்ற ஓர் அந்தணன், தன் ஏக புத்திரியாகிய சாந்திமதி என்பாளை சாஸ்த்திரோக்தமாய்க் கன்னிகாதானம் செய்து கொடுத்தான்.

கிரஹஸ்தாச்ரமத்தை மேற்கொண்ட பிரம்மக்ஞனே தனக்கு ஏற்பட்டிருந்த வித்தியாதாகம் சற்றும் குறையாமல் வேதவேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியில் முழு கவனத்தையும் பொழுதையும் செலவிடுத்தவனாகப் பேரளவில் சாந்திமதிக்குக் கணவனாய் இருந்துவந்தான். கிரஹஸ்தன் செய்யவேண்டிய அக்னிகாரியங்களை சரிவர நெறிவழுவாது செய்து வந்தான். அவன் பத்தினி சாந்திமதியோ, கணவன் மனங்கோணாது ''ஸஹதர்மசரீ''யாக வாழ்ந்துவந்தாள். இருவருக்கும் வயதும் முதிர்ந்துவிட்டது. ஆனால் மக்கட்பேறு இல்லை. ஒரு சமயம் பிரம்மக்ஞன் சமுத்திரத்தில் நீராட இச்சை கொண்டவனாய் தன்மனைவியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். சதிபதிகள் இருவரும் சமுத்திரக் கரை யடைந்து வருணபகவானைத்தொழுது, சங்கல்பம் செய்து கொண்டு சமுத்திரத்தில் இறங்கி ஸ்நானம் செய்தனர்.

அப்பொழுது அக்கட்டில் வாழும் "ஸோமதம்" என்ற ஓர் மச்சம் தன்மனைவி மக்கள் சுற்றத்தோடு கூட்டமாய் கடல் நீரில் உலாவுவதைப்பார்த்தான். இறைவன் அருளால் அவன் மனதில் இதுவரை தோன்றாத ஓர் ஆசை குடிகொண்டது. கரை ஏறி வந்ததும் தன் மனைவி சாந்திமதியைப் பார்த்து, "பிரியே! நாம் இல்லறம் மேற்கொண்டு பலவருடங்கள் கழிந்தும் நமக்குப் புத்திரப் பேறு ஏற்பட வில்லையே. ஒருவன் இம்மையில் அடைய வேண்டிய பேறுகளில் நன்மக்களைப் பெறுவதைவிட வேறு சிறந்தது என்ன இருக்கிறது? பண்புடைமக்களைப் பெறுவதால் பெற்றோரும் பிதுர்க்களும் மறுமையில் சுகம் அடைகின்றனர். மக்களைப் பெற்றெடுத்து அவர்களின் உடலைத்தீண்டி, உச்சிமோந்து, அவர்களுடைய மழலைச் சொற்களைக் கேட்காத பிறவி ஓர் பிறவியாகுமா? நன் மக்களைப் பெறுவதே ஓர் கிரஹஸ்தன் பிதுர்க்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்று என்று சாஸ்திரங்கள் பேசுகின்றனவே. கடலில் வாழும் மீன்கள் கூட சந்தான விருத்தி யடைந்து இன்பமாய் வாழுகின்றன. நமக்கு இனி அந்த பாக்கியம் கிட்டுமா? இது வரை என்பேதமையால் அதைப்பற்றிச் சற்றும் சிந்திக்காமல் இருந்து விட்டேனே" என்று பலவாறு பிரலாபித்தான்.

அவ்வாசகம் கேட்ட சாந்திமதி "நாதா! சகல சாஸ்திர நிபுணரான தங்களுக்கு நான் எப்படி சமாதானம் கூறமுடியும்? புத்திரப்பேறு என்பது அவரவர் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தாலன்றோ வாய்க்கும்? தங்களுக்கோ வயது தொண்ணூறாகின்றது. இந்த நிலையில் நாம் என்ன செய்ய முடியும்? மனதை சாந்தப் படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் என் தந்தை என்னைத் தங்களுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்த காலத்தில் ஓர் இரகசியத்தை எனக்குக் கூறி அதைத் தாங்களாகக் கேட்டாலன்றி நானாகச் சொல்லக் கூடாது என்று என்னிடம் வாக்குறுதியும் வாங்கிக் கொண்டார். அதனால் இது வரை அதைந் தங்களிடம் கூற வில்லை. இப்பொழுது தாங்கள் புத்திர பாக்கியம் இல்லை யென்று வருந்துவதால், அந்த இரகசியத்தைக் கூற இதுவே தக்க சமயம் என்று கருதுகிறேன். தாங்கள் ஆக்ஞாபித்தால் கூறுகிறேன்" என்று சொன்னாள். அதைக் கேட்ட பிரம்மக்ஞன் "பெண்களின் நாயகமே! அந்த இரகசியம் எதனைப்பற்றியது?" என்று வினவினான். அவள் "அது மக்கட் பேறு அடையும் உபாயமே" என்றனள். அதைக் கேட்க மிக்க ஆவல் கொண்டவனாய் அதனைச் சொல்லுமாறு தன் மனைவியைக் கேட்டான்.

அவளும் கூறலுற்றாள் "சுவாமீ! பெண்களுக்கு தம் கணவரை விட வேறு கண்கண்ட 'தெய்வம் இல்லை.' நமக்கு

விவாகமான பின்பும் தாங்கள் கல்வி கற்பதிலும், வேத வேதாந்த ஆராய்ச்சிகள் செய்வதிலும் காலம் கடத்தினீர்கள். தங்களுக்குப் புத்திரப் பேற்றைப் பற்றிய எண்ணமே உதிக்க வில்லை. நானும் தங்கள் சித்தம் என் பாக்கியம் என்று தங்களுக்குச் செய்ய வேண்டிய சுசுருஷையில் ஈடு பட்டவளாய்ப் புத்திரப் பேற்றை நானும் அவாவாமல் இருந்தேன். இன்று தாங்களே இந்த பிரச்சினையைத் தூண்டியதால் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள். தென் தேசத்தில் சகல நீர் வளம் நிலவளம் நிறம்பியதாய் தாத்ரீவனம் என்று ஒன்று இருக்கின்றதாம். அத்தலத்தில் பத்ம புஷ்கரணி என்று ஓர் தீர்த்தத் தடாகம் இருக்கின்றதாம். அத்தடாகத்தின் நாப்பண் ஆயிரம் இதழ் கொண்ட பத்மம் தோன்றியதாம். அம்மலரின் நடுவிலுள்ள கர்ணிகையில் சர்வலோக சரண்யனுன பரமேச்வரன் ஆவிர்பவித்து அக்காய் வளர்ந்து லிங்காகாரமான ஓர் பர்வதமாய் நிற்கின்றதாம். அப்பர்வதத்தின் சிகரத்தில் சாக்ஷாத் கைலாஸபதியே வசிக்கின்ருராம். அவருடைய கர்ப்பம் போன்ற அம்மலைக் குகையில் சகல தேவ ரிஷிகணங்களும், சித்த சாரணர்களும் இருக்கின்ருர்களாம். அந்த தாத்ரீவன க்ஷேத்திரம் சென்று, பத்ம புஷ்கரணியில் நீராடி, பத்மகிரியை வலம் வந்து பத்ம புஷ்கரணியின் வடக்குக் கரையில் சிவ சக்தி அம்ஸமாய் நிற்கும் இரண்டு அஸ்வத்த விருக்ஷங்களைச் சுற்றிச் சேவித்து மலை மீது கோயில் கொண்டருளும் அபிராமா சமேத பத்மகிரி நாதரை முறைப்படி வழி பட்டு வந்தால் மக்கட் பேறு கிட்டும் என்று என் தந்தை சொல்லியிருக்கிருர்" என்ருள்.

இதனைக் கேட்ட பிரம்மக்ஞன் தன் மனைவியுடன் புறப்பட்டு தாத்ரீ வனம் வந்து சேர்ந்தான். பத்ம புஷ்கரணியில் இருவரும் நீராடி, பத்மகிரியை வலம் வந்து, அச்வத்த விருக்ஷங்களை ஆராதித்து, மலைமேல் சென்று அங்கு கோயில் கொண்டருளும் அபிராமா தேவியையும் பத்மாசலேசரையும் வழி பட்டு வருவாராயினர். அன்ன ஆகாராதிகளைக் குறைத்து, ஆசாரத்துடன், ஓர் கணமேனும் இறைவனையும் இறைவியையும் மறவாமனத்தராய்க் கடும் தவம் செய்தனர். வெயில், மழை, பனி, காற்று என்ற சீதோஷ்ண மாறுதல்களால் ஏற்படும் இன்னல்களை மதியாதவராய், அந்தணர்க்குரிய நித்ய கர்மானுஷ்டானங்களையும் கைவிடாதவராய், அபிராமா சுந்தரியையும் கமலாசல நாதனையும் இடைவிடாது தியானித்து, ஆவாஹனம் முதல் அர்ச்சனை ஈருன சகல உபசாரங்களையும் மந்திர பூர்வமாய்ச் செய்தனர். தமக்கு மக்கட் பேற்றை அளித்தருளிம்படி பிரார்த்தினர்,

இந்த உத்தம தம்பதிகளின் அரிய தவத்துக்கு இரங்கி, பத்மாசலேசர் மலைச்சிகரமான தனது சூக்ஷ்மலிங்கத் திரு மேனியினின்றும் "நீறு சேர்வதோர் மேனியர், நேரிழை கூறு சேர்வதோர் கோலமாய், கந்தமா மலர்க் கொன்றை கமழ் சடை வந்த பூம்புனல் வைத்த வேதியர், வேதமெல்லாம் முறையில் விரித்த" பரஞ்சோதி, முக்கண்ணப்பர், பிறை சூடி விடையேறிக் காட்சி யளித்தார். இக்கண் கொள்ளாக் காட்சியைக் கண்ட அந்தண சதிபதிகள், ஆனந்த மேலீட்டால் விண் மாரி யென்ன இருகண்மாரி பெய்ய, உச்சிமேல் கைகூப்பித் தொழுது பரவிப் போற்றி "சம்போ! மஹாதேவா! சங்கரா," என்று பன்முறை அடிவீழ்ந்து வணங்கி அஞ்சலி ஹஸ்தராய் நின்று "எங்கள் நாயகனே! உலக காரணா! உரகாபரணா! மாதொரு பாகா! மலையுறை இறைவா! சோதியே! சுடரே! முக்கண்ணா! முழு முதலே! திரயம்பகா! திருபுராந்தகா! எங்கள் இடர் களைய வேண்டும். மக்கட் பேறில்லாமல் மயங்கி நிற்கும் எங்கள் மீது கருணை பூண்டு, எங்கள் மனோபீஷ்டத்தை நிறை வேற்ற வேண்டும். "விச்சதின்றியே விளைவு செய்யும்" ஆற் றல் படைத்த உன் அருளன்றி வேறு கதி எங்களுக்கு இல்லை," என்று இறைஞ்சினர்.

பக்திவலையில் படும் பரம கருணாமூர்த்தியான பத்மகிரி நாதன் மெய்சிலிர்த்து கண்ணீர்மல்கிநிற்கும் தம்பதிகளை அன்பு டன் நோக்கி "ஹே! பிராம்மண தம்பதிகளே! உமது பக்திக்கு மெச்சினோம். நமது சந்நிதிக்குக் கிழக்கே மூன்று குரோசதூரத் தில். 'சந்தானவர்த்தினி' என்ற புண்ணிய நதி ஓடுகின்றது. அதில் சென்று நீங்கள் நீராடினால் புத்திரசம்பத்தையடை வீர்கள்" என்று சொல்லி மறைந்தார். அவ்வாறே, அவ்விரு வரும் சென்று சந்தானவர்த்தினியில் நீராடி பத்மகிரியை வலம் வந்து அஸ்வத்த விருக்ஷங்களை பிரதக்ஷிணம் செய்து அபிராமாசமேத பத்மகிரிசரை ஆராதித்து வந்தனர். இவ் வாறு கால்மண்டலம் வழிபட்டுவர சாந்திமதி கருவுற்றாள். நல்ல புத்திரனையும் ஈன்றெடுத்தாள்.

கேளும் கும்பமுனியே! இறைவன் திருவருள் பெற்றவர் களுக்கு அடைய முடியாத தொன்றுண்டோ.? இந்தசந்தான வர்த்தனியின் பெருமை சொல்லத்தரமல்ல. ஒருமுறைஅந்நதி யில் ஸ்நானம் செய்தாலே ஒருவனுடைய சமஸ்த பாபங்களும் நாசமடைகின்றன. அந்நதிக்கரையில், அந்நதியின் தீர்த்தத் தால் பிதுர்க்களுக்குத் திலதர்ப்பணம் செய்கின்றவன் கயா க்ஷேத்ரத்தில் சிராத்தம் செய்தபலனையடைகின்றான். விசேஷ மாய், வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி இம்மாதங்களில் அப்புண்ணிய நதியில் ஸ்நானம் செய்கின்றவர்களுக்கு கங்கா

ஸ்நான பலன் கிடைக்கின்றது. இனி இந்த நதி உற்பத்தியான வரலாற்றையும் கூறுகிறேன். ஒருசமயம் ஜகஜ்ஜனனியான அபிராமாவல்லி தன் கணவர் கமலாத்ரிநாதரோடும், தன் திருக்குமாரர்களாகிய கணபதி, ஷண்முகர் இவர்களோடும், உல்லாசமாய்ச் சென்று உலாவிவரச்சங்கல்பித்து அந்நால்வரும் சிறுமலைப்பிரதேசம் சென்று, அங்கு வளர்ந்து இருந்த பல ஜாதி பழவிருக்ஷங்களையும், பலஜாதிபுஷ்பச்செடிகொடிகளையும், ஏலம் கிராம்பு, ஜாதிக்காய்ச்செடிகளையும், சந்தனம், மகிழம், அகில் தேவதாரு முதலியமரங்களையும், கண்டு ஆனந்தபரவசாராய் உலாவிவரும்போது நல்லவேனில் காலமாதலால் பழவிருக்ஷங் களும், கதலீபலசமூகமும், செடிகொடிகளும், புல்பூண்டுகளும் கதிரவன் கிரணங்களால் கருகியும் வாடியும் இருப்பதை என்னம்மை அபிராமசுந்தரி கண்டாள்.

அத்தாவரவர்க்கங்களை ஈன்ற தாயாகையாலே அவற்றின்மீது பச்சாதாப்பட்டுதன் கணவரைப் பார்த்து ''கிருபாநிதே! இவ்வளவு வளமும் வனப்பும் பொருந்திய இப்பர்வதத்தில் நிலையான நீர் வசதி இல்லாத காரணத்தால் வேனில் காலத்தில் இங்குள்ள சகல ஓஷதிகளும் வாடிவதங்கி விடுகின்றன. ஆகையால் தேவரீர் இங்கு ஓர் நீரோட்டத்தை உண்டாக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். இறைவனும் புன்முறுவல் பூத்ததிருமுகத்துடன் தனது இளையகுமாரன் கந்தவேளைப் பார்த்தார், குறிப்பறிந்த முருகனும் விளையாட்டுப்போல் தன் தகப்பன் கையில்தாங்கிய மூவிலைச்சூலத்தை வாங்கி மலைமீது முழுபலத்துடன் குத்தினர். மூவிலைச்சூலம் மலையின் அடிவரை சென்றது. மறுபடி சூலாயுதத்தை தரையினின்று உருவிய போது அதைப் பின் தொடர்ந்து மூன்று ஊற்றுகள் தெள்ளிய நீரைக்கொப்பளித்துக் கொண்டு வெளிக்கிளம்பின. அவ்வாறு கிளம்பிய நீர் பாதாளவாஹினியான கங்கையேயாகும். இந்நதியானது சிறுமலையிலுள்ள சந்தான விருக்ஷங்களடங்கிய சோலையினின்றும் தோன்றியதாலும், ஆதிதம்பதிகளின் சந்தானமான ஸ்கந்த மூர்த்தியால் உண்டாக்கப் பட்டதாலும், இதற்குச் சந்தானவர்த்தனீ என்ற பெயர் ஏற்பட்டது, அவ்வாறு பிரவஹித்த நதியை அபிராமாம்பிகை கிருபையுடன் நோக்கி, ''அந்தர்வாஹினீயாயிருந்தகங்கையாகிய உன்னை என் குமாரன் கார்த்திகேயன் வெளிக் கொண்டு வந்தமையால் உனக்கு சந்தானவர்த்தனீ என்ற நாமம் சித்திக்கட்டும். உன்னில் மூழ்குபவர்களுக்கும் சந்ததி பெருகட்டும்,'' என்று ஆசீர்வதித்து தம் கணவன் முகத்தைப்பார்த்து முறுவலித்தாள். அவரும் அதனை ஆமோதித்து முடிதுளக்கினர். கணபதி சுப்ரமண்யரும் அவ்வாறு தோன்றிய பிரவாஹத்தில் இறங்கி நீந்திவிளையாடி தமது ஸ்பர்சத்தால் அந்நீரைபாவனமாக்கினர்.

புத்திர சந்தானம் இல்லாதவர்கள் இந்ததீர்த்ததில் நீராடுவதால் நன்மக்களைப் பெற்று வாழையடி வாழையாய் நீடுழி வாழ்கின்றனர்'' என்று பிரம்மா அகத்தியருக்குக்கூறினர்.

18-வது அத்தியாயம்:

தீபாலங்கார மகிமை.

''கேளும் கும்பமுனியே! இனிபத்மகிரி ஆலயத்தின் தீபவரிசையின் பலனைக்கூறுகின்றேன். புத்துருக்கு நெய்யுடன் கற்பூரம் கலந்து பத்மகிரி நாதரின் சந்நிதியில் தீபாலங்காரம் செய்தால் அதனுல் ஏற்படும் மஹத்தான பலனை எவராலும் சொல்ல முடியாது. பிரதோஷகாலத்தில் (சாயங்காலம்) பரமாத்மாவின் சந்நிதியில் கற்பூரதீபத்தை ஒருகணமேனும் இருக்கக் கூடியதாய் ஏற்றினுலும், அதைதரிசித்தாலும், அவனைப்பற்றியிருக்கும் அஞ்ஞான இருள் நீங்கி ஞானத்தையடைகிருன். பத்மகிரீசன் முன்பு கபிலநிறப்பசுவின் நெய்யால் தீபம் போடுகின்றவன் ஞானியாகின்றுன். காராம்பசுவின் நெய்யினுல் தீபம் போடுகிறவன் ஆயுள் விருத்தியடைகின்றுன். எள்ளின் எண்ணெயினுல் தீபம் போடுகிறவனுக்கு யமபாதை இருக்காது, தேங்காய் எண்ணெயிலாவது இலுப்பெண்ணெயினாவது தீபம் போடுகிறவனுக்கு, ஆரோக்யமும், தனதான்யமும் விருத்தியாகின்றன. எருமை நெய்யிலாவது, ஆமணக்கு எண்ணெயிலாவது தீபம் ஏற்றிவைப்பவன் சகல சம்பத்தையும் அடைகின்றுன்.

பருத்தி நூல் திரியே தீபம் ஏற்றச் சிறந்தது. தாமரை நூல் திரி தனத்தையும், பட்டுநூல் திரி சுபத்தையும் கொடுக்கும். இனி, சுவர்ண பாத்திரத்தில் தீபம் ஏற்றினுல் சகல சுகபோக பாக்கியங்களை நல்கும். வெண்கலப் பாத்திரம் பாபங்களைப் போக்கும். இரும்புப் பாத்திரம் அபம்ருத்யுவைப் போக்கும். தாமிரப் பாத்திரம், துக்கோப சாந்தியை அளிக்கும். மண் பாத்திரம் வீர்யவிருத்தியை உண்டாக்கும். மேலும் தான்யத்தை விரும்புகிறவன் சித்திரை மாதத்திலும், தனத்தை விரும்புகிறவன் வைகாசி மாதத்திலும், கன்னிகையை விரும்புகிறவன் ஆனி மாதத்திலும், ஆயுளை விரும்புகிறவன் ஆடி மாதத்திலும், புத்திரனை விரும்புகிறவன் ஆவணி மாதத்திலும், பசுவை விரும்புகிறவன் புரட்டாசி மாதத்திலும், அன்னத்தை விரும்புகிறவன் ஐப்பசி மாதத்திலும், மோக்ஷத்தை விரும்புகிறவன் கார்த்திகை மாதத்திலும், பிணி விலகி ஆரோக்யமடையவிரும்புகிறவன் மார்கழி மாதத்திலும், ஜயத்தை

விரும்புகிறவன் தைமாதத்திலும், பாபங்களைப் போக்க விரும்புகிறவன் மாசி மாதத்திலும், தர்மத்தைச் செய்யவிரும்புகிறவன் பங்குனி மாதத்திலும், பத்மகிரி நாதருடைய சந்நிதியில் தோரணாகாரமாய் தீபாலங் காரங்களைச் செய்யக்கடவன்.

விசேஷமாய் ஆவணி கார்த்திகை மாதங்களில் தீபாலங்காரம் செய்பவனுக்குக் கிடைக்கும் பலன்சொல்லுதற்கரிது. மேலே சொன்ன தங்கம்முதலிய பாத்திரங்களில் தீபவரிசை போடவசதியற்றவன் மண்ணாலான பாத்திரங்களில் தீபம் இட்டால் ஸர்வ பாபக்ஷயம் ஏற்பட்டு முக்தியடைகின்றான். நிஷ்காமியமாய் தீபாலங்காரம் செய்கின்றவன் மோக்ஷத்தை யடைகிறான். காமியமாய் அதாவது பொருளும், பொன்னும் போகமும் விரும்புகிறவன் ஆவணி மாதத்தில் வைகறையில் பத்மபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து உபவாசம் இருந்து திருநீறு, ருத்திராக்ஷம் அணிந்து, சிவநாமாக்களை உச்சரித்துக் கொண்டிருந்து மாலையில் நூறு தீபங்களை யேற்றி வைப்பானாகில் அவனுடைய வறுமை நீங்கப் பெற்று குபேரன்போல் விளங்குவான். பத்மகிரீசர் ஆலயத்தில் தீபம் போடுவதற்காகத் தங்கப் பாத்திரத்தை தானம் செய்கிறவன் எடுக்கும் பிறவிகளிலெல்லாம் குபேரனாய்ப் பிறக்கிறான். மண் அகல்களில் எண்ணெய்யினாலாவது நெய்யினாலாவது இரண்டு மூன்று வரிசைகளாக சந்நிதியிலும், பிராகாரங்களிலும் தனது சக்திக்குத்தக்கபடி, தீபாலங்காரம் செய்கிறவன் மஹாசாம் ராஜ்ய பதவியையடைந்து வெகுகாலம் ஜீவிக்கிறான். பத்மாசலேசன் திருச்சந்நிதியில் லிங்காகாரமாய்த் தீபாலங்காரம் செய்பவன் மோக்ஷத்தையடைகிறான். விருஷபாகாரமாகவாவது, திரிசூலாகாரமாகவாவது தீபவரிசைகள் ஏற்றிவைப்பவன் முற்பிறவிகளில் செய்த சகல தீவினைகளும் நீங்கப் பெற்று, இந்தலோகத்தில் குபேர சம்பத்தையடைந்து நீடூழி வாழ்கின்றான். அவன் இல்லத்தை விட்டு அஷ்டலக்ஷ்மி(24) களும் ஒருக்காலும் அகலுவதில்லை. எட்டு லிங்க ரூபங்களாயும், ஐந்து பத்மரூபங்களாயும், அமைக்கப் பட்ட, ஆயிரம்தீபங்கள் கொண்ட "ஸர்வதோபத்ரம்" என்று பிரசித்தி பெற்ற சித்ராகாரமான தீபவரிசைகளை பத்மகிரீசர் சந்நிதியில் ஏற்றி வைப்பவன் அளப்பரிய ஐச்வரியத்தை அடைந்து, தன்னை

---

(24) அஷ்டலக்ஷ்மிகளாவன. தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, தைர்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, இவர்கள் ஒவ்வொருவக்கும் உருவங்கள் அமைக்கப்பட வேண்டிய முறைகள் ஆகமங்களிலும் சில்பரத்னத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

விட்டகலாத லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவனாய் ஸர்வோத்க்ருஷ்டனாய் விளங்குவதோடு மறுமையில் கைலாஸ மடைந்து நித்திய வாழ்வை யடைகிறான்.

பத்மகிரி நாதன் ஆலயத்தைத் தோரணங்களாலும், வாழைமரங்களாலும் எலுமிச்சை முதலிய பழவகைகளைக் கோர்த்த அசைந்தாடி களாலும், பற்பல புஷ்ப மாலை களாலும், பந்தல், மேல்கட்டி முதலிய அலங்காரங்களைச் செய்து, தீபாலங்காரம் செய்தால், அதனைச்செய்யும் சேவார்த்தியினுடைய சந்ததி ஆசந்திரதாரகம் பூமியில் சகல சம்பத்துக்களுடன் வாழையடி வாழையாய் வளர்ந்து வருகின்றது. எவன் பக்தி சிரத்தையோடு கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களாலும், பஞ்சகவ்யம், இளநீர், தேன், பழரசங்கள், வாசனை திரவியங்கள், சந்தனம், விபூதி முதலிய வற்றால் அபிராமாம்பிகைக்கும் பத்மகிரிநாதருக்கும் பூர்ணாபிஷேகம் செய்து, நெய்யும் பழங்களும் கலந்த மிக ருசிகரமான நான்கு வித சித்ரான்னங்களை நிவேதனம் செய்து, தீபாலங்காரங்கள், செய்து, தீபாராதனை சமயத்தில் வேத பாராயணம் செய்வித்து ஸ்வஸ்திவாசகத்தோடு முடித்து தரிசனம் செய்கிறானோ அவன் மனிதரில்சிறந்த வனாக தேவர்களாலும் போற்றப் பட்டவனாய் திகழுகின்றான். மேலும் அவன் கைலாஸபதியின் அருளுக்குப் பாத்திரமாகி விதேகமுக்தி யடைகின்றான். அவனுக்கு மறுபிறப்பு இல்லை. அவனே யமனை வென்றவன். திரும்பவும் கருக்குழியில் விழ மாட்டான்.

கார்த்திகை மாதத்தில் சுக்லபக்ஷசதுர்தசியன்று பத்மகிரி நாதர் ஆலயத்தில் தீபாலங்காரம் செய்து, மறுநாள் பௌர்ணமியும்கிருத்திகாநக்ஷத்திரமும் கூடியதினத்தில் பிரதோஷ காலத்தில் (சாயந்தரம்) அவர் ஆலயத்தில், அபிராமா, பத்மகிரீசர் சந்நிதிகளிலும், சந்நிதிவாசல் களிலும், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், பிராகாரம், கோபுரம், திருமதில்கள், பரிவார தேவதைகளின் சந்நிதிகள் இவற்றிலும் ஆயிரக்கணக்கான தீபங்களை மண்அகல்களில் வரிசையாய் ஏற்றி அமைத்து அன்று பூராவும் உபவாசமாக இருந்து, பத்மாசல புராணத்தைப் பாராயணம் செய்து, ஷோடசோபசாரங்களோடு தீபாராதனை நடத்தி புஷ்பாஞ்சலி வேத பாராயணம் ஸ்வஸ்தி வாசகம் முதலியன ஓதி, நெய்யினால் செய்த பக்ஷியங்கள், பொறி, பொங்கல், ஆப்பம், சித்ரான்னங் கள் இவைகளை நிவேதனம் செய்து, அவற்றை சேவார்த்தி களுக்கு விநியோகம் செய்து, பஞ்சமூர்த்திகளை வீதி உலாச்

செய்வித்து "சொர்க்கப்பனை" என்றஜோதி (25) தரிசனம் செய்யும் பாக்கியசாலிக்கு பிரம்மா விஷ்ணு இந்திராதி தேவர்களையும் கூட சமமாகச் சொல்ல முடியாது. அவனுடைய வாக்கில் சரஸ்வதி தானேவந்து வாசம் பண்ணுகிருள். அவன் வீட்டில் லக்ஷ்மிகுடியிருக்கிருள். அவன் மனைவியின் மாங்கல்ய பாக்கியம் வளர்ந்தோங்கி நிற்கின்றது. எந்தப்பரம் பொருளை பத்மகிரீசனுகவும், பராசக்தியை அபிராமாம்பிகையாகவும் தரிசித்து அவர்கள் ஒரேஜோதி மயமாய் இருப்பதாக தியானிக்கின்றவன் சிவனேயாகின்ருன். இதில் யாதொரு சந்தேகமும் வேண்டாம்.

தீபாலங்கார மகிமையை விளக்கும் ஓர் வரலாறு உண்டு. அதனையும் கேட்பாயாக. பத்மாசலத்துக்குச் சமீபத்தில் சகலவளங்களும் நிறம்பிய சம்பகபுரி என்ருேர் ஊர் இருந்தது. அங்கு நான்காவது வருணத்தில் பிறந்த பாஹு, சுபாஹு, என்ற இரண்டு சிவனடியார்கள் இருந்தனர். அவர்கள் பத்மகிரி நாதர்மீது இடையரு அன்பு கொண்டவர்கள். அவர்கள் நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப் ''புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித் தலையினுற் கும்பிட்டுக் கூத்துமாடி, "சங்கராஜய போற்றி போற்றி" என்றும் அலைபுனல் சேர்செஞ்சடையெம் ஆதி என்றும்" "பத்மத்தில் ஆவிர்பவித்த மூர்த்தி யென்றும்," துதித்து சரியாமார்க்கத்தினுல் வழிபட்டு வந்தனர். திருநீறுபூசிய மெய்யும் நுதலும், அக்குமாலை அணிந்தமார்பும் தோளில் தொங்கும் பூக்குடலையும், எப்போதும் கூப்பிய கையும், இடையருது சிவசிந்தனையில் ஆழ்ந்த மனமும், தயை, ஜீவகாருண்யம் நிறைந்த குணக்குன்றுகளாய் விளங்கினுர்கள். காலை மாலை பத்மகிரி யடைந்து, பத்மபுஷ்கரணியில் நீராடி, நறுமண மலர்கள் பறித்து மாலைகள் சரங்கள் கட்டி பத்மாசலேசனுக்குச் சாத்தும்படி செய்து மிகுந்தபக்தி சிரத்தையுடன் இறைவன் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வாறு இருந்துவரும் நாளில் கிருத்திகாநக்ஷத்திரமும், பௌர்ணமியும் கூடிய சுபதினத்தில் மாலையில்

---

(25) மக்களால் இதை, 'சொக்கப்பனை' என்றும், 'சொக்கப்பான்', என்றும் கூறப்பட்டுவருகின்றது, சொர்க்கப்பனை, என்பதின் திரிபு, ஜோதி தரிசனத்தை சொர்க்கப்பனை என்று கூறுகிருர்கள். பனை ஓலைகளால் கோபுரம்போல் உயரமாகக்கட்டி அதில் நெருப்பிட்டு எரியும் காட்சியைப் பார்ப்பதுவே சொர்க்கப்பனை-ஆசிரியர்,

பத்மாசலத்தில் அமைக்கப்படும் தீபாலங்காரத்தையும், அபிராமாசுந்தரியையும், கமலாசலநாதரையும், தரிசிக்கக் கருதி சிவ சின்னங்களை, அணிந்து அகப்புற சுத்தர்களாய் சிவநாமாக்களை உச்சரித்துக் கொண்டு சம்பக புரியை விட்டு பத்மாசல க்ஷேத்ரம் நோக்கிப் புறப்பட்டார்கள். மாரிகால மாதாலால் மாலைக்காலமும் இருள் சூழ்ந்து காணப்பட்டது. வரும் வழியில் ஓர்பெரும்புலியைக் கண்டனர். "ஐயோ! இந்தப் புலியினால் தீபதரிசனத்துக்கு இடையூறு ஏற்படும் போலிருக்கிறதே" என்று கருதியவர்களாய், பத்மகிரி நாதனை மனதில் தியானித்து அப்புலியைப் பார்த்து" ஏ! சார்தூல! நீ எங்களைக் கொன்று உன்பசியை ஆற்றிக் கொள்வதில் எங்களுக்கு வருத்தம் சிறிதும் இல்லை. இந்தபூத உடம்பு ஓர்பிராணியின் பசியைத்தீர்க்கவாவது பயன் பட்டதே என்று மகிழ்ச்சி யடைகின்றோம். ஆயினும் இன்று கிருத்திகா நக்ஷத்திரமும் பௌர்ணமியும் கூடிய சுபதினம். பத்மாசலத்தில் தீபாலங்காரங்கள் செய்யப் பட்டிருக்கும். மேலும் இக்குடலையிலுள்ள பூமாலைகள் அபிராமாம்பிகைக்கும் பத்மகிரிநாதருக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நாங்களும் பத்மகிரியில் செய்யப்படும் கோடிக் கணக்கான தீபவரிசைகளைக்கண்டு, முன்பு திருமாலும் நான் முகனும் அடிமுடிதேடிய போது நின்ற சோதிப்பிழம்பாய்த் தோன்றும் சுயம்பு லிங்கமான பத்மகிரியைத் தரிசிக்கவும் வேண்டும். எங்களைப் போக அனுமதிப்பாயாகில் நாங்கள் சென்று தீபாலங்காரங்களையும், அபிராமநாயகியையும் பத்மகிரி நாதரையும் சேவித்து விட்டு உன்பால் வந்துசேரு கின்றோம். இதை அந்த தாத்ரீவன க்ஷேத்ரத்தில் லிங்காகார மான பர்வதமாய்த் தோன்றும் கைலாஸ பதியின் திருவடி சாக்ஷியாகச் சொல்லுகிறோம்" என்று வேண்டினார்கள். அப்புலி அவர்களைப் பார்த்து "நான் மூன்று தினங்களாய் ஆகாரம் கிடைக்காமல் பட்டினியாய் இருக்கின்றேன். ஆயினும் நீங்கள் பத்மகிரியாரின் ஆணை என்றதால் ஒருமுகூர்த்த நேரம் என் பசியைப் பொறுத்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று சீக்கிரம் இங்கு திரும்பிவாருங்கள்" என்று வழிவிட்டது. (26) பாஹு, ஸுபாஹு என்ற அவ்விரு சிவனடியார்களும் அவ்வாறே

---

(26) விஞ்ஞானமும், பகுத்தறிவும் முன்னேறி யிருப்பதாகப் பலரால் கருதப்படும் இக்காலத்தில்கூட கதிர்காமம் செல்லு கின்ற அடியார்களும், வழியில் எதிர்ப்படும் கொடியவன விலங்குகளைக் கண்டு அம்மூர்த்திகளைத் தியானிக்க அவ்விலங்கு கள் வழிவிடுவதை கண்கூடாகக் காண்கின்றோமாதலின் இப் புராணத்தில் கூறப்பட்ட புலி சிவனடியார்களுக்கு வழிவிட்டது ஆஸ்திக அன்பர்களுக்கு ஆச்சரியமாக இருக்காது-ஆசிரியர்.

பத்மாசலம் சேர்ந்து தீபதரிசனம் செய்துவிட்டு ஒரு முகூர்த்தத்தில் திரும்பி விட்டனர். அவர்கள் வரவைக் கண்ட புலி கூட ஆச்சரியத்தில் மூழ்கியது. "என்னே! இவர்களின் மனஉறுதி! இவ்வாறு தம்முயிரையே போக்கிக் கொள்ள மனமுவந்து யார் வருவார்கள்?" என்று எண்ணி அவர்களைப் பார்த்து ''என்பசியோ என்னைக் கொடுமையாய் வாதிக் கின்றது. இதோ உங்களை இப்பொழுதே அடித்துக் கொன்று தின்பேன்" என்று கூறி அவர்கள் மீது பாய்வதற்கு ஆயத்த மாயிற்று. சிவனடியார்கள் தாம்இறக்கும் தருவாயில் இறை வனை நினைந்து கொண்டே இறக்க வேண்டுமென்று கருதினவர் களாய் சுகாஸனத்தில் அமர்ந்து கண்களை இறுகமூடி பத்மாசலேசனை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி புலி தம்மீது பாயக் காலதாமதமானதால் கண்களைத் திறந்து பார்த்தனர். புலியைக்காணவில்லை. அதற்கு பதிலாய் "வடிவேறுதிரி சூலம் தோன்ற, வளர்சடை மேல் இளமதியம் தோன்ற, கடியேறுகமழ் கொன்றைக் கண்ணி தோன்ற, காதில் வெண்குழைதோடும் கலந்து தோன்ற, இடியேறு களிற்றுரிவைப்போர்வை தோன்ற, எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்ற, பொடியேறு திருமேனி பொலிந்து தோன்ற," அபிராமவல்லியைத் தமது இடப்பாகத்தே அணைத்தவராய் நடை மலிந்த விடையேறிக் காட்சியளித்த பத்மகிரீசரைக் கண்டார்கள். சிறிது நேரம் விஸ்மயத்தால் ஒன்றும் தோன்றாது திகைத்துப் பின்பு தேறி ''பத்மதீர்த்தத்தில், பத்ம கர்ணிகையில் ஆவிர்பவித்த பரமதயாளுவே! தாத்ரீவனத்தில் பர்வதாகாரமாய் எழுந்தருளிய தீனபந்துவே! திண்டிகாசூரனைக் கொன்று தேவர்களுக்கு நற்கதியளித்தவா! பொன்மாளுயகிய வேதியனுக்கும், வர்த்துலா சூரனுன கந்தர்வனுக்கும் சாபவி மோசனம் அளித்தவா! அனலா சூரசம்ஹாரம் செய்து அட்டஹாசம் செய்த பாரசக்தியை அபிராமாதேவியாக அழைத்து அவளைத்திருமணம் புரிந்து கொண்ட புண்ணியா! இடரைக்களையும் எந்தாய் போற்றி! ஈசபோற்றி! இறைவா போற்றி! அரசே போற்றி! அமுதே போற்றி! வேதீபோற்றி! விமலா போற்றி! ஆதிபோற்றி! அறிவே போற்றி! கதியே போற்றி! கனியே போற்றி! நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி! உடையாய் போற்றி! உணர்வே போற்றி! ஐயா போற்றி! அணுவே போற்றி! சைவா போற்றி! தலைவா போற்றி! குறியே போற்றி! குணமே போற்றி! நெறியே போற்றி! நினைவே போற்றி! வானோர்க்கரியமருந்தே போற்றி! ஏனோர்க் கெளியஇறைவா போற்றி! அத்தா போற்றி! அரனே போற்றி! தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி!

அழிவிலாவானந்தவாரி போற்றி! மானேர்நோக்கி மணாளா போற்றி! மருவியகருணை மலையே போற்றி! துரியமும் கடந்த சுடரே போற்றி! போற்றி போற்றி புராணகாரண! போற்றி போற்றி ஜய ஜய போற்றி!" என்று மனமார வாழ்த்தி வணங்கினர். உடல் குழைய என்பெல்லாம் நெக்குருக விழி நீர்கள் ஊற்றெனத் ததும்பியூற்ற அபிராமாசமேத பத்மகிரீசரை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து சிரமேல் கூப்பியகையினராய் நிற்கும் அச்சிவனடியார்களை இறைவன் விளித்து உமக்கு வேண்டுவதியாது என அவர்கள் ''ஐயனே! மாலயன் காணுத்திருவடியையும் திருமுடியையும் எளியோங்களுக்கு எளிவந்துகாட்சி தந்தபின்பு இவ்வுலகில் நாங்கள் அடையக்கூடிய பெரும்பேறு வேறு என்ன இருக்கிறது.? அடியோங்களை தேவரீரின் காவிக்கமலக்கழலுடன் சேர்த்துக் காத்தருளல் வேண்டும் என்றும் தங்களை மறவாத இன்ப அன்பு வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதனைக் கேட்ட கமாலாத்ரிநாதர் "அடியார்களே, உங்கள் பிராரப்தவசத்தால் இன்னும் சில காலம் இப்புவியில் இருக்க வேண்டியிருக்கிறது. அப்படி இருக்கும் காலத்தில் நீவிர் சைவத்தைப் பரப்பி, மக்களுக்குப் பக்தி நெறியைப் புகட்டி கலியை வெல்ல உபாயம் சொல்லிக் கொடுங்கள், பின்பு நாம் நமது சிவகணங்களை அனுப்பி அழைத்துக் கொள்கிறேம்" என்று கூறி மறைந்தனர். அவ்வாறே அவ்வடியார்கள் இருவரும் மீண்டும் சிவபூசையிலும் சிவனடியார் பூசையிலும் ஈடுபட்டுத் தம் வாழ்க்கையாலும் சொல்லாலும் மக்கள் கடைத்தேறும் பக்தி மார்க்கத்தை அவர்களுக்கு உபதேசித்து வந்து இறுதியில் சிவாஞ்ஞையால் வந்த சிவகணங்கள் சூழத்திருக்கயிலை சென்று சிவகணங்களோடு வாழ்ந்து வருகிருர்கள். கேட்டீரா கும்பமுனியே! பத்மாசலேசன் சந்நிதியில் செய்யப்படும் தீபாலங்காரக் கைங்கர்யமும், தரிசனமும் எத்தகைய பலனைத்தரக்கூடியவை என்பதை? என்று பிரம்மன் கூற அகத்தியர் '' சுவாமி இதுகாறும் பத்மாசல க்ஷேத்ரத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முறையில் புராணத்தைச் சொல்லக் கேட்டுக் கிருதார்த்தனுனேன். புராணங்கள் கேட்பதும் படிப்பதும் பக்தியை வளர்க்கவன்றே? அதுபோல தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீபத்மாசல புராணத்தைக் கேட்டதும் எனக்கு அபிராமா பத்மகிரீசரை முறைப்படி வழிபட வேண்டும் என்ற ஆவல் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆகவே அடியேன்மீது கிருபை கூர்ந்து அபிராமாவல்லியும் பத்மகிரீசரும் எம்முறையில் வழிபடப்பட்டால் மகிழ்ச்சியடைவர் என்ற முறையை உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்,

19வது அத்தியாயம்

யந்திர மந்திர பூஜைமுறை 27

கேளும் கும்ப முனியே! நீ விரும்பும் பூஜை முறைமிக வும் ரகசியமானது. அதிகாரிகளல்லாதாருக்குத் தெரியவும் கூடாது. நீர் ஜிதேந்திரயனுகையாலே, உமக்கு இதை உபதேசிக்கிறேன். இது மிகவும் குப்தாத்குப்ததரமான (ரகசியத்திலும் அதிரகசியமான) வித்தை. சர்வேச்வரனுன பரசிவத்தின் சிதக்னி குண்டத்தில் தோன்றி பராபட்டாரிகா என்று சொல்லக்கூடிய திரிபுரசுந்தரியே அபிராமா என்பதை நீ அறியவேண்டும். அவள் பகவானின் அந்தக்கரண சொரூபி. அவளுடைய திருவருளாலேயே சிவசாயுஜ்யத்தையடைய முடியும். சிவம்என்னும் செம்பொருளைக்காட்டிலும் எவ்வாறு வேறுதெய்வம் இல்லையோ, அவ்வாறே அபிராமாவைக் காட்டிலும் வேறு தேவியில்லை. அவனும் அவளும் ஒரேபூர்ண வஸ்துவின் இரண்டு பரிணுமங்கள். சிவானந்தத்தைக் காட்டிலும்வேறு ஆனந்தம் இல்லையன்றே? அதனையடைய, அபிராமாதேவியை ஸர்வானந்த மயஸ்வரூபியாய், ஸ்வயம் பிரகாச சாக்ஷாத் பரபிரம்ம சொரூபிணியாய்த் அவளைத் தியானிக்க வேண்டும். இயம, நியம, பிராணுயாம, பிரத்யாகார, தாரண, தியான, சமாதி என்ற அஷ்டாங் யோகங்களில் ஆஸக்தி கொண்டு, தக்ஷிணுமூர்த்தி குருவை மந்த்ர பூர்வமாய் தியானித்து, உபாஸனை விக்ன மின்றி நிறைவேறும் பொருட்டு கணநாதனை பிரார்த்தித்து, அங்கந் நியாஸம் கரந்நியாஸம் செய்துகொண்டு, அபிராமா பஞ்சதாசாக்ஷரீ மந்திரத்தை ஏகாக்ரமாய் ஜபித்து அபிராமா பஞ்சாவரண யந்திரத்தின் பிந்துஸ்தானத்தில் அம்பாளை ஆவாஹனம் செய்துஆசனம், அர்க்கியம் முதலிய உபசாரங் களைமந்திர பூர்வமாய்ச் செய்து உபாஸித்து வருவதால் 'அபிராம்பிகையின் திருவருள் விரைவில் கிட்டும்'' என்று பிரம்மா கூறி அகஸ்தியருக்கு அபிராமா பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தையும், பஞ்சாவர்ண யந்திரத்தையும், அந்த யந்திரத்தில் நிறுவப்பட வேண்டிய மந்திர அக்ஷரங்கள், தேவதைகள் இவற்றையும் கூறி, அங்கந்நியாஸம், கரந்நி

---

(27) மூலத்தில் இது இருபதாவது அத்யாயம். இந்த அத்யாயமே இப்புராணத்தின் ஜீவநாடி. அபிராமா பஞ்சதாசாக்ஷரி மந்திரம். பஞ்சாவரணயந்திரம், அபிராமா அஷ்டோத்தரசத நாமங்கள் இதில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

யாஸம் இவற்றிற்கு வேண்டிய மந்திரக்கிரமமும், பஞ்சாவர்ண பூஜாவிதானமும், அபிராமாம்பிகையின் மாலா மந்திரத்தையும் உபதேசித்து, முடிவில் அபிராமா தேவியின் அஷ்டோத்திர சதநாமங்களையும் கூறினார். மேலும் அம்பாளின் மந்தரத்துக்கு அவசியமான ரிஷி, சந்தஸ், தேவதை, பீஜம், சக்தி, கீலகம் என்ற ஆறுவியாகிருதிகளையும் சொன்னார் என்று சூதபுராணிகர் ஸௌனகாதி முனி - சிரேஷ்டர்களுக்கு கூறினார் (28)

கேளும் ஸௌனகாதி முனிவர்களே! மேலும் தொடர்ந்து பிரம்மா அகத்தியருக்கு கூறினார். ஹே! கும்பஜ! இந்த பிரகாரம் பக்திசிரத்தையுடன் அபிராமா சுந்தரியை உபாஸித்து வருவீராகில் உமது ஸர்வா பீஷ்டங்களும் நிறைவேறப் பெற்று, அணிமாதி அஷ்டமா சித்திகளையும் எளிதில் அடைவீர். அதி ரஹஸ்யமானதும், சிரேஷ்டமானதும், சாதாரண மனிதர்களுக்கு அதி துர்லபமானதும், அபிராமாவின் கடாக்ஷம் என்கின்ற உத்தமமான பலனை அளிப்பதும், முடிவில் ப்ரம்ஹத்தோடு ஜீவனை ஐக்கியம்

---

(28) இந்த அத்யாயத்தில் விவரிக்கப்பட்ட யந்த்ர மந்த்ரங்களும், மாலா மந்த்ரமும், பீஜாக்ஷரங்களும் அதி ரஹஸ்யமாய் வைத்திருக்க வேண்டும் என்ற நியதியை மேற்கொண்டும், யந்தர மந்தரங்களை குரு முகமாகவே அறிய வேண்டுமாதலாலும், அவற்றை நான் இங்கு வெளியிடவில்லை: 1958ம் ஆண்டில் இவ்வாலயத்தில் நடந்த அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தின் போது, அபிராமா தேவியின் பீடத்தில் ஓர் யந்த்ரம் இருக்கக் கண்டேன். கும்பாபிஷேகக் கிரியைகளை யதோக்தமாய்ச் செய்த ஆதி சைவ அந்தணரிடம், அவரையே குருவாக வரித்து, இந்த யந்த்ரத்தின் பிரதி ஒன்றையும் அதில் அடங்கிய மந்த்ராக்ஷரங்களையும், அவரிடமிருந்து அபிராமாம்பிகை சந்நிதியிலேயே பெற்றேன். 'பின்பு இப்புராணம் என் கைக்குக்கிட்டிய போது ஈண்டு சொல்லப்பட்ட யந்த்ரமும், நான் வைத்திருந்த கைப்பிரதி யந்த்ரமும் ஒன்றாக இருக்கக் கண்டு அம்பாளின் திருவருளை வியந்து அவளது அருட்டுணை கொண்டே இப்புராணத்தையும் எழுதத் துணிந்தேன்—ஆசிரியர்.

ு செய்யக் கூடியதுமான இந்த மந்த்ரயந்த்ரங்களை உமது தகுதியறிந்து உபதேசித்தேன். இதனை எக்காரணத்தைக் கொண்டும் நழுவ விடாமல் அதிக ஜாக்கிரதையாக வைத்துப் பரிபாலனம் செய்து வரவேண்டும். சாதுவைப்போல் வேடம் தரித்தவனுக்கும், யாவும் அறிந்தோம் என்று வித்யா கர்வமுடையவனுக்கும், பிறரை இகழ்ந்து பேசுகிறவனுக்கும், பரோபகார சிந்தனை சிறிதும் இல்லாதவனுக்கும், பக்தி ஸ்ரத்தை சிறிதும் இல்லாதவனுக்கும், அவன் பிராம்மண குலத்தில் பிறந்தவனுனாலும், இதனை உபதேசம் செய்தல் கூடாது. தகுதியற்ற சீடனுக்கு மந்த்ர ரஹஸ்யத்தை உபதேசிக்கும் குரு நரகத்தையடைகின்றான். ஞானம், பக்தி, வைராக்கியம் இம்மூன்றும் உள்ளவனுக்கும், மோக்ஷசாம் ராஜ்யத்தையடைய விருப்பமுள்ள முமுக்ஷுவுக்கும், உமக்கு சிசுருஷை செய்வதில் விருப்பமுள்ளவனுக்கும், உம்மை வலிய வந்து அடைந்து, மந்த்ரத்தை யறிந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கையினால் உம்மைப் பிரார்த்திப்பவனுக்கும், அவனை நன்கு பரிசிலனை செய்து, தகுதியறிந்து, அபிராமா தேவியின் அருளை முன்னிட்டுக் கொண்டு இவற்றை உபதேசிக்கக்கடவீர். இவ்வாறு யந்த்ரமந்த்ரங்களில் ஆஸக்தி பல ஜன்மங்களில் செய்த புண்ணியத்தாலும் அபிராமாம்பாளின் கிருபையாலுமே ஏற்படும்" என்று நான்முகன் அகஸ்தியருக்குக் கூறினார்.

கேட்டீர்களா ஸௌனகாதி முனிவர்களே! இவ்வாறு கமலாசல க்ஷேத்ரமகிமைகளை விரிவாய் எடுத்து அகஸ்தியருக்குக் கூறிவிட்டு பிரம்மா சத்தியலோகம் சென்றார். என்று சூதபௌராணிகர் சொன்னார்.

20ம் அத்தியாயம்
அகஸ்தியர் செய்த பூஜை

சூத பௌராணிகர் கூறுகின்றார். "இவ்வாறு சதுர் முகன் சத்தியலோகம் சென்றபின் அகத்திய முனிவர்மிகவும் மகிழ்ச்சியுடையவராய், பத்மாசலேசர் பூஜையில் மிகவும் சிரத்தையுடையவராய், பத்மபுஷ்கரணியில் நீராடி விபூதி ருத்திராக்ஷமணிந்து, பத்மாசலத்தை வலம் வந்து கமலாத்ரி நாதரை வழிபட ஆரம்பித்தார். பூஜைக்கு அவசியமான அங்கங்களான, தியானம், ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்கியம், ஆசமனம், அபிஷேகம், (29) வஸ்த்ரம், யக்ஞோபவீதம்,

---

(29) முன் 13வது அத்யாயத்தில் அபிராமாவுக்குக்கொடுத்திருக்கும் உபசாரமந்திரங்கள் போலவே இங்கு அகஸ்தியரால் ஒவ்வொரு உபசாரத்துக்கும் ஒவ்வொரு மந்திரசுலோகங்கள் இருக்கின்றன.

ஆபரணம், சந்தனலேபனம், அக்ஷதை, புஷ்பம், தீபம், தூபம், நைவேத்தியம், தாம்பூலம், கற்பூர நீராஞ்சனம், புஷ்பாஞ்சலி, பிரதக்ஷிணம், நமஸ்காரம் முதலிய உபசாரங்களை அதற்கேற்ற மந்திரசுலோகங்களை முறையே சொல்லிய தோத்தமாய் வழிபட்டார். பரிமள புஷ்பங்களாலும், நெல்லிஇலை, வில்வ இலை, துளஸி முதலியனவற்றைக் கொண்டு பத்மகிரி நாதருக்கு அஷ்டோத்தர சத நாமாக்களைகானம் செய்து அர்ச்சித்தார். பின்பு ஏகாக்ர சித்தராய் கமலக்ஷேத்ர நாயகரான பத்மகிரீசரைத் தோத்திரம் செய்தார். (30)

பிரணவத்தோடு சேர்ந்த பஞ்சாக்ஷரத்தின் சொருபமாய் விளங்கும் அபிராமாபதியே போற்றி.

தியானிப்பவர்களின். பாபங்களைப் போக்கும் சம்புவே போற்றி.

ப்ரம்ம, விஷ்ணு இந்திராதி தேவர்களால் பூஜிக்கப்படும் பாதா போற்றி,

பத்மாசலமாக ஓங்கி நிற்கும் சுயம்புவே போற்றி,

திண்டி என்ற அசுரனுல் பூஜிக்கப்பட்ட திங்களும் கங்கையும் தங்கும்பிஞ்ஞுகா போற்றி,

கருணைக்கிருப்பிடமே போற்றி,

பக்தியுடன் உன்னை ஆராதித்த பாண்டு புத்திரனுக்கு அனுக்ரஹம் செய்த பத்மகிரிநாதா போற்றி,

கும்பநதி, வேகவதி, சந்தானவர்த்தனி என்ற மூன்று நதிகளுக்கும் நடுவே பர்வதாகாரமாய் நிற்கும் ஈசா போற்றி.

வாருண, கதம்ப, பாண்டவ, திரௌபதி, சிவகங்கா என்ற பஞ்சதீர்த்தங்களால் அலங்கரிக்கப்பட்ட சிகரத்தையுடைய பஞ்சானனு போற்றி.

வீரபத்திரர், கணேசர், ஷண்முகர், பைரவர், நந்தி, பிருங்கி முதலிய தேவகணங்களால் சூழப்பட்டபரம் பொருளே போற்றி.

தாத்ரீவனம் என்னும் திரு நெல்லி வனத்தில் நடுநாயகமாய் விளங்கும் பத்மாசலத்தில் நித்ய வாசம்பண்ணும் பரவஸ்துவே போற்றி. நெல்லிமரமே இப்பதியின் தல விருக்ஷமாகும்.

அஸ் வத்த விருக்ஷங்களின் அடியிலும், பத்மகிரி குகையிலும் வசித்த தேவர்களைக் காத்தருளியவா போற்றி அனலாசூரனையழித்து, அகில மெல்லாம் காத்த அபிராமா வல்லபா போற்றி.

---

(30) இந்தஸ்தோத்திர சுலோகங்களின் சிலவற்றின் பொழிப்புரையே இங்கு கொடுக்கப்படுகின்றன.

இருபத்தி இரண்டு (31) அத்தியாயங்கள் அடங்கிய இந்த பத்மாசல புராணத்தால் புகழப்பெற்ற மங்கள மூர்த்தியே போற்றி. "சச்சிதானந்த சொரூபியே போற்றி" என்று இன்னும் பலவாறாகத் தோத்தரித்தார். பின்பு பத்மகிரியை வலம் வந்து, அபிராமாம்பிகையின் உபாஸ்தியைச் செய்ய விரும்பி பத்மகிரியின் தென்மேற்கு திக்கில் முன்பு கங்காதேவி நீர்தடமாக தங்கிய இடத்தில், பரிசுத்தமான தபோ பூமியில், பர்ணசாலை யொன்று நிர்மாணம் செய்து, கங்காதீர்த்தத்தில் நீராடி நித்யகர்மா னுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, சதுர்முகன் சொன்ன முறைப்படி அபிராமா தேவதையை "ஸுதாஸிந்தோ" என்ற சுலோகத்தால் தியானம் செய்து, தக்ஷிணா மூர்த்தி குருவையும், கணபதியையும் வணங்கி, தனதிஷ்டம் பூர்த்தியடைய வேண்டு மென்று அம்பாளை பிரார்த்தித்து சங்கல்பம் செய்து கொண்டு, தங்கத்தகட்டில் அபிராமா பஞ்சாவரணயந்தித்தையும் அதில் அடங்கிய மந்திராக்ஷரங்கள், தேவதைகளையும் லேகனம் செய்து, கலஸ ஸ்தாபனம் செய்து அதில் அபிராமாம்பிகையை அந்தக் கும்பத்தில் வந்து ஆவிர்பவிக்கும்படி பிரார்த்தித்து ஏகாக்ரசித்தராய், தினம் காலை மாலை ஆயிரம் ஆவிருத்தியாக அபிராமா பஞ்சதசாக்ஷரியை ஜபித்து, கலஸத்துக்கும் யந்த்ரத்துக்கும் ஷோடஸோபசாரங்களை மந்த்ர பூர்வமாய்ச் செய்து அதி உக்ரமான தபஸ் செய்தார்.

"கருவண்டு போன்ற கேசபாரமும், இளம்பிறையோடு கூடிய நவரத்னகசிதமான கிரீடமும், சிதறிய நக்ஷத்திரங்களோ வென்னப்பிரகாசிக்கும் ரத்னப்ரபையயம், அஷ்டமீசந்திரன் போன்ற நுதலும், சந்திரனின் களங்கமோ வென்னத்திகழும் கஸ்தூரிதிலகமும், மன்மதனின் வில்லைப்போன்ற புருவங்களும் அம்பாளின் ஸௌந்தர்ய மென்னும் தடாகத்தில் விளையாடும் இரண்டு கயல் மீன்கள் போன்ற நேத்ரங்களும், அன்றலர்ந்த சம்பகம் போன்ற நாசியும், நட்சத்திர களைப்பழிக்கும் நாசாபரணங்களும், கதம்பமலர்களால் அலங்கரிக்கப்பட்ட காதுகளில், சந்திரர் சூரியர்களுக் கொப்பான காதணிகளும், பத்மராகத்தால் செய்யப்பட்ட கண்ணாடிக் கொப்பான இரண்டு கன்னப்பிரதேசங்களும், பவளத்தையும், கொவ்வைக்கனியை

---

(31) இந்நூலில் புராணத்தின் 7. 8. அத்தியாயங்களை ஒன்றுக்கி விட்டதால் 21 வது அத்தியாயத்தோடு புராணம் இப்புத்தகத்தில் முடிகின்றது.

யும், வெட்கச்செய்யும் உதடுகளும், முல்லை அரும்புகள் போன்ற பல்வரிசையும், தேம்பாகை வேம்பாக்கி, வீணையை வீணுக்கும் மதுர வசனமும் பத்மகிரீசனை வசியப்படுத்தும் புன்சிரிப்புத்தவழும் வாயும், நிகரற்ற சோபையுடன் கூடிய முகவாய்ப் பிரதேசமும், கூந்தலின் பாரம் தாங்காது சற்று வளைந்த வலம்புரிபோன்ற கழுத்தும், அக்கழுத்தில் துலங்கும் பற்பல ரத்னு பரணங்களும் மாங்கல்ய சூத்திரமும், கனக சைலங்கள் போன்று மிகலாவண்யம் அமைந்து உயர்ந்த ஸ்தனதடங்களும், மார்பில் தவழும் முத்தாரங்களும், ''ஜல ஜல'' வென சப்திக்கும் ரத்ன கங்கணகாளால் விளங்கும் முன்கைகளும், இளம் மூங்கில் போன்ற புஜங்களும், ஸ்தன பாரத்தால் நுடங்கும் அத்ரிச்யமான இடையும் அதில் அணிந்த உதய சூரியனை ஒத்த சிவந்த ஆடையும், அதன்மேல் பூட்டிய ஒட்டியாணமும், ரத்னமணிகளால் ஆக்கப்பட்ட மேகலாபரணமும், கலீர் கலீர் என சப்திக்கும் சொர்ண நூபுரங்களும் அணிந்த சரணுரவிந்தங்களும், தாமரையைப்பழிக்கும் திருவடியின் கீழ்விளங்கும் பாதுகைகளும், மனோ வாசாம கோசரமான, ஸுலாவண்ய, ஸர்வாபரண, ஸர்வஸௌந்தர்யமும் அமைந்து, பார்ப்பவர் மனதை ரமிக்கச் செய்யும் திருமேனியும், பக்தர்களுக்கு எளிவந்தருளும் கருணுவிலாஸமும், அவர்களின் வினைகளைத்தனது கடைக்கண் நோக்கால் நசிக்கச் செய்யும் அருளும், அநேககோடி பிரம்மாண்டங்களைத் தனது சங்கல்பமாத்திரத்தில் உண்டாக்கக் கூடிய ஆற்றலும், சகல புவனங்களும் தன்னிலே தோன்றி, தன்னுல் பரிபாலிக்கப்பட்டுப் பின்பு தன்னிலேயே லயிக்கச் செய்யும் பராசக்தியாகின்ற அபிராமாசுந்தரி, அநேககோடி சூரியர்கள் ஒருங்கே உதயமானது போல் பிரகாசிக்கும் பஞ்சப்பிரம்ம ஸ்வரூபமான சிம்மாசனத்தில் பிரம்மாதி தேவர்களும், ரிஷிபுங்கவரும், சித்த சாரணர்களும் ஞானம், பக்தி, வைராக்யமுடைய அடியார்களும் எப்பொழுதும் தியானிக்கும் பரம்பொருளாகிய கமலாத்ரி நாதருடைய மடிமேல் வீற்றிருக்கும் ஞானபாநுவாய், சச்சிதானந்த ஸ்வரூபிணியாய் அகஸ்தியரால் தியானிக்கப்பட்டு அவரின் ஏகாக்ரமான உபாஸனைக்கு மகிழ்ந்துதன் நாதனுடன் அகஸ்தியரின் முன் தோன்றினுள்.

இவ்வாறு தம்முன் தோன்றிய ஆதி தம்பதிகளைக்கண்ட அகஸ்தியர் வாயாரத் தோத்தரிக்க ஆரம்பித்தார்.

'' வசந்த காலத்தில் மலரும் தாமரை போன்ற முக காந்தியும், அப்பொழுது அலர்ந்தகரு நீல புஷ்பங்கள் போன்ற திருநேத்திரங்களும் உடையவர்களாய், தர்மார்த்த காம மோக்ஷம், என்கின்ற நான்குவித புருஷார்த்தங்களையும் அடியார்களுக்கு அருளும் அபிராமா கமலாத்ரி நாதா போற்றி.

பார்க்கப்பார்க்கத் திகட்டாத அதிமனோகரமான ரூபங்களை தம்மிச்சையால் மேற் கொண்டு, உவமிக்க வொண்ணு எழிலுடன், திவ்யாபரண பூஷிதர்களாய் ஸ்வயம்ஜோதியாய் விளங்கும் அபிராமாகமலாத்ரி நாதா போற்றி.

ஐம்புலன்களை யடக்கியாளும் சாதுக்களின் மனம் என்னும் மானதசரஸ்ஸில் விளையாடும் இரண்டு இராஜ ஹம்ஸங்கள் போன்று, எனது ஹிருதயகமலத்தில் ஸர்வோத்க்ருஷ்டமான பேரானந்தத்தை விளக்கும் அபிராமா கமலாத்ரி நாதா போற்றி.

சந்திரகாந்தக் கல்லிழைத்த கிரீடங்களால் சோபிக்கும் மங்கள மூர்த்திகளாய் தர்மம் அதர்மம், சுகம் துக்கம், சீதம் உஷ்ணம், என்ற துவந்துவ உணர்ச்சிகள் நீங்கினவர்களாய் ஸர்வத்தையும் தானுகவும், தானேஸர்வமாகவும் பார்க்கும் ஞானிகளின் ஹிருதயங்கள் என்ற உப்பரிக்கைகளில் ஸ்வயம் பிரகாசமாய் விளங்கும் அபிராமா கமலாத்ரி நாதா போற்றி.

என்று இன்னும் பலவிதமாய்த்துதிக்கின்ற குட முனியை அருளொடு நோக்கி, 'நீர் வேண்டும் வரம் யாது'? எனக்கேட்க 'ஓ' ஸ்வயம் பிரகாசமான பராசக்தியே! உங்கள் இருவரது திருவடி சேவை தவிர நான் வேண்டத்தக்கதுஇம் மூவுலகிலும் இல்லை. ஆதலால் நீவிர் இருவரும் என்ஹிருதயத்தில் நீங்காது வாசம் பண்ண வேண்டும்" என்று அடிவீழ்ந்து விண்ணப்பித்தார். அன்னை அபிராமா சுந்தரி அவரைப்பார்த்து, "கடோத்பவா! நீர் இவ்வுலகில் எவ்விதக்குறைவுமின்றி, கியாதி பெற்ற சித்த புருஷராய், சிரஞ்சீவியாய் பொதிகைமலை சென்று வாழ்வீர். நீர் எப்பொழுது எம்மை தியானிக்கின்றீரோ அப்போதெல்லாம் உமக்கு தரிசனம் அளிப்போம். மேலும் நீர் உபாஸனை செய்த இந்த தபோவனமும், இந்தகங்கா தீர்த்தமும் உமது பெயரால் அகஸ்திய தீர்த்தம் என்ற பெயருடன் வழங்கிவரட்டும். அதில் ஸ்நானம் செய்கின்றவர்கள் நமது அருளுக்குப்பாத்திரமாவார்கள். யார் ஒருவர் இந்த தபோவனத்திற்கு வந்து இந்தத்தீர்த்தத்தில் நீராடி என்னை உபாஸிக்கின்றுர்களோ அவர்களுக்கு வெகு சீக்கிரத்திலேயே மந்திர சித்திகிட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினுள். கும்பமுனியும் அளவிலா மகிழ்ச்சியில் மலர்ந்து, ஆதிதம்பதிகளை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து தலைமேல் கூப்பியகையராய் "தாயே! எல்லையற்றஉன் திருவருளுக்கு என்னையும் பாத்திரமாக்கி ஆட்கொண்ட தயாபரியே, உலகில் மானிடராய்த் தோன்றியவர்கள் உன் பாதாரவிந்த சேவையினுலேயே சகல சம்பத்துக்களையும் இம்மையில் அடைந்து மறுமையில் சிவ சாயுஜ்யம் அடைகின்றனர். உன்னையன்றி உலகில் கண்கண்ட

தெய்வம் வேறுண்டோ உம்மிருவரையும் ஒருங்கே தரிசிக்கும் பேறு பெற்ற நான் கிருதார்த்தனுனேன்." என்று பலவாறு புகழ்ந்துரை சொல்ல அபிராமாம்பிகையும் பத்மகிரி நாதரும் மறைந்தருளினர்.

ஆகையால் கேட்டீர்களா ஸௌனகாதி முனிவர்களே! அபிராமா என்ற நாமமேமிக்க பாவனமான மந்திரம், அவளுடைய உபாஸனேயே இகபர சுகங்களைக் கொடுக்கக் கூடியது. பராசக்தியின் நானுவித மூர்த்தங்களில் அபிராமாமூர்த்தமே மிகச்சிறந்தது. அவளே மஹாதிரிபுரசுந்தரி. அவள் வசிக்கும் தாத்ரிவனமே அம்ருதசமுத்திரத்தின் நடுவிலிருப்பதும் கல்பகவிருக்ஷங்கள் அடர்ந்த காடாகும். அதில் உள்ள பத்மாசலக்ஷேத்ரம் என்னும் திண்டிமாபுரியே மணித்வீபத்துக்கு சமமாகும். அத்திண்டிமா நகரில் இருக்கும் பத்மாசலமே சிந்தாமணி கிரஹமாகும். அம்மலையில் நான்கு பக்கங்களும் இறைவனின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் என்ற முகங்களாகும். அதன் சிகரமே சத்யோஜாதம் என்ற ஐந்தாவது முகமாகும். இவ்வாறு அறிந்து பத்மாசலமே இறைவனின் திருமேனி என்பதை உணர்ந்து. அதில் அந்தர்கதமாய் இருக்கும் சிவசக்திகளான பத்மகிரிநாதரையும் அபிராமாம்பிகையையும் வழிபடுகிறவர்கள் இகத்திலும் பரத்திலும் கிருதார்த்தர்களாகின்றனர். என்று சூதபௌராணிகர் சொல்ல. அங்கு குழுமியிருந்த ஸௌனகாதிமஹாமுனிவர்கள் அனைவரும் பரமதிருப்திஅடைந்த வராயினர்.

21-வது அத்தியாயம்:

புராண மகிமை.

சூத புராணிகர் மேலும் தொடர்ந்து சொல்லுகின்றுர். "கேளும் ஸௌனகாதி முனிவர்களே! இந்த பத்மாசல புராணமானது மஹாமகிமை வாய்ந்தது. அதனைக்கேட்பவர்கள் ஸர்வபாபங்களினின்றும் விடுபடுகின்றனர். அகாராதி க்ஷகாராந்த அக்ஷரங்களுக்குள் உத்தமோத்தமான பிரணவாக்ஷரமும், வேதங்களுக்குள் ஸாமவேதமும், பதினெருருத்திரர்களில் (32) சங்கரரும், நதிகளுள் கங்கையும், ஸ்திரிகளுக்குள்லக்ஷ்மியும்,

(32) ஏகாதச ருக்திரர்கள் :-. 1. மகாதேவர். 2. அரன். 3. ருத்திரர், 4, சங்கரர், 5. நீலலோகிதர், 6. ஈசானர், 7. விஜயர். 8. பீமர் 9 பவோர்பவர். 10. காபாலி 11. சௌமியர். ருத்ரர் என்றசொல் "ருத்" என்ற தாதுவினடியாகப் பிறந்து அழுதல் என்று பொருளில் வந்தது. பிரகதாரண்ய உபநிஷத்தில் யாக்ஞவல்கிய விதக்தஸம்வாதத்தில் இவர்களின் தத்துவம் விளக்கப்படுகிறது. கர்மஞானேந்திரியங்கள் பத்தும் மனதும்பிரிவதால் ஒருவன் மரிக்கிறுன். மரித்தவனுக்கு அவன் சுற்றத்தார் அழுகிருர்கள். அப்படி அவர்களை அழப் பண்ணுவதால் இந்தப் பதினேரு இந்திரியங்களுக்கும் ருத்ரர்கள் என்றுபெயர் என விளக்கப்பட்டிருக்கிறது.

புருஷர்களுக்குள் விஷ்ணுவும், சேனுவீரரில் கார்த்திகேயனும், வில்லாளிகளில் பன்மதனும், பசுக்களில் காமதேனுவும், அணியத்தகுந்தவைகளில் திருநீறும், பூஜையில் சிவபூஜையும், மந்திரங்களுக்குள் பஞ்சாக்ஷரமும், விரதங்களில் சிவராத்திரியும், தானங்களில் அன்னதானமும், தர்மங்களில் சத்தியமும், எவ்வாறு மேன்மையுற்று இருக்கின்றனவோ அதுபோலத்தல புராணங்களில் இந்த பத்மாசல புராணம் உத்க்ருஷ்டமாய் விளங்குகிறது.

இதனைக்கேட்பவர்கள் ஆயிரம் கபிலநிறப் பசுக்களை தகுதி வாய்ந்த பிராம்மணோத்தமர்களுக்குத் தானம் செய்த பலனையும் குருக்ஷேத்திரத்தில் நூறு அச்வமேத யாகம் செய்த பலனையும், வேதவித் என்று சொல்லக்கூடிய பிராமண பிரம்மசாரிக்கு ஸாலங்கார கன்னிகாதானம் செய்த பலனையும், மஹோதய (33) புண்ய காலத்தில் சேதுவில் ஷோடஸ மஹாதானங்களைச் செய்தபலனையும் அடைகிறார்கள். சுருங்கச் சொன்னால் இந்தபத்மாசல மஹாத்மியத்தை சிரவணம் செய்பவன் அடையும் பலன்களை எண்ணமுடியாது. மேலும் இப்புராணத்தை பக்தி சிரத்தையுடன் கேட்பவர்கள் தங்கத்தைத் திருடினது, மதுமாம்ஸ பக்ஷணம் செய்தது, பிரம்மஹத்தி, ஸ்திரீஹத்தி, பரஸ்திரீகமனம், அஸ்வத்த விருக்ஷத்தை வெட்டினது போன்ற சகல மஹாபாதகங்களிலிருந்தும் விடுபடுகின்றனர்.

ஸௌனகாதி முனிவர்களே! நீங்கள் தருதிவாய்ந்தவர்கள். ஆதலாலே என்குருநாதனுகிய வியாஸ பகவானுல் ஸ்காந்த புராணத்தில் புராதீனமாகச் சொல்லப்பட்ட இந்த பத்மாசல புராணத்தை நான் அவரிடம் கேட்டபடி உங்களுக்குச் சொன்னேன், என்று சூதபுராணிகர் சொல்ல அங்கிருந்த சகல ரிஷிகளும் ஆனந்தபரவசராய், அவருக்குச் செய்யவேண்டிய சகல உபசாரங்களையும் செய்து அவருக்குப் புஷ்பம், சந்தனம், வஸ்த்ரம். ஆபரணம் முதலியன சமர்ப்பித்து பூஜித்தார்கள். அதன்பின் சூத பௌராணிகரும் விடைபெற்றுக் கொண்டு தமதிருப்பிடம் சென்றார்.

பத்மாசல புராணம் முற்றிற்று.

---

(33) மகோதயம் என்பது தை அமாவாசையும், திங்கட்கிழமையும், திருவோண நக்ஷத்திரமும் வியதீபாத யாகமும் கூடிய சூரியோதய புண்ணியகாலம்.

22-ம் அத்தியாயம்.

சரித்திரப்பகுதி.

தமிழ் நாட்டின் சரித்திரம் எழுதுவது அவ்வளவு சுலபமல்ல. இந்திய சரித்திரத்தை எழுதிய மேனாட்டவரும் அவரைப்பின்பற்றிய நம்நாட்டு சரித்திர ஆசிரியர்களும் வட நாட்டுச் சரித்திரத்தையே விரிவாக எழுதி உள்ளார்கள். சமீபகாலத்தில் வெளியான சில தமிழ் ஆராய்ச்சியாளர் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழ்நாட்டைப்பற்றி எழுதி உள்ளனர். ஆனால் தமிழ் நாடு வெகுகாலத்துக்கு முன்பிருந்தே நல்ல நாகரீகம் படைத்ததாய், அரசியல், சமயம், முதலிய துறைகளில் மேன்பாடடைந்திருந்தது என்பது பலஆசிரியர் களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. வால்மீகீ இராமா யணத்தில் சுக்ரீவன், அங்கதன், அனுமன் தலைமையில் சீதாதேவியைத் தேடச்சென்ற வானரவீரர்களுக்கு பாண்டிய நாட்டின் தலைநகராய் அன்றுவிளங்கிய "கபாடபுரம்" என்ற நகரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சங்க நூல்களில் பாண்டிய மன்னர்களைப் பற்றிய பலகுறிப்புகள் காணப்படு கின்றன. ஆனால் இத்திண்டிமா நகரைப்பற்றிய குறிப்பு யாதொன்றும் கிடைக்கவில்லை. சங்கம்மருவிய நூல்களான ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் காடுகாண் காதையில்,

"அலறுதலை மாரமும் உலறுதலை ஓமையும்
பொரியரை உழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்
நீர் நசை இ வேட்கையின் மானின்று விளிக்கும்
கானமும் எயினர் கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைகட் கரும்பும்
கொய் பூந்தினையும் கொழும்புன வரகும்
காயமும் மஞ்சளும் ஆய் கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழுடுத்தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்

என்று சிறுமலையின் சிறப்புக்கூறப்படுகின்றது. ஆயினும் அதையடுத்துள்ள இத்திண்டிமா நகரைப்பற்றிய செய்தி ஒன்றும் இல்லை.

பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இயற்றிய "பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது" என்றஅரிய நூலைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யரவர்கள், அந்நூலின் முன்னுரையில்

"பத்மகிரி யென்பது திண்டுக்கல்லின் திருநாமம் இதற்குத் திண்டீச்சுரம் என்ற திருநாமம் உண்டு.... இது தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. இத்தல விருக்ஷம் நெல்லி. அதனால் இது நெல்லிவனம் என்றும் வழங்கும்" என்றுகூறி

''தெள்ளும் புனல் கெடில வீரட்டமும்
"திண்டீச்சுரமும் திருப்புகலூர்" என்று

''திண்டீச்சுரம் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேலூர் சிரபுரம் சிற்றேமம் சேறை" என்றும்
"கோடீச்சுரங் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்
குக்குடேச்சுரம் மக்கீச்சுரம்" என்றும்

அப்பர் பெருமான் பாடியருளிய தேவாரப் பாசுரங்களில் வரும் திண்டீச்சுரம் என்பது திண்டுக்கல்லையே குறிப்பன, என்று முடிவு கட்டியிருக்கிறார். அய்யர் அவர்களின்திறமையை அறிந்தவர்கள் அவர் கூற்றுக்கு மதிப்புக் கொடுத்தேதீருவர். அப்படியாயின் அப்பர் காலம் 7ம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால், அந்நூற்றாண்டிலேயே இத்தலம் பிரபலம் அடைந்திருக்க வேண்டும் என்று யூகிக்கலாம்.

மேலும் தமிழ்மூவேந்தர் ஆண்ட சேரசோழபாண்டிய நாடுகளின் நடுவணதாக இந்நகர் அமைந்திருத்தல் பற்றி இந்நகர் அம்மூன்று நாடுகளுக்கும் ஓர் எல்லையாக இருந்தது என்னலாம். மூவேந்தருக்குள் அக்காலத்தில் ஏற்பட்ட பலசண்டைகளில் இந்நகரம் அதிகம் பாதிக்கப் பட்டிருந்தது. இம்மூவேந்தருமே ஓரோர்சமயம் இந்நகரைத்தமது ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தனர். சிலப்பதிகாரத்தில் தென்னவன் சிறுமலை என்று கூறப்படுவதால் பாண்டியநாட்டின் வடக்கு எல்லையாக இருந்தது என்பது புலப்படும். பாண்டிய நாடு மிகப்புராதனமானது என்பது பலசரித்திரச் சான்றுகளால் அறியக் கிடக்கின்றது. இராமாயண மகாபாரத இதிஹாசங் களில் பாண்டிய நாடு குறிப்பிடப்படுகின்றது. கிருஸ்து சகாப்தத்துக்கு முன்னால் 302 B. C ல் சந்திரகுப்த மௌரியன் காலத்தில் இந்தியாவுக்குவந்த செலுக்கஸ் நிக்கட்டார் என்ற கிரேக்கதூதுவன் பாண்டிய நாட்டின் பெருமையைக் கூறியிருக்கிறான். அசோக சக்கிரவர்த்தி காலத்தில் அவர் பாண்டிய மன்னனோடு செய்து கொண்ட உடன் படிக்கையின் படி புத்தசமயபிக்ஷுக்கள் பாண்டிய நாட்டுக்குவர அனுமதிக் கப்பட்டிருக்கின்றனர். கிருஸ்து சகாப்தம் 20. A. D. ல் உரோமாபுரி சக்கிரவர்த்தியாக இருந்த அகஸ்டஸ் சீஸர் என்பான் பாண்டிய நாட்டுக்கு ஓர் தூது கோஷ்டி அனுப்பியதாக "ஸ்ட்ராபோ" என்ற சரித்திர ஆசிரியர் எழுதியுள்ளார்.

அம்மை மீனுக்ஷிக்கு அணியப்படும் பல ஆபரணங்களில் ஒரு தங்கக்காசு மாலை நிஷததேசாதிபதி நளன் என்பான் உபயம் செய்ததாகக் காணப்படுகின்றது. கிருஸ்து சகாப்தம் 73 A. Dல் 'பிளினி' என்ற சரித்திர ஆசிரியன் பாண்டிய மன்னனைப்பற்றிக் கூறியிருக்கிருன். A. D. 140ல் டாலமி என்பானும் சோழ பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடுகிருன். விவிலியன் நூலில் பழைய ஏற்பாட்டில் வரும் ''ஸாலமன்'' என்ற அரசருக்கு 'ஷிபா' என்ற அரசி பாண்டிய நாட்டிலிருந்து இறக்கு மதியான முத்து, யானை, மயில் இவற்றைக் கப்பமாகக் கொண்டு செலுத்தினுள் என்று தெரிகின்றது. ஆகவே கிருஸ்து சகாப்தத்துக்கு குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாண்டிய நாடு மிகப் பிரபலமாக இருந்திருக்கின்றது.

கிருஸ்து சகாப்தத்தின் முதல் நூற்றுண்டில் கரிகால சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துப் பாண்டியனை வென்று, தனக்குக் கப்பம் கட்டும்படி செய்திருக்கிருன். இச்செய்தி பண்டையதமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. சோழனுக்கும் பாண்டியனும் பலபோர்கள் நடந்திருக்கின்றன. அவர்களுக்குள் வெற்றி தோல்வி மாறி மாறி ஏற்பட்டு வந்திருக்கின்றன. அவ்வக் காலத்தில் இத்திண்டிமா நகர் சிலகாலம்சோழ நாட்டோடும் பெரும் பாலும் பாண்டிய நாட்டோடும் இணைக்கப்பட்டிருந்தது. இக்காலத்திலும் இந் நகரில் வசிக்கும் மக்களிடையே கூடசில சோழ நாட்டுப் பழக்க வழக்கங்களும், சில பாண்டிய நாட்டுப் பழக்க வழக்கங்களும் பரம் பரையாய்க் கலந்து திகழ்வதைக் காணலாம்.

கி. பி 6 ம் நூற்றுண்டு முதல் 8- ம் நூற்றுண்டு முடிய பல்லவ சாம்ராஜ்யம் தென்னுடெங்கும் ஆதிக்கியம் செலுத்தியது. அப்பர் பெருமானைத் தண்டிக்க முயன்றவன் மஹேந்திர பல்லவன். ஞான சம்பந்தரால் சுரம் தீர்க்கப் பெற்றவன் கூன் பாண்டியன் என்ற, 'நின்ற சீர் நெடுமாறன்'. இவனுடைய காலம் கி பி 710 முதல் 760 வரை என்ப. அப்பரும் சம்பந்தரும் ஒருகாலத்தவர். அப்பர் பெருமான் பாடியருளிய தேவாரப்பாசுரங்களில் வரும்திண்டீச்சுரம் இதுவானுல் முதன் முதல் இத்திண்டிமா நகருக்குச் சரித்திரக் குறிப்புக் கிடைப்பது எட்டாம் நூற்றுண்டேயாகும். 10 ம்- நூற்றுண்டில் சோழ ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது, அது 12- ம் நூற்றுண்டு வரை நீடித்திருந்திருக்கிறது, அக்காலத்தில் இத்திண்டிமா நகர் சோழ நாட்டின் பகுதியாக இருந்தது. பாண்டிய மன்னர்கள் 13- ம் நூற்றுண்டிலிருந்து சிறிது காலம் சுதந்தரமடைந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில்,, மார்க்கப்போலோ என்றகிரேக்க தூதுவன் 13-ம் நூற்றுண்டின் இறுதியில் காயல் பட்டினத்துக்கு வந்திருக்கிருன், அவன் பாண்டிய நாட்டின்

சிறப்பையும், வளத்தையும், அரசியல் திறனையும் விதந்தோதுகின்றான், 14-ம் நூற்றாண்டில் ஓர்சேர அரசன் பாண்டி நாட்டைக்கைப்பற்றிப் பாண்டியனைத் தனக்குக்கப்பங்கட்டச் செய்திருக்கிறான்.

முதன் முதலாக துருக்கர் மதுரைமேல் படையெடுத்தது குலவர்த்தன பாண்டியன் காலத்தில். இது 12-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில். அப்பொழுதே மேனாட்டினரும் தென்னாட்டிற்குவந்து விட்டனர். மேனாட்டினரின் உதவியால் துருக்கரை விரட்டியபின் சோம சேகர பாண்டியன் அரசாண்டான். கி. பி. 1311- ல் பராக்ரம பாண்டியன் காலத்தில் மாலிகாபூர் படையெடுத்து மதுரையை நிலை கலக்கினான். 14-ம் நூற்றாண்டில் முகம்மதிய தாக் குதலுக்கும் ஆதிக்கத்துக்கும் தென்தமிழ் நாடு உள்ளானது.

1335- ல் விஜய நகர சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. 1365- ல் விஜய நகர ராஜ்யம் முகம்மதிய ஆதிக்கத்தை அடக்கியது. அக்காலத்தில் திண்டுக்கல்லிலும் மதுரையிலும் சேர ஆதிக்கம் இருந்தது. அப்போது இருந்தசந்திரகுமார பாண்டியன் என்பவன் விஜய நகரராஜ்யத்தின் உதவியை நாடினான். விஜய நகரமன்னன் தனது சேனாதிபதியான கம்பண்ண உடையார் என்பவரை தகுந்த சேனையோடு பாண்டியமன்னனுக்குப் படைத்துணை அனுப்பினான், அவன் சேரனைமுறியடித்து பாண்டியனுக்குப் பட்டம் கட்டினான்.

தோற்கடிக்கப்பட்ட சேரனின்வம்சத்தினர் மீண்டும்தம் ஆதிக்கத்தைப் பாண்டிய நாட்டில் ஸ்தாபிக்க முயன்றனர். கம்பம் கூடலூர்ப் பகுதிகளில் சேர சைன்னியம் முன்னேறியது. மறுபடியும் பாண்டிய அரசன் விஜய நகரத்தின் உதவியை நாடினான். அக்காலத்தில் விஜய நகர சாம்ராஜ்யத்தை ஆண்டவர் அச்சுதராயர் என்பார். அவரே சைன்னியத் தோடு பாண்டிய நாடடைந்து சேரரை விரட்டி, சேர ஆக்கிரமிப்பை ஒழித்தார். இது 16- ம் நூற்றாண்டில் நடந்தது. கி பி 1538-ல் அச்சுததேவராயர் திண்டுக்கல்லுக்கு விஜயம் செய்தார். புராணகாலத்தில் திண்டுக்கல் மலைமீது அபிராமாம்பிகைக்கும் பத்மகிரி நாதருக்கும் தர்மபாலன் என்ற சேர அரசன் கோயில் கட்டினான் என்று பார்த்தோம். கோயிலை 1538- ல் அச்சுததேவராயர் பழுது பார்த்தும் புதுப்பித்தும் கட்டினார். இந்தவரலாற்றை மலைக்கோயிலில் இன்றும் இருக்கும் ஓர்கல் வெட்டுசாசனம் காட்டுகின்றது என்றுதென்னிந்தியா சிலாசாஸன அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

புராணப்பகுதியில் நம் நகர் நடுவில் இருக்கும் ஞானும்பிகா சமேத காளஹஸ்தீச்வரர் ஆலயத்தைப் பற்றிய தொன்றும் கூறப்படவில்லை யென்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். மலைமீதுகோயில் கொண்டருளிய அபிராமாதேவிக்கும், பத்மகிரி நாதருக்கும் சித்திரை மாதத்தில் நடத்தப்படும் பிரம்மோத்சவத்தின் போது, மலைமீது கொடியேற்றி உத்சவம் தொடாங்கியதும், உத்சவமூர்த்திகளை கீழே கொண்டு வந்து இப்பொழுது காளஹஸ்தீசுவரர் ஆலயமாகத்திகழும் இடத்தில் அக்காலத்தில்இருந்த பெரியமண்டபத்தில்உத்சவம்முடியும் வரை எழுந்தருளப்பண்ணி உத்சவம் பூர்த்தியானதும் மறுபடியும் உத்சவ மூர்த்திகளை மலைக்குக் கொண்டு போய்விடுவது வழக்கமாக இருந்தது. அந்த மண்டபம் உத்சவ மண்டபமாகவும் வாகன மண்டபமாகவும் இருந்தது. அதே மண்டபத்தை விஸ்தரித்து கோயிலாக அமைத்து காளஹஸ்தீசுவரரையும், ஞானும்பிகையையும் பிரதிஷ்டை செய்து அவர்களுக்கும் நித்திய பூஜைக்கு வேண்டிய மானியங்களும் கொடுத்த பெருமை அச்சுதராயருக்கே உரியது. அவரது தீர்க்கதரிசனத்தில் பின்னால் ஒருசமயம் முகம்மதியஆதிக்கத்தில்மலைமீது இருக்கும் அபிராமாபத்மகிரீசர்சாஸ்வதமாக நகருக்குள் எழுந்தருள வேண்டியகாலம் வரும் என்று தோன்றியிருக்க வேண்டும். ஆகவே 14-ம் நூற்றுண்டில் தான் நமது நகர் நடுவில் எழுந்தருளியிருக்கும் காளஹஸ்தீசுவர ஞானும்பிகா ஆலயம் நிர்மாணம் பண்ணப்பட்டது. 1958-ம் ஆண்டு நடந்தேறிய அஷ்டபந்தனகும்பாபிஷேகத்தின் போது ஞானும்பிகையின் பீடத்தினுள் "சக்ராஜம்" என்று சிறப்புப் பெயர் பெற்ற காதிவித்யா பரமான ஸ்ரீசக்ரயந்த்ரம் தங்கத்தகட்டில் இருந்ததோடு பலவிஜய நகர சாம்ராஜ்ய வெள்ளி தங்க நாணங்கள் இருந்ததை கும்பாபிஷேகத்தில் பங்கெடுத்துக் கொண்ட பலரும் பார்த்தோம்.

மலைக்கோயிலைப் புதுப்பித்து, நகர நடுவில் காளஹஸ்தீசுவர் ஆலயத்தைக் கட்டிய தோடல்லாமல், மலையடிவாரத்தில் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயிலையும் கட்டியிருக்கிறுர். ஆனால் அது முழுதும் அழிந்து போனது. அதனை மறுபடி புனருத்தாரணம் செய்ய அடியேன் உள்ளிட்ட பல அன்பர்கள் முயற்சி செய்து பல ஊர்களில் சென்று நன் கொடை பெற்று, அந்த இடத்தை சர்க்காரிடம் ஜாரி பெற்று கட்டடம் எழுப்ப வாணம் தோண்டிய போது முன்னிருந்த கோயிலின் கல் தூண்களும் விட்டங்களும் ஏராளமாய்க் கிடைத்தன. அவற்றோடு ஓர் பெரிய சிதைந்து போன கல்வெட்டும் கிடைத்தது. அதை ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயிலின் வாசலுக்குத் தெற்குப்புரம் நிறுத்தி வைத்தோம். பயிற்சி பெற்ற நிபுணரைக் கொண்டு எஞ்சியிருந்த சிறு பாகத்தைப் பார்த்த போது ஆதியில் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில் அச்சுத தேவ்ராயரால் கட்டப்பட்

டது புலனாயது. அம்மட்டேயன்றி ஸ்ரீனிவாசப் பெருமாள் ஆலயத்துக்குத் தெற்கே இரண்டு தெப்பக் குளங்களும் கட்டியிருக்கிறார். இப்பொழுது திறந்த வெளி அரங்கம் இருக்கும் இடத்தில் ஓர் பெரிய தெப்பக்குளம் மய்ய மண்டபத்தோடு இருந்திருக்கின்றது. முகம்மதிய ஆட்சியில் அவை மறைந்தன.

அவர் பாண்டி மன்னனுக்கு உதவியாக வந்து சேர மன்னனை முறியடித்தபின், மதுரையில் தமது பிரதி நிதியாக தமது வம்ஸத்தைச் சேர்ந்த விட்டலராயர் என்பவரை நியமித்தார். பாண்டிய மன்னன் பெயரளவில் அரசனாக இருந்தான். விட்டல தேவராயரே அரசியலைச் செம்மையாக நடத்தி வந்தார். கி. பி. 1543ல் விட்டல தேவராயர் திருவிதாங்கூர் மன்னன் பாண்டிய நாட்டில் ஆக்ரமித்த போது அவனோடு எதிர்த்துப்போராடி விரட்டியடித்தார். இவர் 1543 முதல் 1558 முடிய மதுரை ஆட்சி நிர்வாகத்தை வகித்து வந்தார். இவர் ஆட்சியின் இறுதி நாட்களில் சோழ அரசன் பாண்டிய நாட்டைக் கைப்பற்ற முயன்றான். மறுபடியும் விஜய நகரத்துக்கு உதவி கோரி தூது அனுப்பப்பட்டது. விஜய நகர அரசர் அப்போது தனது சேனாதிபதியாயிருந்த ''நாகம நாயக்கர் என்பவரை பெருஞ் சேனையோடு அனுப்பி வைத்தார். நாகம நாயக்கர் சோழனை முறியடித்து விரட்டினார். ஆனால் பாண்டிய மன்னனுக்குப் பட்டம் கட்டாமல் தானே அரசுக் கட்டில் ஏறினதுமன்றி, விஜய நகர அரசருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசராக இருக்க மறுத்து சுதந்தரக் கொடியை உயர்த்தினார். விஜய நகர மன்னன் சீற்றங் கொண்டான். தன் சபையைக்கூட்டி ''உங்களில் யார் சென்று நமக்கு விரோதமாய்க் கிளம்பின ராஜதுரோகியின் தலையைக் கொண்டு வருவீர்கள்'' என்று கோப வேசமாய்க் கேட்டான். யாவரும் ஆச்சரியப்படும்படி நாகம நாயக்கரின் புதல்வரான விஸ்வநாத நாயக்கரே அக்கட்டளையை நிறை வேற்ற முன் வந்தார். அவரோடு பெரு ம்படையும் மதுரை வந்தது. விஸ்வநாத நாயக்கர் தன் தகப்பன் நாகம நாயக்கரைப் போரில் வென்று சிறைப்பிடித்தார். விஜய நகர மன்னன் இந்தச் செய்தியைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி கொண்டவனாய் நாகம நாயக்கருக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து விஸ்வநாத நாயக்கரையே தமது பிரதி நிதியாக மதுரையில் இருந்து வரும்படியும், பாண்டிய மன்னனுக்கு முடிசூட்டும் படியும் கட்டளையிட்டார். அதன் படியே பாண்டிய மன்னனுக்கு முடி சூட்டப்பட்டது. ஆனால் விஸ்வநாத நாயக்கரே அரசாங்கத்தை நடத்தி வந்தார். இது நடந்தது கி. பி. 1559ல். பாண்டிய மன்னன் மதுரையை விட்டுத் திருநெல் வேலிக்குப் போய் விட்டான். அதிலிருந்தே நாயக்கர் வம்ஸம் மதுரையில் வேரூன்றி விட்டது, அப்பொழுது திண்டிமா நகர் பாண்டிய

நாட்டின் வட பகுதியாக இருந்தது. விஸ்வநாத நாயக்கர் பாண்டிய நாட்டின் எல்லையை பலப்படுத்த முற்பட்டார். இவர் 1563ல் இறந்தார். அவருக்குப் பின் அவர் மகன் குமார கிருஷ்ணப்ப நாயக்கர் கவர்னராக இருந்து மதுரையை ஆண்டார். 1565ல் தலைக்கோட்டை யுத்தத்தில் விஜய நகர சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்தது. ஆகவே குமாரகிருஷ்ணப்ப நாயக்கர் பாண்டிய நாட்டின் மன்னனாகவே முடி சூட்டிக் கொண்டார். பழைய பாண்டிய சந்ததி இதோடு முடிந்தது. குமாரகிருஷ்ணப்ப நாயக்கர் 1573ல் இறந்தார். அவருக்குப் பின் அவர் மகனும், பேரன் மார்களும் அரசாண்டு 1602ல் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் அரசரானார். இவர்தான் 1605ல் திண்டுக்கல் மலைக்கோட்டையைக் கட்டினவர். மலைமீது கோட்டையைக் கட்டி அதற்கு வெளி அரணாக மலையடி வாரத்தில் ஓர் கோட்டையையும் கட்டினார். இதற்குப் பேட்டைமதில் என்று பெயர். பேட்டை மதிலுக்கும் மலையடி வாரத்துக்கும் இடையே மலையை ஒட்டி ஓர் அகழியும் உண்டாக்கப் பட்டது. புராண காலத்தில் பத்மபுஷ்கரணியாக மலையைச் சுற்றியிருந்த நீர் நிலையே இந்த அகழியாக உருவாகியது என்னலாம். மலையடிவாரத்தில் கட்டப்பட்ட கோட்டை பிற்காலத்தில் சிதைந்து போய் பேட்டை மதில் என்ற பெயரால் இப்பவும் அதன் சின்னங்கள் நகரில் பல பாகங்களில் காணப்படும் நிலைமையை அடைந்தது. மதுரை ஜில்லா கெஜெட்டியரில் இந்தக் கோட்டை கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையின் வாசல்களில், கிழக்கு வாசல் தற்காலத்தில் இருக்கும் அமெரிக்கன் மிஷன் காம்பௌண்டுக்கு முப்பது கஜத்துக்கு மேற்கேயும், வடக்கு வாசல் பழனி வேடசந்தூர் பாதைகள் பிரியும் இடத்திலும், தெற்கு வாசல் இப்பொழுது வேகம்பூரிலிருக்கும் மசூதிக்குப் பக்கத்திலும் இருந்தன. மேட்டுராஜபட்டியென்று கூறப்படும் பகுதி அக்காலத்தில் மேட்டுப்பாளையம் என்றழைக்கப் பட்டு வெளிக் கோட்டைக் காவலுக்காக ஓர் சிறு சைன்னியம் வைக்கப்பட்டிருந்தது. மேட்டுப்பாளையம் என்பது ஆங்கிலத்தில் MOAT அல்லது அகழி என்று பொருள் படுமாதலால் அந்த சைன்னியம் அகழியைக் காக்க வைக்கப் பட்டது என்று கெஜெட்டியர் கூறுகின்றது.

முத்து கிருஷ்ணப்ப நாயக்கருக்குப்பின் முத்து வீரப்ப நாயக்கரும். அவருக்குபின் திருமலை நாயக்கரும் மதுரையை அரசாண்டார்கள். நாயக்கர்கள் காலத்தில்தான் திண்டுக்கல்லின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அதற்குமுன் அச்சுத தேவராயர் அதை உணர்ந்தாரேனும் பாதுகாக்கும் ஏற்பாடுகள் ஒன்றும் செய்ய வில்லை, பொதுவாய் விஜய நகர சாம்

ராஜ்யகாலத்தில் திண்டுக்கல் ஓர் முக்கிய அரசியல் எல்லை யாகக்கருதப்பட்டு அதனை பலப்படுத்த முற்பட்டனர் என்று கூறலாம். மேற்கே சேரநாடும் வடக்கே சோழ நாடும் இருந்ததால் திண்டுக்கல்லை இவ்விரண்டு நாடுகளையும் எதிர்க் கும் எல்லைக் களமாக ஆக்கிக் கொண்டார்கள். திருமலை நாயக் கர் பட்டத்துக்கு வந்தபின் மதுரையில் பல ஆலயத்திருப்பணி கள் செய்தார். அதுபோலவே திண்டுக்கல்லிலும், மலைக் கோயிலை யும் கோட்டையையும் பழுது பார்த்தார், காளஹஸ்தீசுவர சுவாமி கோவில்முன் மண்டபம் கட்டினார். தாடிக்கொம்பில் ஸௌந்தரராஜப் பெருமாள் கோயிலைக்கட்டினார். தாடிக் கொம்புக் கோயில் மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கலைக் கூடம். இவர் நல்லமுறையில் அரசு செலுத் தினார். இவர் திருச்சிராப்பள்ளியைத்தமது தலை நகராக அமைத்துக் கொண்டார். அவருடைய அரசியலைப்பற்றி 1659ல் ஓர் ஜெசூட்பாதிரி எழுதிய கடிதத்தில் நன்கு துலக்கப்பட்டி ருக்கிறது. மக்களுடைய மத விஷயத்தில் தலையிடாமல் சைவம், வைணவம், கிருஸ்தவமதம், மகம்மதியமதம் இவை யாவற்றிற்கும் ஆதரவு அளித்திருக்கிறார் என்று அக்கடிதத்தில் காணப்படுகின்றது.

திருமலை நாயக்கர் 1653-ல் திண்டுக்கல் வந்து தங்கி யிருந்தார். அவருக்கு சிலகாலமாகவே சிலேஷ்ம நோய் இருந்துவந்தது. கண்களிலும் நாசியிலும் நீர்வடிந்து கொண் டேயிருக்கும். திருச்சிராப்பள்ளியில் அவர் இருந்தபோது ஸ்ரீரங் கநாதனை இந்நோயைத்தீர்க்குமாறு வேண்டிக் கொண்டார். ஆனால் அது தீரவில்லை. அவர் திண்டுக்கல்லில் தங்கியிருந்த போது அவர்கனவில் மதுரை மீனாக்ஷி அம்மன் பிரத்தியக்ஷமாகி அவர் தலை நகரை மதுரைக்கு மாற்றிக் கொண்டால் அவரைப் பீடித்திருந்த நோய் விலகும் என்று சொல்லி மறைந்தாள். அதன்படியே அவர் மதுரையைத் தமது தலைநகரமாக்கி இப் பொழுது திருமலை நாயக்கர்மஹால் என்ற அற்புதமான அரண் மனையையும், மாரியம்மன் தெப்பக்குளம், புதுமண்டபம், ராயகோபுரம், தமுக்கம் உல்லாசவிடுதி, மீனாக்ஷிசுந்தரேசர் கோவிலின் வெளிப்பிராகாரம் முதலிய திருப்பணிகளைச் செய் தார். ஆலயத்திருப்பணிகளுக்காக ஐந்து லட்சம் பொற்காசுகள் ஒதுக்கிவைத்தார். இந்தவிவரங்கள் மதுரை ஜில்லா கெஜட்டி யரில் உள்ளன. அவருடைய ஆட்சிக்கு உள்பட்டபிரதேசம் இப்பொழுது இருக்கும், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக் கோட்டை, சிவகங்கை மாவட்டங்களாக இருக்கும் இடங் களும் திருவிதாங்கூரில் கன்னியா குமரிப்பகுதியுமாகும். இவரு டையஇறுதி நாட்களில் விஜய நகரஅரசருக்குக் கப்பம் கட்டு

வதை நிறுத்திக் கொண்டு முகம்மதியரோடுசமாதான உடன் படிக்கைசெய்துகொண்டு, தனதுஇளையசகோதரர் குமாரமுத்து நாயக்கர் தலைமையில் ஓர் பெரும் சேனையை அனுப்பி மைசூர் ராஜ்யத்தைமுற்றுகை இடச் செய்தார். குமாரமுத்து நாயக்கரும் மைசூரைக் கைப்பற்றி அவ்வரசனைச் சிறைப் படுத்தினர். ஆனால் இந்த வெற்றியைப்பார்க்காமலே அவர் இறந்துவிட்டார். அவரின்மரணம் இன்னும் மர்மமாகவேயி ருக்கிறது. அதுபற்றிபலகர்ண பரம்பரைச் செய்திகள் உலவி வருகின்றன. இவர்மைசூரை முற்றுகையிடச் செய்தது, அவர் காலத்திலேயே மைசூர் திண்டுக்கல்லை முற்றுகையிட்டுக் கைப் பற்றியதற்குக் காரணமானது. (34) திருமலைநாயக்கருக்குப் பின் அவர் மகன் அழகாத்ரி நாயக்கரும், அவருகுப்பின் அவர் மகன் சொக்கநாத நாயக்கரும், அவருக்குப்பின் அவர் மகன் முத்து வீரப்ப நாயக்கரும் அரசாண்டார்கள். முத்து வீரப்ப நாயக் கர் தமது 22-வது வயதிலேயே வைசூரியால் இறந்து போக அவருடையதாயார் மங்கம்மாள் அரசியலை ஏற்றுமிகத்திறமை யாக ஆச்சி நடத்தினள். அவள்தான் திண்டுக்கல் மலைக்கு ஏறிச்செல்ல 600- படிகளை வெட்டுவித்தார், இதற்கு சிலநூற் ருண்டுகளுக்கு முன்பே மேனாட்டினர் தென்னாட்டில் புகுந்து விட்டனர், சுதேசமன்னர்களுக்குள் சண்டை மூட்டிக்குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தனர். 12-ம் நூற்றுண்டின் ஆரம் பத்திலேயே குலவர்த்தன பாண்டியனுக்கு மேனாட்டினர் படைத் துணை உதவி துருக்கத்தாக்கு தலைஎதிர்த்து போர்புரிந்து விரட்டினர் என்ற செய்திமுன்பே கூறப்பட்டது. மேனாட்டினர் வந்து சில வருடங்களுக்கெல்லாம் மேனாட்டுக் கிருஸ்தவ பாதிரிகள் தமிழ் நாட்டில் வந்து மத மாற்றம் செய்ய ஆரம் பித்தனர்.

மேனாட்டினரில். பலதேசத்தைச் சேர்ந்தவர்களும் இங்குவந்து ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு சுதேசமன்னர்களுக்கு உதவிசெய்யும் வியாஜத்தால் தென் நாட்டில் ஒவ்வோர் இடங்களில் தமதுஇருக்கையை ஸ்தா

---

(34) 1630-ம் ஆண்டில் மைசூர் சமஸ்தானம் திண்டுக்கல்லைத் தாக்கியது. திருமலை நாயக்கரின் சேனைத்தலைவருள் ஒருவ ரான, இராமப்பையன், என்பவரின் தலைமையில் சென்ற சைன்னியம் மைசூர் சைன்னியத்தை முறியடித்தது. ஆனல் 1655-ல் மைசூர் சமஸ்தானம் திண்டுக்கல்லைப் பிடித்துக் கொண்டது. 1659-ல் மறுபடியும் திருமலை நாயக்கர் தமது பாளையக்காரரின் உதவியால் திண்டுக்கல்லை மீட்டிக் கொண் டார். அதே ஆண்டில் தமது எழுபதாவது வயதில் மரண மடைந்தார்.

பித்துக் கொண்டனர். மேனுட்டினரின் சூழ்ச்சியே சரித்திரத்தில் பேசப்படும் கர்னுடகயுத்தத்தை விளைத்தது. முகம்மதிய அரசர்கள் தங்கள் ஆட்சியை தமிழ்நாட்டில் நிறுவ முற்பட்டனர். மேனுட்டினர் இதற்குப் பெரிதும் உதவினர். 1736ம் ஆண்டில் சண்டா சாகேப் என்பவர் கடைசியாக மதுரையை யாண்ட வங்காரு திருமலை நாயக்கரை அம்மைய நாயக்கனூர் போரில் வெற்றிகண்டு திண்டுக்கல்லைகைப்பற்றிக் கொண்டார். திண்டுக்கல் கோட்டையில் தனது இளைய சகோதரர் சதக் சாகேப் என்பவரை ஓர் சைன்னியத்தோடு அமர்த்தினுர். அவர் நான்கு ஆண்டுகள் திண்டுக்கல்லில் இருந்து அரசுநடத்தினுர். 1740ல் சதக்சாகேப் தன்அண்ணன் மஹாராஷ்ட்ரரோடு செய்த போருக்குப் படைத்துணையாக அழைக்கப்பட்டார். சதக்சாகேப் போகும் போது, இமாம் உல்லா என்பவரைத் திண்டுக்கல்லில் கவர்னராக நியமித்து விட்டுச் சென்றுர்.

சண்டாசாகேபால் தோற்கடிக்கப் பட்ட வங்காரு திருமலைநாயக்கர் மஹாராஷ்டிரரைத் தனக்கு உதவிபுரியும்படி கோரினுர். அவ்வாறே மஹாராஷ்டிரசைன்னியம் மதுரையைத் தாக்கி முகம்மதிய ஆட்சியை விரட்டி வங்காரு திருமலை நாயக்கரைமீண்டும் அரசனுக்கியது. அதோடு ராயர் அப்பாஜி என்று பெயர் வழங்கிய அப்பாஜி ராவ் என்பவரை மதுரையில் மஹாராஷ்டிர பிரதிநிதியாகவும் நியமித்தது.

1742ல் மைசூர் படை பிர்க்கி வெங்கட்டராயர் என்பவரின் தலைமையில் திண்டுக்கல்லை முற்றுகையிட்டது. அப்போது கவர்னராக இருந்த இமாம் உல்லா சண்டை செய்யாமலே திண்டுக்கல் சீமையை மைசூருக்கு ஒப்படைத்து விட்டார். பிர்க்கி வெங்கட்டராயர் திண்டுக்கல்லில் மைசூரின் பிரதிநிதியாக அமர்ந்து ஆட்சி நடத்தினுர். அவர் நம்நகர் வடக்கு ரதவீதியின் கிழக்குக் கோடியில் ஓர்சத்திரம் கட்டினுர். அதன்காரணமாக அத்தெருவுக்கு இப்பொழுதும் சத்திரம் தெரு என்று பெயர் வழங்கி வருகிறது. அவரது ஆட்சியில் திண்டுக்கல் சீமையில் பதினெட்டுப் பாளையங்கள் இருந்தன. அவையாவன. 1. கண்டம நாயக்கனூர், 2. தேவாரம், 3. போடிநாயக்கனூர், 4. ஏரசக்க நாயக்கனூர் 5. பள்ளியப்ப நாயக்கனூர், 6. நிலக்கோட்டை, 7. விருப்பாட்சி, 8. கன்னிவாடி, 9. மறுநூத்து, 10 எமக்கலாபுரம், 11. தொட்டையன் கோட்டை. 12. அம்பாத்துரை. 13. அம்மய நாயக்கனூர் 14. தவசிமடை. 15. மாம்பாரை. 16. இடைய கோட்டை, 17. கோம்பை, 18. சந்தையூர். என்பன; அதாவது தற்காலத்தில் திண்டுக்கல் தாலூகா, பழனிதாலூகா; நிலக்கோட்டைத்தாலூகா, பெரியகுளம்

தாலூகாக்களும், திருமங்கலம் தாலுகாவில் ஒருபகுதியும் சேர்ந்து திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டதுவே திண்டுக்கல் சீமையாகும். இந்தபாளையங்களில் சில பிர்க்கி வெங்கட்டராயருக்குக் கீழ்ப்படிய மறுத்தன. அவர்களிட மிருந்து கிஸ்த்தி வசூல் செய்யவும் அவரால் முடியவில்லை. ஆகவே 1748 ல் அவரை நீக்கிவிட்டு வெங்கிடப்பா என் பவரைகவர்னராக மைசூர் சமஸ்தானம் நியமித்தது. அவ ராலும் பாளையக்காரரை அடக்கமுடியாமல் போகவே 1751 ல் நாமகிரி ராஜா கவர்னராக நியமிக்கப்பட்டார். அவரும் தன்இலட்சியத்தில் தோல்வியே கண்டார். ஆகவே 1755 ல் மைசூர் சமஸ்தானம் ஹைதர் அலி என்ற சேனு வீரரை கவர்னராக நியமித்து திண்டுக்கல்லுக்கு அனுப்பிவைத்தது. அவர் மிகவும் வெற்றிகரமாகத் தமக்கு அடங்காத பாளையக் காரரை அடக்கிக் கப்பம் செலுத்தும்படி செய்தார். 1755ல் சோழவந்தானையும் பிடித்துக் கொண்டார். அதுவும் திண்டுக்கல் சீமையோடு இணைக்கப் பட்டது. இவ்வாறு அவர் கண்டவெற்றிகளே அவரது ஆசையை தூண்டிவிட்டு முடிவில் மைசூர்சிம்மாஸனுதிபதியாகும் நிலைமை வரை வழி கோலியது என்றுவில்கீஸ் என்ற சரித்திர ஆசிரியர் எழுதியுள்ளார். வத்த லக் குண்டில் மதுரை கான்சாஹேப் என்பவரோடு யுத்தம் செய்தார். 1756 ல் மைசூர் சமஸ்தானத்துக்கு அவருடைய சேவை தேவையாக இருந்ததால் திண்டுக்கல் சீமைக்கு வெங்கிட்டப்பா என்பவரை பிரதிநிதியாக நியமுகம் செய்து ஹைதர் அலியை திருப்பிஅழைத்துக் கொண்டது. அவர் சென்று மிகக்குறுகியகால அளவிலேயே மைசூர் சிம்மா ஸனத்தில் அமர்ந்து விட்டார். 1772 ல் தனது மனைவியின் சகோதரி புருஷனு மிர்சாகிப் என்பவரை திண்டுக்கல் சீமைக்குக் கவர்னராக நியமுகம் செய்து அனுப்பிவைத்தார். மிர்சாஹிப் திண்டுக்கல் கோட்டையை மேனுட்டு எஞ்சினியர் கள் உதவியால் பழுதுபார்த்து சிலமாறுதல்களும் செய்து முன்பிருந்த கிழக்குக் கோட்டை வாசலை மூடிவிட்டு இப்பொழுது இருக்கும் வாசலைக்கட்டினுர். அந்தவாசலின் மேல்புறத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய பிராத் தனையை பெர்சிய மொழியில் பொறித்தவர் இவரே. இவரது மனைவி அமீர்-உம்- நிஸ்ஸா-பேகம் என்பவள் பிரசவவேதனை யில்மாண்டாள். அவளுடைய சமாதியே இப்பொழுது வேகம்பூர், என்ற பகுதியில்காணப்படுவது, அவள் மகுதியி லிருக்கும் பகுதிக்கு பேகம்பூர் என்ற பெயரும் வழங்கிவர லாயிற்று.

1783 ல் ஆங்கிலேய சைன்னியம் ஒன்று காப்டன்லாங் என்பான் தலைமையில் திண்டுக்கல்லைக்கைப்பற்றியது; ஆனுல்

1784 ல் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி திண்டுக்கல் சீமை மைசூருக்குத் திருப்பிக்கொடுக்கப் பட்டது. இதுமுதலாவது மைசூர் யுத்தத்தின் இறுதியில் உண்டான மங்களூர் உடன்படிக்கைப் படியாகும். ஹைதர்அலி இறந்தபின் அவர் குமாரர் டிப்புசுல்டான் அரசரானார். 1788 ல் திண்டுக்கல்லுக்கு விஜயம்செய்தார். பாளையக்காரர்களை அடக்கி ஆண்டார். சுவாமிதரிசனம் என்ற பெயரால் ஒற்றர்கள் கோட்டைக்குள் வரக்கூடும் என்ற எண்ணத்தால், மலைமீது கோயில் கொண்டிருந்த அபிராமாம்பிகையையும், பத்மகிரிநாதரையும், இன்னும் மற்றஉத்தவ மூர்த்திகள், பரிவாரதேவதைகள் யாவற்றையும் மலைக்குக் கீழேகொண்டு போய் காளஹஸ்தீசுவரசுவாமி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யக்கட்டளை யிட்டார். அந்நாளிலிருந்து அபிராமாம்பாளும் பத்மகிரீசரும் நகரத்தின் நடுவிலேயே ஸ்திரமாக இருந்து ஆஸ்திகச் செல்வர்களுக்கு அனுக்ரஹம் செய்து வருகிறார்கள். முன்போலவே அவர்களின் உத்சவம் இக்கோயிலில் இன்னும் நடைபெற்று வருகின்றது. காளஹஸ்தீசுவரர் ஞானம்பிகைக்கு என்று தனித் தனி உற்சவ மூர்த்திகள் இல்லாதிருப்பதற்கும், தனித்திரு விழா இல்லாமல் இருப்பதற்கும் காரணம் இதுதான்.

1790ம் ஆண்டு இரண்டாம் மைசூர் யுத்தம் ஆரம்பித்தது. அதில் கர்னல் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் என்பவர் திண்டுக்கல்லை முற்றுகையிட்டு 1790ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இருபதாம் தேதியில் திண்டுக்கல்லைக் கைப்பற்றிக் கொண்டார். 1792ம் ஆண்டு நடந்த உடன்படிக்கையின் படி, டிப்பு சுல்டான் திண்டுக்கல் சீமையை ஆங்கிலேயருக்கே அளித்து விட்டார். அதிலிருந்து ஆங்கிலேய ஆட்சி ஆரம்பித்தது. மதுரை மாவட்டத்தில் முதன் முதலாக ஆங்கிலேயர் கையில் கிடைத்த பகுதி திண்டுக்கல் சீமைதான். 1798ல் ஆங்கிலேயர் திண்டுக்கல் கோட்டையை பழுது பார்த்து பலப்படுத்தினர். பீரங்கிகள் வைக்கப்பட்டன. மூலைக்கு மூலை "சென்டினல் அறைகள்" கட்டப்பட்டன. ஒரு சமயம் திண்டுக்கல் மலையின் மேல் தளத்தில் இருக்கும் குகையில் நிலக்கோட்டை விருபாக்ஷி பாளையக்காரரை சிறைப் படுத்தி வைத்திருந்தனர். புராணத்தில் அசுரர்களுக்கு பயந்து ஓடி வந்த தேவர்கள் வசித்ததாக கூறப்படும் குகை தான் இவ்வாறு சிறைக் கூடமாகப்பயன் படுத்தப் பட்டது. 1798முதல் 1859முடிய திண்டுக்கல் கோட்டையில் ஆங்கிலேய சைன்னியம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. 1860ல் 40பேர் அடங்கிய ஒரு சிறு சைன்னியமே ''என்சைன் ஸ்டோட்டன்'' என்பவன் தலைமையில் இங்கு இருந்தது. அதுவும் 1801ல் அப்புறப்படுத்தப் பட்டது. 1801ல் ஆங்கில ஆட்சி மதுரையில்

ஸ்தாபிக்கப் பட்டபோது, திண்டுக்கல் சீமையை மதுரை மா வட்டத்தோடு இணைத்து, பல சிறுபகுதிகளாகப் பிரித்துத் தாலூகாக்களாக மாறியது. அப்போது திண்டுக்கல் தாலூகாவின் முக்கிய அலுவலகம் தாடிக்கொம்பில் வைக்கப்பட்டுத் தாடிக்கொம்புத் தாலூகா என்றே வழங்கிவந்தது.

திண்டுக்கல்லின் அமைப்பு முற்காலத்திலிருந்தே மூன்று சாம்ராஜ்யங்களுக்கு எல்லைக்கல் போன்று இருந்து வந்தது. பண்டைய காலத்தில் சேர, சோழ பாண்டிய நாடுகளுக்கும், பின் மைசூர், விஜயநகரம், கர்னாடக நவாபு சமஸ்தானங்களுக்கும் ஓர் மத்திய இடமாக அமைந்திருந்ததின் காரணமாக, ஆதி காலத்திலிருந்தே திண்டுக்கல் பலதாக்குதல்களுக்கு உள்ளாகிப் பல அரசவம்சத்தினரின் ஆட்சிக்கு அவ்வப்போது உட்பட்டதாக இருந்தது. முதன் முதலில் 1605ம் ஆண்டில் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரால் கட்டப்பட்ட கோட்டை, பின்னால் திருமலை நாயக்கராலும், சதக்சாகேப் என்பவராலும், மிர்சாகேப் என்பவராலும், கடைசியாக 1798ல் ஆங்கிலேயர்களாலும் அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டும், திருத்தியமைக்கப்பட்டும், நல்ல நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் மலை மீது இருக்கும் கோயில் யார் கட்டினது எப்பொழுது கட்டப்பட்டது என்பதற்கு சரித்திரப் பூர்வமான ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. புராணத்தில் சேர அரசன் தர்ம பாலன் என்பவன் கட்டினான் என்ற குறிப்பு மட்டுமே கிடைக்கின்றது.

18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முகம்மதியாரும், பிற்பகுதியில் கிருஸ்தவரும் முதன் முதலாக மதமாற்றுதல் செய்யத்தொடங்கினர். அதிலிருந்து பல முகம்மதிய குடும்பங்களும், கிருஸ்தவக் குடும்பங்களும் திண்டுக்கல்லில் தோன்ற ஆரம்பித்தன. 18ம் நூற்றாண்டுக்கு முன்பு ஹிந்துக்களே இருந்து வந்தனர். நம்நாட்டிலேயே தோன்றின பௌத்த சமண மதங்களை வெற்றிகண்ட நமது ஹிந்துசமயம், முகம்மதிய, கிருஸ்தவசமயங்களை ஒன்றும் செய்யமுடியவில்லை. அதன் காரணம், பௌத்தசமண மதங்களை முறியடிக்க அக்காலத்தில் அரசர்களும், சைவ, வைணப்பெரியார்களும் தோன்றியிருந்தனர். ஆனால் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் முகம்மதிய ஆட்சியும், பிற்பகுதியில் கிருஸ்தவ ஆட்சியும் நிருவப்பட்டனவாதலால் ஆட்சி பீடங்களில் அமர்ந்திருந்தவர்களின் சமயங்களை ஹிந்து சமயத்தால் வெற்றிகாண முடியவில்லை. ஆதலால் முகம்மதியகிருஸ்தவ ஆட்சிகாலத்தில் அம்மதங்கள் இங்கு வேரூன்றிவிட்டன. முதன் முதலில் 1606ம் ஆண்டிலேயே மதுரையில் ராபர்ட்டு நொபிலி என்ற ஜெசூட் பாதிரியாரால் கிருஸ்தவ சமயப்பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது. 1708ம் ஆண்டில் சில

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கிருஸ்தவர்களாக மதம் மாறி திண்டுக்கல்லில் வசித்தனர். இப்பொழுது மேட்டுப்பட்டியில் இருக்கும் மாதா கோயில் 1729ல் கட்டப்பட்டது. முகம்மதிய ஆதிக்கத்தில் கிருஸ்தவ சமயப்பிரசாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. மறுபடி 1838ல் இப்பகுதியில் ரோமன் கதோலிக் பாதிரிகள் மதமாற்றுதல் செய்ய ஆரம்பித்தனர். 1872ல் இப்பொழுது நம் நகர் நடுவில் இருக்கும் மாதா கோயில் கட்டப்பட்டது. 1836 லேயே அமெரிக்கன் மிஷன் பாதிரிகள் இங்கு வந்து மதமாற்றுதல் செய்தனர். இப்பொழுது இருக்கும் அமெரிக்கன் மிஷன் சர்ச் 1860ல் கட்டப்பட்டது. 1863ம் ஆண்டில் லூதரன் மிஷன் கிருஸ்தவபாதிரிகள் பஞ்சம்பட்டி என்ற இடத்தில் தாபிதமானார்கள். ஹிந்து சமயத்தாரால் பெருபான்மைமக்களை, கிழ்வகுப்பினர், தாழ்த்தப்பட்டவர், தீண்டப்படாதார் என்று ஒதிக்கி வைத்ததன் காரணத்தாலேயேஅத்தகைய மக்கள் பிறமதங்களைத்தழுவ ஏதுவாக இருந்தது. ஹிந்துசமூகத்தாரால் அவர்களுக்கு அளிக்கப்படாத பலஉரிமைகளை மதம்மாறுதலால் அவர்கள் அடைந்தனர். இலவசக்கல்வி, உத்யோகம், பட்டம், பதவி முதலியன அவர்களுக்கு வழங்கப்பட்டன. அரசாங்கமும், கிருஸ்தவ சமயத்தைச்சார்ந்த ஆங்கிலேயர் கையில் இருந்தமையால் மதமாற்றம் தங்குதடையின்றி நடந்துவந்தது. கிருஸ்தவப் பாதிரிகளுக்கு பலஇடங்களில் நிலமானியங்கள் சர்க்காரால் அளிக்கப்பட்டன. அவர்கள் பல கிருஸ்தவக் கோயில்களையும், பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் கட்டினர். நமது நகரில் தற்போது பத்தாயிரத்துக் மேற்பட்ட கிருஸ்தவ சகோதரர்களும், ஏழாயிரத்துக்கு மேற்பட்டமுகம்மதிய சகோதரர்களும்இருந்து வருகின்றனர். ஆயினும்இங்கு காணப்படுவது போல மும்மதத்தினரும் சகோதர வாஞ்சையுடன் ஒருவரோடொருவர் பழகுவதை வேறெங்கும் காணமுடியாது. சற்றேறக்குறையமுன்னூறு ஆண்டுகளுக்கு முன்புவரை ஹிந்துசமூகத்தைச்சார்ந்திருந்த பரம்பரை சமூக உணர்ச்சி அவர்கள் இரத்தத்தில் ஊறியிருப்பதுவே இந்த ஒற்றுமைக்குக்காரணம். வடமொழியிலிருந்த இந்தத்தல புராணத்தை நல்லமொழி வல்லுனரால்தமிழாக்கம் செய்து எழுதிவைத்த பெருமை ஓர் முஸ்லீம்சகோதரருக்கும், அதை அன்புடன் அளித்து வெளியிட உதவிய பெருமை ஓர் கிருஸ்தவ பாதிரியாருக்குமே சேரும் என்ற நிகழ்ச்சியே என்கூற்றை வலியுறுத்தும்.

1792ம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர் திண்டுக்கல் சீமையில் பல சீர்திருத்தங்கள் செய்து, பாளையக்காரரை அடக்கி அவர்களிடம் கப்பம் வாங்கும் நிலைமையை ஏற்படுத்திக் கொண்டனர். அக்காலத்தில் இருந்த பதினெட்டு பாளையங்

களிலும் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள்" "தொட்டிய நாயக்கர்" "கம்பளத்து நாயக்கர்" என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். தமிழில் "தொட்டிய நாயக்கன்" என்ற சொற்றொடர் தெலுங்கில் தொட்டய அதாவது 'பெரிய' நாயக்கர் அதாவது தலைவர் என்றதிலிருந்து திரிந்தது. இவர்களைப் பற்றிய வரலாறு என்னவெனில் ஆதியில் இவர்கள் துங்கபத்திரா நதிக்கு வடக்கே குடியிருந்தவர்கள். முகம்மதியத் தாக்குதலுக்கு பயந்து விஜயநகர் சாம்ராஜ்யத்துக்கு வந்து சைன்னியத்தில் சிப்பாய்களாகவும் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர் பாண்டிய மன்னன் விஜயநகர அரசரின் படைத்துணையை நாடியபோது அங்கிருந்து வந்தசைன்னியத்தோடு தமிழ் நாடு அடைந்தனர். அவர்கள் ஆதியில் தெலுங்கு மொழி பேசினவர்கள். இப்பொழுது தமிழ் மொழியையே தாய்மொழியாக்கிக் கொண்டனர். விஜயநகர சைன்னியத்தோடு வந்தவர்கள் தமது பலத்தாலும், செல்வாக்காலும், வீரத்தாலும் பலபகுதிகளை அரசரிடமிருந்து பெற்று சிற்றரசர் போன்று ஆட்சி நடத்தினர். அவர்கள் அவ்வப்பகுதிகளைக்காப்பாற்ற சைன்னியத் தலைவர்களாக இருந்தமை பற்றி அவர்களைப் பாளையக்காரர் என்றும் அவர்கள் இருந்த பகுதிகளை பாளையங்கள் என்றும் அழைத்தனர்.

1801ம் ஆண்டில் ஆங்கில ஆட்சி நிருவப்பட்ட போது இந்தப் பாளையங்களில் சிலவற்றை அந்தந்த பாளையக்காரருக்கே கொடுத்து அவர்கள் மூலம் "பேஷ்குஷ்" என்று கூறப்படும் வரிப்பணத்தை வசூலிக்க ஏற்பாடு செய்தனர். முதன் முதலில் இந்த ஏற்பாட்டைச் செய்தது ஹைதர் அலி என்ற மைசூர் சமஸ்தானாதிபதி, நமது நிலவரி விஷயமான பல சொற்கள். 'உர்து' பாஷையிலும், 'பெர்சியன்' பாஷையிலும் இருப்பதற்குக் காரணம் முகம்மதியர் டில்லியில் அரசாண்ட காலத்தில் அக்பர் என்பவரால் உருவாக்கபட்ட நிலநிர்வாகமே பின்பும் தொடர்ந்து கையாளப்பட்டு வந்தது என்பதுவே. ஆகவே ஹைதர் பாளையக்காரரை அடக்கி அவர்களைக் குடிகளிடமிருந்து மேல்வாரம் வசூலித்து அதில் ஒரு பகுதியை "பேஷ்குஷ்" என்ற பெயரால் தமக்குச் செலுத்த ஏற்பாடு செய்திருந்தான். அதனையே ஆங்கில அரசாங்கம் கடைப்பிடித்தது. ஆங்கில ஆட்சியில் ஜமீன்தாரி முறை ஏற்படுத்திய போது திண்டுக்கல் சீமைப் பாளையக்காரர்கள் "ஜமீன்தார்கள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு புராண காலத்தில் திண்டிமா சூரனால் நிர்மாணிக்கப்பட்டு திண்டீச்சுரம் என்ற பெயருடன் வழங்கிவந்த நம்நகரம், அவன் இறந்தபின் சேரஅரசன் தர்மபாலன்

இந்நகரில் ஆட்புரிந்து மலைமீது அபிராமாம் பிகைக்கும், பத்மகிரிசருக்கும் ஆலயம் கட்டு வித்தான். அதனை 1538ல் அச்சுததேவ்ராயன் என்ற விஜயநகர மன்னன் ஜீரணோத் தாரணம் பண்ணினான். பின்பு பாண்டிய மன்னர் களாலும், நாயக்க அரசர்களாலும், முகம்மதிய கவர்னர்களாலும் கோயிலும் கோட்டையும் பரிபாலிக்கப்பட்டுவந்து கடைசியாக 1788ம் ஆண்டில் அடியார்க்கு எளிவந்தருள்வான் வேண்டி தங்கள் சொந்த சங்கல்பத்தாலேயே இந்நகர் மத்தியில் வந்து அபிராமாவல்லியும், கமலாத்ரி நாதனும் கோயில் கொண் டருளினர். திப்புசுல்தான் இறைவன் சங்கல்பத்தாலேயே அவர்களைக்கீழே கொண்டுபோய் பிரதிஷ்டை செய்துகொள்ள அனுமதி கொடுத்தான் என்னவேண்டும். ஏனெனில் சோம நாதத்திலும் வேலூரிலும் முகம்மதிய மன்னர்கள் செய்த மாதிரி விக்கிரகங்களையும் ஆலயங்களையும் அழிக்காமல் மலைக்குக்கீழே கொண்டுபோய் பிரதிஷ்டை செய்யக் கட்டளையிட்டதே அபிராமாசமேத பத்மகிரி நாதர் அருளல்லவா.?

நிற்க, 1792ல் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்ட திண்டுக்கல் சீமை, இந்தியாவின் மற்ற பாகங்களும் வெள்ளையர் ஆட்சிக்குவந்த போது அவர்களால் பரிபாலிக்கப் பட்டு 1947 ஆகஸ்டு வரை அவர்கள் ஆட்சியில் இருந்து. 1875ல் திருச்சிராப்பள்ளிக்கும் தூத்துக்குடிக்கும் இருப்புப்பாதை அமைத்த போது இந்நகர் ஓர் ரயில் நிலையமாயிற்று. 1866ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் தேதி இந்நகர் முனிசிபாலிட்டி யாகக்கப்பட்டது. இத்துடன் சரித்திரப் பகுதியும் முடிவடைந்தது.

23-வது அத்தியாயம்:
தற்காலப் பகுதி.

1. நகராட்சி :—. திண்டுக்கல் முனிசிபாலிடி தற்சமயம் ஆறுமைல் சுற்றளவுள்ளதாய்த் திகழ்கின்றது. ஆயினும் திண்டுக்கல் என்று ரெவன்யூ கிராமம் ஒன்றும் இல்லை. இவ்வூர் ஆங்கில ஆட்சியின் ஆரம்பத்தில் தாடிக்கொம்புத் தாலுகாவின் ஓர் பகுதியாக இருந்தது. இப்பொழுது இத்திண்டிமாநகரம், அடியனூத்து. செட்டிநாயக்கன் பட்டி, பாலகிருஷ்ணபுரம், பள்ளபட்டி என்ற கிராமங்களைத் தன்னுள் கொண்டதாக இருக்கின்றது. இந்நகரில் பெரும்பிரிவுகளாக, நாகல்நகர், பேகம்பூர், மேட்டு ராஜக்காபட்டி, புதூர்,

ஸௌராஷ்ட்ரபுரம், போடிநாயக்கன்பட்டி, பூச்சிநாயக்கன்பட்டி முத்தழகுபட்டி, மௌன்ஸிபுரம், மஹம்மதியாபுரம், சவரியார் பாளையம், பாறைப்பட்டி இவைகள் இருக்கின்றன. நெல்ஸன் என்பார் 1866ம் ஆண்டில் எழுதிய ஜில்லா மானுவல் (District Manual) என்ற புஸ்தகத்தில் இதன் ஜனத்தொகை 6,258 என்று குறிப்பிட்டிருக்கிறார். 1914ல் ஃபிரான்ஸிஸ் என்பார் எழுதிய ஜில்லா கெஜெட்டியரில் திண்டுக்கல்லின் ஜனத்தொகை 25,182 என்றும், அதில் 3175 கிருஸ்தவர்களும், 3947 முகம்மதியரும் 18060 ஹிந்துக்களும் இருந்ததாகக் கூறுகின்றார். தற்காலத்தில் இந்நகரின் ஜனத்தொகை ஒருலக்ஷத்துக்குமேல் போய்விட்டது.

இவ்வாறு ஜனத்தொகை அதிகமாவதற்குக் காரணம், இந்நகர் பிரபல வியாபாரஸ்தலமாக இருப்பது வேயாகும். இந்நகர் அமைப்பும் இதற்குக்காரணமாகும். முன்பிருந்தது போலவே மூன்று தேசப்பகுதிகளும் சந்திக்கும் இடத்தில் இது அமைந்திருப்பது ஓர்பெரிய வாய்ப்பாகும். இவ்வூரிலிருந்து, பழனி, கோயம்புத்தூர், கரூர், திருச்சி, மதுரை, பெரியகுளம், நத்தம், வேடசந்தூர் முதலிய ஊர்களுக்குப் போகும்பெரும் பாதைகள் பிரிகின்றன. முற்காலத்திலிருந்தே கொச்சித்துறை முகத்துக்கும், தொண்டித்துறை முகத்துக்கும் போகும்பெரும் பாதை இவ்வூர் வழியாகவே போய்க் கொண்டிருந்தது. இப்பொழுதும் மேற்கே அரபிக்கடலையும் கிழக்கே வங்காளக் குடாக்கடலையும் இணைக்கும் பாதை இவ்வூரின் மேல்தான் போகின்றது. மேலும் சென்னை, கோவை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதைத் தொடர்வண்டிகள் இந்நகர்வழியே செல்லுகின்றன. இந்நகரில் கிடைக்காத வியாபாரப் பொருளே இல்லை என்னலாம். வெங்காயம், வேர்க்கடலை, பருத்தி, புகையிலை, தோல், துணி, பழவகைகள், காய்கறி வகைகள், புஷ்பவகைகள், வெற்றிலை நவதான்யங்கள் முதலியனஇவ்வூரில் கிடைப்பதுபோல் வேறெங்கும் காணமுடியாது. இவையாவும் பிறஇடங்களுக்கு தினந்தோறும் ஏற்றுமதியாகிக் கொண்டே யிருக்கின்றன. இவையாவும் இங்கும் இதைச்சுற்றியிருக்கும் பிரதேசங்களில் உற்பத்தியாகின்றன. இந்நகரின் சீதோஷ்ண நிலை க்ஷயரோகத்தால் பீடிக்கப் பட்டவர்களுக்கு மிகுந்தநலனை யளிப்பதாய்க் கருதப்படுகின்றது. சிறுமலையிலிருந்து வரும் தென்றல் மலையமாருதம்போல் உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தருவதாக இருக்கின்றது. திண்டுக்கல் ஓர் பீடபூமி. அது சமுத்திரமட்டத்துக்கு 1223 அடி உயரத்தில் இருக்கிறது. இதைச்சுற்றி, மேற்கே பன்றிமலை என்ற வராஹபர்வதமும் கிழக்கே சிறுமலையும், வடக்கே ரங்கபர்வதமும் இருக்கின்றன இந்த எல்லையையே புராணம்தாத்ரீவனம் என்று அழைத்தது

பொதுவாக புண்ணியத்தலங்கள் என்று கருதப்படும் ஊர்கள், ஆங்காங்குள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அவசியமான அம்சங்களால் பெருமை பெறுவது இயல்பு. இந்நகரோ இம்மூன்று விசேஷங்களோடு வியாபாரப் பெருக்கமும், அரசியல் முக்கியத்துவமும் சேர்ந்து திகழ்வதால் இங்கு ஜனத் தொகை பெருகுவதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் தற்கால கலாச்சார மாறுதலாலும் வியாபாரப் பெருக்கத்தாலும் இந்நகரின் மூர்த்தி, தல, தீர்த்த மகிமைகளை மக்கள் மறக்க நேரிட்டது. பீடபூமியாய் இருப்பதால் ஜல வசதி குறைவாய் இருக்கிறது. ஆனால் நகராட்சி மன்றத்தின் பெருமுயற்சியால் நாளுக்கு நாள் பெருகிவரும் ஜனத் தொகைக்குக் கூடுமான வரை தண்ணீர் வசதி அளிக்கப்பட்டு வருகின்றது. நல்ல தண்ணீர் வசதியுள்ள திருநெல்வேலி மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் போன்ற பகுதிகளிலிருந்து கூட மக்கள் இங்கு வந்து குடியேறி வியாபாரத் துறையில் அபிவிருத்தி யடைந்து வருகின்றனர். தண்ணீர் வசதி குறைவு என்று மக்கள் கருதி அவதிப்படுவதாய் இருந்தால் இவ்வளவு ஜனப்பெருக்கம் ஏற்படக் காரணம் இல்லை. நகராட்சி மன்றத்தார் தெருக்குழாய்கள் மூலமும், சில இடங்களில் “போர்பம்ப்” என்ற சாதனங்கள் மூலமும், தண்ணீர் சப்ளை செய்யும் லாரிகள் மூலமும் மக்களுக்கு போதுமான ஜல வசதியை உண்டு பண்ணியிருக்கிறார்கள். நிரந்தரமான தண்ணீர் வசதிக்குத் தக்க பெரிய திட்டம் ஒன்று இப்பொழுது தயராகி முடிவடைந்து விட்டதால் ஜலக்கஷ்டம் அறவே நீங்கி விட்டது என்னலாம் மேலும் புராண காலத்தில் பத்ம புஷ்கரணி யென்ற நீர் நிலை, சரித்திர காலத்தில் அகழியாக மாற்றப்பட்டு. தற்காலத்தில் அந்த அகழியின் பெரும் பாகத்தைத்தூர்த்து பத்மகிரியின் தென்கிழக்கு அடிவாரத்தில் “கோட்டைக்குளம்” என்ற பெயரால் வழங்கி வருகின்றது. மலைமீது பெய்யும் மழை ஜலம், மேல் தளத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நிறைந்து வழிந்தோடி இந்தக் கோட்டைக்குளத்தை நிரப்புகிறது. இது அநேக மக்களுக்குக் குடி தண்ணீராகப் பயன்படுகிறது.

2). ஆலயம்: - இத்தகைய பெருமை வாய்ந்த இத் திண்டிமா நகருக்கு நடு நாயகமாக விளங்குவது ஸ்ரீஞானம்பிகா சமேத காளஹஸ்தீசுவரர் ஆலயம். இதில் தான் முன்பு மலை மீது இருந்த அபிராமாம்பிகையையும், பத்மகிரி நாதரையும் **1788**ம் ஆண்டில் எழுந்தருளப்பண்ணியிருக்கிறார்கள். இவ்வாலயம் **1928**ம் ஆண்டில் ஹிந்து மத பரிபாலன போர்டார் அவர்களின் ஆதிக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் நிர்வாகம் போர்டார் அவர்களால் நியமிக்கப்பட்ட மூன்று பிரமுகர்கள் அடங்கிய குழுவினால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

அதோடு 1949ம் ஆண்டிருலிந்து ஓர் நிர்வாக அதிகாரியும் கமிஷனரால் நியமுகம் செய்யப்பட்டு, மேற்படி நிர்வாகக் குழுவோடு கோவிலின் நிர்வாகத்தை நடத்தி வருகிருர். ஹிந்து மத பரிபாலன போர்ட்டார் கோயில் நிர்வாகத்தை ஒப்புக்கொண்டதிலிருந்து கோயிலும் உத்சவங்களும் நல்ல முறையில் நடந்து வருகின்றன. கோயிலின் ஸ்தாவர சொத்துக்கள் பெரும்பாலும் வீடுகளும் கடைகளுமாக இருக்கின்றன. அவற்றின் மாதாந்தர வாடகை மூலம் ஆண்டு தோறும் வருமானம் வருகின்றது. நித்தியப்படி, காலே சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை என்ற மூன்று கால பூஜை நைவேத்தியத்தோடு நடக்கின்றது. இரவில் பைரவ பூஜையோடு கோயிற் காலம் முடிகின்றது. காரணுகம ரீதியில் பூஜை நடப்பதாய்க் கருதப்படுகின்றது. 1958ம் ஆண்டில் நம் ஆலயத்துக்கு முன்கோபுரம் கட்டி உள் கோபுரங்களையும், கோயில் கட்டிடங்களையும் பழுது பார்த்து அஷ்டபந்தன கும்பாபிஷேகம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. அது சமயம் ஓர் பெரிய வெள்ளி ரிஷபமும் செய்யப்பட்டது. ஏற்கனவே நமது ஆலயத்தில் சிறு வெள்ளி ரிஷபம் இருந்து வருகின்றது. மற்ற வாகனங்கள் மரத்தாலாயவையாலுைம், அவ்வப்போது வர்ணம் பூசி நல்ல முறையில் வைத்து வரப் படுகின்றன, கோயில் நிர்வாகஸ்தர்கள் அடிக்கடி சமயச் சொற் பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்து வருகிருர்கள். தேவார ஓதுவா மூர்த்தி ஒருவர் 1937ம் ஆண்டு நியமிக்கப் பட்டார். தேவாரபாராயணம் காலே ஞானம்பிகை சந்நிதியிலும், மாலே கல்யாண மண்டபத்திலும் நடை பெறுவதுடன், பூஜா காலங்களில் வேதம் ஓதுவதோடு திருமுறை ஓதி தீபாராதனை நடத்துவதும் வழக்கத்தில் இருந்து வருகின்றது. உத்சவ காலங்களில் ஸ்வாமி வீதி உலா வரும் போது தேவார கோஷ்டி பக்க வாத்தியங்களுடன் கூட வருகின்றது. பிள்ளைகளுக்கு இலவசமாய் தேவார திருவாசகத் திருமுறைகள் பண்ணோடு கற்றுக் கொடுக்கப்படுகிறது. கோயில் பிராகாரங்களும், மண்டபங்களும் நன்கு சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகஸ்தர்கள் நாள் தோறும் கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்வதோடு கோயில் நிர்வாகத்தையும் கண் காணித்து வருகின்றனர்.

(3. உத்சவங்கள் :- இந்த ஆலயத்தின் பிரம்மோத்சவம் சித்திரை மாதத்தில் நடத்தப்படுகின்றது. இதற்கு யாகசாலே பிரதிஷ்டை செய்து, அனுக்ஞை, வாஸ்து சாந்தி, ம்ருத்ஸங்க்ரஹணம் முதலிய ஆகம சாங்கியங்கள் முதல் நாள் இரவிலேயே தொடங்கி, மறு நாள் காலேயில் துவஜாரோகணம் நடைபெறு

கின்றது. இந்த உத்சவத்தின் 8ம் திருவிழா பொன்மானுக்கு மோக்ஷம் அளித்ததும். 9ம் திரு நாள் அனலாசூரசம்ஹாரமும், 10ம் நாள் திருக்கல்யாண உத்சவமும் புராணத்தைத் தழுவி நடத்தப்படுகின்றன. 11ம் நாள் ரதோத்சவம், 12ம் நாள் தீர்த்தவாரியும் நடக்கின்றன. உத்சவத்தினங்களில் மாலை 7 மணி முதல் சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசைக்கச்சேரிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

1. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில்வரும் அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர்திரு நக்ஷத்திரங்களில் அந்தந்தமூர்த்திகளுக்கு அபிஷேக அலங்கார நைவேத்யத்தோடு தீபாராதனை ஆகி, மாலையில் சமயச்சொற்பொழிவுகள் நடக்கின்றன.

2. வைகாசி மாதத்தில் வரும் விசாகநக்ஷத்திரத் தன்று ஷண்முகப் பெருமானுக்கும், தண்டபாணிக்கும் பால் அபிஷேகம் செய்து ஆராதனை நடக்கின்றது. ஆறுமுக நயினர் வள்ளிதெய்வானை மூர்த்தங்களுக்கு வெள்ளிக்கவசம் சாத்தப்படுகின்றது. சஷ்டிதோறும் தண்டபாணிக்கு அபிஷேக ஆராதனை நடத்தி வெள்ளி கவசம் சாத்தப்படுகின்றது.

3. ஆனிமாதத்தில் முன்கூறியபடி மாணிக்கவாசக சுவாமிகளின் திருநக்ஷத்திரத்தன்று அவருக்கு அபிஷேக அலங்கார நைவேத்திய தீபாரதனையும் மாலையில் சொற்பொழிவும் நடந்துவருகின்றது.

4. ஆடிமாதத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் அபிராமாம்பிகைக்கும், ஞானம்பிகைக்கும் சந்தனக்காப்பு சாத்திவிசேஷ ஆராதனைகள் செய்யப்படுவதுடன் கடைசி வெள்ளிக்கிழமையன்று அபிராயாம்பிகை முத்துப் பல்லாக்கில் ஆரோகணித்து வீதிஉலாவருவது கண்கொள்ளாக்காட்சியாகும்

5. ஆவணி மாதத்தில் விநாயக சதுர்த்தியன்று ஸ்தல விநாயகருக்கு விசேஷ அபிஷே அலங்கார நைவேத்யம் முதலிய உபசாரங்களுடன், சிறப்பாக ஆராதனை நடைபெறுகின்றது.

6. புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உத்சவம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. அபிராமா தேவிக்கு தினம்மாலையில் சஹஸ்ரநாம அர்ச்சனை நடைபெறுகின்றது. அம்பாளின் உத்சவ மூர்த்தியைக்கொலு மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி ஒவ்வொருநாள் ஒவ்வொருவிதமான அலங்காரம் செய்து ஷோடசதீபாராதனை செய்யப்படுகின்றது. தசமியன்று ''சுவாமி, அம்புபோடுதல்'' என்றமுறையில் உத்சவ மூர்த்திகள் குதிரை வாஹனங்களில் ஆரோஹணம் பண்ணி வீதி உலா வருவார்கள்,

7. ஐப்பசிமாதத்தில் கந்தசஷ்டி விழா நடைபெறுகின்றது. முதல் ஐந்து தினங்களில் முருகன், கோயிலை அடுத்திருக்கும் நான்கு வீதிகளில் பவனிவருவார். ஆறும்நாள் முருகன் ரதத்தில் அமர்ந்து நான்கு தேர்வீதிகளின் சந்திப்புகளில் தாரகாசூரன், சிங்கமுகாசூரன், சூரபத்மா இவர்களின் சம்ஹாரங்கள் நடக்கும். சம்ஹாரத்துக்குப்பின் தெய்வயானை கல்யாணமும், வள்ளி தினைப்புனம்காக்கும் காட்சியும் நடைபெறும். வள்ளி கல்யாணத்தன்று இத்தலபுராணத்தில் கூறப்பட்ட அகஸ்திய தீர்த்தத்துக்குச் சென்று அங்கு தினைப்புனம் காக்கும் வள்ளியை மணப்பார். பின் வீதிவுலாவந்து ஆலயம் அடைவார்.

8. கார்த்திகை மாதத்தில் வரும் கிருத்திகா நக்ஷத்திரமும் பௌர்ணமியும் கூடுகின்ற தினத்தில் அம்மன் சுவாமிகளுக்கும் முருகனுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. அன்றுஇரவு கோயில் பிராகாரங்களிலும், சுற்று மதில்களிலும், மஹாமண்டபத்திலும் பரிவார தேவைகளின் சந்நதிகளிலும் தீபாலங்காரம் செய்யப்படும். ஆயிரக்கணக்கான தீபவரிசைகள் அமைத்து மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தலபுராணத்தில் கிருத்திகா ஸோமவாரங்களுடையவும், பௌர்ணமி யோடுசேர்ந்த கிருத்திகைநக்ஷத்திர தினத்தில் ஏற்றப்படும் தீபாலங்காரங்களுடையவும் மகிமை வெகுவாகக்கூறப்பட்டிருக்கின்றது. அந்த அத்தியாயத்தை நேயர்கள்மறு முறை வாசித்துப்பார்க்கும்படி வேண்டப்படுகிறார்கள். மேலும் அன்று இரவு பஞ்சமூர்த்திகளும் வீதிஉலா வருவார்கள். பத்மகிரீசர் பெரியவெள்ளி ரிஷபவாகனத்திலும், அபிராமாம்பாள் சின்னரிஷப வாகனத்திலும் முருகன்மயில் வாகனத்திலும் கணநாதர் மூஞ்சூரு வாகனத்திலும் வருவார்கள். கடைசியில் சண்டேசுரர் வருவார். சுவாமி ஆலயத்தை விட்டு வெளிப்புறப்பட்டதும், திருமாலும், நான்முகனும் முறையேஅடி முடிதேடிய பொழுது இறைவன் ஜோதிப்பிழம்பாய் நின்ற திருவிளையாட்டை நினைவூட்டும் ''சொர்க்கப்பனை'' என்ற காட்சியும் நடை பெறுகின்றது.

9. மார்கழி மாதம் பூராவும் அதிகாலையில் தனுர்மாதப் பூசை திருவெம்பாவைப் பாராயணத்தோடு நடை பெறுகின்றது. பக்தகோடிகள் பலர்தரிசனத்துக்கு வருகின்றனர். ஆருதராதரிசனத்தன்று வைகறையில் நடராஜப்பெருமானுக்கு விசேஷஅபிஷேக ஆராதனைகள் நடத்தி திருவெம்பாவை ஒவ்வொருபாடலுக்கும் ஒருகற்பூர தீபாரதனைஆகி வீதிவுலாவும் நடைபெற்று வருகின்றது. அதோடு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் திருவெம்பாவை திருப்பாவையைப்பற்றிய சொற்பொழிவுகள் நடக்கின்றன. திருப்பாவை திருவெம்

பாவை மகாநாடும இம்மாதத்தில் நடக்கின்றது. திருப்பாவை திருவெம்பாவை பாடும் பள்ளிச்சிறுவர் சிறுமியர்களுக்கு பரிசு களும் வழங்கப்படுகின்றன. காஞ்சி காமகோடி பீடம் ஜகத் குரு மஹாசந்நிதானங்களால் சமய ஒற்றுமையையும், வளர்ச் சியையும் கருதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விழாவானது, நமது ஹிந்து மதபரிபாலனத்துறையின் தலைவரும், சிறந்த ஆஸ்திகச் செல்வரும், சீரியகுண சீலருமான ஸ்ரீ A. உத்தண்டராம பிள்ளை **B. A., B. L., I. A. S.,** அவர்களால் இவ்வூரில் துவக்கப்பட்டு ஆண்டுதோறும் நல்லமுறையில் நடந்து வருகின்றது. காம கோடி பீடத்திலிருந்து ஆசியும், மந்த்ராக்ஷதையும், பொன் வெள்ளிக்காசுகளும் அனுப்பப்படுகின்றன.

இம்மாதத்தில் காலபைரவாஷ்டமியன்று இறைவனும் இறைவியும் வீதி உலாவருவார்கள். இதை சாதாரணமாய் அஷ்டமிச்சப்பரம் என்று அழைப்பார்கள்.

10. தைமாதத்தில், ஆடி மாதத்தில் போலவே, வெள்ளிக்கிழமை தோறும், அபிராமா ஞானம்பிகா இருவருக்கும் சந்தனக்காப்பு சாத்தி அலங்காரம் செய்து விசேஷ ஆராதனை கள் நடக்கின்றன.

தைப்பூசம் என்ற புஷ்யநக்ஷத்திரமும் பௌர்ணமியும் கூடியதினத்தில் ஷண்முகப் பெருமானுக்கு அபிஷேகமும், வெள்ளிக்கவச அலங்காரமும் ஆராதனையும் நடக்கின்றது.

11. மாசி மாதத்தில் மஹாசிவராத்ரியன்று அபிராமா சமேதபத்மகிரி நாதருக்கும், ஞானம்பிகாசமேத காளத்தியப் பருக்கும் முறைப்படி நாலு காலபூஜை இரவுபூராவும் நடை பெருகின்றது.

12. பங்குனி மாதத்தில் உத்திரநக்ஷத்திரமும் பௌர் ணமியும் கூடும் தினத்தில் முருகப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடை பெறுகின்றன,

ஆகவே **12** மாதங்களிலும் உத்சவாதிகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இவைதவிர மாதம் இருமுறைவரும் பிரதோஷ தினங்களில், பிரதோஷ மூர்த்திகள் ரிஷபவா கனத்தில் அமர்ந்து கோவில் உள்பிராகாரத்தில் மூன்று சுத்து பவனிவருகின்றனர். இத்தலத்துக்கு புராணப்படி ஸோம வாரங்கள். பிரதோஷ தினங்கள். கிருத்திகை தினங்கள். சுக்லச்சதுர்தசி என்பன விசேஷ தினங்களாகும். அந்நாட்களில்

அபிராமசுந்தரியையும், பத்மகிரிநாதரையும் வழிபடுகிற வர்களுக்கு, சகலபாபங்களும் விலகி, பிணிநீக்கமும், கிரஹ தோஷ நிவர்த்தியும் ஏற்பட்டு சகலசம்பத்தையும் அடைவார் கள் என்பது புராணப் பிரமாணம். சாதாரண மாகவே தினம் தோறும் சாயரட்சை தீபாரதனையின் போது பலஅடியார்கள் வந்து இறைவன் இறைவியை வழிபடுகின்றனர். விசேஷமாக திங்கள், செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. அதுபோலவே மாதக்கிருத்திகை தினங்களிலும் பல ஆஸ்திகச் செல்வர்கள் ஆலயத்துக்கு வருகிறார்கள்.

4. இத்தலத்தில் இருக்கும் மற்ற ஆலயங்கள்

காளஹஸ்தீசுவரர் தேவாலயத்துக்கு உட்கோயில்களாக இருப்பவை இரண்டு. அவை 1. செல்லாண்டி அம்மன்கோயில் 2. கோயில் தெரு பிள்ளையார் கோயில். முன்பே கூறியபடி சித்திரை மாதத்தில் பிரம்மோத்சவம் ஆரம்பிக்கு முன் செல்லாண்டி அம்மனுக்குக் காப்புக்கட்டி ஆராதனைநடத்திவரப் படுகின்றது. தினம் கோயில்தெருப் பிள்ளையார் கோயிலுக்கு, ஆலயத்தில் தீபாராதனை முடிந்தபின் பூஜை நடைபெறு கின்றது. செல்லாண்டி அம்மன், புராணத்திலேயே பிரஸ் தாபிக்கப் பட்டிருக்கிறது.

மற்ற கோயில்களில் முக்கியமானவை.

1. கோட்டை மாரியம்மன் கோயில்:- இதுமிகப் புராதீனமான துர்க்காலயம். செவ்வாய், வெள்ளிக்கிழமை களில் ஏராளமான மக்கள் வந்து வழிபடுகின்றார். ஆண்டுக்கு ஒரு முறை மாசி மாதத்தில் பெருவிழா வெகு சிறப்பாய் பத்து தினங்கள் நடக்கின்றது. சுற்றுப்பக்கத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து தரிசிக்கின்றனர்.

2. மலையடிவாரம் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில்,,- இது 1538ல் அச்சுத தேவராயரால் பிரதிஷ்டை செய்யப் பட்டது. அறுல் முகம்மதிய ஆட்சியில் இக்கோயில் முழுதும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் புதிதாகவே கோயில் கட்டி 1928ல் கும்பா பிஷேகம் நடந்தேறியது. இப்பொழுது ஹிந்துமதபரி பாலனத்துறை கண்காணிப்பில் நல்ல நிலைமையில் இருந்து வருகின்றது. இக்கோவிலின் பிரம்மோத்சவம் ஆடி மாதத்தில் நடக்கின்றது. கோகுலாஷ்டமி உத்சவம் பத்து தினங்கள் நடை பெறுகின்றது. மார்கழி மாதத்தில் பகல் பத்து இராப்பத்து என்ற திருவத்யயன உத்சவம் நடத் கின்றது.

3. மலையடிவாரம் ஆஞ்சநேயர் கோயில்:- இதுவும் சென்ற முப்பது ஆண்டுகளுக்குள் பல அன்பர்களின் முயற்சியால் புனருத்தாரணம் செய்யப்பட்டு நல்லமுறையில் வழிபாடு நடக்கின்றது. ஹனுமத் ஜயந்தி உத்சவம் கொண்டாடப்படுகின்றது. இவ்வாலயத்தில் ஓர் ஸ்ரீசக்ரமேரு ஸ்படிகத்தில் இருக்கின்றது.

4. திரௌபதியம்மன் கோயில்:- மேற்கு ரதவீதியில் இருக்கின்றது. நவராத்ரி தினங்கள் விசேஷமாய் நடத்தப்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை உத்சவமும் நடை பெறுகின்றது.

5. வண்டிக்காளியம்மன் கோயில்:- இது வேடசந்தூர் பாதை பிரியும் இடத்தில் இருக்கிறது. இந்துமதஅற நிலைத்துறையின் மேல்பார்வையில் நடந்து வருகிறது. வருஷம் ஒரு முறை உத்சவம் நடக்கின்றது.

6. சனி பகவான் கோயில்:- இது பத்மகிரியின் வடக்கு அடிவாரத்தில் இருக்கிறது. ஆடி மாதத்தில் ரதோத்சவம் நடக்கின்றது.

7. கோபாலசமுத்திரம் அனுமார்கோயில்:-இதில் உள்ள மூர்த்தி மாதவ வகுப்பு பிராம்மணர்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றது. சனிக்கிழமைகளிலும், ஏகாதசி தினங்களிலும், பஜனை நடக்கின்றது. ஹனுமந்ஜயந்தியில் டோலோத்சவம் நடத்தப்படுகின்றது.

8. நாகல் நகர் பெருமாள் கோயில் :- இது சௌராஷ்டிர வகுப்பினரால் பராமரிக்கப்பட்டு போர்டார் அவர்களின் மேல்பார்வையில் இருந்துவருகின்றது.

9. தெற்குத்தெரு பாதாளகாளியம்மன் கோயில்:- அத்தெரு வேளாள மரபினரால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

10. சௌண்டம்மன் கோயில் :- இது தேவாங்கச் செட்டிவகுப்பினரால் நிர்வகிக்கப்படுகின்றது.

11. பிள்ளையார் கோவில்கள் பலஇருக்கின்றன. அவற்றுள் "வெள்ளைப் பிள்ளையார் கோயில்" என்று பெயர் விளங்கிய விநாயகர் ஆலயம் தேர் கிழக்கு வீதியில் இருக்கின்றது. இந்த மூர்த்தி நல்ல வரப்பிரசாதியாகக் கருதப்படுகிறார். வெள்ளிக் கிழமைகளில் ஏராளமான மக்கள் வந்து தரிசிக்கின்றனர். மற்றதினங்களிலும் காலை மாலை ஆஸ்திகச் செல்வர் பலர் வந்து வழி படுகின்றனர்.

ஆவணிமாதத்தில் விநாயகருக்கு பத்துநாள் உத்சவம் நடந்து சதுர்த்தியன்று ரதோத்சவம் நடைபெறுகிறது. இது செங்குந்த முதலியார்களால் பரிபாலிக்கப் பட்டு கமிஷனர் அவர்களின் மேல்பார்வையில் இருக்கின்றது. உத்சவ தினங்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசைக் கச்சேரிகளும் ஏற்பாடு செய்யப்படுகிறன.

5. வேறு விழாக்கள்.

1. தாளவனம் என்று புராணத்தில் கூறப்படும் தாடிக் கொம்பில் 1629 ம் ஆண்டு திருமலை நாயக்கரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சௌந்திர ராஜப் பெருமாள் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமியன்று பெருமாள் குதிரைவாகனத்தில் அமர்ந்து குடவனாறு என்று வழங்கும் கும்பநதியில் இறங்கி பின்பு அங்கிருந்து புறப்பட்டு அன்று இரவு திண்டுக்கல் வந்துசேருவார். இந்நகரில் இரண்டுபகல் மூன்று இரவுகள் தங்கிபல திருக்கண்களில் ஆராதனை பெற்று திரும்ப தாடிக்கொம்புக்கு எழுந்தருளுவார். இந்தஉத்சவத் துக்கு ஏராளமான கூட்டம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்து சேருகின்றது.

2. அது போலவே பங்குனிமாதம் பௌர்ணமி யன்று வடமதுரைப் பெருமாள் சந்தானவர்த்தினி யாற்றில் இறங்கி திண்டுக்கல் வந்து நாகல் நகரிலேயே தங்கி மூன்றும் நாள் திரும்ப வடமதுரைக்கு எழுந்தருளுவார். இதற்கும் நல்ல கூட்டம் கூடுகின்றது.

6. மடங்கள்.

1. சிருங்ககிரி சங்கரர் மடம் :- இதுசந்நிதித் தெரு வில் இருக்கிறது. பிராமண மஹா ஜனங்களின் நிர்வகத் தில் இருக்கிறது. இதில் பத்மகிரிநாதர் பஜனைசபை ஒன்று பிராமண ஆஸ்திகர்களால் நிறுவப்பட்டு நடந்து வருகின்றது. சங்கர ஜயந்தி உத்சவம் இதில் நடக்கின்றது. சித்திரை மாதம் பத்மகிரி நாதர் பிரம்மோத்சவத்தில் கடைசி நாள் பஞ்சமூர்த்திகளுக்கும் மண்டகப்படி சிறப்பாய் பிரா மணமஹாஜனத்தாரால் நடத்தப்படுகின்றது.

2. சௌராஷ்டிர மஹாஜனத்தார் மடம் :- சங்கரர் மடத்துக்கு எதிரில் சமீபத்தில் கட்டப்பட்டது. இதில் சைத் ரோத்சவத்தில் திக்விஜயமண்டகப் படியும், (அனலாசுர சம்ஹாரம்) தாடிக்கொம்பு அழகருக்கு தசாவதார மண்டகப் படியும் நடக்கின்றன.

3. ஆரியவைசியாள் மடம் :- இது மெயின் ரோடு என்ற கடைவீதியில் இருக்கிறது. நவராத்ரி காலங்களில் கன்னிகா பரமேச்வரிக்கு விசேஷ அலங்காரங்கள் செய்து அதி விமரிசையாய் நவராத்திரி விழாக் கொண்டாடுகின்றனர். ஆரிய வைசியவகுப்பினர் இம்மடத்தில் விவாகங்களை நடத்தி வருகின்றனர்.

4. தெற்குத்தெரு பிள்ளைமார் பஜனை மடம் :-தெற்குத் தெருவிலுள்ள வேளாள வகுப்பினர் இதை நடத்தி வருகின்றனர். தனுர் மாதத்தில் காலையில் இங்கிருந்து பஜனை கோஷ்டி புறப்பட்டு வீதிகளில் சுற்றி கோயிலை அடைந்து பஜனையைமுடித்துக் கொள்கின்றனர்.

7. சத்திரங்கள்.

இவ்வூரில் சத்திரம் என்று சொல்லக் கூடிய முறையில் யாதொன்றும் இல்லை. **1743**ல் பிர்க்கி வெங் கட்டராவ் கட்டினசத்திரம் தனிப்பட்ட வீடுகள்ஆகிவிட்டன. **1899** ல் கட்டப்பட்ட முனிசிபல் சத்திரம் பூராவும் அழிந்து வெறும் காலியிடமாகவேயிருக்கிறது. நாகல்நகரில் **N. S. N.** சுப்பய்யர் சத்திரம் என்று ஒன்று இருக்கின்றது.

8. தங்கும் விடுதிகள்.

காளகஸ்தீசுவரர் கோயிலுக்கு வடக்கே "மாடர்ன்லாட்ஜ்" என்ற ஒருதங்கும் விடுதி யிருக்கிறது. அதுபோல நாகல் நகரிலும் ஒன்று இருக்கின்றது. சில சாப்பாட்டு விடுதிகளில் பிரயாணிகள் தங்குவதற்கு 'ரூம்'கள் வாடகைக்கு விடப் படுகின்றன. நத்தம் ரஸ்தாவில் முனிசிபல் முசாபரி பங்களா ஒன்று இருக்கின்றது.

9. வைத்திய வசதிகள்.

இவ்வூரில் சர்க்கார் பெரிய ஆஸ்பத்திரி ஆண் பெண் இருபாலருக்கும் தனித் தனியே இரண்டு ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. முனிசிபல் ஆபீஸ் காம்பௌண்டில் பிரசவ விடுதி ஒன்று இருக்கின்றது. திருச்சி ரஸ்தாவில் "காட்டாஸ் பத்திரி" என்று பெயர்வழங்கிய ஓர் மிஷன் ஆஸ்பத்திரி இருக்கிறது. அவை தவிர தனிப்பட்ட முறையில் ஆஸ்பத்திரி கள் வைத்து நடத்தும் பல டாக்டர்கள் இருக்கின்றனர். மூன்று ஆயுள் வேத சித்தவைத்தியமுறை ஆஸ்பத்திரிகள் முனிசிபாலிட்டியாரால் நடத்தப்படுகின்றன.

10. பள்ளிக் கூடங்கள்.

முனிசிபாலிட்டியின் ஆதரவில் நகரத்தின் பலபாகங் களில் பல ஆரம்பப்பாடசாலைகள் இருக்கின்றன; ரோமன்

கத்தோலிக் மிஷன், அமெரிக்கன் மிஷன் இவைகளால் நடத்தப்படும் ஆரம்ப பாடசாலைகளும் இருக்கின்றன. முனிசிபல் ஹைஸ்கூல் என்ற உயர்நிலைப்பள்ளி, ஸெயிண்ட் மேரி ஹைஸ்கூல் என்ற உயர்நிலைப்பள்ளியும், ஸெயிண்ட் ஜோஸப் கான்வெண்டு ஹைஸ்கூல் என்ற பெண்கள் உயர் நிலைப்பள்ளியும் அமெரிக்கன் மிஷன் மத்திய தரப் பாட சாலையும் முனிசிபல் மத்தியதரப் பள்ளியும் இருக்கின்றன. சர்க்காரால் நடத்தப்படும் ஆண்கள் போதனா முறைப் பள்ளியும் பெண்கள் போதனா முறைப் பள்ளியும் இருக்கின்றன. ஜில்லாக் கல்வி அதிகாரியின் தலைமைக் காரியாலயம் இங்கு இருக்கின்றது.

11. கூட்டுறவு இயக்கம். இந்நகரில் பலதுறைகளில் நன்கு சேவை செய்கின்றது. கூட்டுறவு நகரபாங்கு, நில அடமானபாங்கு, கூட்டுறவு பண்டகசாலை, கூட்டுறவு கைத்தறி ஆடைகள் விற்பனை நிலையம் முதலியன இருக்கின்றன.

12. **பாங்குகள்.** இந்நகர் ஓர்பெரிய வியாபாரஸ்தலமாக இருப்பதால் பாங்குகள் பல இருக்கின்றன. மத்திய சர்க்கார் "ஸ்டேட்பாங்கும், இந்தியன் பாங்கும், பாண்டியன் பாங்கும், கரூர்வைசியாபாங்கும், தஞ்சாவூர் "பெர்மனென்டு பண்டு" பாங்கும் இருப்பதோடு தனிப்பட்ட முறையில் லேவாதேவி நடத்தும் பாங்கர்கள் பலர் இருக்கின்றனர்.

13. சர்க்கார் அலுவலகங்களும் கச்சேரிகளும் : திண்டுக்கல் சப்டிவிஷனின் தலைமை ஸ்தானமாக இருப்பதால் ஒரு சப் கலெக்டராபீஸும், தாலுகாக் கச்சேரியும், சப்ரிஜிஸ்டார் ஆபீஸும், வருமானவரி ஆபிஸும், விற்பனைவரி ஆபிஸும், கூட்டுறவு டிபுடி ரிஜிஸ்டார் ஆபீஸும், ஜில்லாக்கல்வி அதிகாரி ஆபீஸும், ஹிந்து மதபரிபாலன இன்ஸ்பெக்டர் ஆபீஸும், இருக்கின்றன. நீதிஸ்தலங்களில் உதவி செஷன்ஸ் நீதிபதிஅதிகாரத்தோடு கூடிய சப்ஜட்ஜ் நீதிஸ்தலமும் ஜில்லா முனிசீபு நீதிஸ்தலமும், சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் நீதிஸ்தலமும், சப்மேஜிஸ்ட்ரேட் நீதிஸ்தலமும், கௌரவமாஜிஸ்ட்ரேட்நீதிஸ்தலமும் இருக்கின்றன. போஸ்டாபீஸ், டெலிபோன் ஆபீஸ், மின்சாரஇலாகா ஆபீஸ், அசிஸ்டெண்டு என்ஜினீர் ஆபீஸ் இவைகளும் இருக்கின்றன. போலீஸ் இலாகாவின் அசிஸ்டெண்டு சூப்ரெண்டு ஆபீஸ் இங்குஇருக்கிறது. அவருக்குக்கீழ் இரண்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களும், மூன்று சப்இன்ஸ்பெக்டர்களும் இந்நகரில் இருக்கிறார்கள்.

முடிவுரை :-எனக்கிட்ட பணி இத்துடன் முடிவடைகின்றது. இது ஒரு விளம்பரநூல் அல்ல. நகரவழிகாட்டியும்

அல்ல. இந்தஸ்தல மஹான்மியத்தைக் கூறவந்தநூல். சரித்திர காலத்துக்குப்பல நூற்றுண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட இந்த திண்டீச்சுரம் என்ற திண்டுக்கல், தமிழ் நாட்டிலேயே முக்கிய தலங்களில் ஒன்ருகத்திகழ்கின்றது. சிலக்ஷேத்ரங்கள் ஆங்காங்குள்ள மூர்த்திதலம் தீர்த்தம் என்ற அம்ஸங்களால் மட்டும் முக்கியத்வம் வகிக்கின்றன. ஆனுல் இத்தலமோ, இம்மூன்று சிறப்புகளேயும் ஒருங்கே பெற்றிருந்தும், சரித்திர காலத்தில் நேர்ந்தபல சண்டைகளாலும், அரசியல் மாறுதல்களாலும் இதன் சமயச்சிறப்பு மறைந்து ஒருவியாபாரத்தல மாகவே கருதப்பட்டு வருகின்றது. இந்நகரில் கோயில் கொண்டருளும் அபிராமாசமேத பத்மகிரீசருடையவும், ஞானம்பிகா சமேத காளஹஸ்தீசுவரருடையவும் இன்னும், இன்றும் இங்குள்ளபல புண்ணியதீர்த்தங்களுடையவும் மறைந்துபோன பெருமையை ஆஸ்திகச் செல்வர்களுக்கு நினைவூட்டவே, இந்நூல் தேவஸ்தான நிர்வாகஸ்தரால் வெளியிடப்படுகின்றது. இந்நூல்விரைவில் வெளிவரவேண்டும் என்று அக்கரைகொண்டு என்னை அவ்வப்போது ஊக்குவித்த டிபுடிகமிஷனர் உயர்திரு சக்கரைசேர்வை அவர்களுக்கும், குறிப்பாய் நமது தேவஸ்தான நிர்வாக அதிகாரி உயர்திரு S. காளியப்பன் B. A. அவர்கட்கும் இந்நூல் வெளியிட்ட பெருமை உரித்தாகும். இத்தலபுராணம் ஆதியில் வடமொழியில் இருந்தது. அதனைப்பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் இந்நூலின் மொழிபெயர்ப்பு ஒன்றைக் கைப்பிரதியாக எழுதிவைத்த தமிழ் ஆசிரியர் உயர்திரு அப்துல்காதர் என்ற முஸ்லிம் சகோதரர் தமது பிரதியில் இவ்வாறு எழுதியுள்ளார் "சிவபுராணமாம் ஸ்ரீபத்மாசல புராணம் நம்மிடை சிதைந்து, மறைந்து, அழிந்து போகாதவாறு வடமொழியில் சுலோகருபமாய் இருந்த அந்நூலை வடமொழியும் தமிழும் ஓதியுணர்ந்த வித்வான்களைக்கொண்டு, தமிழ் மொழி பெயர்த்து சிவநேயச் செல்வர்கள் யாவரும் ஸ்ரீபத்மகிரீசுவரரின் திருவருளைக் கூட்டுணும்படி இதனை எழுதி வைத்தோம்" என்று கூறியுள்ளார். இந்தத்தமிழாக்கமே ஆதாரமாகக் கொண்டு இறைவன் திருவருள் துணையால் இதனை எழுதிமுடித்தேன்.

சுபம்.

"நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய். என்னபேறு பெற்றேன்!
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருதங்கைச்சியே!

நித்யாய நிரவத்யாய ஸத்யாநந்த சிதாத்மனே
ஸர்வாந்தராத்மனே ஸ்ரீபத்மகிரீசாய மங்களம்.

அனுபந்தம் 1.

ஸ்ரீபத்மகிரீசுவரர் அஷ்டோத்தர சத நாமங்கள்.

இது ஸ்ரீ பத்மாசல புராணத்தின் 21வது அத்தியாத்தில் அகஸ்தியரால் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது.

1. ஓம் பத்மமூர்த்தயே நம:
2. ஓம் சிவாய நம:
3. ஓம் சம்பவே நம:
4. ஓம் ஹராய நம:
5. ஓம் பத்மகிரீச்வராய நம:
6. ஓம் தாத்ரீவனேசாய நம:
7. ஓம் லோகேசாய நம:
8. ஓம் கமலக்ஷேத்ர நாயகாய நம:
9. ஓம் பஞ்ச வக்த்ராய நம:
10. ஓம் பரஸ்மை ப்ரம்ஹணே நம:
11. ஓம் பஞ்சகாபரஞோ ஜ்வலாய நம:
12. ஓம் பத்மோத்பவாய நம:
13. ஓம் பரஸ்மை தாம்னே நம:
14. ஓம் பவித்ராய நம:
15. ஓம் பாபநாசனுய நம:
16. ஓம் பஞ்சவர்ணுத்மகாய நம:
17. ஓம் தேவாய நம:
18. ஓம் பீமாய நம:
19. ஓம் பத்மபுரீச்வராய நம:
20. ஓம் தேஜோலிங்காய நம:
21. ஓம் காச்யபார்த்த ஸமுத்பூதாய நம:
22. ஓம் ஸதா சிவாய நம:
23. ஓம் பிரம்ஹவேதோபதேஷ்ட்ரே நம:
24. ஓம் ப்ரஹத் ரூபாய நம:
25. ஓம் பராத்பராய நம:
26. ஓம் கிரிஸ்வரூபாய நம:
27. ஓம் கிரீசாய நம:
28. ஓம் க்ருத்திகா புத்ரதாயகாய நம:
29. ஓம் தேவதாவாஸ ரசித ஸ்வபர்வத குஹாந்தராய நம:
30. ஓம் தேவதாபீஷ்டதாய நம:
31. ஓம் பர்காய நம:
32. ஓம் திண்டி ராக்ஷஸ பூஜிதாய நம:
33. ஓம் திண்டி மோக்ஷ ப்ரதாத்ரே நம:

34. ஓம் திண்டிபுரேச்வராய நம:
35. ஓம் ஸ்வர்ண ஸாரங்க ரக்ஷார்த்த பச்சிமாபிமுகோஜ்வலாய நம:
36. ஓம் வர்த்துலாஸுர ஸம்ஹர்த்ரே நம:
37. ஓம் புஷ்பதந்த பரமோக்ஷகாய நம:
38. ஓம் ஸுமேதா மோக்ஷகர்த்ரே நம:
39. ஓம் ஸுப்ரஸந்நாய நம:
40. ஓம் ப்ரஸன்னதயே நம:
41. ஓம் தர்மபால மஹீபால மஹாராஜ்யப்ரதாய நம:
42. ஓம் ஸூக்ஷ்ம லிங்காய நம:
43. ஓம் ஸுந்தராங்காய நம:
44. ஓம் ஸுப்ரம்ஹண்யாய நம:
45. ஓம் ஸநாதனாய நம:
46. ஓம் கல்யாணோசித ஸௌந்தர்யாய நம:
47. ஓம் கல்யாணசல கார்முகாய நம:
48. ஓம் அபிராமாபதயே நம:
49. ஓம் காமாய நம:
50. ஓம் மஹாசாதயே நம:
51. ஓம் மஹா வபுஷே நம:
52. ஓம் ந்ருஸிம்ஹ பூஜிதாய நம:
53. ஓம் காலாய நம:
54. ஓம் ந்ருஸிம்ஹ விமோசகாய நம:
55. ஓம் இந்த்ராகர்வாபஹர்த்ரே நம:
56. ஓம் வருணைச்வர்ய தாயகாய நம:
57. ஓம் வருணார்ச்சித பாதாப்ஜாய நம:
58. ஓம் ஸர்வ தீர்த்தாச்ரயாய நம:
59. ஓம் விபவே நம:
60. ஓம் கங்காதராய நம:
61. ஓம் காலகண்டாய நம:
62. ஓம் கமலாத்ரி நிகேதனாய நம:
63. ஓம் தூர்த்தஸ்வாமீ மஹாவித்யாப்ரதாத்ரே நம:
64. ஓம் தூர்த்த பூஜிதாய நம:
65. ஓர் தர்மப்ருதே நம:
66. ஓம் தர்மஸம்பூஜ்யாய நம:
67. ஓம் தர்ம ராஜஸமர்ச்சிதாய நம:
68. ஓம் தான சீலாய நம:
69. ஓம் தானவராய நம:
70. ஓம் தயாம் போதயே நம:
71. ஓம் தயான் விதாய நம:
72. ஓம் சங்கராய நம:
73. ஓம் ஸர்வஸ்மை நம:
74. ஓம் ஈசானாய நம:

75. ஓம் ஸோமாய நம:
76. ஓம் ருத்ராய நம:
77. ஓம் திகம்பராய நம:
78. ஓம் அஷ்ட மூர்த்தயே நம:
79. ஓம் மஹா மூர்த்தயே நம:
80. ஓம் தேவ மூர்த்தயே நம:
81. ஓம் ஜகன்மயாய நம:
82. ஓம் அஷ்டலிங்கா வ்ருதாய நம:
83. ஓம் ப்ரகாசனாய நம:
84. ஓம் காயத்ரீலிங்க ரூபாய நம:
85. ஓம் கணேசாய நம:
86. ஓம் வ்யாக்ர ரூபத்ருதே நம:
87. ஓம் பாஹுகைவல்யதாத்ரே நம:
88. ஓம் ஸுபாஹு பரலோகதாயகாய நம:
89. ஓம் ப்ரம்ஹக்ஞாபீஷ்டதாய நம:
90. ஓம் வேத்யாய நம:
91. ஓம் ஸித்த பூஜாராதாய நம:
92. ஓம் அவ்யாய நம:
93. ஓம் ஸித்தஸாயுஜ்யதாய நம:
94. ஓம் சூலினே நம:
95. ஓம் மஹதே நம:
96. ஓம் சந்த்ரகலாதராய நம:
97. ஓம் விச்வாம்பராய நம:
98. ஓம் வீரபத்ராய நம:
99. ஓம் விஷ்ணவே நம:
100. ஓம் பரமாத்மனே நம:
101. ஓம் விரூபாக்ஷாய நம:
102. ஓம் வ்ருஷத்வஜாய நம;
103. ஓம் வ்ருஷாரூடாய நம:
104. ஓம் பக்தார்த்தி பஞ்ஜனாய நம:
105. ஓம் பத்ராய நம:
106. ஓம் பத்மதீர்த்தோத்பவாய நம:
107. ஓம் பத்ம புவே நம:
108. ஓம் அர்த்த புவே நம:

ஓம் அபிராமாம்பா சமேத பத்மகிரீசாய நம:

தியான சுலோகம்.

ஸ்ரீமத் பத்மநகாதீசம் காயத்ரீலிங்கரூபிணம்
அபிராமா பதிம்தேவம் ஸர்வாபீஷ்ட ப்ரதாயகம்
த்யாயாயாமிஸ் சிதா நந்தம் சிவம் சாந்தம் ஸனாதனம்.

நமஸ்கார ஸ்லோகம்.

நமஸ்தே நமஸ்தே மஹேசான சம்போ
நமஸ்தே நமஸ்தே ஸதாயோகி நாத
நமஸ்தே நமஸ்தே கிரீசத்ரி சூலின்
நமஸ்தே நமஸ்தே புனஸ்தே நமஸ்தே.

அனுபந்தம் 2.

ஸ்ரீ அபிராமா அஷ்டோத்தரசத நாமங்கள்.

இது பத்மாசல புராணத்தின் 20-வது அத்தியாயத்தில் பிரம்மா அகஸ்தியருக்கு உபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

1. ஓம் ஸர்வபாபப்ரசமன்யை நம:
2. ஓம் அம்பாயை நம:
3. ஓம் பக்திபலப்ரதாயை நம:
4. ஓம் அபிராமாம்பிகாயை:
5. ஓம் தேவ்யை நம:
6. ஓம் ஸாத்வ்யை நம:
7. ஓம் ஸௌந்தர்யவாரிதயே நம:
8. ஓம் ஸ்ர்வோத்துங்காயை நம:
9. ஓம் ஸுராராத்யாயை நம:
10. ஓம் ஸர்வாபரணபூஷிதாயை நம:
11. ஓம் சச்சிதானந்தலஹர்யை நம:
12. ஓம் ஸம்வித்ருபாயை நம:
13. ஓம் ஸமாஹ்ருதயே நம:
14. ஓம் ஸர்வார்த்ததாத்ர்யை நம:
15. ஓம் ஸ்ர்வஹ்ர்த்ரியை நம:
16. ஓம் சாச்வத்யை நம:
17. ஓம் சர்மதாயின்யை நம:
18. ஓம் ஸர்வேச்வர்யை நம:
19. ஓம் பகவத்யை நம:
20. ஓம் ஸ்ர்வாண்யை நம:
21. ஓம் சாந்தருபிண்யை நம:
22. ஓம் சாங்கர்யை நம:
23. ஓம் சங்கரைச்வர்யரூபிண்யை நம:
24. ஓம் சங்கரப்ரியாயை நம:
25. ஓம் பத்மாசலேச்வர்யை நம
26. ஓம் கௌர்யை நம:
27. ஓம் பத்மநாபஸஹோதர்யை நம;
28. ஓம் பார்வத்யை நம:
29. ஓம் பர்வதோத்துங்கசிகரவாஸசாலின்யை நம:
30. ஓம் ப்ரம்ஹரூபாயை நம:

31. ஓம் ப்ரஹ்ரூபாயை நம:
32. ஓம் ப்ரஹத்யை நம:
33. ஓம் ப்ராம்ஹண்யை நம:
34. ஓம் மஹ்யை நம:
35. ஓம் பத்மரூபாயை நம:
36. ஓம் பராகாச வாஸின்யை நம:
37. ஓம் ப்ராணரூபிண்யை நம:
38. ஓம் ஸ்ருஷ்டி கர்த்ர்யை நம:
39. ஓம் சிவ க்ஷேத்ரியை நம:
40. ஓம் சிவ மூர்த்யை நம;
41. ஓம் சிவங்கர்யை நம:
42. ஓம் பத்மாலயாயை நம:
43. ஓம் பராயை நம:
44. ஓம் லக்ஷ்ம்யை நம:
45. ஓம் பத்ம க்ஷேத்ர நிவாஸின்யை நம:
46. ஓம் தாத்ரியை நம:
47. ஓம் மாயாயை நம:
48 ஓம் தயா மூர்த்யை நம:
49. ஓம் தாத்ரீவன விஹாரிண்யை நம:
50. ஓம் பத்ம புஷ்கரணீ ரூபாயை நம:
51. ஓம் ஸர்வதீர்த்தமய்யை நம;
52. ஓம் ஸுபாயை நம:
53. ஓம் பத்மாஸனாயை நம:
54. ஓம் மஹா மூர்த்யை நம:
55. ஓம் பத்மலிங்கஸ்வரூபிண்யை நம:
56. ஓம் பர்ஞ்ஜோதிர்மய்யை நம:
57. ஓம் மாத்ரே நம:
58. ஓம் பரமாணவே நம:
59. ஓம் மஹீயஸ்யை நம:
60. ஓம் பவான்யை நம:
61. ஓம் பரமேச்வர்யை நம:
62. ஓம் பஞ்சப்ரம்ஹஸ்வரூபிண்யை நம:
63. ஓம் காயத்ர்யை நம:
64. ஓம் கஹனாகாராயை நம:
65. ஓம் கமனாகம வர்ஜிதாயை நம:
66. ஓம் பஞ்ச பூதேச்வர்யை நம:
67. ஓம் பூத்யை நம:
68. ஓம் பஞ்சம்யை நம:
69. ஓம் பஞ்சமீ கலாயை நம:
70. ஓம் பஞ்சாவரண பீடேச்வர்யை நம;
71. ஓம் பஞ்ச முத்ரா ஸ்வரூபிண்யை நம:
72. ஓம் பஞ்ச ஸங்கயோ பசாராட்யாயை நம:

73. ஓம் பரமைச்வர்ய தாயின்யை நம:
74. ஓம் பஞ்சதசாக்ஷர ஜபஸுப்ரீதாயை நம:
75. ஓம் மாத்ரே நம:
76. ஓம் பஞ்சதாசாக்ஷர்யை நம:
77. ஓம் மஹா லக்ஷ்ம்யை நம:
78. ஓம் மஹா துர்க்காயை நம:
79. ஓம் மஹா சரஸ்வத்யை நம:
80. ஓம் அணிமாத்யாவ்ருதாராத்யாயை நம:
81. ஓம் பைரவ்யை நம:
82. ஓம் பஹுரூபிண்யை நம:
83. ஓம் ஸமஸ்தபக்த ஹ்ருதய ரமாலீலா விநோதின்யை நம:
84. ஓம் ஸர்வ சக்த்யை நம:
85. ஓம் சக்தயே நம:
86. ஓம் ஸர்வதந்த்ரஸ்வரூபிண்யை நம:
87. ஓம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ராயை நம:
88. ஓம் சாம்பவ்யை நம:
89. ஓம் சம்புமோஹின்யை நம:
90. ஓம் ஸுரார்ச்சித பதாம்புஜாயை நம:
91. ஓம் ஸுரபாலனதத் பராயை நம:
92. ஓம் ஸுரேச்வர்யை நம:
93. ஓம் ஸுரச்ரேஷ்டாயை நம:
94. ஓம் ஸுரா ஸுரபயங்கர்யை நம:
95. ஓம் ரக்ஷாகர்யை நம:
96. ஓம் ரமாயை நம:
97. ஓம் ராமாயை நம:
98. ஓம் ராஜீவ லோசனாயை நம:
99. ஓம் அனலாஸுர ஸம்ஹாரகர்யை நம:
100. ஓம் ஜகத்தாத்ர்யை நம:
101. ஓம் ஜனேச்வர்யை நம:
102. ஓம் அநேககோடிப்ரம்மாண்ட ஜனன்யை நம:
103. ஓம் லோகநாயக்யை நம:
104. ஓம் ஸர்வதுக்கப்ரசமன்யை நம:
105. ஓம் ஸர்வதேவர்ஷிஸம்ஸ்துதாயை நம:
106. ஓம் ஸர்வானந்த மய்யை நம:
107. ஓம் மாயாயை நம:
108. ஓம் பத்மாத்ரீச பதிவ்ரதாயை நம:.

Note. I have copied the Tamil Transiliteration of the Namas from the Tamil M. S. S. with a few Corrections as suggested by Sri. Subramanya Gurukkal of our Temple, as the names in the Tamil form of Sanscrit words were found either meaningless or misleading.

பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
காப்பு.	ஸ்ரீ அபிராமா துதி 3-வது வரி.	தோயமென்	தோயமென்ன
அணிந்துரை	23	திருப்பெயரின்று	திருப்பெயரினின்று
1	3	வேதவிற்பனர்கள்	வேதவிற்பன்னர்கள்
1	31	எடுத்தேதும்	எடுத்தோதும்
2	36	கமண்டலுவிள்ள	கமண்டலுவிலுள்ள
4	15	தரிசத்தலும்	தரிசித்தலும்
24	38	யென்றும் பேயால்	யென்னும் பேயால்
25	31	கூறியனவகளைக்	கூறியவைகளைக்
27	5	வேண்டும் மென்றும்	வேண்டுமென்றும்
39	9	எககாளம்	எக்காளம்
41	27	சொல்லனுற்ருர்	சொல்லலுற்ருர்
44	11	ஆசாரசிலனும்	ஆசாரசீலனும்
44	13	செய்பவனுயு இருந்த	செய்பவனுயுமிருந்த
52	4	சொன்றனர்	சென்றனர்
54	17	அவனே	அவளே
54	31	கர்ணிகையால்	கர்ணிகையில்
55	2	பெருமை	பெருமையை
74	34	துணிந் தன்	துணிந்தேன்
77	15	யந்தித்தையும்	யந்திரத்தையும்
81	FOOT NOTE	யாகமும்	யோகமும்
83	6	என்று	என்றும்
87	6	பாண்டிமன்னன்	பாண்டியமன்னன்
87	27	கோபவேசமாக	கோபாவேசமாக
90	17	ஆச்சி	ஆட்சி
92	33	பிராத்தனே	பிரார்த்தனே
93	10	உத்தவ	உத்சவ
93	37	1859	1801
104	25	பத்து	பதினைந்து
110	1	அத்தியாத்தில்	அத்தியாயத்தில்
113	4	கிரீசத்ரி சூலின்	கிரீச த்ரிசூலின்
113	15-வது நாமா	ஸர்வஹ்ர்த்ரியை	ஸம்ஹர்த்ரியை

குறுகிய கால அளவில் கூடுமானவரை திருத்தப்பட்டது. ஏனைய பிழைகள் இருப்பின் நேயர்கள் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

நடேசர்
பிரஸ்,
திண்டுக்கல்.